

# இராமநாதம்



இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.





# இராமநாதம்

# Ramanatham 2008

உயர்தர மாணவர் மன்றம்
யாழ்/இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்

RAMANATHAN COLLEGE.

சஞ்சிகை : இராமநாதம்

வெளியீடு : உயர்தர மாணவர்மன்றம்,
யா/ இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

பதிப்பு : 2008 ஜூன் June

இதழாசிரியர் : செல்வி நா. வினுஷா

பதிப்பகம் : கரிகணன் பிறிண்டேர்ஸ்
இல.424, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

Tittle : Ramanatham

Publishers : A/L Students' Union ,
J/ Ramanathan College,
Chunnakam.


Published on : 2008 June

Editor : Miss N.Vinusha

Printers : Harikanan Printers,
No.424, K.K.S. Road, Jaffna.



இராமநாதேஸ்வரம் (சமாதி கோயில்)



கல்லூரி ஸ்தாபகர் துணைவியார், மகளுடன்

# செயற்குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திருமதி ஆ.சிவஞானசுந்தரம் (அதிபர்) |
| உப காப்பாளர் | : | திருமதி ப. தியாகலிங்கம் (பிரதி அதிபர்) |
| பொறுப்பாசிரியர் | : | திருமதி கே.ஆனந்தரட்ணம் (ஆசிரியர்) |
| | | |
| தலைவர் | : | செல்வி சி.சங்கவை |
| உபதலைவர் | : | செல்வி லோ. லக்ஷனா |
| செயலாளர் | : | செல்வி சி. சிவதாரணி |
| இதழாசிரியர் | : | செல்வி நா. வினுஷா |
| உபசெயலாளர் | : | செல்வி றொ.லிஷா |
| பொருளாளர் | : | செல்வி சி. பிந்துஜா |
| | | |
| நிர்வாக உறுப்பினர்கள் | | |
| | : | செல்வி அ.கேமா |
| | : | செல்வி ச. அஜிதா |
| | : | செல்வி ந. றோஷிகா |
| | : | செல்வி சி. ஜலஜா |
| | : | செல்வி ச. மாதங்கி |
| | : | செல்வி எஸ். ஸ்ரீதுவாரகா |

# கல்லூரிக் கீதம்

இராகம்: காம்போதி தாளம்: ஆதி

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரைகா ணம்மானை
அணிகிளரு மவனிதயத் தாமரையிற் றிருவெழுந்து
பணிகொள்ளும் பொன்னிலங்கைப் பண்பிதுகா ணம்மானை
பண்பிதுநேர் பொன்னிலங்கைப் போற்றுதுங்கா ணம்மானை

பொன்னிலங்கைத் திருநுதலாய்ப் பொலிவதுசீர் யாழ்ப்பாணம்
என்றுபல ரேத்துவது மியல்பேகா ணம்மானை
என்றுபல ரேத்துநுதற் கெழிற்திலக மாய்விளங்கும்
பொன்றாத பொன்ராம நாதனிட மம்மானை
பொன்ராம நாதன்றன் கல்லூரி யம்மானை

இராகம் : பூபாளம் தாளம் : ரூபகம்

அரிபடர்ந்த மதர்க்கண்ணா ரரியயனுங் காணாத
விரிமலர்ச்சே வடிகாணும் வியைப்புடைத்திக் கல்லூரி

இராகம் : பௌலி

பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம்பாடி
விண்களிக்கச் செயும்கீர்த்தி விரகுடைத்திக் கல்லூரி

இராகம்: கல்யாணி

திங்கள்சேர் வான்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ்சேர் வாழ்வுபயில் மாண்புடைத்திக் கல்லூரி

இராகம்: ஆனந்தபைரவி

பொன்பூர்த்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்குப்
பண்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி

இராகம்: பெஹாக்

தித்தித்த தேன்மொழியார் தீங்கரும்பிற் சுவைமிகுந்த
முத்தமிழின் பயன்றிளைக்கும் மகிழ்வுடைத்திக் கல்லூரி

இராகம் : கேதாரகௌளை

கிஞ்சுகவாய்க் கன்னியர்சங் கீதநயம் பலவிசைத்து
விஞ்சையர்போல் வீணைபயில் வியப்புடைத்திக் கல்லூரி

இராகம்: சிந்துபைரவி

நித்திலத்தை யொத்தநகை நாண்மடவார் நிரைநிரையாச்
சித்திரத்தைப் போலியங்கும் சீருடைத்திக் கல்லூரி

இராகம்: காபி

வண்ணமணிப் பூவாடை வனிதையர்கள் பன்மொழியிற்
சொன்னகலை பல பயிலுஞ் சதுருடைத்திக் கல்லூரி

இராகம்: தோடி

பால்போன்ற நிலவொளியிற் பந்தாடிப் பூவையர்கள்
நூல்நூற்று நலம்புரியும் நோன்புடைத்திக் கல்லூரி

ஈழத்தைக் காத்திவ் விருநிலத்தைத் தன்புகழாற்
சூழ்ராம னாதன்றன் கல்லூரி – வாழியவே
தாவி லூழித் தண்ணளி
மாவலி கங்கை மணலினும் மிகவே.

ஆக்கம் :

*சு. நடேசபிள்ளை*

B.A.,B.L. (Ex-Senator)

# கொடிக் கீதம்

மருதனார் மடத்தில் இராமநாதன் தந்த மகளிர் கல்லூரி
இதில் பெரிதும் சைவமும் தமிழும் வளர்க்கும் முதற்பெண்கள் கல்லூரி
மகுடமாகத்திரி கரணசுத்தியும் காரியசித்தியுமே – அதை
உறுதியாய்க்கொண்டு உழைக்கும் இராமநாதன் கல்லூரி வாழ்கவே
என்றும் கல்லூரி வாழ்கவே.

வன்னி அரச பரம்பரை தனில் தோன்றிய சேர்பொன் இராமநாதன்
வாழ்வினில் சைவமும் தமிழும் வளர்த்த பெருவள்ளல் சிவபக்தன்
தேசப் பற்றாளரைக் காரிய வீரராய் கண்ணியம் காத்தவராய்
எங்கள் கல்லூரி மண்ணிலே உறங்கும் இராமநாதன்
கழல் போற்றி ஏற்றுவோம். (மருதனார்...)

பத்தொன்பதாம் நூற்றுப் பதின்மூன்றாண்டில் செல்லப்பா சுவாமி வித்திடவே
பத்திரமாகவே கல்வியுடன் பண்பும் விளையாட்டுடன் வினைத்திறன் அனைத்தும்
நர்த்தனம் வீரத்தில் நாடுபுகழ்ந்திடும் நயந்து போதிக்கும் கல்லூரி
முத்திரை பதிக்கும் அன்னையின் பாதம் போற்றியே கொடி ஏற்றிடுவோம்.
(மருதனார்...)

வெற்றிகள்மேல் வெற்றி தந்தமை நோக்கிடும்
அன்னைகல்லூரி வாழியவே அதிபரோடு நல்லாசிரியர்களும்
மாணவிகளும் நன்கு வாழியவே
பச்சை மஞ்சளாய்க் கொடியை ஏற்றி அன்னையின் பாதம் பணிந்திடுவோம்
மெச்சிடும் வகையில் உச்சமாய்ப் பணிபுரி அன்னை கல்லூரி வாழியவே.
(மருதனார்....)

ஆக்கம் :
பொன். ஸ்ரீவாமதேவன்
இசை ஆசிரியர்

# கல்லூரி முதல்வர்



**திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்**

*B.A.(Hons), Dip.in.Edu. (Merit), S.L.P.S-I*

# ஆசியுரை



கல்வி, எத்தகைய முக்கியத்துவம் உள்ளது என்பதை மாணவர்கள் முதலில் உணரவேண்டும். கல்வி என்பது உண்மையான அழகு. அது மனிதனுக்குக் கிடைத்திருக்கும் மாறாத செல்வம். நாம் வெளிநாடுகளுக்குச் செல்லும்பொழுது உண்மையான உறவினனாக விளங்குவது கல்வியே. குருவிற்கு எல்லாம் குருவாக விளங்குவது கல்வியே. அரசசபையாக இருந்தாலும், அங்கு மதிக்கப்படுவது கல்வியைத் தவிர வேறெதுவுமில்லை. நிரந்தர சத்தியமான இக்கல்வியைப் பெறாதவன் உண்மையான மனிதப்பிறவியேயல்ல.

பண்டைய காலத்தில் ரிஷிகள் எத்தனையோ விடயங்களைப் பற்றிச் சிந்தித்த துடன், அறிந்து பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் இத்தகைய பவித்திரமான அறிவைத்தேடிப் பெறவேண்டும். வெறும் புத்தக அறிவினால் பயன்கிடையாது. தன் உள்ளத்திலிருந்து உருவாகும் உணர்வுகள் மட்டுமே. அதனால் மனிதன் பார்வையில் உள்நோக்கிச் செலுத்தி உட்புறம் இருக்கின்ற ஆனந்தத்தை ஆராய்ந்து அதனையே வெளிப்புற உலகிலும் கண்டு ஆனந்திக்க வேண்டும். இந்த உணர்வு மூலம் வெளிப்படுகின்ற ஆக்கங்கள் மனித சமுதாயத்திற்குப் பயன்படக்கூடியதாக இருக்கவேண்டும்.

சைவ சமயத்தையும், தமிழையும் மேன்மையுறச் செய்த வள்ளல்கள் நிறைந்த யாழ் குடாநாட்டில் வடபால், சைவ ஆலயங்களும், பொன் விளையும் பூமியும், பொருட்களை விற்றல், வாங்கல் நிலையங்களும் சூழ்ந்த மருதனார் மடத்தில் இராமநாத வள்ளலால் உருவாக்கப்பட்ட பாடசாலையிற் படிக்கின்ற பல்துறையைச் சார்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்கள் குழாமும் ஒருமித்து "இராமநாதம்" என்னும் சஞ்சிகையை வெளியிடுகிறார்கள். அவர்களுடைய சஞ்சிகை நல்லபடி அமையவும், நற்பலனையும் பெறவேண்டுமென்று, சொல்லின்செல்வன், நவவியாக்கியான பண்டிதன், சுந்தர ஆஞ்சநேய சுவாமியின் பாதம் பணிந்து நல்லாசிகூறி அமைகின்றோம்.

"ஸர்வே ஜனகா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்**
அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்,
ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்.

# வாழ்த்துச் செய்தி



இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றம், கல்லூரிக்கு மேலும் ஒரு அணிகலனாக "இராமநாதம்" என்ற சஞ்சிகையை வெளியிடுவது பாராட்டுக்குரியது. இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிற் பேருவகையடைகிறேன்.

பெண்பிள்ளைகள் தமிழ்ப் பண்பாடு, பாரம்பரியம், கல்வி மேன்மை, தலைமைத்துவம் ஆகியவற்றில் முன்னிலை பெறுவதற்காக இராமநாத வள்ளலினால் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் கல்லூரி இதுவாகும். உயர்தர மாணவிகள் ஆக்கங்கள் தயாரிக்கும்போது அவர்களின் தேடற்றிறன், சிந்தனை ஆற்றல், பல நூல்களை உசாவும் தன்மை ஆகியன மேம்படும். இச்சஞ்சிகையிற் கன்னி முயற்சியாக வெளிவரும் ஆக்கங்கள் அவர்களை எதிர்காலத்திற் பெரிய ஆக்க கர்த்தாக்களாக்கும் படிக்கற்களாகும்.

இச்சஞ்சிகை கல்லூரியைச் சமூகத்துடன் இணைக்கும் ஒரு பாலமாகவும், ஏனைய பாடசாலைகளுக்கு ஒரு முன்மாதிரியாகவும் அமையும் சாதனமாகும். மாணவர்களின் இம்முயற்சிக்கு வழிகாட்டும் ஆசிரியர்களும், ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் அதிபரும் பாராட்டுக்குரியவர்கள்.

மாணவர்களின் நிறைவான ஆக்கங்களுடன் வெளிவரும் இவ் அறிவியல் சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கவேண்டும்.

**திரு. ப. விக்கினேஸ்வரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்,
சுன்னாகம்.

# ஆசிச் செய்தி



பள்ளிப் பருவத்தில் மாணாக்கர்களின் கற்றல் அறிவின் வெளிப்பாட்டுக் களமாகவும், பட்டறிவு, சிந்தனை, அறிவின் மேம்பாட்டுக் களமாகவும், அனுபவப் பகிர்வின் ஆதார சுருதியாகவும் சஞ்சிகை வெளியீடுகள் அமைகின்றன. இவ்வகையில் யா/இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர்கள் ஒன்றியம் சார்பாக முதன்முதலாக மொட்டு அவிழ்ந்து மணம் வீசுகின்ற "இராமநாதம்" எனும் மலருக்கு எனது நல்லாசிகளை நல்குகின்றேன்.

கலை, வணிகம், அறிவியல் துறைகளில் ஏற்பட்டு வருகின்ற எழுச்சிமிகு மாற்றங்களைக் கடந்தகாலம், நிகழ்காலங்களுடன் ஒப்பு நோக்கி எதிர்கால உலகப் போக்கிற்கு இசைவுறு தன்மையினை, உயர்பண்புக் கோலங்களை வழுவாத வகையில் மாணவப் பருவத்திற்பெற்றுச் சிறந்த மனிதவலுத் தொகுதியினராகத் திகழ்வதற்கு இம் மலராக்கம் வழிசமைத்தல் வேண்டும். தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு வடிகால்கள் இல்லாமல் தவிக்கின்ற பள்ளி மாணவர்களுக்கு இம் மலராக்கத்தின் தொடர்ச்சியான வெளியீடுகள் ஏற்றமிகு சிறந்த முன்னேற்றப் படிக்கற்களாகும்.

பன்முக ஆளுமைப் பரிமாணமுள்ள மாணவர்களை உருவாக்குவதற்காக நல்நோக்குடன் செயற்படுகின்ற இம் மலராக்கச் சிந்தனையை மாணவர் மனதில் விதைத்த இம் மலராக்கத்துடன் தொடர்புடைய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.

**திரு.சு.சுந்தரசிவம்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்),
வலிகாமம் கல்விவலயம்.

உடுவிற் கல்விக் கோட்டப் பணிப்பாளரின்

# வாழ்த்துச்செய்தி



உடுவிற் கல்விக் கோட்டப் பாடசாலைகளுள் முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றான யா/இராமநாதன் கல்லூரியும் ஒன்றாகும். இக்கல்லூரி சமதர்ம வள்ளல் இராமநாதனின் வழிகாட்டலில் சைவ கல்விப் பாரம்பரிய விழுமியங்களையும், இந்துப் பண்பாட்டினையும் தன்னகத்தே கொண்டு இயங்கும் மகளிர் கல்லூரியாகும். இக்கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினர், "இராமநாதம்" என்ற சஞ்சிகையினை இவ்வாண்டு வெளியிடுவதையிட்டு உவகையுடன் வாழ்த்துச் செய்தியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

மனிதனைப் புனிதனாக்கும் இறைபணியை, ஆசிரியத்துவத்தின் வழியாக ஆசிரியர்களும் செய்கின்றனர். "வாழ்க்கைக்குத் தயாராக்கும்" இப்பணி பல பரிமாணங்களையும் உட்கட்டுமானங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் நடி பங்குகளோ பலப்பல........ அதுவும் இன்றைய நவீனகாலக் கணினியுகத் தகவல் தொழில்நுட்பங்களுக்கு அமைய, மாணவர்களைத் தயாராக்கும் பாரிய பொறுப்புக்கள் பாடசாலையைச் சார்ந்தது.

இன்று – நவீன கல்விச் சீர்திருத்த மறுசீரமைப்புக்கு அமையவும் – கல்விக் கொள்கைக்கு அமைவாகவும், கல்வி நோக்கங்களை நிறைவேற்றி உச்சப் பயன்பாட்டிற்கு மாணவர்களை ஆற்றுப்படுத்தும்; இப்பணியிற் பங்குகொள்ளும் ஆசிரியர்களும் மாணவர்களும், ஆசிரியர் தம்மை ஆசிரியவாண்மை நிறைந்தவராகவும், தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும். (Updating) அதுவே ஆசிரியத்துவத்தின் மாண்பாகும்.

மாணவர்களின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தி, வாழ்வின் பொருளை உணர்த்த வேண்டியது ஆசிரியர்களின் மிக மேலான கடமையாகும்.

இக்கல்லூரி ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவர்களின் பாடப்புலமை சார்ந்த தரமான ஆக்கங்களையும், புலமை சார்ந்த கல்வியியலாளர்களின் தரமான ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவதையிட்டுப் பெருமையடைகின்றேன். இவை மாணவ சமுதாயத்திற்குப் பயனுள்ள விடயங்களாக இருப்பது சிறப்பம்சமாகும். யாவும் கற்று உணர்வது சாலச் சிறந்தது. இம்முயற்சிக்கு உழைத்த சகலரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மென்மேலும் கல்விப்பணி சிறக்க – வாழ்வில் மாணவர்கள் பொறுப்புணர்வுடன் சைவசமய விழுமியங்களுடனும் மனிதநேயத்தையும் அனுசரித்து பிறருக்காகச் சேவை செய்து வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

"என்கடன்பணி செய்து கிடப்பதே"

**திரு.செ.குபேரநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்.

# வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் தனக்கெனத் தனித்துவமாகக் கல்வியுடன் கலாசாரத்தையும் பேணிக்காத்த பெருமைமிக்க கல்லூரி, இராமநாதன் கல்லூரி. பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்களின் உயர்ந்த சிந்தனையில் உருவாக்கப்பட்ட இக் கல்லூரி கல்விச் செழுமைமிக்க பலபெண்மணிகளைச் சமூகத்திற் களித்து அவரது இலட்சியத்தை நிறைவு செய்துள்ளது.

கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் இராமநாதம் என்ற மலருக்கு ஆசி கூறுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஒரு தனி மனிதனின் ஆளுமைப் பரிணமிப்பிற்கு அவனது ஆற்றல்களை வெளிக்கொணர்வது அவசியமாகும். மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளைத் தூண்டுவதற்காகவே கல்வித்திட்டச் செயற்பாடாக, சகல பாடப்பரப்புக்களிலும் சஞ்சிகைகள் ஆக்கப்படுகின்றன. மாணவர்களின் கன்னி முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்து நம்பிக்கையுடன் பல்துறைசார்ந்த திறமைகளையும் வளர்க்கும் ஒன்றாகவே இராமநாதம் அமைந்துள்ளது. மாணவர்களின் அறிவின் ஆற்றலின் திறனாகவும், ஆய்வின் வெளிப்பாடாகவும், முயற்சியின் பேறாகவும் வெளிவரும் இராமநாதத்தின் ஆக்கங்கள் மாணவர்களுக்கு உள்ளொளி பரப்பும் ஞானஒளியாக விளங்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இராமநாதம் வெளிவர ஆர்வமாக உழைத்த உயர்தர மாணவர்மன்ற மாணவிகளையும், மாணவிகளுக்கு உறுதுணையாக இருந்து அவர்களுக்கு அவ்வப்போது உற்சாகமூட்டி தளராமல் நம்பிக்கையோடு தடைகள்பல தாண்டிச் செயற்பட்ட ஆசிரியர்களையும் மனநிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

இராமநாதம் வீறுநடைபோட்டுப் புதுப்பொலிவுடன் தொடர்ந்தும் கல்லூரியில் வெளிவர வேண்டுமென வாழ்த்தி ஆடவல்லாளனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்**
அதிபர்,
இராமநாதன் கல்லூரி.

# ஆசியுரை



வட புலத்தின் மகளிர் கல்லூரிகளில், தனக்கே உரித்தான விழுமியங்களுடன் மாண்புபெற்று வீறு நடையுடன் நிமிர்ந்து நிற்கும் இக் கல்லூரியானது, தன்னகத்தே தன்னிகரில்லா அதிபரையும், துறைசார்ந்த திறமைமிக்க ஆசிரியர்களையும், கற்றலில் ஆர்வமும் ஆற்றலுமிக்க மாணவச் செல்வங்களையும் கொண்டமைந்துள்ளமை யாவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

எமது கல்விச்சமூகம், கல்வியிலே புகுத்தப்பட்ட மறுசீரமைப்புச் சான்றிதழ் கலாசாரத்தை ஒழித்து, மாணவர்களின் சுய ஆற்றல்களை வளர்த்து, எதிர்காலத்தில் முழுநிறைவான வாழ்க்கை நடாத்தக்கூடிய; சமூகத்தன்மைகொண்ட மாணவர்களை உருவாக்க வழிகோலியுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாழ்கைத்தகைமைச் செயற்றிட்டம், உயர்தர வகுப்பு மாணவர்களுக்குச் சுயதூண்டுதல் அளிக்கக்கூடிய ஒரு செயற்பாடாக அமைகின்றது. இத்தகைய செயற்றிட்டங்களைச் செய்வதற்கு ஒரு முன்னோடியாகச் சஞ்சிகை ஆக்கங்கள் அமைகின்றது. மேலதிக வாசிப்பு, தகவல்களைச் சேகரித்தல், உரியவர்களுடன் தொடர்புகொள்ளுந்திறன், தலைமைத்துவப் பொறுப்பு, முன்வரும் திறன், செய்துமுடிக்கும் ஆற்றல் ஆகிய ஆளுமைத்திறன்களைச் சஞ்சிகை வெளியீடுமூலம் மாணவர்கள் தேடிக்கொள்கின்றனர்.

மாணவர்களின் அயரா முயற்சியினால் வெளிவரும் இவ் இராமநாதத்தில் அமைந்துள்ள ஆக்கங்கள் மாணவர்களுக்குப் பயனுறுதி மிக்கதாக அமையும் என்று எண்ணுகின்றேன். இம்மலரின் ஆக்கத்திற்கு உழைத்த உயர்தர மாணவமன்றத்தினையும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களையும், இம்மலர் வெளிவர ஊன்றுகோலாக இருந்த அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் இராமநாதம் ஒலித்துக்கொண்டிருக்க எனது இதய பூர்வமான ஆசிகளைக் கூறி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி பத்மாவதி தியாகலிங்கம்**
பிரதி அதிபர்,
இராமநாதன் கல்லூரி.

மன்றப் பொறுப்பாசிரியரின்

# வாழ்த்துச்செய்தி



ஈழத் திருநாட்டின் வரலாற்றிற் பெண்ணினத்தின் கல்வி ஆளுமையை வளர்த்தெடுத்த முதன்மைக் கல்லூரி எமது கல்லூரி என்றால் மிகையாகாது. ஆங்கிலேயர் தமது செல்வாக்கைப் பயன்படுத்திக் கல்வி வழங்கலின் ஊடாகத் தம் கலாசாரத்தை விதைத்தனர். பேரறிஞர், சேர்.பொன்னம்பலம் இராமநாதன் தூரநோக்கோடு சிந்தித்து இக்கல்லூரியை உருவாக்கினார். குடும்பத்தின் வேராக விளங்கும் பெண்கள் அறிவும் ஆளுமையும் ஆத்மீகமும் ஒருங்கே சேர்ந்தவர்களாக விளங்குவதற்கும், கலாசாரப் பாரம்பரியத்தைக் காப்பதற்கும் இக்கல்லூரியை உருவாக்கினார். இருபத்தைந்து ஏக்கர் நிலப்பரப்பிற் பூவையர் ஆடிப்பாடி மகிழ்ந்து, அலங்கரித்து, அறிவு பெற இக்கல்லூரி வழிசமைத்தது.

வள்ளல் அவர்கள் அவுஸ்திரேலிய நாட்டில் உள்ள பிரமாண்டமான கல்லூரியின் அமைப்பில் எமது கல்லூரியைக் கட்டி முடித்தார். ஸ்தாபகரின் கனவு நனவாகியது. ஈழத்தில் மட்டுமல்ல மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்தும் எம் கல்லூரியில் கற்பதற்குப் பல நூறு பெண்கள் வந்தனர். ஆங்கிலம், தமிழ், வடமொழி மூன்றுங் கற்றனர். மருத்துவராக, வக்கீலாக, பேராசிரியராக, பாராளுமன்ற உ றுப்பினராக, பணிப்பாளர்களாக எம் கல்லூரிப் பெண்கள் ஈழத்திருநாட்டை அணி செய்தனர். பல்லாயிரம் மாணவர் கற்ற கல்லூரி போரின் அனர்த்தங்களாற் பெரிதும் பாதிக்கப்பட்டது.

தற்பொழுது மீளக் கட்டியெழுப்பும் முயற்சி தொடர்கிறது. மூடப்பட்ட விடுதிச்சாலை அகலத் திறக்கப்பட்டுள்ளது. மாணவர் தொகை அதிகரித்த வண்ணம் உள்ளது. அதிபரின் ஆற்றுப்படுத்தலால் மறுமலர்ச்சியை நோக்கிக் கல்லூரி நகர்கின்றது. இதன் விளைவே இம் மலரின் பிரசவத்திற்குக் காரணம். சர்வதேசமும் அறிந்த எமது கல்லூரி, சரித்திரப் பெருமையை என்றும் நிலைநாட்டும்.

இம்மலர் சிறக்க எனதருமை மாணவிகளும் சக ஆசிரியர்களும் அர்ப்பணிப்போடு ஆற்றிய தொண்டு மறக்க இயலாதது. இம்மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எனது நன்றிகள். இம் மலர் மணம்வீச ஆசிகள், ஆக்கங்கள் வழங்கியுதவிய சான்றோர்க்கு எனது நன்றிக் காணிக்கைகளைச் சமர்ப்பித்து வாழ்த்துக்கூறி அமைகின்றேன்.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

**திருமதி கேதீஸ்வரி ஆனந்தரட்ணம்**
ஆசிரியர், யா/ இராமநாதன் கல்லூரி.
சுன்னாகம்.

# மன்றத் தலைவரின் உள்ளத்திலிருந்து...



கடந்த பதின்மூன்று வருடப் பாடசாலை வாழ்க்கையின் கடைசிக் கந்தாயத்தில் நாம் நிற்கின்றோம். மாணவர்களாகிய நாம் பலவற்றையும் சாதிக்கத் துடித்து நிற்கின்றோம். எமது எண்ணங்களுக்கும், இலட்சிய நோக்கிற்கும் தடையாகப் பலஇடர்களை நாம் சந்தித்துள்ளோம்.

இடப்பெயர்வு, உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, கற்றல், கற்பித்தல் தேவை களுக்கான தட்டுப்பாடு, போக்குவரத்து இடர்ப்பாடு, சுதந்திரமற்ற நிலைப்பாடு முதலிய இன்னோரன்ன தடைகளை நாம் சந்தித்தோம். இருந்தாலும் இவற்றினாற் பாதிக்கப்படாமல் தளரா உறுதியோடும், இறை விசுவாசத்தோடும் எமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளோம். முன்னேற்றகரமான பாதையில் நடந்து, எமது சமூகத்தின் கல்விப் பாரம்பரியம் குறைவடைந்து நலிவடைந்து போகாமல் இருக்க எங்களால் இயன்றளவு முயற்சித்திருக்கின்றோம்.

தொடர்ந்தும் பல்கலைக்கழகத்திலோ, உயர் தொழில்நுட்ப நிறுவனங்களிலோ தேசிய கல்வியியற் கல்லூரியிலோ கல்வி பயின்று, "கல்வியே கருந்தனம்" என்பதைச் சிந்தையிற் கொண்டு, எம்மை வளர்த்தெடுக்க – வளப்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். நமது கல்லூரியின் தந்தை இராமநாத வள்ளலில் இருந்து எம் ஆசிரியர் அனைவரும் செய்த சேவை, அவர்களின் இலட்சிய வேட்கை, தியாக மனப்பாங்கு என்பவற்றிற்குப் பெருமைசேர்க்கும் வகையில் எம்மை வளர்த்துக்கொள்வதே நாம் அவர்களுக்குச் செய்யும் நன்றிக்கடன்.

க.பொ.த. (உ/த) மாணவ மன்றத்தின் தலைவியாகவிருந்து இச்சஞ்சிகையை வெளியிடுவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதி இராமநாதேஸ்வரப் பெருமானைச் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன். எதிர்வருங் காலங்களிலும் 'இராமநாதம்' அனைவருக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையில் வெளிவர வேண்டும் என, எம் சகோதரிகளை வேண்டி நிற்கிறேன். எம் முயற்சிக்கு ஆதரவளித்த அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியர் திருமதி கேதீஸ்வரி, ஆனந்தரட்ணம் ஆகியோருக்கு நாம் என்றும் நன்றியுடையோம். ஆசிச்செய்தி வாழ்த்துச்செய்தி வழங்கிய சான்றோர்க்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

இம்மலர் மாண்புற நிதி உதவி வழங்கிய வள்ளல்கள் என்றென்றும் நன்றிக்குரியவர்கள். அழகுற வடிவமைத்துத் தந்த "கரிகணன் பிறிண்டேர்ஸ்" நிறுவனத்தினர் அனைவருக்கும் எம் மன்றத்தின் சார்பில் நன்றி கூறுகின்றேன்.

**யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.**

**செல்வி சங்கவை சிவானந்தம்**
உயர்தர மாணவர் மன்றத் தலைவி

## பிரதி அதிபர்



திருமதி ப.தியாகலிங்கம்
*S.L.T.S-I*

## உப அதிபர்



திரு.வை.பாலேந்திரன்
*S.L.T.S-I*

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...



இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர்களால் "இராமநாதம்" எனும் சஞ்சிகையை வெளியிடுவதன்மூலம் இவ் ஆண்டில் உங்களுடன் ஒருகணம் என் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இராமநாதமானது உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டு மனம் நிறைந்த பூரிப்படைகின்றேன். நிகழும் அனர்த்தங்களுக்கும், பின்தள்ளும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் எமது மன்றத்தின் "இராமநாதம்" எனும் சஞ்சிகையை வெளியிடுவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இராமநாதம் எனும் சஞ்சிகையை வெளியிடப் பலவித உதவிகளைப் புரிந்த அதிபர் அவர்கட்கும், பிரதிஅதிபர் அவர்கட்கும், ஆசிச்செய்திகளைத் தந்துதவியவர்கட்கும், எம்மை நல்வழிப்படுத்திய பொறுப்பாசிரியர் அவர்கட்கும், ஏனைய ஆசிரியர்கட்கும் எமது மன்றத்தலைவர், செயலாளர், மன்ற உறுப்பினர்களுக்கும், இம்மலருக்கு ஆக்கங்களைத் தந்துதவியவர்களுக்கும், என்னோடு தோள்நின்றுழைத்து இராமநாதம் வெளிவர ஒத்துழைத்த என் சக மாணவர்களுக்கும் மனமுவந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இராமநாதத்தினை வெளியிட்டு எமது மன்றத்தின் வழித்தோன்றல்களுடன் இவ்வாறான சஞ்சிகைகள் மேலும் சிறப்பாக வெளிவரவேண்டும் என்ற நம்பிக்கையில் உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

**செல்வி நா. வினுஷா**
இதழாசிரியர்,
உயர்தர மாணவர் மன்றம்,
யா/ இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம்.

# செயலாளரின் நன்றிகள்...



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர்மன்றச் செயலாளர் எனும் வகையில் உங்களுடன் பேசுவதிற் பேரானந்தம் அடைகிறேன். எமது உயர்தர மாணவர் மன்றத்தினால் "இராமநாதம்" சஞ்சிகை வெளிவருவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சஞ்சிகை உயர்தர மாணவர்களினதும் கல்விப் புலமையாளர்களினதும் ஆக்கங் களுடன் வெளிவருகின்றது. மாணவர்களின் கல்வித் தேடலுக்கேற்ற வகையிற் பல்துறை சார்ந்த விடயங்கள் இராமநாதத்தை அலங்கரிக்கின்றன.

இராமநாதத்தின் சிறப்பிற்கும், வெளியீட்டிற்கும் வாழ்த்துச்செய்தி வழங்கிய ஆஞ்சநேயர் ஆலயப் பிரதமகுரு, கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோருக்கும் எம் சிரம்தாழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, சிறப்பார்ந்த ஆக்கங்களைத் தந்து, எம் சஞ்சிகைக்கு மெருகூட்டிய விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எம் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

சஞ்சிகை வெளியீட்டிற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி, எமது பணி சிறப்புற உதவிய பொறுப்பாசிரியருக்கு நன்றி கூறுவதோடு, நிதி உதவி வழங்கிய பெரியோர்கள், விளம்பரங்கள் வழங்கியவர்கள் அனைவருக்கும் எம்மன்றம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. இம்மலரைச் சிறந்த முறையில் வெளியிடுவதற்குத் தமது முழுமையான பங்களிப்பை நல்கிய கரிகணன் பிறின்ரேஸ் நிறுவனத்தினருக்கும் எனது விசேஷ நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**செல்வி சிவதாரணி சிவராஜன்**
தரம் - 13. கலைப்பிரிவு
(உயர்தர மாணவர்மன்றச் செயலாளர்)
யா/இராமநாதன் கல்லூரி

# மலரினுள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | ஈழத்து நவீன கவிதையின் ஊற்றுக்கள் –1940 கள் வரை | 01 |
| 2. | புவியின் உள் அமைப்பு | 08 |
| 3. | சமஸ்கிருதத்தில் சதக இலக்கியம் | 15 |
| 4. | இலங்கை வரலாற்றில் 1818ஆம் ஆண்டுக் கலகம்– ஒரு பார்வை | 18 |
| 5. | இந்தியா சென்று இந்துமதச் சான்றோர் அவையிற் புகழ் நிறுவிய ஈழத்தமிழர் | 23 |
| 6. | நாடகவழி உள ஆற்றுப்படுத்தல் | 32 |
| 7. | ஈழத்தமிழர் நாட்டாரிசைப் பாடல்கள் | 36 |
| 8. | சங்க இலக்கியங்களில் உலகப் பொதுமைக்கருத்துக்கள் | 39 |
| 9. | சூழல் அறிமுகம் | 50 |
| 10. | இலங்கையிற் பெறுமதி கூட்டப்பட்ட வரி (Value Added Tax in Sri Lanka) | 56 |
| 11. | How to Write Effective Essays | 60 |
| 12. | உலகமயமாக்கலும் மூன்றாம் உலகநாடுகளின் கைத்தொழில்களும் | 63 |
| 13. | பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டற் சேவை அவசிய தேவையும், புதிய பிரயோகங்களும் | 67 |
| 14. | கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள் வாங்குதல் தொடர்பான வழிகாட்டலும் நவீன கல்வி நிலைமைகளும் | 71 |
| 15. | இலங்கை அரசியல் யாப்பின் 17வது திருத்தச் சட்டம் | 74 |
| 16. | தசாவதாரம் | 76 |
| 17. | குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி | 79 |
| 18. | The role of role - plays in teaching English as a Second Language | 86 |
| 19. | திருக்கோயில் வழிபாட்டை வளம்படுத்துவதிற் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவம் | 88 |
| 20. | நவரசங்களுக்குரிய இசையமைப்புக்கள் ரசங்களுடைய தோற்றம் | 92 |
| 21. | மனித இனம் புவியில் நிலைத்திருக்குமா? | 94 |
| 22. | இசைக் கருவிகளின் தோற்றமும் அதன் பிரிவுகளும் | 96 |
| 23. | பாலைநிலம் பரவல் | 99 |
| 24. | தர்மசாஸ்திரங்கள் | 101 |
| 25. | எயிட்ஸ் AIDS | 106 |
| 26. | Computer | 110 |

27. சோழர் காலச் சிற்பக்கலை 113
28. விசேட கல்வியும், விழிப்புலனற்றோரும் 116
29. சேதன இரசாயனத் தாக்கங்களின் பொறிநுட்பங்கள் 120
30. கடற்சாதாளைகளின் பொருளாதார முக்கியத்துவம் 124
31. ஆசிரியர் மாணவர் இடைவெளி இன்று 128
32. பாடசாலை நூலகமும் அதன் வளர்ச்சிப் பாதையும் 130
33. இரண்டாம் உலக மகாயுத்தம் 134
34. சங்கரருடைய அத்துவைத வேதாந்தத்துக்கும், இராமானுஜரது விசிட்டாத்துவைத வேதாந்தத்துக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள் 138
35. ஈழத் தமிழ் இலக்கியத்தில் அறிஞர்கள் பங்கு 142
36. பாடகர் கடைப்பிடிக்க வேண்டியவை 145
37. கலையரசு க. சொர்ணலிங்கம் 146
38. நெப்போலியன் பொனபாட் 148
39. சங்கீதக் கலையைப் பற்றிய நூல்களும் இயற்றியவர்கள் வாழ்ந்த காலமும் 151
40. கோழி வளர்ப்பு 152
41. Laser Beam 154
42. இலங்கைத் தூபி 155
43. உயிர் பல்வகைமை 158
44. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வரலாற்றில் இடம் பிடித்த மாவீரன் அலெக்சாண்டர் 161
45. சில அறிவியற் கருவிகள் 163
46. வியக்க வைக்கும் விளம்பரக்கலை 164
47. உலகில் ஆழ, அகல, நீள, உயரம் கூடியவை 167
48. போதை வஸ்து 171
49. இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் 174
50. My Favourite Hobby 177
51. சாதிக்கப் பிறந்தவர்கள் 178
52. விடியல் வெகுதூரம் இல்லை (சிறுகதை) 179
53. விட்டில் பூச்சிகளே............! 182
54. தாய் 184
55. நன்றிகள்



ஆசிரியர் குழாம் - 2008

## உயர்தர மாணவர் மன்றச் செயற்குழு உறுப்பினர்கள் - 2008



இருப்பவர்கள் : செல்வி சி. சிவதாரணி (செயலாளர்), திருமதி ப. தியாகலிங்கம் (பிரதி அதிபர்), திருமதி ஆ. சிவஞானசுந்தரம் ( அதிபர்), செல்வி சி. சங்கவை (தலைவர்), திருமதி கே. ஆனந்தரட்ணம் (பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் : செல்வி ந. றோஷிகா, செல்வி ஸ்ரீ. துவாரகா, செல்வி சி. பிந்துஜா, செல்வி றொ. லிஷா, செல்வி நா.வினுஷா, செல்வி லோ.லக்ஷனா செல்வி ச. அஜிதா, செல்வி அ. கேமா

# ஈழத்து நவீன கவிதையின் ஊற்றுக்கள் -1940 கள் வரை

திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பணப் பல்கலைக்கழகம்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றிலே 1940 இற்குப் பிற்பட்ட காலப்பகுதியினை 'நவீன கவிதைகளின் காலம்' எனச் சுட்டுதல் வழமை. மரபுரீதியான சிந்தனை, பொருள், வடிவம் என்பனவற்றில் நின்றும் விடுபட்டுப் புதிய பொருள் மரபையும், வெளிப்படுத்தும் முறையினையும் கொண்டு விளங்கிய கவிதைகளையே ஆய்வாளர்கள் 'நவீன கவிதை' எனச் சுட்டி வந்தனர். கவிதையில் ஏற்பட்ட இப்புதிய போக்குத் திடீரென மேற்கிளம்பியதொன்றல்ல. 1940 களுக்கு முன்னதாகவே இப்புதிய போக்குக்கு அடிப்படையான ஊற்றுக்கள் கவிதைகளில் வெளிப்படத் தொடங்கியிருந்தன. அவ் ஊற்றுக்களை இனங்கண்டு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலிலே நவீனகதை என்னும் தொடரிலுள்ள 'நவீனம்' என்னும் பதம் பற்றிச் சிந்திப்பது மிக அவசியமாகிறது. ஆங்கிலத்திலே வழங்கும் `Modern' என்னும் சொல்லுக்கு இணையாகத் தமிழில் இப்பதம் கையாளப்படுவதை அனைவரும் அறிவர். இது 'தற்காலத்திற்குரியது', புதியது என்ற பொருளைத் தருகின்றது. இச் சொல்லில் இருந்துதான் Modernism என்னும் சொல் பிறந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவிற் செல்வாக்குச் செலுத்தியதும்; கலை, இலக்கியம், மதம் முதலான துறைகளில் ஏற்பட்டதுமான ஓர் எழுச்சியே Modernism என வழங்கப்பட்டது.

வழிவழி வந்த மரபில் இருந்து மாறுபட்டுப் புதுமையைச் சார்ந்து நிற்றல் அல்லது புதுமையை நாடிச் செல்லல் என்பதே Modernism என்பதன் கருத்தாகும். "சமூக விஞ்ஞானக் கலைக் களஞ்சியம்" மரபுரீதியானவற்றைப் புதுமைக்குக் கீழ்ப்படுத்துகின்றதும், நிலைவேறடைந்த சம்பிரதாய பூர்வமானவற்றை இன்றைய தேவை நிர்ப்பந்தங்களுக்கேற்ப இணக்கப்படுத்துகின்றதுமான ஒரு மனப்போக்கே நவீனத்துவம் எனச் சுட்டுகின்றது. இந்த நவீனத்துவத்தின் செயல்முறைத் தாக்கம் இரண்டு வகைகளில் இருந்தது. 'பழமையை முற்றாக மறுதலித்துப் புதுமையை ஏற்றுக் கொள்ளுதல்' என்பது ஒருவகை, பழமையில் உள்ளவற்றுள் தேவையானதை உள்வாங்கிக்கொண்டு; புதுமையைப் பழமையுடன் இணைக்கும் முயற்சி இரண்டாவது வகை.

ஈழத்திலும் தமிழகத்திலும் வாழ்ந்த ஆரம்பகால நவீன எழுத்தாளர்களிடம் இரண்டாவதாக விதந்துரைக்கப்பட்ட கருத்துநிலையே மேலோங்கிக்காணப்பட்டது. பழமையுடன் புதுமையை இணைக்கும் அவர்தம் முயற்சி ஒருவகையில் பழமை பேணுவதாகவும் இருந்ததை மறுத்தல் இயலாது.

ஈழத்திற் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து இத்தகைய நவீனத்துவ சிந்தனைகளின் தாக்கம் சமூகம், கலை,

இலக்கியம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் படிப்படியாக ஏற்படத் தொடங்கியிருந்தது. அந்நியராட்சிச் சூழலிற் பெற்றுக்கொண்ட புதிய அனுபவங்களும், ஆங்கிலக் கல்வியும், மேனாட்டு இலக்கியப் பயிற்சியும், நவீனத்துவ சிந்தனைகளின் தாக்கம் ஈழத்தமிழர் மத்தியிற் பரவ நல்ல களத்தை உருவாக்கியிருந்தன. இச்சூழலில் தமிழ்க்கவிதை உலகிற்குள் காலடியெடுத்து வைத்த படைப்பாளிகள் சிலர் நவீனத்துவத்தை விளங்கிக்கொண்டு அதனைத் தமது படைப்புக்களில் வெளிக் கொணரும் முற்போக்குச் சிந்தனைகொண்ட வர்களாக விளங்கினர்.

குறிப்பாகக் கவிதைகளின் உள்ளடக்கத்தி லேயே ஆரம்பத்தில் நவீன போக்குகள் தென்படத் தொடங்கியிருந்தன. தாம் வாழும் சமுதாயத்தைப் புறநிலையாக நின்று நோக்குதல் அல்லது இருக்கின்ற சமுதாய அமைப்பைக் கேள்விக்குள்ளாக்குதல் என்ற வகையிற் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களே மேற்படி கவிதைகளின் உள்ளடக்கமாக அமைந்தன. தி.த. சரவணமுத்துப்பிள்ளை, நட்டுவச் சுப்பையனார், வே.இராமலிங்கம் போன்றோரின் கவிதைகளை இங்கு வகைமாதிரியாக எடுத்துக் காட்டலாம்.

சமகாலத்தில் நிலவிய பெண்ணடிமைத் தனத்தையும், சீதனக் கொடுமையாற் பெண்கள் அடையும் அல்லலையும் கருப்பொருளாக்கித் தத்தைவிடுதூது என்னும் இலக்கியத்தை ஆக்கியுள்ளார் தி.த.சரவணமுத்துப்பிள்ளை. சமகாலத்திற் பெண்கள் பற்றிக் காணப்பட்ட பல பிற்போக்கான சிந்தனைகளை அவர் தன் நூலிற் பல இடங்களிலும் கண்டித்துச் செல்கின்றார். ஏறத்தாழ இதே காலப்பகுதியில் தமிழகத்தில் எழுதப்பட்ட நாவல்களிலும் இப்போக்குப் புலப்படுவது கவனிக்கத்தக்க தாகும்.

"உண்பதுவும் உறங்குவதும் ஊர்க்கதைகள் பேசுவதும்
பெண்களின் தொழிலாம் என்று பேசிடுவர் ஒருசாரார்.
பெண்களுக்குத் தம்பதியே பெருந்தெய்வம் என்பர் சிலர்
பெண்களுக்கும் அடிமைகட்கும் பேதமில்லை என்பர் சிலர்
பேதமைகாண் இவர்கொள்கை பேர்த்தறிவாய் "பசுங்கிளியே"

என வரும் தத்தைவிடுதூதுப் பாடல்களில் தி.த.சரவண முத்துப்பிள்ளையின் நவீனத்துவ சிந்தனைகள் துலாம்பரமாகத் தெரிகின்றன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலப் பகுதியிற் பாரதி பெண் விடுதலை பற்றிச் சிந்திப்பதற்கு முன்னரேயே சரவணமுத்துப் பிள்ளை இங்ஙனம் முற்போக்காகச் சிந்தித்துள் ளார் என்பது கவனத்திற்கொள்ளவேண்டிய தோர் விடயமாகும். எனினும் பெண்விடுதலை நோக்கிற் பாரதியின் கவிதைகளிற் காணப்பட்ட "வீச்சும் வேகமும்" சரவணமுத்துப்பிள்ளையின் கவிதைகளிற் காணப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இதற்குத் தத்தைவிடுதூது ஆசிரியர் கையாண்ட கவிதை வடிவமே காரணம் எனலாம். நவீன சிந்தனை களைப் புதிய வடிவத்துள் சொல்ல விளையாது மரபுச் சட்டத்துக்குள்ளே கூறமுற்பட்டமையே தத்தைவிடுதூதுக் கவிதைகளின் சோர்வுக்குக் காரணமாயிற்று. இச்சோர்வை நீக்கி ஈழத்துத்

தமிழ்க் கவிதைக்குப் புதிய வேகத்தை மஹாகவி உருத்திரமூர்த்தி அவர்கள் தரும்வரை இத்தேக்கநிலை தொடர்ந்த வண்ணமேயிருந் தது.

சமகாலத்தில் வாழ்ந்த பிரபுக்கள் எனப்பட்டோரின் ஒழுக்கச் சீர்கேடுகளையும், சமகால சமூகம் பற்றிய விமர்சனப் பார்வை யையும் அங்கதப் பாணியில் விரித்துரைக்கும் இலக்கியமே நட்டுவச் சுப்பையனார் எழுதிய கனகி புராணமாகும். அக்காலத்தில், சமூகத் தின் அதிகார வகுப்பாக விளங்கிய பிரபுத்துவத் தையே எதிர்த்து நிற்கத் துணிந்தமை, சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்ட விளைந் தமை என்பன்வே நட்டுவச் சுப்பையனாருக்குத் தனிக் கவனத்தைப் பெற்றுத்தரும் பண்புகளாக அமைந்துள்ளன.

"ஊரார் சுணங்கு தோற்றாமல்
உயர்சாந்து அணிந்து வடம்பூட்டி
வாரான் மறைக்கும் தனக்கனகே
வரிவண்டு ஊத முகைஅவிழும்
நீராற் பொலிந்த சரவைவளர்
நெய்தல் நிலத்தான் வங்கநிறை
ஊராத் துறைக்கு மணியம்இவன்
உடையார் அருணாசலத்தின் மகன்"

எனவரும் கனகி புராணப் பாடலைப் படிப் போர்க்கு மேற்கூறிய உண்மை புலனாகும். சரவணமுத்துப் புலவர் போலன்றி சுப்பையனார் கவிதை வெளிப்பாட்டு முறையிற் புதிய உத்திகள் சிலவற்றையும் பயன்படுத்தியுள்ளமை தெரிகின் றது. அங்கதச்சுவை தோன்றக் கவிதைகளை எழுதியமை, ஓசைச்சிறப்பும் ஜனரஞ்சகத் தன்மையும் கவிதைகளில் அதிகம் பயில வைத்தமை, மரபு வழிப்புலவர்களால் "புனிதம்" எனக் கருதப்பட்ட புராண இலக்கிய வடிவத் தினைச் சமூகச் சீர்கேட்டைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்தியமை போன்றவற்றை அத்தகைய புதிய உத்திகளாகக் குறிப்பிடலாம். தான் சொல்லவந்த புதிய உள்ளடக்கத்திற்கு ஏற்ப மரபிலக்கிய வடிவம் ஒன்றைத் தேர்ந் தெடுத்துத் தனக்கேற்றபடி வளைத்துள்ளார் சுப்பையனார். மரபுக்குள் முன்னையவர்களைப் போல் அடங்கிப்போகாது, மரபை ஓரளவுக்குத் தனக் கேற்றபடி சாய்த்துக் கொள்ளும்போக்கை இவரிடம் காணமுடிகின்றது. அவர் கவிதை களில் தூக்கலாக வெளிப்பட்டு நின்ற அங்கதச் சுவை பிற்கால இலக்கியப் படைப்புகளில் ஆதிக்கம் செலுத்தி வந்தமையைக் காண முடிகின்றது. "கவித்துவத் திறமையின் துணையாலன்றி கவித்துவச் சக்தியின் ஆற்றல் கொண்டு கவிப்பொருளை உள்ளும் புறமும் அறிந்த பட்டறிவின் துணைக்கொண்டு புதுமுறைப் புராணம் ஒன்றைப் பாடினார் சுப்பையனார் "எனும் பேராசிரியர் கைலாசபதி அவர்களின் கனகி புராணம் பற்றிய மதிப்பீடும் சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

வே.இராமலிங்கம் எழுதிய கோட்டுப் புராணம் சமகால சமுதாயத்திற் சிறுசிறு பிரச்சினைகளுக்காகவும் நியாயஸ்தலம் சென்று அங்கு சட்டத்தரணிகளால் ஏமாற்றப்படும் மக்களின் அவலநிலையை மிகத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளது. கனகி புராணம் போலவே சமூகச் சீர்கேடுகளையும், ஏமாற்றுக் களையும் அங்கதச்சுவையோடு இந்நூல்பாடு வதைக் காணலாம்.

"கோட்டொரு களரி அதிலுறும் துரையோ
கூத்துப் பார்த்திருந்திடு மூப்பு
ஆடுறுநங் குரங்கோ வழக்கர் களவார்
அவையிடை அவைகளைக் கொண்டு

நாடொறும் ஆட்டுங் கயிறுதான் வழக்கு
நட்டுவப் பணிக்கனோ தரணி
வாடிடு வயிறு வளர்ப்பதற்கெடுத்த
வஞ்சனை வேடமென் றுணரவே"

இவ்வாறான சுவைமிகுந்த ஒருசில பாடல்கள் மட்டுமே இன்று கிடைக்கப்பெற்றுள்ளன. நியாய ஸ்தலங்களுக்குச் சென்று வழக்காடித் தமது சொத்துக்களை நட்டப் படுத்திக்கொள்ளும் அவலம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் மிக அதிகமாக நிகழ்ந்து வந்துள்ளது. இச்சூழலில் நியாயஸ் தலம் செல்வதிலுள்ள சிக்கல்களையும், அங்கு சட்டத்தரணிகளால் ஏமாற்றப்பட்டுப் பொருள் இழப்பைச் சந்திக்கும் அவலத்தையும் சுட்டிக் காட்டி, அந்நிலை நீங்கவேண்டும் என்னும் கருத்தோட்டத்தினை இராமலிங்கம் முன் வைப்பதைக் காணலாம். சமகாலத்தில் தமிழகத் திலே எழுந்த நாவல்களிலும் மேற்போன்ற சீர்திருத்த சிந்தனை முன்வைக்கப்படுதல் நோக்கற்பாலது.

ஆக, மேலே தரப்பட்ட புலவர்கள் அவர்தம் படைப்புகள் பற்றிய தரவுகளை வைத்துப் பார்க்கும்போது, பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த கவிதைகளின் உள்ளடக்கத்தில் சமுதாயப் பொறுப்புணர்வும், சிந்தனையும் ஏற்படுவதைக் காணலாம். சமுதாயப் பிரச்சினை களைத் தம் படைப்புகளில் முன்னிறுத்தும் மேற்படிப் படைப்பாளிகள் அப்பிரச்சினை களுக்குத் தீர்வாகச் சீர்திருத்தக் கருத்துக் களையே வலியுறுத்துகின்றனர். சீர்திருத்தக் கருத்துக்கள் மூலம் மக்கள் மனங்களை மாற்றிக் கொள்ளலாம் என்னும் அசையாத நம்பிக்கை இவர்களிடம் காணப்பட்டது. கவிதையின் உருவத்தைப் பொறுத்தமட்டிற் பாரிய மாற்றங் களையோ வளர்ச்சிகளையோ இவர்கள் ஏற்படுத்தவில்லை எனினும் மரபுச் சட்டத்திற் குள் நின்று புதுமையை அவாவ முற்பட்ட முயற்சி வரவேற்கத்தக்கதொன்றாகும். குறிப்பாக அவர்களது கவிதைகளிற் பயின்று வந்த ஓசைநயம், அங்கதச் சுவை, ஜனரஞ்சகப் பண்பு என்பன குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. ஏறத்தாழ இவர்கள் கவிதையில் வெளிப்பட்டு நின்ற மேற்போந்த பண்புகளே இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் தொடர்ந்தன.

இருபதாம் நூற்றாண்டின் முதல் நான்கு தசாப்தங்களிற் கவிதை எழுதியோர் பலராவர். அவர்களுள் கல்லடி வேலுப்பிள்ளை, பாவலர் துரையப்பாபிள்ளை, சோமசுந்தரப்புலவர், விபுலானந்தர், சுன்னாகம் குமாரசாமிப்புலவர், நவநீதகிருஷ்ணபாரதியார், க.மயில்வாகனப் புலவர், அருள்வாக்கி அப்துல்காதிறுப் புலவர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர் களில் நவீனத்துவ சிந்தனைகளைத் தம் படைப்புக்களில் ஓரளவு வெளிக்காட்டியவர்கள் என்ற வகையில் கவனத்திற்கொள்ள வேண்டிய வர்கள் பாவலர் துரையப்பாபிள்ளையும், சுவாமி விபுலானந்தருமாவர்.

மகாஜனா பாடசாலையின் ஸ்தாபகரான பாவலர் துரையப்பாபிள்ளையின் கவிதைகள் 'பாவலர் சிந்தனைச் சோலை' என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளன. அவரது 'சிவமணிமாலை' இதோபதேச கீதரசமஞ்சரி' சுவதேசக்கும்மி முதலான புகழ்பெற்ற ஆக்கங் களும் இத்தொகுப்பில் உள்ளடக்கப் பெற்றுள்

என. இத்தொகுப்பிலுள்ள சிவமணி மாலை தவிர்ந்த ஏனைய கவிதைகளில் நவீனத்துவப் பாங்கு ஓரளவு தலை காட்டுவதைக் காணலாம். பாவலரின் உள்ளத்தில் உறைந்திருந்த சமூக சீர்திருத்தச் சிந்தனைகள் அக்கவிதைகளில் தெளிவாக வெளிப்படுகின்றன. சமூகத்திற் புரையோடிக் கிடக்கும் ஏற்றத்தாழ்வுகள், மூட நம்பிக்கைகள், பிற்போக்கான சிந்தனைகள் என்பனவற்றிற்கு அறியாமையும், பரந்தமனப் பான்மை இல்லாமையும், ஐரோப்பியப் பண் பாட்டின் உள்நுழைவுமே காரணம் என வாதிடும் அவர்; அவை அகல, சீர்திருத்தக் கருத்துக் களை மக்கள்முன் வைக்கிறார்.

" மெய்ம்மண வாழ்வி லதியின்ப மாயுய்ய வேண்டுபவர்
கையி லதிபணம் பாரிய வாத்தி கதித்தநகை
பெய்யுமின் னாளிவ ளென்றொரு பெண்ணிற்
பிரீதி கொள்ளார்
செய்திறம் மேன்மை குணங்கல்வி கற்பிவை தேடுவரே"

எனும் பாடலிற் சீதனக் கொடுமையை அவர் சாடுவது தெரிகின்றது.

தனது கருத்துக்களை மக்கள் முன்னகர்த்த பாவலர் கையாளும் உத்திகளும் கவனிக்கத்தக் கவை. கீர்த்தனைகள், பதங்கள், கும்மிகள் முதலான பொதுமக்கள் மத்தியிற் செல்வாக்குப் பெற்ற பாவடிவங்களைத் தெரிவுசெய்து அவற்றின் வாயிலாகச் சீர்திருத்தப் போதனை களை அவர் தருவது கவனிக்கத்தக்கதாகும். கீர்த்தனை இசைப்பா வடிவங்களில் ஒன்றாகும். மக்கள் கேட்டு இரசிக்கும் வகையில் இசையுடன் பாடத்தக்க வகையில் இவை அமைந்திருப்பதால் இவற்றினூடாகச் சீர்திருத்தக் கருத்துக்களை மக்கள் மத்தியிற் கொண்டுசெல்வது இலகு வானது எனப் பாவலர் கருதியிருக்கக்கூடும். அவரது காலத்துக்கு முன்னர் எழுதப்பட்டு மக்கள் மத்தியிற் பெரும் வரவேற்பைப்பெற்ற இராமநாடகக் கீர்த்தனை நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்பன அவருக்கு முன்மாதிரியாக அமைந்திருக்க வாய்ப்புமுள்ளது. பாவலர் கையாண்ட கும்மி என்னும் இலக்கிய வடிவமும் ஜனரஞ்சகத் தன்மை கொண்டதே. நாட்டார் பாடல், இசை மரபில் நின்றும் வளர்ச்சியடைந்து, செந்நெறி அந்தஸ்தை இவ் இலக்கிய வடிவம் காலப் போக்கில் பெற்றுக்கொண்டது. பத்தொன் பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னரும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் யாழ்ப்பாணத்திற்பல கும்மிப்பாடல்கள் எழுந்தன. ஞானக்கும்மி, மிலேச்சமத விதற்பக் கும்மி, மலேரியாக்கும்மி, பண்ணைப் பாலக்கும்மி, அழகம்மா திருமண அலங்கோலக்கும்மி முதலானவற்றை வகைமாதிரியாகச் சுட்டலாம். சமகால சமூக வாழ்வியற் கோலங்களை ஓரள வுக்கு வெளிக்காட்டும் இலக்கியங்களாக இக் கும்மிகள் விளங்கியதை, அவற்றைக் கருத் தூன்றிப் படிப்பவர்கள் கண்டுகொள்வர். இக் கும்மிகள் வரிசையிலே பாவலர் அவர்களின் யாழ்ப்பாண சுவதேசக் கும்மியும்வைத்து நோக்கத்தக்கதாகும். ஐரோப்பியப் பண்பாடு தமிழ் பண்பாட்டிற் செல்வாக்கைச் செலுத்திய வேளையில் ஏற்பட்ட பண்பாட்டுக் குழப்பங் களை இக்கும்மியிற் சுட்டிக்காட்டும் பாவலர் இக் குழப்பங்கள் தீர சுதேச பண்பாடுபற்றிய பெருமித உணர்ச்சியும் தெளிவும் இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

இங்ஙனம் கவிதையின் பொருள் வடிவம் என்பனவற்றில், ஜனரஞ்சகத்தினை ஏற்படுத்த வேண்டும் என்னும் நோக்கினடிப்படையிற் பாவலர் நவீனத்துவ சிந்தனைகளை ஏற்றுக் கொண்டிருப்பது புலனாகின்றது. எனினும், தனது நவீனத்துவ சிந்தனைகளுக்கு மரபுக்

கவிதைக் கொள்கைகளுக்குள்ளேயே அவர் தீர்வுகாண முயல்வது தெரிகின்றது. மரபு யாப்பு வடிவங்கள், இலக்கிய வகைகள் என்பன வற்றையே அவர் விரும்பிக் கையாளுகின்றார். கவிதையில் அவர் கையாளும் மொழிகூட மரபுத்தன்மை வாய்ந்தது. செந்தமிழ் வழக்குகள் வடமொழிப்பதங்கள், மரபு இலக்கண முடிபுகள் என்பன அவரது கவிதைகளில் தாராளமாக வருவது நோக்கத்தக்கதாகும் எனினும் கவிதையில் ஜனரஞ்சகத் தன்மையை ஏற்படுத் துதல் என்ற நோக்கில் அவர் முன்னெடுத்த நடவடிக்கைகள் தமிழ்க் கவிதைகளில் நவீனத் துவ அலையொன்று புதியகோணத்தில் ஏற்பட வழிவகுத்துள்ளது என்பதை மறுத்தல் இயலாது.

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை எழுதிய அழகம்மா திருமண அலங்கோலக்கும்மி, மண்டைதீவு அகிலேச சர்மா எழுதிய பண்ணைப் பாலக் கும்மி, எழுதியவர் பெயர் அறியப்படாத உத்தியோகர் லக்ஷணக் கும்மி என்பன சமகால சமூக, அரசியல், பொருளாதாரப் போக்குகளை மிகத்தெளிவாக வாசகர் முன்னிறுத்தும் படைப்புக்களாகும். சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றிற்கு விமோசனம் தேவை என வாதிடும் இக்கும்மிகள் ஓரளவுக்குப் பொது மக்கள் விரும்பும் மெட்டு, மொழி ஆகியவற்றைக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இவற்றுள் அழகம்மா திருமண அலங்கோலக் கும்மி, ஆங்கிலேய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட முதற்றமிழ் நூல் என்பது நோக்கத் தக்கது. சமூகக் குறைபாடுகளைச் சுட்ட இக் கவிஞர்கள் பயன்படுத்திய கேலியும், கிண்டலும் கும்மிப்பாடலுக்கு மேலும் ஒரு தனி அழகை வழங்கியிருத்தலைக் காணலாம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங் களில் நவீனத்துவ சிந்தனைகளை ஓரளவு தன் கவிதைகளில் உள்வாங்கிக் கொண்டவர் என்ற அடிப்படையிற் கவனத்திற்குள் வரும் மற்றொரு கவிஞர் சுவாமி விபுலானந்தர். மரபு பிறழாது கவிதைகளை இவர் படைத்த போதிலும் அக்கவிதைகள் சிலவற்றில் அவர் கையாண் டிருக்கும் மொழி நயக்கத்தக்கதொன்றாகும். ஓசைப்பெருக்கும், வழுவிய தன்மையும், எளிமையும் இம்மொழியிற் காணப்படும் விசேட தன்மைகள் எனலாம். 'ஈசனுவக்கும் இன் மலர்கள் மூன்று' என அவர் எழுதிய தன்னு ணர்ச்சிக் கவிதைகளில் இப்பண்பினைப் பரக்கக் காணமுடிகின்றது.

"வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

என்னும் பாடல்கள் மிளிரும் எளிமை நயக் கத்தக்கதொன்றாகும். எனினும் விபுலானந்த ரின் எல்லாக் கவிதைகளும் இவ்வாறான எளிமையைக் கொண்டு விளங்கின எனக் கூறமுடியாது. அவரது மொழிபெயர்ப்புக் கவிதைகளிலும் மதங்கசூளாமணி, ஆங்கில வாணி முதலான படைப்புகளிலும் வரும் செய்யுள்கள் சற்றுக் கடினமான நடையில் உள்ளன. மரபுக் கவிதைப்போக்கு இறுக்கமாக அக்கவிதைகளிற் பின்பற்றப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஆக, தொகுத்து நோக்குகின்றபோது பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும்

வாழ்ந்த புலவர்களுள் சிலர்தம் கவிதைகளிற் குறிப்பிடத்தக்களவு நவீனத்துவப்போக்கை வெளிக்காட்டியுள்ளனர். இந் நவீனத்துவப் போக்கு ஆரம்பத்தில் கவிதைகளின் உள்ளடக் கத்தையே அதிகம் பாதித்தது. கவிதைகளில் சமுதாயப் பொறுப்புணர்வு ஏற்படவும், அதன் பின்னணியில் சமுதாயச் சீர்கேடுகளையும் பிரச்சினைகளையும் சீர்தூக்கி நோக்கவும் நவீனத்துவப்போக்கு வழியேற்படுத்திக் கொடுத் துள்ளதைக் காணலாம். அன்றியும், அச்சீர்கேடு களுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அக்காலக் கவிஞர்கள் சீர்திருத்தக் கருத்துக் களை முன்னிறுத்த மேற்படி நவீனத்துவச் சிந்தனைகளே வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள் ளன. சமகாலத்திற் பிறதத்துவங்களின் அறிமுகம் இன்மையாலும் சமுதாயப் பிரச்சினை களை முன்னிறுத்தி அவற்றின் ஊற்றுக்களைத் துருவித்துருவி நோக்கும் பார்வை அகலிப்பு ஏற்படாததாலும், சீர்திருத்தம் ஒன்றையே அக்காலக் கவிஞர்கள் தம்கவிதையில் மீளமீள வலியுறுத்தினர். சீர்திருத்தக் கொள்கையின் பலம், பலவீனம் பற்றி அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

கவிதையின் வடிவத்தைப் பொறுத்தமட்டில் நவீனத்துவத்தின் தாக்கம் ஜனரஞ்சகப்படுத்தல் என்னும் போர்வையிலேயே அமைந்ததைக் காணமுடிகின்றது. கவிதை எளிமையும், மக்கள் விரும்பிப் படிக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டுமென எண்ணிய அக்கவிஞர்கள் அதற்கென ஓசைச்சிறப்பும், கேலியும், கிண்டலும் ஓரளவு எளிமைப்படுத்தப்பட்ட மொழியும், நாட்டார்பாடல் மெட்டும் இருந்தாற் போது மானது எனத் திருப்திப்பட்டனர். அதிக எளிமை யைக் கவிதையில் வேண்டினால் கவிதை மரபு குலைந்துவிடும் என்னும் அச்சம் அவர்களுக்கு இருந்தது. நவீனத்துவப் போக் குக்கு இணங்கக் கவிதை மரபை உடைக்கவோ பரீட்சார்த்தமான முயற்சிகளைச் செய்யவோ அவர்களுக்குத் துணிவிருக்க வில்லை. மரபுச் சட்டத்துக்குள் புதிய சிந்தனை களை ஏதோ ஒரு விதத்தில் அடக்கிவிட வேண்டுமென எண்ணுபவர்க ளாகவே அவர்களிருந்தனர். எனினும் தமிழ் கவிதையில் அவர்கள் காலந்தோறும் உள் வாங்கிப் பதிவு செய்த நவீனத்துவ சிந்தனைகள் பின்வந்த கவிஞர்களுக்கு முன்மாதிரியாக விளங்கின. 1940களிலிருந்து ஈழத்துத் தமிழ் கவிதை கண்ட நவீன வளர்ச்சிகளுக்கெல்லாம் இவர்களது முயற்சிகள் ஊற்றுக்களாகவும், உரமாகவும் அமைந்துள்ளதை மறுக்கமுடியாது.

# புவியின் உள் அமைப்பு

**செல்வி மோ.லதா**
உதவி விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்


நாம் வசிக்கும் பூகோளமானது பல்வேறு பட்ட கட்டமைப்புக்களை உடையது. மேற் பரப்பு முதல் உட்பகுதி வரை பல படை அமைப்புக் களைக் கொண்டது. இப்பூகோளமானது இரண்டு மெல்லிய மூடிகளால் மூடப்பட்ட ஒரு பெரிய மையத்தைக் கொண்டுள்ளது. இதன் வெளிமூடி வாயுவாக உள்ளதனால் இதனை 'வாயு மண்டலம்' என்று சொல்லப்படும். உள்மூடி நீரினால் ஆக்கப்பட்டதனால் இதனை 'நீர்க் கோளம்' என்று சொல்லப்படுகிறது. இது எங்கும் கோளத்தைச் சுற்றிப் பரந்ததில்லை. **இதனால் மையம் வன்மையான பொருளாக** இருக்கிறது. இதனைக் 'கற்கோளம்' என்று கூறப்படுகிறது. கற்கோளத்தின் வெளிப்பாகத்திற் காணப்படும் பாறைகளின் தன்னீர்ப்புக் குறைவாக இருக் கிறது. பூமியின் உட்பகுதி, வெளிப்பகுதியிலும் பார்க்கக் கனம் உள்ளதாய் இருக்கவேண்டும். பூமியின் உட்பகுதி 'மத்தியகோளம்' என்று சொல்லப்படும். எனவே இவ்வாறு சிறப்புற அமைந்து காணப்படும் புவிக்கோளத்தின் உள்ளமைப்பு எவ்வாறாக அமைந்து காணப் படுகிறது என்பது பற்றி நோக்குவோம்.

புவிப்பரப்பில் உருவாகும் நிலத்தோற்றங்கள் புவியின் வெளியே செயற்படும் செயற்பாட்டு முறைகளால் மட்டுமன்றி, புவியின் உள்ளே இயங்கும் செய்முறைகளாலும் பாதிக்கப் படுகின்றன. நிலத்தின் உயர்தல் அல்லது தாழ்தல், எரிமலைகள் ஏற்படுதல், புவியதிர்ச்சி கள், மலைகளின் உற்பத்தி முதலியவை புவியின் உள்ளே இயங்கும் விசைகளாற்றான் ஏற்படுகின் றன. இப்படியிருக்கப் புவியின் உள்ளமைப்புப் பற்றிய விபரங்கள் எமக்குச் சரியாகத் தெரியாது. ஆரம்பகாலத்திற் புவிச் சரிதவியலாளர் எரி மலைக் கக்குகைமூலம் பெறப்பட்ட பொருட் களின் இயல்புகளிலிருந்து கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். புவியின் உட்பாகம் ஒரு மையத்தை நோக்கிய படைகளாக ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. மேற்பரப்பை அண்டிய பகுதிகளிற் பௌதிக வெப்பக் கடத்துகை காரணமாகப் புவியின் மையப்பகுதியில் இருந்து வெளியே நோக்கி வெப்பக் கதிர்வீச்சு நிகழ் கின்றது. இதற்கேற்ப இப்படைகள் ஒவ் வொன்றும் பௌதிக மற்றும் இரசாயன அல்லது வெப்பநிலை அடிப்படையில் முற்றிலும் வேறுபட்ட அமைப்புடையதாகக் காணப்படுகின்றன.

புவி மேற்பரப்பிலுள்ள பாறை வகைகள் அவற்றின் கூறுகளைப் பற்றி எமக்கு நன்றாகத் தெரியும். புவியின் மெல்லிய மேலோடாக அமைந்துள்ள பாறைகளின் சராசரி அடர்த்தி 3க்கும் குறைவாகும். இப்பாறைகள் தண்ணீ ரைப் போற் சுமார் மூன்று மடங்கு கனமானவை. புவியின் சராசரி அடர்த்தி 5.5 ஆகும். புவியின் மேலோட்டின் அடர்த்தி, புவியின் சராசரி அடர்த்தியைவிடக் குறைவாக உள்ளதனால், புவியின் உட்பகுதி சராசரி அடர்த்தியைவிட அதிகமாய் இருக்கவேண்டும். உட்பகுதியின்


அடர்த்தி சுமார் 7 தொடக்கம் 8 ஆக இருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். பாறை போன்ற பொருள் அதிக அழுத்தத்திற்குட் படும்போது, அதன் அடர்த்தி ஒரு குறிப்பிட்டள வுக்கு மேல் உயர்வதில்லை. ஆகையால், புவியின் உள்ளே புவிப்பரப்பிலுள்ளதைப் போலப் பாறைகள் இருக்க முடியாது. புவியின் உள்ளே பாறைகளை விடக் கனமான பொருள் இருக்க வேண்டும். இப்பொருள் உலோகங்களாக இருக்கக்கூடும். ஏனெனில் உலோகங்களின் அடர்த்தி அதிக மாய் உள்ளது. புவியின் காந்தத் தன்மையி லிருந்து உள்ளே இரும்பும், நிக்கலும் இருக்கக் கூடும் என்று தெரிகிறது. புவியின் மேலோடு இலேசான பொருள்களாலானதால், அப்பொருள் கள் புவித் திரவநிலையில் இருந்தபோது, கனமான பொருள்களிலிருந்து பிரிந்து மேலே வெளிப்பட்டு, மெல்லிய அடுக்காக மாறியிருக் கலாம்.

புவியின் உள் அமைப்பைப் பற்றிச் சூயஸ் (Suess) என்பவர் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் விளக்கினார். அவர் புவியில் மூன்று அடுக்குகள் உள்ளன என்றார். புவிப்பரப் பிற் தோன்றும் அடுக்கை ஸியால் (Sial) அடுக்கு என்று பெயரிட்டார். இந்த அடுக்கில் சிலிகாவும், அலுமினியமும் மிகுதியாகவுள்ள கிரனைட் போன்ற பாறைகள் உள்ளன. இப்பாறைகள் கண்டங்களின் பரப்பிற் சில இடங்களில் தோன்றுகின்றன. மற்ற இடங்களில் மெல்லிய படிவுப்பாறை அடுக்குகள் ஸியால் அடுக்கை மூடியுள்ளன. கண்டங்கள் ஸியால் அடுக்காலானவை என்று அவர் கருதினார். ஸியால் அடுக்கிலுள்ள பாறைகளின் அடர்த்தி 2.75 முதல் 2.90 வரை வேறுபடுகின்றது. ஸியால் அடுக்குக் கீழே ஸிமா (Sima) அடுக்கு இருக்கிறது. இந்த அடுக்கில், மேக்னீஸியம், கேல்ஸியம் மற்றும் அயயம் போன்ற கனமான பொருள்களின் ஸிலிகேட்டுகள் உள்ளதால், இதன் அடர்த்தி, 2.90 முதல் 4.75 வரை வேறுபடுகிறது. இந்த அடுக்கிலுள்ள பாறைகள் போசால்ட் (Basalt), கேப்ரோ (Gabbro) போன்றவை. ஸிமா அடுக்கு ஸியால் அடுக்கை விடத் தடிப்பானது. இந்த அடுக்கின் மேற்பரப்பு, கடற் றரையில் வெளிப்படுகிறது. ஸிமா அடுக்குக்குக் கீழேயுள்ள மையப்பகுதி (Core) நைஃப் (Nife) எனப்படும். இதில் நிக்கலும் அயனும், அதிகளவு உள்ளன. இப்பகுதியில் அடர்த்தி சுமார் 11 ஆகும். புவியின் உள்ளே ஒரே மையமுள்ள அடுக்குகள் இருப்பதாகவும், இவ்வடுக்குகளின் அடர்த்தி கீழே போகப்போக அதிகரிக்கின்றது என்றும் சூயஸ் கருதினார். மேலேயுள்ள அடுக்கு அதற்குக் கீழே உள்ள அடுக்கின் மேல் மிதக்கிறது என்றார்.




*Source :- Physical Geography to day A Portrait of a planet page II*

### The Major Surface Features of the earth




*Source: Physical Geography page - 47*

புவியின் உள்ளே உள்ள பொருள்களின் பௌதிக நிலையைப் (Physical State) பற்றியும் சில கருத்துக்கள் முன்பு கூறப்பட்டன. புவியின் உள்ளே செல்லச்செல்ல வெப்பம் அதிகரிக்கிறது. வெப்பம் அதிகரிக்கும் வீதம் பாறைகளுக்கு ஏற்ப **32** மீட்டர் ஆழத்திற்கு $1^0C$ இல் இருந்து **60** மீட்டருக்கு $1^0C$ வரை வேறுபடுகிறது. இதிலிருந்தும் எரிமலைகளிற் பாறைக் குழம்பும், வெப்பமான வாயுக்களும் வெளிப்படுவதிலிருந்தும், புவியோட்டிற்குக் கீழேயுள்ள அடுக்குத்திரவ நிலையிலுள்ளது என்று கூறினார்கள். புவியின் மையப்பகுதி வாயுக்களால் ஆனது என்றும் சிலர் நம்பியிருந்தார்கள். ஆனால், புவியின் உள்ளே போகப்போக வெப்ப நிலை உயர்வதோடு அழுத்தமும் அதிகரிக்கின்றது. அதிக அழுத்தமும் அதிக வெப்ப நிலையும் உள்ள மையப்பகுதியின் நிலையை ஆய்வுகூடத்திற் கண்டறிய முடியாது. ஆகையால் அங்கு பொருள் எந்த நிலையில் உள்ளது என்று மற்றக் கூறுகளைக் கொண்டு தான் ஊகிக்க முடியும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்திற் புவியின் உள்ளமைப்புப் பற்றி

இவ்வளவுதான் தெரிந்திருந்தது. கடந்த சுமார் 50 ஆண்டுகளிற் புவியதிர்ச்சியின் தன்மை களை ஆராய்ந்ததன் பயனாகப் புவியின் உள்ளமைப்பைப் பற்றிப் பல உண்மைகள் தெரிய வந்தன.

புவி நடுக்க அலைகளின் அடிப்படையிற் புவியின் உள் அமைப்பானது மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது.


1. புவியோடு
2. இடையோடு
3. கோளவகம்

புவியின் மேற்படையே புவியோடு எனப்படும். கடினமான கற்கோளமாகக் காணப்படுகின்றது. புவியோடானது 10km வரையிலிருந்து 50km வரையிலான தடிப்புடையது. புவியின் விட்டமான 12744km உடன் புவியோட்டின் தடிப்பை ஒப்பிடும்போது, இது எவ்வளவு சிறியது என்பது புரியும். அதனாற்றான் புவியோடு ஒரு அப்பிள் பழத்தின் தடிப்பிற்குச் சமனாக அமைந்துள்ளது. புவியோடானது பளிங்குருப் பாறைகளையும் அவற்றை மூடிய அடையற் பாறைகளையும் கொண்டுள்ளது. இவ் ஓடானது கண்ட ஓடு, சமுத்திர ஓடு என இரு ஓடுகளைக் கொண் டுள்ளது. புவியோட்டின் கண்ட ஓட்டை Sial படை எனவும் அழைக்கலாம். இது சிலிக்காவையும், அலுமினியத்தையும் கொண்டுள்ளது. புவி யோட்டின் சமுத்திர ஓட்டை Sima படை எனலாம். இது சிலிக்காவையும் மகனீசியத் தையும் கொண்டுள்ளது. இதில் எரிமலைக் குழம்புப் பாறைகளும் காணப்படுகின்றன.

கண்ட ஓடு 30-50 km வரையிலான தடிப்பினைக் கொண்டுள்ளது. சமுத்திர ஓடு 10km வரையிலான தடிப்பினைக் கொண்டது. சமுத்திர ஓடு எரிமலைக் குழம்பும் (Gabbro) கொண்ட பாறைகளால் ஆனது. கண்ட ஓடு கருங்கல் பாறைகளால் ஆனது. அதன்மேல் சில 1000m வரையிலான தடிப்பில் அடையற் பாறைகள் மூடியுள்ளன. மலைத்தொடர்கள், பெரும் வடிநிலங்கள் முதலியனவற்றில் அதிக தடிப்பான அடையற் பாறைகளைக் காணலாம். கண்ட ஓட்டின் கீழ் அரைப்பகுதி ஆய்விற்கு உட்படவில்லை. எனினும் 1925இல் Josepb Conrad என்பவரால் அப்பகுதி ஆராயப்பட்ட போது, புவி நடுக்க அலைகளின் வேகம் மேற்பகுதி கருங்கற் பாறைகளிலும் பார்க்க அதிகம் இருப்பதைக் கண்டார். புவி நடுக்க வேகத்தை வேறுபடுத்தும் கண்ட ஓட்டின் மேற்பகுதியையும், கீழ்ப்பகுதியையும் பிரிக்கும் எல்லை கொன்றாட் இடைவெளி எனலாம். அதனால் கண்ட ஓட்டின் கீழ் அரைப்பகுதி சமுத்திர ஓட்டினைப் போன்று பசால்ட் எரிமலைக் குழம்புப் பாறைகளாயிருக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு புவியின் மூன்று படை அமைப்புக்களில் புவியோட்டின் படை அமைப்புக் காணப்படுகிறது.

மேலும் இடையோட்டினைப் பற்றி விரிவாக நோக்குவோமாயின் புவியோட்டின் கீழே வேறு பட்ட பாறைகளைக் கொண்ட ஒரு தொகுதி காணப்படுகின்றது. இதனை இடையோடு அல்லது மான்ரில் படை அல்லது மூடு பாறைகள் என அழைக்கலாம். புவியோட்டினையும், இடை யோட்டினையும் மெல்லிய ஒரு இடைவெளி பிரிக்கிறது. அதனை மொகா இடைவெளி எனலாம். மொஹாவிறோச் என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்டதனால் இவ்வாறு அழைக்கப் படுகின்றது. கனிந்த விளாம்பழத்திற்கும் ஓட்டிற் கும் இடையிலான இடைவெளி போன்றது.

இடையோடு மேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 2900கி.மீ (1000 மைல்) அமைந்துள்ளது. மொகா இடைவெளி 0.16–3.24m வரையிலான தடிப்பைக் கொண்டது. இப்படை எரிமலைக் குழம்புப் பாறைகளையும், Olivine பாறைகளையும் கொண்டுள்ளது. Gaornet, Pyroxine போன்ற களிமங்களையும் கொண்டுள்ளது. இடையோட்டின் அதி மேற்படையை மேல் மான்ரில் படை என அழைப்பர். 100 – 200km க்கு இடையிலான பகுதியிற் புவிநடுக்க அலைகளின் வேகம் வீழ்ச்சியடைவதனைக் காணலாம். மேல் மான்ரியல் படை; மக்னீசியம், இரும்பு ஆகிய வற்றைக் கொண்டுள்ளது. மேல் மான்ரியலையும் புவியோட்டையும் சேர்த்து ஒருங்கே கற்கோளம் எனலாம். நவீன புவிச்சரித வியலாளர் 100km தடிப்பான கற்கோளத்தைக் கவசத்தகடு அல்லது தகட்டோடு என்பர். மான்ரில் படையின் அமைப்பானது பின்வருமாறு காணப்படும்.




*Source :- Holme's Principals of Physical Geography. Page - 19*


மேல் மான்ரியல் படையின்கீழ் அமைந்திருப்பது மென்பாறைக்கோளம் அல்லது அஸ்தனோஸ் பயர் என்பதாகும். இப்படையிற் புவிநடுக்க அலைகளின் வேகம் குறைவாகும். இங்கு கதிரியக்கச் செயற்பாடுகள் இடம் பெறுவதால் வெப்பநிலை அதிகரிக்கின்றது. இவை மேற்காவுகை மின்னோட்டத்திற்கு (Covection Current) இங்கு காணப்படும் பொருட்கள் வெப்பம் உடையனவாக உள்ளன. இதனால் இவற்றின் அடர்த்தி குறைவாக உள்ளன. இந்தப் பகுதியில் ஏறத்தாழ 10% மான வெப்ப ஊற்றுக்கள் காணப்படுகின்றன. இப்பகுதியிலே வெப்பநிலை உருவாவது கண்டறியப்பட்டுள்ளது.

இடையோடானது மேல் இடையோடு, கீழ் இடையோடு என இரு வகைப்படும். இதில் மேல் மூடு பாறையில் சிலிக்கன், அயன், மகனீசியம்


முதலான பொருட்களின் அடர்த்தி குறைவான தன்மைகளும், கீழ் மூடு பாறையில் மேற் குறிப்பிட்ட கனிமங்களின் அடர்த்தி கூடவாக வும் உள்ளது. மேல் மூடு பாறையையும், கீழ் மூடு பாறையையும் 400 - 500km வரையான தடிப்புடைய ஒரு நிலைமாறும் வலயம் பிரிக்கின்றது. இது புவியின் மேற்பரப்பிலிருந்து 670km ஆழத்தில் அமைந்துள்ளது. கீழ் மூடு பாறைக்கும் அடுத்து வெளிக்கோளத்திற்கு மேலாகப் பல 100kmகள் தடிப்பில் ஒரு நிலைமாறும் வலயம் அமைந்துள்ளது. கலிபோர்னியா தொழில்நுட்பம் 25,000க்கு மேற்பட்ட புவி நடுக்கங்களின் நடத்தைபற்றி பகுப்பாய்வினை மேற்கொண்டபோது, இந்த நிலை மாறு வலயம்பற்றிச் சில கருத்துக்கள் வெளியிடப்பட்டது. இந்த நிலைமாறும் வலயம் கரடுமுரடானதாகவும், மேடுபள்ளங்களைக் கொண்டிருப்பதாகவும் அவதானித்தனர். இந்தக் கரடுமுரடான பகுதி "கட்டன் பேக்" தொடர்ச்சி யற்ற வலயம் என அழைக்கப் படுகின்றது. அல்லது "D Layer" எனவும் அழைக்கப் படுகின்றது. புவியின் உட்பகுதியைவிட வேறுபட்ட பண்புகளைக் கொண்டுள்ளது. இவ்வாறு புவியின் இடையோடு அமைந்து காணப்படுகின்றது.

புவியின் படை அமைப்புக்களில் இறுதியாக நோக்குவோமாயின், இடையோட்டிற்குக்கீழ் காணப்படுவது கோளவகம் ஆகும். இதனை உள்ளீடு எனவும் அழைப்பர். இடையோட்டிற்கும், கோளவகத்திற்கும் இடையே "கட்டன் பேக்" எனப்படும் ஒரு இடைவெளி காணப் படுகின்றது. இது நிக்கல், இரும்பு என்னும் உலோகங்களின் கூட்டினால் ஆனது. புவியின் மேற்பரப்பில் இருந்து 2900km க்குக்கீழ் கோளவகம் அமைந்துள்ளது. புவியின் பெரும்பகுதியை உள்ளடக்கிய படை இதுவாகும். கோளவகத்தின் வெப்பநிலை $2000^0C$ ஆகும். இந்த வெப்ப நிலையில் எந்த, ஒரு பொருளும் உருகாது இருக்கமுடியாது.

புவியின் உள்ளே அமைந்த மூன்று படைகளின் குறுக்குவெட்டு முகம் பின்வருமாறு காட்டியளிக்கின்றது.




*Sourece: Physical Geography to day Page - 11*




*Sourece: Physical Geography to day*
*Page - 11*

மேற்கண்டவாறு புவியின் உட்பகுதிகளிற் செய்யப்பட்ட ஆய்வுகள்மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் அமைகின்றன. புவியின் உட்பகுதியின் அமைப்பும், அங்கு இடம் பெறும் செயற்பாடுகளையும் அறியக்கூடியதாக உள்ளது.


## Reference

- BARRY, Harmon, 1993, "Physical Geography of the Global Environment, Published Simultaneously in Canada.
- FRANK PRESS RAYMOND SIEVER, 1978, "Earth" W.H.FREEMAN AND COMPANY
- Gorshkov.G, Yakushova.A, 1977, "Physical / Geology", MIR Publishers MOSCOW.

# கல்லூரியின் நிழலில்



# கல்லூரியின் நிழலில்



# சமஸ்கிருதத்தில் சதக இலக்கியம்

திருமதி ஸ்ரீகலா ஜெகநாதன்
தலைவர், சமஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**வேத இலக்கியத்தில் சத என்னும் பதம்**

'சதம்' என்ற பதம் நூறு என்ற எண்ணை மட்டுமல்லாது போதிய, பல, நீண்ட, பூரணத் துவம் என்ற கருத்துக்களைக் குறிக்க ரிக்வேதத் திற் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரிக்வேதத்தில் நீண்ட வாழ்வை விரும்பும் ஒரு கவி, "ஓ ருத்திரனே உன்னால் தரப்பட்ட நற்பயனைத் தரும் மருந்துகளால் நான் நூறு மழைக்காலங் களைக் காண்பேனாகுக' என்று பாடுகிறார். மனிதனுக்கு நூற்றுக்கணக்கான செல்வத் தைத் தரும்படி ஒருகவி சோமனை வேண்டுகின் றார். இந்திரன் சதகீரது ரிக்வேதத்திற் – நூறு யாகங்களைச் செய்தவன் நூறு கருமங்களைச் செய்தவன் என்று கூறப்படுகின் றான். சத என்ற சொல்லை ரிக்வேதத்தில் பலவிடங்களிற் காணலாம். சதபத பிராமணம் நூறு அத்தியாயங் களைக் கொண்டது. ஆஸ்வாலாயன கிருஹ்ய சூக்தத்தில் 'சதார்ச் சினாகா' என்ற சொல் காணப்படுகின்றது. நூறு புகழ்ச்சிப் பாடல் களுக்குரியவர்கள் என்பது இதன் கருத்தாகும். இவ்வாறு செய்யுட்களையும், அத்தியாயங் களையும் நூறு நூறாகப் பகுத்தமையும் நூறு பெயர்களைக் கூறியமையும் 'சதக' என்ற இலக்கிய வடிவம் தோன்றுவதற் கான ஆரம்பப் பாங்காக அமைந்ததெனலாம்.

**'சதக' என்ற பெயருள்ள பௌத்த நூல்கள்**

வேத இலக்கியத்துக்குப் பிற்பட்ட பௌத்த நூல்களில் 'சதக' என்ற சொல் அடிக்கடி பிரயோகப்படுகின்றது. சதுஸ் – சதகம் என்ற நூலை கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாத்ரு – சேதர் என்ற பௌத்த அறிஞர் இயற்றினார். சதுஸ் – சதகத்தின் சில பகுதிகளே இன்று கிடைக்கப்பெறுகின்றன. மாத்ரு சேதரால் சத – பஞ்சசிகா என்ற பிறிதொரு ஸ்தோத்திர நூலும் இயற்றப்பட்டது. சதுஸ்– சதகம் நானூறு பாடல்களையும், சத – பஞ்சசிகா நூற்றைம்பது பாடல்களையும் கொண்டது. இன்று கிடைத்துள்ள காலத்தால் முந்திய சதக நூல் – அவதான சதகமாகும். 'சத' என்னும் பதம் பொதுவாக நூறு பாடல்களைக் கொண்ட தொகுப்பைக் குறிக்குமெனினும், அவதான சதகத்தில் புத்தரின் நூறு செயற்கரும் செயல்கள் குறிப்பிடப்படுகின்றன. பத்து தசகங்களாக அவதான சதகம் பகுக்கப் பட்டுள்ளது. கி.பி.மூன்றாம் நூற்றாண்டிலே இது சீனத்திலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன்காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டென்று கருதப்படுகின்றது.

அவதான சதகத்துக்குப் பின்னர் அடுத்த காலகட்டத்துக்கு உரியனவாகக் கிடைத்துள் ளவை பர்த்திருஹரியின் சதகங்களே.

இடைப்பட்ட காலத்தில் சம்ஸ்கிருதத்திலும், பாலி முதலிய பிற நூல்களிலும் சதகங்கள் தோன்றியிருக்கலாம். ஆனால் அவை இன்று கிடைத்தில.

### சதக இலக்கிய வளர்ச்சி

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பர்த்திருஹரி நீதி, சிருங்காரம், வைராக்கியம் என்ற மூன்று விடயங்கள் மீதும் நூறு, நூறு பாடல்களை இயற்றினார். இவை 'சதகத்ரயம்' எனவும், 'சுபாஷித த்ரீசதி எனவும் கூறப் படுகின்றன. அவருடைய பாட்டு ஒவ்வொன்றும் தனித்து நின்று ஒரேயொரு கருத்தைத் தெளி வுறுத்தும் இயல்புடையன. "மனித வாழ்க் கைக்குத் தேவையான உன்னத கருத்துக் களைக் கூறும் சிறிய கவிதையின் மாதிரியுரு வங்களே பர்த்திருஹரியின் சதகங் கள்' என்று கூறப்படுகின்றன. பர்த்திருஹரியின் சதகங்கள் தொடக்கம் சதக இலக்கிய வடிவம் பெருமளவு வளர்ச்சியடைந்த நிலையைக் காணக்கூடிய தாயுள்ளது. நீதி மட்டுமன்றிக் காதல், துறவு என்ற விடயங்கள் மீதும் முதன் முதலாகச் சதகங்களைச் செய்தவர் பர்த்திருஹரி. இவருடைய சதகங்களைப் பின்பற்றி பிற்காலத் திற் பல சதகங்கள் எழுந்தன. இவை எல்லா வற்றையும்விட பர்த்திருஹரியின் சதகங் களே சிறந்தன என்று சொல்லப்படுகின்றன.

### சூர்ய சதகம்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மயூரர் என்பார் சூர்ய சதகத்தை இயற்றினார். சூர்யன், அவனது தேர், சூர்ய வட்டம், சூர்யனது தேர்க்குதிரைகள், சூரியனது தேர்ச்சாரதி முதலிய விடயங்கள் பற்றிச் சூர்ய சதகம் கூறும் சூர்யனது கதிர்கள் மக்களைப் பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேற்றும் என்று சொல்லப்படுகின்றது. மயூரரது சூர்ய, சத கத்தைப் பின்பற்றிக் கோதண்டராம், ராக வேந்திர சரஸ்வதி முதலியோரும் சூர்ய சதகங்களை இயற்றினர்.

### சண்டீ சதகம்

இது துர்க்கையைப் போற்றிப் பாடப்பட்ட நூற்றியிரண்டு பாடல்களையுடையது. சண்டி யின் இடது காலைப் பாடவும், சண்டிமீது அதிக புகழ்ச்சியுள்ள நூலை ஆக்கவுமே பாணர் இச்சதகத்தை இயற்றினார். மார்க்கண்டேய புராணத்தில் வரும் தேவி மகாத்மியத்தில் துர்க்கை, எருமை வடிவினனான மகிஷாசுரன் என்ற அசுரனைக் கொன்ற கதை காணப் படுகின்றது. இக்கதையை அடிப்படையாகக் கொண்டே சண்டி சதகம் இயற்றப்பட்டது.

### அமரு சதகம்

சதக இலக்கிய வரிசையில் அமருவின் சிருங்காரரசம் பொருந்திய கவிதைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அமரு, அமருக, அமரா எனப்பல பெயர்களில் அமரு சதகத்தின் ஆசிரியர் அழைக்கப்படுகிறார். கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆனந்தவர்த்தனர் அமருவின் பெயரை தன்நூலிற் குறிப்பிட்டுள் ளார். காதலரது பல்வேறு மனோ நிலைகளை அமரு சதகம் குறிப்பிடுகிறது. இலக்கிய மரபின் படி நேரடியாகச் சுட்டி, ஒருவர் பெயர் கூறாத காதல் மனோபாவங்கள் அனுபவங்களாக அமரு சதகத்திற் கூறப்படுகின்றன.

### பிற்பட்ட சதகங்கள்

கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதற்கொண்டு மேலும் வளர்ச்சியடைகின்ற இச்சதகங்கள், கி.பி.இருபதாம் நூற்றாண்டுவரை வடமொழி இலக்கியத்தில் இடம்பெறுவதை உணர முடிகிறது. பெரும்பாலான சதகங்கள் நீதி, சிருங்காரம், வைராக்கியம், பக்தி என்ற பொருள்பற்றியே பேசுகின்றன.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீமூககவி என்பார் பஞ்சசதீ என்ற பெயரில் ஐந்து சதகங்கள் இயற்றினார். ஆர்யாசதகம், பாதார விந்த சதகம், ஸ்துதிசதகம், கடாக்ஷ சதகம், மந்தஸ்மிதசதகம் என்ற ஐந்து சதகங் களும் ஐந்நூறு பாடல்களையுடையன.

கி.பி.9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லட கவியால் பல்லட சதகம் இயற்றப்பட்டது. அந்யோபதேசம் என்ற முறையிற் பல நீதிக் கருத்துக்களை இவர் கூறுகிறார். ஒரு கருத்தைக் கூறுவதற்கு வேறு ஏதோ ஒன்றை வெளிப்படையாகச் சொல்வது என்று பொருள்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் திருஷ்டாந்த சதகம் இயற்றப்பட்டது. கி.பி.11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த க்ஷேமேந்திரராற் சாருசார்யா சதகம், இயற்றப்பட்டது. நூறு பாடல்களைக் கொண்ட இச்சதகம் உயர்ந்த மனிதன் என்ன செய்கிறான்? அவன் செய்ய விரும்புவது என்ன என்பது பற்றிக் கூறுகின்றது.

ஈழத்தைச் சார்ந்த பௌத்த கவிகளாலும் சதகங்கள் இயற்றப்பட்டன. 'அநுருத்த' என்பவரால் 'அநுருத்த சதகம்' இயற்றப்பட்டது. மகாவம்சத்தைப் பின்பற்றி இதிலே பல கதைகள் கூறப்படுகின்றன. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இது இயற்றப்பட்டது.

ராமச்சந்திரகவி என்ற வங்காள அந்தண ரால் கி.பி.13ஆம் நூற்றாண்டளவிற் பக்தி சதகம் இயற்றப்பட்டது. இவர் இலங்கைக்கு விஜயம் செய்தவர். புத்தரைத் தமது கவிதைகளிற் புகழ்கிறார்.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜகந்நாத பண்டிதரால் கங்காலகரீ சதகம் இயற்றப்பட்டது. இதே நூற்றாண்டில் வாழ்ந்த நீலகண்ட தீக்ஷிதர் வைராக்கியசதகம், சபாரஞ்சனா சதகம், அந்யோபதேச சதகம் என்பவற்றை இயற்றினார். பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்யாணராம சாஸ்திரி மீனாட்சி சதகம், லக்ஷ்மி நிருசிங்க சதகம் என்பவற்றை இயற்றினார். இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த கஸ்தூரி சிவசங்கர சாஸ்திரி சூலபாணி சதகத்தை இயற்றினார். ஜயந்திவெங்கன்னாவினால் லக்ஷ்மீபதி சதகம் இயற்றப்பட்டது.

சதகங்களைச் சிறு காவ்யம் என்ற இலக்கியப் பிரிவில் அடக்கலாம். மகா காவ்யத் தின் ஒரு சில இயல்புகளை இவை ஏற்றுவரும். பொதுவாக நூறுபாடல்ககளைக் கொண்ட தெனினும் சில சமயம் நூற்றுக்கு அதிகமான செய்யுட்களையோ, சற்றுக் குறைந்த எண்ணிக் கையுடைய செய்யுட்களையும் இவ்வடிவம் கொண்டு விளங்கும். தனித்தனிப் பாடல்களின் இணைவாகவோ, அல்ல து பத்துப் பாடல்களின் இணைவாகவோ இவை காணப்படுகின்றன. இவை ஒரு ஆசிரியரின் படைப்பாகவோ, பல ஆசிரிய ஆக்கங்களின் தொகுப்பாகவும் இவை விளங்கலாம். பல்வேறு விடயங்களும் பாடு பொருளாய் அமைந்த வடமொழிச் சதகங்களில் எண்வரையறை மட்டுமே கட்டுப்பாடாய் அமைந் தமை குறிப்பிடத் தக்கது.

# இலங்கை வரலாற்றில் 1818ஆம் ஆண்டுக் கலகம் - ஒரு பார்வை

M. பத்மன் B.A(Hons)
விரிவுரையாளர், பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

இலங்கைத்தீவில் பிரித்தானியர்கள் கி.பி. 1796 தொடக்கம் 1948 வரையான காலப் பகுதியில் தமது ஆதிக்கத்தைப் பரப்பித் தமக்கான அடையாளத்தை ஏற்படுத்தினர். பிரித்தானியர் ஆட்சிக்கால இலங்கையின் சமூக, பண்பாட்டு வரலாற்றில் 1818ஆம் ஆண்டு பல்வேறு நிலைகளிலும் முக்கியம்பெற்றுக் காணப் படுகின்றது. ஐரோப்பியர் வருகையி னால் இலங்கையில் பல்வேறு வகையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் இதில் பிரித்தானியர் ஆட்சிக்காலம் தனிச்சிறப்புப் பெறுகின்றது. இலங்கையின் கரையோரங்கள் 1796 இற் ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட்ட போதிலும், மலையகம் 1815 இலேயே கைப்பற்றப் பட்டது. இவர்களின் மூன்று வருட நிர்வாக முறையினால் அதிருப்தியடைந்த மக்கள் 1818 இல் அவர்களுக் கெதிராக மேற்கொண்ட வெறுப்புணர்ச்சியே கலகமாகமாறியது. 1815 இல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் குறைபாடு மலைய கத்தில் இதுவரை பாரம்பரியமாக இருந்துவந்த முடியாட்சி முறையைப் பிரித்தானியர் அகற்றி யமை, அரண்மனைப் பிரதானிகள் அந்நியரான பிரித் தானியருடைய செயற்பாடுகளை வெறுத் தமை, பௌத்த குருமார்கள் பிரித்தானியரை வெறுத்தமை, மக்கள் பிரித்தானியர் மீது வெறுப்புக் கொண்டமைபோன்றன 1818 இல் கலகம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணி களாக உள்ளதோடு, வெல்லசவில் ஏற்பட்ட எதிர்ப்பு உடனடிக் காரணியாக உள்ளது. இத்தகைய காரணிகளை எடுத்து நோக்குவ தோடு கலகம் தோல்வியில் முடிந்தமைக்கான காரணங்களையும் கண்டிப் பிரகடனத்தின் அம்சங்களையும் நோக்குவோம்.

### கலகத்திற் கான காரணம்

1815 இல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் குறைபாடு கலகத்திற்கான ஒரு காரணமாகக் காணப்படுகிறது. பிரித்தானிய வல்லரசு, போர்த்துக்கீச, டச்சு வல்லரசுகளிலும் பார்க்க முற்றிலும் மாறானது என்பதைக் கண்டியரசனும் அறியவில்லை. பிரதானிகளும் அறியவில்லை. அவ்வாறு அறிந்திருந்தால் பிரித்தானியருக்குச் சில வியாபார உரிமைகளைக் கொடுத்துச் சமாதானப்படுத்தி விட்டுத் தங்கள் பொறுப்பிற் கூடிய அதிகாரத்தை வைத்துக்கொள்ள முயற்சி செய்திருப்பர். ஆனால் தங்களுக்கு அரசனாக இருந்த நாயக்க வம்சத்தவன் அந்நியன். ஆகவே அவனை அகற்றிவிட்டு அவனுக்குப் பதிலாக நல்லவனாகவுள்ள இன்னோர் அரசனைத் தாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நோக்கில் கண்டி உடன்படிக்கை மூலம் இங்கிலாந்து அரசனைத் தமது அரசானக ஒப்புக்கொண்டனர். இப்படியான அரச பதவி மாற்றத்தினால் தம் உரிமைகள், அந்தஸ்து விசயத்திலும், மாற்றங்கள் நிகழும் என அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆயினும் இந்த உடன்படிக்கையினாற் பயனடைந்தவர் பிரித் தானியரே. ஏனெனில் அரசியல் அதிகாரமும், வர்த்தக உரிமையும் அவர்கள் கைக்கு வந்தது. இது மிகமுக்கிய ஒரு பயனாகவே உள்ளது.

அடுத்து மலையகத்திலே இதுவரை காலமும் பாரம்பரியமாக இருந்துவந்த முடியாட்சி முறையைப் பிரித்தானியர் அகற்றினர். பாரம் பரியமாக இருந்துவந்த முடியாட்சி முறையானது மலையக மக்கள் சமுதாயத்தின் எல்லா ஸ்தாபனங்களுடனும் ஒருங்கிணைந்திருந்தது. ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னனுடைய இறுதிக் காலத்தில் அவனுடைய ஆட்சி கொடுங் கோன்மையாக இருந்தமையினால் ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னனைப் பதவியிலிருந்து நீக்கும் நோக்குடன் மாத்திரமே இவர்கள் பிரித்தானியர் பக்கம் சார்ந்தார்கள். முடியாட்சி முறைக்கு பழக்கப்பட்ட கண்டி இராச்சிய மக்கள் நேருக்கு நேர் பார்த்து நீதி வழங்கும் மன்னன் ஒருவனையே விரும்பினார்கள். பிரித்தானியர் ஆள்வதை விரும்பவில்லை. மன்னன் அந்நிய நாட்டிலிருந்த நிலையில் அலுவலகர்கள் மூலம் கொண்டு நடத்திய பிரித்தானிய ஆட்சி முறையில் இந்த வாய்ப்பு இருக்கவில்லை. இதனால், பிரித்தானியராட்சிக்கெதிராகக் கலகம் தோன்றலானது.

கண்டிப் பிரதானிகள் பிரித்தானியருடைய செயற்பாடுகளை அங்கு வெறுத்தனர். அதாவது அரசன் எவ்வளவு கொடுங்கோலனாயிருந்த பொழுதிலும் சிங்கள சேவை மானிய ஆட்சி முறையினால் அதிகாரிகளுக்கு இடைஞ்சல் ஏற்படவில்லை. தங்கள் ஆட்சிப் பகுதிகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறுநில மன்ன ராகவே இருந்தனர். அவர்களுக்கு அரசன் சம்பளம் கொடுப்பதில்லை. சம்பளத்துக்குப் பதிலாக நிந்தகம் கொடுக்கப்பட்டது. எனவே தங்களுக்கு மானியமாகக் கிடைத்த கிராமங் களில் அவர்களுக்குச் சர்வாதிகாரம் இருந்தது. சனங்களும் அவர்களுடைய அதிகாரத்தையும், செல்வாக்கையும் பரிபூரணமாக ஒப்புக்கொண் டார்கள். ஆனால் கட்டுப்பாடும் ஒழுங்குமுள்ள பிரித்தானிய ஆட்சி போன்ற நவீன ஆட்சி அவர்களுடைய உரிமைகளைப் பொறுத்த வரையில் எவ்வளவு சலுகை காட்டி வந்தாலும், அவர்களுக்கு இடைஞ்சலை உண்டு பண்ணக் கூடியதாகவே இருந்தது. காரணம் கீழ் பிரதேசங் களுக்கு அடுத்த எல்லைகளில் ஆட்சி நடத்தி வந்த அதிகாரிகள் எல்லை வரிகளை இழந்த தினால் தங்களுக்குண்டான நஷ்டத்தை உணரத் தொடங்கினர். அதுமட்டுமன்றிப் பிரித்தானியர் நியாய பரிபாலனம் செய்த முறையும் ஒருவருக்கும் பிடிக்கவில்லை. ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு சாதியால் உயர்ந்திருக் கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் இழைக்கும் குற்றங்களுக்குரிய தண்டனையும் குறைந்து கொண்டுபோக வேண்டுமென்பதே சிங்கள மக்களின் தேச ஆசாரமாயிருந்தது. ஆனால் பிரித்தானிய அரசாங்க முறையோ இதற்கு நேர் விரோதமானது. இலங்கையில் அக்காலத்திலிருந்த விவசாய சமுதாயத்திற்கு ஏற்றவாறு பிரித்தானிய அரசாங்கமுறை அமையவில்லை. பண்டமாற்றுச்செய்து வியாபாரம் நடத்தும் வியாபாரச் சமுதாயத்திற்கு ஏற்றதொரு அரசாங்க அமைப்பாகவே அது இருந்தது. பிரித்தானிய உத்தியோகத்தருக்குச் சம்பளம் கொடுத்தார்கள். மேலதிகாரிகள் வகுத்த நிர்வாகச் சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து இவ்வுத்தியோகத்தர் ஒழுக வேண்டிருந்தது. தமக்குக் கீழ் கடமையாற்றுவோரும் தாம் விதிக்கும் சட்டங்களையும், இடும் கட்டளை களையும் நிறைவேற்ற வேண்டுமென அவர்கள் எதிர்பார்த்தார்கள். நீதிமன்றத்தில் எல்லாரும் சமம், உயர்வு தாழ்வு பாராட்டுவதில்லை என்பதே பிரித்தானிய சம்பிரதாயம்.

இம்மாதிரியான அரசாங்க அமைப்பை சிங்களப் பிரதானிகள் விரும்பவில்லை. இதுவரை அவர்கள் அரசனைத் தவிர வேறொருவரின் ஆணையையும் மேற்கொள்ள வில்லை. அதுவும் சில இடங்களில்தான்

அரசனுடைய கட்டளையை எதிர்பார்த்தார்கள். இப்படிப்பட்டவர்கள் இப்போது பிரித்தானிய உத்தியோகத்தரிடமிருந்து கட்டளை பெறுவதை விரும்பாதது நூதனமல்ல.

பௌத்த குருமார்கள் பிரித்தானியரை வெறுத்தமை பிறிதொரு காரணமாக உள்ளது. பௌத்த குருமார்கள் வேற்று மதமான கிறீஸ்தவம் தங்கள் நாட்டில் தங்கள் மதமான பௌத்தத்திலும் மேலாக மதிக்கப்பட்டதை விரும்பவில்லை. புத்தமத அரசனிருந்த இடத்திலே கிறீஸ்தவ மத அரசாங்கம் இருப்பது பொருத்தமற்றது என்றே சங்கத்தார் கருதினர். முன்னர் மன்னர்கள் தங்கள் தலைநகரங்களை மாற்றியமைத்த போதெல்லாம் உடன்கொண்டு சென்ற புத்தரின் புனிதப்பல்லை ஆங்கிலேயர் மீளவும் கண்டியிலே தாபிக்கக் கொடுத்த போதிலும், அதில் திருப்தியடையாத பௌத்தர்கள் மேலும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அந்த நாட்களில் நிலவிய சேவை மானியமுறை ஆட்சியோடு பௌத்த சமயமும் அன்னியோன்னியமாக ஒன்றுபட்டிருந்தது. ஆனால் பௌத்த பிக்குகளுடைய அதிகாரத்தையும் செல்வாக்கையும் புதிய ஆட்சிமுறை குறைத்து வந்தது. இதை அவர்களில் முக்கியமானவர்கள் சிங்களப் பிரதானிகளின் பந்துக்களாகவும் இருந்தனர். கண்டியரசர்களாயின் பௌத்த சமய விழாக்களிலும் அனுஷ்டானங்களிலும் பங்குபற்றினதுமன்றி, விகாரைகளிற் சென்று வழிபாடு நடத்திப் பௌத்த குருமாருக்கு வழமை போலிருந்து வந்த மரியாதையையும் அவர்களால் செலுத்த முடியாமற் போய்விட்டது. எனவே இத்தகைய தன்மைகள் பௌத்த குருமார்கள் பிரித்தானியரை வெறுக்கக் காரணமாயிருந்தது.

பிரபுக்களும், பௌத்த குருமார்களும் அன்றி, பொதுமக்களும் பிரித்தானியர்மீது வெறுப்புக் கொண்டனர். கண்டிப் பொதுமக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சிங்களவராயினும் சரி, தமிழராயினும்சரி பழைய முறையிலேயே ஊறிப் பழகியிருந்தார்கள். அரசன் என்றால் தெய்வம்போல இருப்பவன் என்பது அவர்கள் நினைப்பு. இராஜ கம்பீர நாடாளும் நாயக்களைத் தொழுவதும், அவன்முன் மண்டியிட்டு வணங்கி முறைப்பாடு செய்வதும், நீதி பெறுவதும் அவர்கள் வழக்கம். அந்த வகையில் நாயக்க மன்னனை நீக்க உதவிக்கு வந்த ஆங்கிலேயர் தலைச்சுமையாய் இருந்ததை மக்கள் வெறுத்தனர். நிலமானிய முறையிலும், பழமையான சம்பிரதாயங்களிலும் மிகப் பற்றுடைய குடிமக்கள் பிரித்தானியரின் நவீன பரிபாலன முறையைச் சிறிதளவும் விரும்பவில்லை. தங்களுடைய மரியாதைக் குரியவர்களான பௌத்த குருமாரும், பிரதானிகளும் பாதிக்கப்படுவதை மக்கள் விரும்பவில்லை. பாரம்பரிய முடியாட்சி முறைமையையே கண்டிய மக்கள் விரும்பினர். ஆகவே தலைமுறையாகப் போற்றி வந்த சிங்கள ஆட்சி முறையையும், பழக்கங்களையும் இலகுவிற் கைவிடுவது சுலபமன்று.

கண்டி இராச்சியத்தவருடைய நோக்கமும் மன்னன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனை நாடு கடத்துவதே தவிரப் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இருப்பதல்ல. இவ்வாறான பல காரணிகளும் கலகத்திற்கான அடிப்படைக் காரணங்களாக அமைய உடனடிக் காரணிகள் எவை என நோக்குவோம்.

**உடனடிக் காரணம்**

பிரித்தானிய ஆட்சியை எதிர்ப்பதில் முதன் முதல் முயற்சி செய்தவர்கள் வெல்லச, விந்தனை ஆகிய இடங்களில் இருந்த பிரதானிகளே. அரசன் ஆண்ட காலத்திற் பிரதானிகள் தலைநகருக்கு எவ்வளவு தூரத்தில் இருந்தார்களோ அவ்வளவுக்கு அவர்கள் விடயங்களில்

அரசன் தலையிடுவதில்லை. எனவே அவர்கள் தாங்கள் நினைத்தபடி கருமம் ஆற்றினார்கள். பிரித்தானிய ஆட்சியில் இந்தச் சுதந்திரம் இல்லாமற்போனது. பிரித்தானிய உத்தி யோகத்தர் இந்தப் பிரதானிகளின் உரிமைகளில் தலையிடத் தொடங்கினர். வெல்லசவில் இருந்த முஸ்லீம்கள் தங்கள் சிங்களத் திசாவையின் ஆதிக்கத்தில் இருக்க விரும்பவில்லை என்றும், தங்களுக்கென ஓர் முஸ்லீமை முகாந்திரமாக நியமிக்க வேண்டுமென்றும் பிரித்தானியரிடம் கோரித் தம் கோரிக்கையை நிறைவேற்றியும் கொண்டார்கள். இவ்வாறு தனது ஆதிக்கத் தையும், வருமானத்தையும் பிரித்தானியர் குறைத்ததை சிங்களத் திசாவை விரும்ப வில்லை. தனக்குப் பிரித்தானியர் அநீதி விளைவித்துவிட்டனர் என்று அதற்குப் பழிவாங்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர். நிலைமை இவ்வாறு இருக்க 1817ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வில்பாவே என்றொரு போலிக்காரன் கண்டி இராச்சியத்திற்கு உரிமை பேசிக்கொண்டு ஊவாப்பகுதியில் ஆங்கிலே யருக்கு எதிராக கிளர்ச்சி மேற்கொண்டபோது, இத்திசாவையும் அவனது ஆட்களும் அவனுக்கு உதவியளித்தார்கள். பிரித்தானிய ஆட்சியில் அதிருப்தி கொண்டிருந்த பிரதானிகளும் கண்டி இராட்சியத்திற்குப் போலி உரிமை கொண்டாடிய வனும் ஒன்றுசேர ஒருசில பிரதானிகளே பிரத்தானியர் பக்கம் சேர்ந்தனர்.

### கலகம் தோல்வி அடைந்தமைக்கான காரணம்

மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படை யில் நடைபெற்ற கிளர்ச்சி இறுதியில் தோல்வி கண்டது. கண்டிச் சேனாவீரர்களுக்குக் கலகம் தொடங்கிய இடமும், சீதோஷ்ணமும், கொரில் லாப்போர் முறையும் இயற்கையாக அமைந்த அரண்களும், வாவிகளும் பிரித்தானிய அதிகாரிகள் கலகத்தை அடக்குவதில் வெற்றி கண்டனர். அந்த வகையிற் கலகம் தோல்வி அடைந்தமைக்கான பல காரணங்கள் வரலாற்று ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. கண்டிப் பிரதானிகளிடையே ஒற்றுமை நிலவ வில்லை. எதிரிகளின் தாக்குதலின்போது கூட அவர்கள் ஒன்றுபடவில்லை. அதற்கு மாறாகச் சில பிரதானிகள் பிரித்தானியருக்கு உறுதுணை யாய் இருந்து கலகக்காரரை அடக்குவதில் உதவி புரிந்தனர். உதாரணமாக; நான்கு கோறளைப் பிரதானியாக இருந்த மொல்லிக் கொட பிரித்தானியர் பக்கம் சேர்ந்து, அவனுடைய ஆட்சிப் பகுதிகளில் இருந்து பிரித்தானியருக்குத் தேவையான உணவு, போர்வீரர்கள், ஆயுதங்கள், மருந்து வகைகள் போன்றவற்றினைப் பெற்றுக்கொடுத்தான். இரண்டாவது கண்டிக்கும் கொழும்புக்கு மிடையில் இருந்த போக்குவரத்துப் பாதை களைக் கலகக்காரர் துண்டிக்கத் தவறி விட்டனர். இதன் பயனாகத் தமக்கு வேண்டிய ஆயுதங்களையும், தொழிலாளர்களையும், போர்வீரர்களையும் பிரித்தானியர் கடைசி நாட்களில் வரவழைக்க வழி ஏற்பட்டது. மூன்றாவது கலக ஆரம்பத்தில் கலகக்காரர் களால் கைப்பற்றப்பட்ட தந்ததா துவை 1818 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பிரித்தானியர் கைப்பற்றிக்கொண்டனர். தந்த தாதுவை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களே ஆட்சி செய்ய அதிகாரமுள்ளவர் என்ற கருத்து வலுப் பெற்றிருந்தது. ஆகவே பிரித்தானியர் தந்ததாது வைக் கைப்பற்றியதும் இனி அவர்களை வெல்லமுடியாது என எண்ணிக் கலகக்காரர் தம் முயற்சியைக் கைவிட்டார்கள்.

கலகத்தை இவ்வாறு பிரித்தானியர் அடக்கியதும் அவர்கள் சிங்களப் பிரதானி களின் அதிகாரத்தை இன்னும் குறைத்தார்கள். கண்டி மாகாணங்கள் என்று வழங்கப்பட்ட மலைப்பிரதேசங்கள் பிரித்தானியரின் நேரடி

யான மேற்பார்வையின்கீழ் கொண்டுவரப் பட்டன. 1815ஆம் ஆண்டில் இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின்கீழ் அமைந்தது என்றாலும் மலைநாடுகளில் ஒரு விதமான பரிபாலனமும் ஏனைய பிரதேசங்களில் இன்னொரு விதப் பரிபாலனமும் இருந்தன. ஆனால் 1817–1818 கலகத்தின் பின்னர் இலங்கை முழுவதும் ஒரேவித அரசாங்க நிர்வாகம் அமைக்கப்பட அவ்வரசாங்கம் விதித்த பொதுநிர்வாகச் சட்டங்களை அனுசரித்து உத்தியோகத்தர் பரிபாலனம் புரிந்தனர். இதற்கு வாய்ப்பாக 1818 இல் றோபேட் பிறவுன்றிக்கால் கண்டிப் பிரகடனம் வெளியிடப்பட்டது. இப்பிர கடனத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு.

### கண்டிப் பிரகடனம்

கண்டி இராச்சியத்தின் நிர்வாகமும் அதற்குரிய அதிகாரமும் பிரித்தானிய அரசுக்கு உரியனவாக மாற்றப்பட்டு, ஆளுனரின் நேரடியாட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டதுடன், பிரதானிகளுடைய அதிகாரங்கள் நீக்கப்பட்டு சம்பளத்துக்கு வேலை செய்யும் ஊழியர்களாக அவர்கள் அமர்த்தப்பட்டனர். மேலும் பிரதானி களுக்குச் செலுத்த வேண்டிய மரியாதைகள் பிரதானிகள் ஆள் பதிக்கும் அரச மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பிரித்தானிய அரசியின் படத்திற்கும் செலுத்தவேண்டிய மரியாதை களாகக் காணப்பட்டன. மேலும் பௌத்த மதம் மட்டுமல்லாது ஏனைய மதங்களும் வளர்ச்சி யுறுவதற்கு உரிமை வழங்கப்பட்டது. இப்பிர கடனத்தின் பிரகாரம் கண்டி முழுமையும் பிரித் தானியரின் ஆதிக்கத்திற்குக்கீழ் கொண்டு வரப்பட்டது.

### முடிவுரை

தொகுத்துப் பார்க்குமிடத்துக் கண்டிக் கலகத் திற்கான காரணிகள், கலகம் தோல்வியடையக் காரணம் என்பவற்றுடன் 1818 இல் செய்யப்பட்ட கண்டிப் பிரகடனத்தின் தன்மைகள் ஆகியன 1818 ஆம் ஆண்டு கலகத்தில் முக்கிய அம்சங்களாக உள்ளன. அந்தவகையில் இலங்கையில் ஆங்கிலேயர் கால ஆட்சியில் அரசியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்திய கலகமாக 1818 இல் நடைபெற்ற கிளர்ச்சி அமைந்துள்ளது எனலாம்.

### உசாத்துணை நூல்கள்


1. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி – ஜி.சி. மென்டிஸ்
2. இலங்கைச் சரித்திரம் – கெ.இளையதம்பி
3. இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும் – எஸ்.ஏ.பேக்மன்
4. நோர்த் முதல் கோபல்லாவரை – கா.சி.குலரத்தினம்

# இந்தியா சென்று இந்துமதச் சான்றோர் அவையிற் புகழ் நிறுவிய ஈழத்தமிழர்

செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன்**

இந்துசமுத்திரப் பிராந்தியத்திலே கோடிக்கணக்கான இந்துக்கள் வாழும் நாடு இந்தியா. இந்தியாவுக்கும் ஈழத்திருநாட்டிற்கும் மிகநீண்ட வரலாற்றுத்தொடர்பு உண்டு. முப்பத்துஇரண்டு கிலோமீற்றர் நீரிணை இரு நாடுகளையும் பிரித்து நிற்கின்றது. இந்தியா விற்கு உள்ள பழம்பெரும் வரலாறுபோல் ஈழத்திருநாட்டிற்கும் மிகத்தொன்மையான வரலாறு உண்டு. சிறிய நாடாகிய ஈழத்திலி ருந்து பல ஆத்மீகப் பெரியவர்கள் இந்தியா விற்குச் சென்று, குறிப்பாகத் தென்னிந்தியா விலே தமது ஆற்றல்களை வெளிப்படுத்திய வரலாறுகள் தொன்மைதொட்டுப் பேசப்படு கின்றன.

ஈழத்திருநாட்டிற்கும், இந்தியாவிற்கும் பண்டமாற்றுப் பொருளாதாரத் தொடர்பு முதற் பாரம்பரிய, சமய, பண்பாட்டு, கலை சார்ந்த தொடர்புகள்வரை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே நிலவியதற்கான பல்வேறு சான்றுகள் இன்றும் காணப்படுகின்றன. சங்க இலக்கிய நூல்களில் இலங்கை பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஈழத்தில் வாழ்ந்த பழங்குடி மக்களாகிய நாகருக்கும் தென்நாட்டில் வாழ்ந்த தமிழருக்கும் உள்ள தொடர்புக்குச் சிறுபாணாற்றுப்படை அடி ஆதாரமாக உள்ளது. கடைச்சங்கப் புலவருள் ஒருவராய் இருந்த ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் ஈழத்தவரே என்று மஹாவித்து வான் பிரம்மஸ்ரீ சி.கணேசையர் அவர்கள் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளார். இப்புலவர் ஈழத்தில் தோன்றி இந்தியாவில் அறிஞர் அவையிற் புகழ்கொடி நிறுவியவர் எனப் பல அறிஞர்கள் தமது ஆய்வுகளிற் கூறியுள்ளனர். சங்கநூல்களில் ஏழு பாடல்கள் இவர் இயற்றி யவையாகும். அவற்றுள் நற்றிணையில் ஒரு பாடலும், குறுந்தொகையில் மூன்று பாடல்களும், அகநானூற்றில் மூன்று பாடல்களும் உள்ளன. இவர் இயற்றிய ஏனைய பாடல்கள் சிதைந்திருக் கலாம் என நம்பப்படுகிறது. சங்ககாலம் முதல் ஈழத்து அறிஞர்கள் இந்தியா சென்று அறிஞர் அவையிற் சாதனை படைத்த வரலாற்றைப் பலர் ஆராய்ந்து கட்டுரைகளாக வரைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 1951ஆம் ஆண்டு பரமேஸ்வராக்கல்லூரி வளாகத்திற் பெரும் தமிழ்விழா நடைபெற்றபோது வெளியிடப்பட்ட தமிழ்விழா மலரில் வித்துவான் திரு.க.சி. நடராஜன் (B.O.L) எழுதிய "இந்தியா சென்று புகழ் நிறுவிய ஈழத்தமிழர்" என்ற கட்டுரை பல பெரியவர்களது சிறப்பினை வெளிப்படுத்தி யுள்ளது. சைவபரிபாலனசபையினால் வெளியிடப்பட்டுவரும் நூற்றாண்டு கண்ட "இந்துசாதனம்" பத்திரிகை காலத்துக்குக் காலம் இந்தியாவிற் சமயப்பணி ஆற்றிய ஈழத்தமிழர்களை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. ஈழத்திலிருந்து இந்தியா சென்று கலைத்துறையிற் புகழ்நாட்டியவர்கள் பலர். வாணிபத்திற் புகழீட்டியவர்கள் பலர். இவர்கள் பற்றிய ஆய்வுகள் எதிர்காலத்தில்

வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். கிறிஸ்துவிற்குப் பின் ஈழத்துப் பூதந்தேவனார் முதல் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டு காலப்பகுதி வரை இந்தியாவில் அறிஞர் அவையில் இந்துசமயம் சார் கருத்துக்களை முன்வைத்துப் புகழ் பெற்றவர்களை, குறிப்பாக எம் ஆய்வுக்கு எட்டியவர்களை இக்கட்டுரையில் வெளிப்படுத்தலாமென எண்ணுகின்றேன்.

**திருநெல்வேலி ஞானப்பிரகாசர்**

இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முன் எம்மண்ணில் வசித்தவர் இவர். யாழ்ப்பாணம், திருநெல்வேலிக் கிராமத்தைச் சேர்ந்த சுவாமிகள், பறங்கியர் ஆட்சி நிலவிய போது பசுவதையை எதிர்த்துப் பாரதம் சென்றவர் என வரலாறு கூறுகின்றது. சிதம் பரத்தில் வாழ்ந்த ஞானப்பிரகாச சுவாமிகள் கௌட தேசம் சென்று ஒரு பிராமண சந்நியாசியிடம் தருக்கம், வியாகரணம் முதலிய வற்றை முதலிற் கற்றுப் பின் திருவண்ணாமலை வியாக்கியானம் எழுதியுள்ளார். சிதம்பரத்திலும் திருவண்ணாமலையிலும் பலருக்குச் சமயத் தத்துவங்களை எடுத்துரைப்பதிற் பேரறிவாள னாக விளங்கியுள்ளார். தமிழிற் சிவஞானசித்தி சுபக்கத்திற்கு ஓர் உரை இயற்றியுள்ளார். வடமொழியில் உள்ள பௌட்கராகமத்திற்கு இவர் எழுதிய உரை மிகவும் பிரசித்தமானது. சிதம்பரத்தில் இவர் கட்டிய "ஞானப்பிரகாசம்" திருக்குளம், அதன் அருகே அமைந்துள்ள ஆலயம் என்பன இவர் பெருமைக்கு இன்றும் சான்று பகர்கின்றன.

**நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்**

ஞானப்பிரகாச சுவாமிகள் மரபில் உதித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஈழத்திலும் இந்தியாவிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்திய மகான் எனலாம். திருவாவடுதுறை ஆதீனம் இவரது நாவன்மையின் மேன்மையை அறிந்து நாவலர் என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கியமையை யாவரும் அறிவர். தென்னாட்டில் நாவலர் காலம் முதல் இன்று வரை சைவத்தை, தமிழை ஆராய்கின்ற அறிஞர்கள் நாவலரது மேன்மையை எடுத் துரைக்கத் தவறுவதில்லை. உரைநடை இலக்கி யத்தின் தந்தை என இலக்கிய ஆய்வாளர் களாற் சிறப்பிக்கப்படும் நாவலர் பெருமான் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டதோடு, பல செய்யுள் நூல்களுக்கு வசன வடிவில் வாழ்வழித் தவர். சமயப் பிரசங்க மரபை ஈழத்திலும் இந்தியாவிலும் நிறுவிய வரலாற்று நாயகன் இவர். 1822ஆம் ஆண்டு தொடக்கம் 1879ஆம் ஆண்டுவரை வாழ்ந்த நாவலர் பெருமான் இலகுவான நடையிற் சமயச் சொற்பொழிவு களை ஆற்றியதோடு சமய, இலக்கிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர். இவரது வசனநடை அற்புதமானது. இவரைப் பின்பற்றியே சி.வை.தாமோதரம்பிள்ளை, டாக்டர் உ.வே.சாமி நாதையர், திரு.வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரிகள் போன்றோர் அரிய நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டனர். நாவலரை, வசன நூல்களை வெளியிடுவதில் உழைத்தவ ராகிய சூரியநாராயண சாஸ்திரிகள் "வசன நடை கைவந்த வல்லாளர்" என விளிப்பது குறிப்பிடத்தக்கது. நாவலர் எழுதிய "பெரியபு ராண வசனம்" மிகப் பாராட்டுப் பெற்ற நூலாகும். இந்தியாவில் நாவலர் நாட்டிய புகழ் கொடிக்கு ஈடாக இன்றுவரை பிறர் இல்லை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

**உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்**

நாவலர் பெருமான் காலத்தில் வாழ்ந்த இவர், மிக இளம்பராயத்திலேயே இந்தியாவில் தனது பெருமையை நிலைநாட்டியவர். மதுரைத் தமிழ்சங்கத்தை நிறுவிய ஸ்ரீமான் பாண்டித்

துரைத்தேவர் அவர்கள்மீது நான்மணிமாலை பாடிப் பெரும்பாராட்டுப் பெற்றவர். அறுபது பிரபந்தங்களுக்குமேற் பாடிய இவர் கந்த புராணம் பற்றி எடுத்துரைப்பதிற் பாண்டித்தியம் மிக்கவராக விளங்கியுள்ளார். கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படலத்திற்கு உரை எழுதி இந்தியாவில் அரங்கேற்றிய பெருமை இவரைச் சாரும். இராமநாதபுரம் இரவிகுல விஜயரகுநாத பாஸ்கர சேதுபதிமீது பல பாடல்களைப் பாடி அவர் முன்னிலையிலேயே தன் திறமையை வெளிப்படுத்திப் பட்டமும் பரிசிலும் பெற்றவர். கவிவல்லமையும் நாவல்ல மையும் மிக்க புலவர் பற்றிய சிறப்புக்கள் தமிழக வரலாற்றிற் குறிப்பிடப்பட்டுள்ளன.

#### சபாபதி நாவலர்

யாழ்ப்பாணம், கோப்பாய்க் கிராமத்திற் பிறந்து, ஈழத்திலும் இந்தியாவிலும் சிறந்த கல்விமானாகத் திகழ்ந்தவர். உயர்ந்த தமிழ்நடையிற் சொற்பொழிவாற்றும் திறமை மிக்கவராக ஈழத்திலும் இந்தியாவிலும் பாராட்டுப்பெற்றவர். நாவலரதும் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளையினதும் மாணவராக விளங்கிய இவர், திருவாவடுதுறை ஆதீனத்தாற் கௌரவிக்கப்பட்டு 'நாவலர்' என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர். வடமொழி யிலும் தென்மொழியிலும் பாண்டித்தியம்மிக்க இவர், சிதம்பரத்திலுள்ள நாவலர் வித்தியா சாலைக்குத் தலைமை ஆசிரியராக விளங்கித் தென்னாட்டிற் சமய இலக்கியச் சொற்பொழிவு கள் ஆற்றி, தனிப்பெருமை பெற்றவர். சைவசித்தாந்தத்துறையிற் சிறப்புப் புலமையும், தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த அறிவுமுள்ள இவர் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய "திராவிடப் பிரகாசிகை" என்னும் நூல் மிகவும் பிரசித்தமானது.

#### சி.வை.தாமோதரம்பிள்ளை

இவர் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களில் மிகுந்த புலமை உடையவர். தமிழ் நூல்களைப் பதிப்பித்தலில் இவர் செய்த அரும்பணி இன்றும் நன்றியோடு நினைவு கூரத்தக்கவை. வீரசோழியம், தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி, இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம் போன்ற நூல்களைப் பதிப்பித்துத் தென்னகத்துச் சான்றோர் அவையிற் பெரும்பாராட்டைப் பெற்றவர். இவர் இலக்கண, இலக்கியம் சார்ந்த உரைகளை ஆற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

#### கனகசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணம், மல்லாகத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட இவர் சிறந்த தமிழறிஞர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக விளங்கி, தனது நாவன்மை யாலும் எழுத்தாற்றலாலும் பெருமதிப்புப் பெற்றவர். தமிழ் நாவலர் சரிதை என்ற நூலை வெளியிட்ட இவர், இல்லாண்மை என்னும் உரைநடைநூலை இயற்றிப் புகழ் பெற்றவர். சிறந்த சொல்வன்மையாளராகிய இவர் ஈழத்திலும் இந்தியாவிலும் பாராட்டுப் பெற்றவர்.

#### சுன்னாகம் திரு.அ.குமாரசுவாமிப் புலவர்

சுன்னாகத்திற் பிறந்து, ஈழத்திலும் இந்தியாவிலும் பேரறிஞராக மதிக்கப்பட்டவர் இவர். மதுரைத் தமிழ்ச்சங்கம் இவரது பேராற் றலைக் கேள்வியுற்று சிறப்பு அங்கத்தவராக்கிக் கௌரவித்தது. வடமொழி, தென்மொழி இரண்டிலும் பாண்டித்தியம் உடைய இவர், பல பெறுமதியான நூல்களை எழுதி வெளியிட்டவர். தென்னாட்டிற் பல சமஸ்தானங்களினாலும் திருவாவடுதுறை ஆதீனம் போன்ற மஹாசந்நி தானங்களாலும் பெரிதும் கௌரவிக்கப்பட்டவர்

புலவர் அவர்கள். நாநூறு புலவர்களின் சரித்திரங்கள் அடங்கியுள்ள தமிழ்புலவர் சரிதம் என்ற நூலை வெளியிட்ட பெருமை இவருக்குரியது. கவிவல்லமைமிக்க புலவர் பெருந்தமிழ் தொண்டு செய்தவர். தமிழ் இலக்கிய சொல்லகராதியைத் தொகுத்து வெளியிட்டவர். இவரது பேராற்றல் இன்றும் தமிழகத்திற் பேசப்படுகின்றது.

**கொக்குவில் சபாரத்தின முதலியார்**

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறந்த சைவசித்தாந்த அறிஞர் சபாரத்தின முதலியார் அவர்கள். இவர் வடமொழியிலும், தென்மொழியிலும், ஆங்கிலத்திலும் மிகுந்த புலமை உடையவர். சிறந்த சொற்பொழிவாளர். தென்னிந்தியாவில் நடைபெற்ற சைவசித்தாந்த மஹாசமாஜத்திற்குத் தலைமை தாங்கும் பேறுபெற்றவர். இவர் "இந்துமதத்தின் பிரதான அம்சங்கள் (The essential of Hinduism in the light of Saiva Siddhanta)" எனும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டு இந்தியாவில் அரங்கேற்றிப் பாராட்டுப்பெற்றவர். "சித்தாந்த தீபிகை" என்ற ஆங்கில சஞ்சிகைக்குப் பலகட்டுரைகள் எழுதியுள்ளார். சைவசித்தாந்தம்பற்றி இவரது சொற்பொழிவுகள் ஈழத்திலும் இந்தியாவிலும் சிறப்புப் பெற்றன.

**புலோலி திரு.நா.கதிரவேற்பிள்ளை**

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள புலோலியைச் சேர்ந்தவர். இவரது தமிழ்மொழி ஆற்றலைக்கண்டு இந்தியாவிலுள்ள அறிஞர்கள் வியந்தனர். இவரது பேச்சாற்றலை திரு.வி.கல்யாணசுந்தரமுதலியார் பெரிதும் பாராட்டி எழுதியுள்ளார். இவர் இந்தியா சென்று சென்னை ராயப்பேட்டையில் "பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை" என்ற சபையையும், வேறு பலசபைகளையும் நிறுவிப் பணிபுரிந்தவர். இவரது பேச்சாற்றல் வசீகரமானது. இவர் தொகுத்த தமிழ்பேரகராதி, சைவபூஷண சந்திரிகை, சுப்பிரமணிய பராக்கிரமம் முதலிய நூல்கள் இவரது திறமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவர் ஆரணி நகர சமஸ்தான வித்துவானாக விளங்கி "சைவசித்தாந்த சரபம்" எனும் சிறப்புப் பெயரையும் பெற்றவர். சமயச் சொற்பொழிவுத் துறையில் இந்தியாவிற் புகழ்கொடி நாட்டியவர்.

**மட்டுவில் ம.க. வேற்பிள்ளை**

யாழ்ப்பாணம், மட்டுவிலைச் சேர்ந்த திரு.ம.க.வேற்பிள்ளை சிறந்த தமிழறிஞர். செய்யுள் இயற்றுவதிற் பெரும்புலமை படைத்தவர். புராண பிரசங்கங்கள் செய்வதில் ஈழத்திலும் இந்தியாவிலும் மிகச்சிறந்த பாராட்டுக்களைப் பெற்றவர். சிதம்பரம் நாவலர் வித்தியாசாலையிற் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்து தமிழ் அறிஞர்களை உருவாக்கியவர். ஆறுமுகநாவலரின் மாணவராகிய இவர் பல நூல்களை எழுதியுள்ளார். திருவாதவூரர் புராணத்திற்கு இவர் எழுதிய உரை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவர் எழுதிய செய்யுள் நூல்களுள் " ஈழமண்டல சதகம்" சிறப்பு வாய்ந்தது.

**புலோலி திரு.வ.கணபதிப்பிள்ளை**

யாழ்ப்பாணம், புலோலியைச் சேர்ந்த திரு.வ.கணபதிப்பிள்ளை தமிழிலும் வடமொழியிலும் மிகுந்த புலமை உள்ளவர். நெடுங்காலம் காஞ்சிபுரத்திலே பச்சையப்ப வித்தியாசாலையில் தமிழ் பண்டிதராகப் பணிசெய்தவர். பலநூல்களை எழுதி வெளியிட்ட இவர், சொற்பொழிவுகளை ஆற்றுவதிலும், கவி பாடுவதிலும்

திறமை உடையவர். இவர் எழுதிய "ரகுவம்ச சுருக்கம்" மிகவும் பிரசித்தமானது.

**ஆறுமுகத்தம்பிரான்**

யாழ்ப்பாணத்திற் பிறந்து, திருவண்ணாமலை ஆதீனத்தில் வசித்த சைவசித்தாந்த அறிஞர் இவர். பெரியபுராண நூலிற்குச் சிறந்த உரையை எழுதிய பெருமை இவரைச் சாரும்.

**யாழ்ப்பாணம், குப்பிளான், செந்திநாதையர்**

யாழ்ப்பாணம், ஏழாலை, குப்பிளான் காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள் பெரும் புலமையாளர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் மூன்றையும் சிறப்பாகக் கற்றுணர்ந்த பெருமை பெற்றவர். இவர் காசியிற் சிலகாலம் வசித்துவந்தவராதலின் காசிவாசி செந்திநாத ஐயர் என அறியப்பட்டார். நூல்களை இயற்றுவதிலும், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் மிகப் புலமை உடையவராகப் போற்றப்பட்டார். திருப்பரங்குன்றத்தில் நெடுங்காலம் வசித்து இந்தியாவின் பல பாகங்களிலும் தன் புலமையை வெளிப்படுத்தினார். இவரது "நீலகண்ட பாஷ்யம்" மொழிபெயர்ப்பு நூல் பிரசித்தமானது. சிவஞானபோத வசனாலங்கார தீபம். தேவாரம் வேதசாரம் போன்ற இவரால் இயற்றப்பட்ட நூல்கள் பலராலும் பாராட்டப் பெற்றவை.

**வடகோவை வேலுப்பிள்ளை உபாத்தியாயர்**

யாழ்ப்பாணம், கோப்பாயைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், தமிழ் மொழியிலும், ஆங்கிலத்திலும், வடமொழியிலும் மிகுந்த புலமை உடையவராக விளங்கியுள்ளார். திண்ணைப் பள்ளி அமைத்துப் பல தமிழ் அறிஞர்களை உருவாக்கிய இவர், சைவசித்தாந்தம், புராண இதிகாசங்களிற் சொற்பொழிவாற்றுவதில் வல்லவராக விளங்கியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்திற் சிலகாலம் வாழ்ந்து, சைவசித்தாந்த ஆசிரியராக வும், சமய பிரசாரகராகவும் விளங்கியுள்ளார். சைவப்பிரகாசிகை, முப்பாநூல் சுருக்கம் என்ற இவரால் இயற்றப்பட்ட நூல்கள் இந்தியாவில் மிகுந்த பாராட்டுப்பெற்றன. திருக்குறளுக்குச் சிறந்த உரை எழுதிய பெரியவர்களுள் இவரும் ஒருவராவார்.

**சுவாமிநாத பண்டிதர்**

யாழ்ப்பாணத்து நல்லூரைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளையின் மாணக்கராவர். சமயச் சொற்பொழிவு ஆற்றுவதில் மிகுந்த திறமையை உடைய இவர், ஈழத்திலும், இந்தியாவிலும் சிறந்த பாராட்டுப்பெற்றவர். இவர் இந்தியாவில் திருச்செந்தூரில் ஒரு வித்தியாசாலையை ஸ்தாபித்து வழிநடத்தியவர். திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டுப்பெற்ற இவர், பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

**முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், இலக்கண சுவாமி என்ற பெயரினாற் பெரிதும் அறியப்பட்டார். மிக இளம்பராயத்திலேயே தென்னிந்தியா சென்று தன் திறமையை வெளிப்படுத்தியவர். சந்நியாச வாழ்வு வாழ்ந்த இவர் சிவஞான மாபாடியத்தை ஆராய்ந்து முதன் முதலாக முழுநூலாக வெளியிட்டவர். சமய தத்துவங்களை மக்களுக்கு எடுத்துரைப்பதிற் பெரும் வல்லவராக விளங்கினார்.

**அம்பலவாண நாவலர்**

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், நாவலர் மாணாக்கர் பரம்பரையைச் சேர்ந்தவர். கிறிஸ்தவ மிஷனரிக்கு எதிராக சைவசமயத் தைக் காப்பாற்றுவதிற் பெரிதும் உழைத்தவர். வட்டுக்கோட்டையில் மிஷனரிப் பாடசாலைக்கு எதிராக வட்டு இந்துக்கல்லூரியை ஸ்தாபித்த வர் இவர். இந்தியாவிற் சைவசமய உண்மை களை எடுத்துரைப்பதிற் பெரிதும் உழைத்தவர். சைவசித்தாந்த நூல்களைப் பதிப்பிப்பதில் முன்னின்று உழைத்தவர்.

**கனகசபைப்பிள்ளை (1855)**

இவர் யாழ்ப்பாணம், மல்லாகத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவர். யாழ்ப்பாணத்தி லிருந்து மிக இளம் வயதில் B.A. பட்டம் பெற்றவர். ஈழத்து வரலாற்றில் முதல் B.A. பட்டம் பெற்றவர். சுதுமலையைச் சேர்ந்த கரல் விஸ்வநாதப் பிள்ளை, அவருக்குப் பின் B.A. பட்டம் பெற்றர். இவர் "பட்டதாரிப்பையன்" (Boy Graduate) என்ற சிறப்பு அடைமொழியால் அன்று அழைக்கப்பட்டவர். சேர்.பொன். இராமநாதனு டன் சட்டப் பரீட்சையிற் சித்திபெற்றவர். இந்தியாவில் பல ஆராய்ச்சி உரைகள் ஆற்றிய இவர் உ.வே.சுவாமிநாத ஐயர் அவர்களுடன் சேர்ந்து பல பணிகளை ஆற்றினார். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முந்திய தமிழர் " (The Tamils Eighteen hundred Years Age) என்ற இவரது ஆங்கில நூல் இந்தியாவிற் பெரிதும் பாராட்டப்பட்டது.

**திரு. தா. பொன்னம்பலபிள்ளை**

இவர் யாழ்ப்பாணத்திற் பிறந்து தென்னிந்தியாவிலுள்ள திருவனந்தபுரத்தில் உயர் உத்தியோகம் பார்த்தவர். பல வரலாற்று ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் பெருமை பெற்றவர். சிறந்த சொற்பொழிவாளர். இவர் எழுதிய "வஞ்சி மாநகர்" என்னும் வரலாற்றுநூல் இந்தியாவில் பிரபலம் பெற்றது. இவர்எழுதிய பல கட்டுரைகள் "தமிழரின் பழைமை" (Tamilian Antiquary) சஞ்சிகையிற் பிரசுரிக்கப்பட்டுள் ளன. தென்னிந்திய சைவசித்தாந்த மன்றத்திற் பலதடவை சமயச் சொற்பொழிவாற்றிய இவர் சமாஜ மாநாட்டில் தலைமை தாங்கிப் பெருமை பெற்றவர். தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பிப் பதில் முன்னோடியாகச் செயற்பட்டவர்.

**இணுவில் புராணவித்தகர் அம்பிகைபாகர்**

இந்திய கலைச்சொல் அகராதிகளில் 'அ' வரிசையில் முதலில் எடுத்துரைக்கப்படும் ஈழத்து அறிஞர் அம்பிகைபாகர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றிற் சிறந்த வித்துவத்திறமை உடையவராக விளங்கியவர். நாவலர் மரபிற் சைவப்பிரகாச பாடசாலையை இணுவிலில் வழிநடத்தி சமய விரிவுரைகளை ஈழத்திலும் இந்தியாவிலும் ஆற்றிய பெரும் புலவர். திருவாவடுதுறை ஆதீனத்தோடு நெருங்கிய தொடர்புடைய இவர், ஆதீன விருதுகளைப் பெற்றவர். திருத்தணிகை புராணத்திற்கு உரை எழுதி தென்னாட்டிற் பெருமை பெற்றவர்.

**திரு. T.செல்லப்பாப்பிள்ளை**

யாழ்ப்பாணத்திற் பிறந்து திருவனந்த புரத்திற் பிரதம நீதிபதியாக (The Chief Justice of Travancore) கடமையாற்றியவர். யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையை நிறுவியவர்களில் ஒருவராகிய இவர், ஆங்கிலத்திலும், தமிழிலும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். ஆங்கில இந்துசாதனம் (Hindu Organ) பத்திரிகையின் முதல் ஆசிரியராக இருந்தார்.

**சிதம்பரசுவாமிகள்**

ஈழத்திலும் பிறந்து சிதம்பரத்தில் ஆன்மீகப்பணியாற்றி பலரது பாராட்டைப் பெற்றவர் சிவப்பிரகாச நூலுக்குச் சிறந்த உரை எழுதிப் பாராட்டப்பெற்றவர். "தொல்காப்பியச் சண்முகவிருத்தி" என்ற நூலை எழுதியவர். சிறந்த பிரசாரகராகத் தென்னாட்டிற் புகழ் பெற்றவர்.

**சேர். பொன்னம்பலம் இராமநாதன்**

ஈழத்தின் தலைசிறந்த கல்விமானாகிய இவர் இந்தியாவிலுள்ள சைவசமய நிறுவனங்களில் உரைகளாற்றிப் பெருமை பெற்றவர். அரசியல், சட்டம், இலக்கியம் எனப் பல துறைகளிலும் புலமைமிக்க இவர் சமஸ்தானங்களிலும், இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் உரையாற்றிப் பெருமைபெற்றவர். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இந்துத் தத்துவங்களை எடுத்துரைத்துள்ளார்.

**சுவாமி விபுலானந்தர்**

மட்டக்களப்பு, காரைதீவிற் பிறந்து தமிழிற்குப் பெருமை சேர்த்தவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி போன்றவற்றில் மிகுந்த பாண்டித்தியம் உடையவர். ஈழத்தின் முதல்தமிழ் பேராசிரியர் என்ற சிறப்பு இவரையே சாரும். இந்திய இராமகிருஷ்ண சபையுடன் இணைந்து துறவியாக வாழ்ந்த இவர், தமிழிற்கும் சைவத்திற்கும் அளப்பரிய தொண்டு செய்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழத்தின் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றிய காலத்திற் பல்வேறு ஆன்மீக உரைகளையும், ஆராய்ச்சி உரைகளையும் இந்தியாவில் ஆற்றி ஈழத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

**கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி**

உலகப் பேரறிஞராகிய கலாயோகி ஆனந்தகுமார சுவாமி ஈழத்திற் பிறந்து, உலகறியப் பெரும் மேதாவியாகத் திகழ்ந்தவர். ஈழத்தின் கலை கலாசாரப் பண்பாட்டையும், இந்தியாவின் கலை கலாசாரப் பண்பாட்டையும் உலக அரங்கிற்குக் கொண்டுசென்ற பெருமை இவரையே சாரும். பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதிலும், மொழி பெயர்ப்பு நூல்களை எழுதுவதிலும் உரைஎழுதும் முறையினை வளர்ப்பதிலும், பேச்சுக்கலையை மேம்படுத்துவதிலும், கலைப் பொக்கிஷங்களைக் காப்பாற்றுவதிலும் இவர் ஆற்றிய பணி மகத்தானது. இவரது நடராஜ நடனம் (The Dance of Siva) என்ற நூல் உலக அரங்கில் இந்துக்களுக்குப் பெருமை சேர்த்தது எனலாம். சிறந்த வரலாற்றுச் சொற்பொழிவுகளை இந்தியாவில் ஆற்றி ஈழத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

**ஸ்ரீ சங்கரசுப்பையர்**

ஈழத்து அறிஞராகிய இவர் சமய, புராண, கதாப்பிரசங்கங்களை ஆற்றுவதில் மிகவும் வல்லவர். இந்தியாவிற் சில திருத்தலங்களின் விழாக்களிற் கந்தபுராண விரிவுரைகளை ஆற்றி மிகவும் பாராட்டுப் பெற்றவர்.

**வழக்கறிஞர் நாகலிங்கம்**

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவர், சைவபரிபாலனசபையினூடாகச் சமயப்பணி ஆற்றியவர். நாவன்மை மிக்க இவர் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் திறமை படைத்தவர். சைவபரிபாலன சபையின் சார்பில் இந்தியாவிற் சில விழாக்களில் உரையாற்றிப் பலரது பாராட்டைப் பெற்றவர்.

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் (மணி பாகவதர்)**

ஈழத்திற் சைவசமய ஆதீனத்தை முதன்முதலில் தோற்றுவித்த பெருமைக்குரியவர். இவர் தமிழ், வடமொழி, ஆங்கிலம், இசை, நடனம், ஓவியம் போன்ற துறைகளில் மிகுந்த பாண்டித்தியம் உடையவர். புராண, இதிகாசங்களைக் கதாப்பிரசங்கமாக எடுத்துரைப் பதில் மிகவும் புகழ்பெற்றவர். ஈழத்திலும் இந்தியாவிலும் சைவத் திருக் கோவில்களில் தொடர் விரிவுரைகள் ஆற்றிப் பெரும்பாராட்டைப் பெற்றவர். மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் இவரது ஆற்றலைப் பாராட்டியதோடு, ஈழத்தின் ஆதீனம் அமைப்பதற்குப் பேராதரவு வழங்கியது. திருச்செந்தூர் முருகன் திருச்சந்திதானத்தில் கந்தசஷ்டி உற்சவ காலங்களில் இவர் ஆற்றும் உரையைக் கேட்பதற்குப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஆலய வீதியிற் காத்திருப்பர். இவர் மலேஷியா, சிங்கப்பூர்போன்ற நாடுகளுக்குப் பலதடவை சென்று உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

**அன்னை, சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய ஒப்பற்ற சமய இலக்கியப் பேச்சாளர் இவர். 1950 முதல் ஈழத்திலும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் தன் சொல்வன்மையாற் பெரும்புகழ் ஈட்டியவர். இந்தியாவில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜ மாநாடுகளிற் சிறப்புரை ஆற்றியதோடு ஆரணியத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மகளிர் மாநாட்டிற்கு ஈழத்திலிருந்து சென்று தலைமைதாங்கிப் பெரும் புகழ்பெற்றவர். திருமுறைகள், புராண, இதிகாசங்கள், சித்தாந்த தத்துவங்கள் பற்றிய தெளிந்த ஞான அறிவுடைய இவர், இந்தியாவிலுள்ள ஆதீனங்களினாலும் கௌரவிக்கப் பட்டவர். இந்திய சைவசித்தாந்த சமாஜத்திற்கும் இவருக்கும் இடையில் இருந்த தொடர்பு காரணமாக சமாஜத்தின் பவளவிழாவைத் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடாத்திப் பெருமை பெற்றவர்.

**திரு.ச.அம்பிகைபாகர்**

யாழ்ப்பாணம், வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராக விளங்கிய இவர் சைவத்தமிழ் அறிஞராக மதிக்கப்பட்டவர். இவர் சைவபரிபாலன சபையின் சார்பாக இந்தியாவிற் சைவசித்தாந்தம் பற்றி உரையாற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

**ஆத்மஜோதி, நா.முத்தையா**

யாழ்ப்பாணம், ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மலையகத்தில் ஆசிரியப் பணியாற்றி ஆத்மஜோதி என்ற ஆன்மீக மலரைப் பதிப்பித்து வெளியிட்டவர். சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் திறன்கொண்ட இவர், இந்தியா சென்று சில ஆன்மீக நிறுவனங்களில் உரையாற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

80களின்பின் ஈழத்திலும் இந்தியாவிலும் நன்கு அறியப்பட்ட ஆன்மீக இலக்கியச் சொற்பொழிவாளராக விளங்குகின்றார். யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் மிக இளம் வயதிற் சொற்பொழிவுத் துறையினூடாகப் பிரபல்யம் பெற்றுள்ளார். அகில இலங்கைக் கம்பன் கழகம் என்ற இலக்கிய ஸ்தாபனத்தை ஸ்தாபித்து நல்லூரிலும் கொழும்பிலும் கம்பன் கோட்டங்களை நிறுவி, இளைய தலைமுறையினரிடையே

பேச்சாற்றலை வளர்த்து வருபவர் இவர். இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் சேக்கிழார் விழாவிற் கலந்துகொண்டு திருமுறைகள்பற்றியும் புராண, இதிகாசங்கள் பற்றியும் சிறப்புரைகள் ஆற்றி வருபவர். இந்தியாவில் நடைபெற்ற கம்பன் விழாக்களில் "இலங்கை ஜெயராஜ்" என்ற சிறப்புப் பெயரில் இவர் ஆற்றிய உரைகள் இந்திய ஊடகங்களில் முதன்மை கொடுத்துச் சிறப்பிக்கப்படுகின்றன. லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா, சுவிஸ்லாந்து, சீசெல்த் போன்ற நாடுகளுக்குச் சென்று ஆன்மீக, இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

சமீபகாலத்தில் ஈழத்திலிருந்து இந்தியா சென்று ஆன்மீக, இலக்கியச் சொற்பொழிவாற்றி வருபவர்களில் தமிழருவி த.சிவகுமாரன், செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன், கலாநிதி ந.சுப்பிரமணிய ஐயர், திரு.வ.ஸ்ரீபிரசாந்தன், (கம்பன் கழகம்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்தியாவில் நடைபெற்ற சேக்கிழார் விழாக்களில் திரு.வ.ஸ்ரீபிரசாந்தன், (கம்பன்கழகம்) ஆண்டுதோறும் பங்குபற்றிப் பாராட்டுப்பெற்று வருகின்றார். தமிழருவி த.சிவகுமாரன் சேக்கிழார் விழாக்களில் பங்குபற்றி ஆற்றிய உரைகள் பலரையும் கவர்ந்தது. செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் சேலம் மார்கழிப் பெருவிழாவிற் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டுச் சமயச் சொற்பொழிவாற்றியுள்ளார். திருப்பூர் ஆன்மீக விழாவிலும் பேரூர் ஆதீன சுவாமிகளின் விழாவிலும் செஞ்சொற் செல்வரின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

**முடிவுரை**

மேற்குறித்த கட்டுரையிற் சமய ரீதியான அரங்குகளைச் சிறப்பித்த ஈழத்து அறிஞர்கள் பற்றிய விபரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இலக்கிய ரீதியாக ஈழத்திலிருந்து பல பேராசிரியர்கள் காலத்திற்குக் காலம் இந்தியா சென்று மாநாடுகளில், ஆய்வரங்குகளில் தம் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். அத்தகைய பெரியார்கள்பற்றி இக்கட்டுரையிற் குறிப்பிடவில்லை. சைவசமய உரை அரங்குகளில் இந்தியாவிற் புகழை நிலைநாட்டிய அறிஞர்கள் சிலரது விபரங்களை இக்கட்டுரையில் விபரித்துள்ளேன். இக்கட்டுரையில் யாராவது பெரியவர்களை யான் தவறவிட்டிருப்பின் அவர்கள்பற்றிய விபரங்களைச் சிறியேனுக்குத் தெரியப்படுத்துவார்களாயின் திருத்திய பூரணமான பிறிதொரு கட்டுரையை வெளியிடலாமெனக் கருதுகிறேன். எனவே இக்கட்டுரை பூரணமானதெனக் குறிப்பிடவில்லை.

**உசாத்துணை நூல்கள்**

1. இலங்கைத் தமிழ்விழா மலர். 1951
2. இந்துசாதனம் பத்திரிகை சைவபரிபாலனசபை வெளியீடு
3. சைவசித்தாந்த சமாஜ வெளியீட்டு மலர்
4. சிவத்தமிழ்ச்செல்வி மணிவிழா வெளியீட்டு மலர்
5. மஹாவித்துவான் கணேசையர் நினைவுமலர்.

# நாடகவழி உள ஆற்றுப்படுத்தல்

க.ரதீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

அரங்கு ஒரு பொழுது போக்குச் சாதனம் என்பதைக் கடந்து சமூகத் தேவைகளை இன்றைய உலகிற் பூர்த்தி செய்யும் ஊடகமாகவும், பண்பாட்டின் சின்னமாகவும் இருக்கிறது. மிகத் தொன்மையான காலங்களிலேயே அரங்கு, மனிதனது வாழ்க்கைத் தேவைகளில் தனது பணியை ஆற்றி வந்திருக்கிறது. கல்வியியல், சமூகவியல், மானிடவியல், உளவியல், அரசியல், பண்பாடு போன்றவற்றில் நாடகம் ஒரு சாதனமாகக் கொள்ளப்பட்டு அவற்றின் நோக்கங்களின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் ஒரு முறைமையாக அரங்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரையில் உளவழிச் சிகிச்சையாக அரங்கு எப்படிச் செயற்படுகிறது என்பது பற்றிய சில மேலோட்டமான விடயங்களை நோக்கமுடியும்.

அரங்கு பல துறைகளில் தன் பணியைப் புரியினும் இங்கு உளவியல் சார்ந்த ஒரு முறைமையாக ஆற்றுப்படுத்தற் செயற்பாட்டில் எவ்வாறு செயற்படுகிறது என்பது பற்றி நோக்க முடியும். அரங்கிலே மனிதன் தன்னை முன் நிறுத்தி, தானே தன்னைப் பார்த்து உணர்ச்சியை வெளிப்படுத்தல் என்பது மிகத் தொன்மையான சடங்காசார காலந் தொடக்கம் நடந்து வந்திருக் கிறது. கிரேக்கத்தில் 'கதாசிஸ்' என்றும் இந்தியாவில் 'ரசம்' என்றும் யப்பானில் 'யூஜின்' என்றும் மனித உணர்ச்சிகளை மீள நிகழ்த்தி வெளிப்படுத்துவது இருந்திருக்கிறது. அதாவது நாடகத்தின் பாத்திரங்களில் ஏற்படும் உணர்ச்சி மாற்றங்கள் அதனைப் பார்க்கின்ற பார்ப் போனது உள்ளத்து உணர்ச்சி அமைப்பில் மாற்றத்தை உண்டுபண்ணி கிளர்வுறச் செய்கிறது. மிக இலகுவிற் கூறுவதானால் நாடகத்தைப் பார்க்கும் ஒருவன் அழுவான், சிரிப்பான், கோபப்படுவான். இது பொதுவாக நாடகம் பார்க்கும் பார்ப்போரில் ஏற்படுகின்ற மாற்றம்தான். இந்த நுட்பங்களைச் சில உளவியற் கோட்பாட்டின்கீழ் சேர்த்து ஆக்கப்பட்ட ஒரு முறைமைதான் இந்த நாடகவழி ஆற்றுப்படுத்தலாகும். இது ஒரு துறைசார்ந்த முறைமையாகத் தோற்றம் பெற்றதைக் கூறுவதானால் 1921 அளவில் உளமருத்துவரான ஜே.எல். மொறினோ (J.L.Moreno) என்பவரால் முதன் முதலில் ஆரம்பித்தது எனலாம். 1960 அளவில் ஐரோப்பாவின் பெருநிலப்பரப்பிலும், பிரித்தானியாவிலும் உருவாக்கப்பட்ட கலைச் சிகிச்சைக் குழுக்கள் (Arts Therapy Groups) மூலம் முனைப்புறத் தொடங்கியது. பின்னர் பல நாடுகளில் அது ஒரு செயன்முறையாகவும், கற்கை நெறியாகவும் உளச் சிகிச்சைப் பிரிவின் ஒரு பகுதியாகவும் இருந்து வளர்ந்து இன்று நடைமுறையில் உள்ளது.

நாடகவழி உளச் சிகிச்சை என்பது இரண்டு வெவ்வேறான தனித்துவத் துறைகளின் இணைப்பாகக் காணப்படுகிறது. நாடகம், சிகிச்சை என்கின்ற இரணடு விடயங்களைப்

பார்க்கவேண்டும். பொதுவாக நாடகம் என்றால் என்ன என்பது பற்றி ஆளுக்கு ஆளும், கொள்கைகளுக்கு ஏற்பவும், தேவைகளுக்கு அமையவும் பல்வேறுபட்ட விளக்கங்கள் வருகின்றன. கிரேக்கத்தில் அதனை ஒருவாறும், இந்தியாவில் இன்னொருவாறும் பார்க் கின்றனர். குறிப்பிட்ட காலம், வெளி என்பவற்றி னுள்ளே ஒரு ஆளின் சுயமின்மை என்ற நிலைப்பட்ட பாத்திர ஏற்றத்தோடு சம்பந்தப்பட்டு நிற்கிறது. ஒரு ஆற்றுவோனும், ஒரு பார்ப்போனும் ஒரு இடத்தில் சந்திக்கும் போது நாடகம் ஆரம்பமாகி விடுகிறது. பார்வையாளர் பார்ப்பதற்காக நாடகம் எழுதி, ஒத்திகை பார்த்து நடிகர்களால் மேடையில் நடிக்கப்படுவது; ஆற்றுவோர் ஆற்றப் பார்ப்போர் பார்த்திருப்பது; ஆற்றுவோரும், பார்ப்போரும் சேர்ந்து பங்குபற்றுவது. மேடை நாடகத்திற்கு வரைவிலக் கணம் கொடுப்பதற்கு அப்பால் வாழ்க்கை நாடகத்திற்கு வரைவிலக்கணம் கொடுக்க முடியுமா? வாழ்க்கையில் நாம் நடிப்பதில்லையா? வாழ்க்கை நாடகம் பற்றிய நுட்பம் நாடகவழிச் சிகிச்சைக்கு உதவும். அதாவது எல்லோராலும் சிகிச்சைக்கான தங்களது சுயநடிபாகங்களைத் தாங்கிச் சொந்த சுயங்களை வெளிப்படுத்த முடியும்.

சிகிச்சை என்ற சொல் குணப்படுத்தல் (Healing) என்ற அர்த்தத்தில் வருகின்றது உளசிகிச்சை (Psycho Therapy.) என்பது உளநிலைப்பட்ட ஒரு குணப்படுத்தலாய் இருக்கும். அதேநேரம் நாடகவழிச் சிகிச்சை என்பது நாடக நுட்பங்களினூடான ஒரு குணப் படுத்தலாக இருக்கிறது. உளச்சிகிச்சைக்கு உளவியல் சார்ந்த நுட்பங்களைப் பயன்படுத்து கின்றனர். நாடக சிகிச்சை தனக்குரிய எல்லா ஒழுங்கு முறைகளையும் கொண்டமைந்துள்ளது. அதே நேரம் உளச்சிகிச்சைக்குரிய சில ஒழுங்கு முறைகளையும் இது உட்படுத்தி இருக்கிறது. ஒரு பாதிப்புற்றோன் (Patient) தன்பாட்டில் செய்ய வேண்டியதை, தன்பாட்டிற் செய்யப்பட முடியவில்லையே என்பதை உணரச்செய்யும் நடைமுறையாக அமைகிறது. இங்கு சிகிச்சை யாளன், பாதிப்புற்றோன் (Therapist, client) என்போரின் தொடர்பு முறைமை செயற்றிறன் மிக்க ஒன்றாக இருக்கும். இங்கு "பாதிப்புற் றோன்" நடிகனாகவும்('Client' or 'actor') சிகிச்சையாளன் 'வழிப்படுத்துனர்' அல்லது நெறியாளனாகவும் செயற்பட்டு, சிகிச்சைச் செயன்முறைக்கு(Clinical Operation) உட்பட்டு நிற்கின்றனர். பாதிப்புற்றோனுக்கும், சிகிச்சை யாளனுக்கும் இடையிலான தொடர்பு முறையின் தன்மை மருந்துவியல் (Pharma cology) மற்றும் சில வழமையான சமூக முறைமைகட்கு மாறுபட்ட நிலையிலேயே இங்கு பாதிப்புற் றோனின் அறிவில், உணர்ச்சியில், நடத்தையில் மாற்றங்கள் உண்டு பண்ணப்படுகின்றன. நாடக சிகிச்சை குணப்படுத்தலின் அரங்கக் கலைசார்ந்த ஒரு பிரயோகமாகும். இப்பிர யோகம் சமூக அமைப்பின் மக்களில் பிரச் சினைக்குரிய அல்லது பாதிப்புற்றோரோடு தொடர்புபட்டு இருக்கும். அத்தொடர்பின் நோக்கம் மனநலத்தை (Mental Health) உண்டு பண்ணுவதாகும். இதில் தனிநபர்கள், குடும்பம், குழுக்கள் எனப் பல நிலைகளில் இது நடை பெறும். நாடகச் சிகிச்சை முறைமைகள் நாடகங்களிற் கையாளப்படும் அசைவு, குரல், நடனம், அரங்க விளையாட்டுக்கள், பாக மாடுதல் (Role play) புதிதளித்தல்

(Improvization) எழுத்துருவேலை, பொம்மைகள், வேடமுகங்கள் போன்ற பல பயன்படுத்தப் படுகின்றன.

ஜே.எல்.மொறினோ (J.L.Moreno) என்பாரது வியன்னா தன்னெழுச்சி அரங்கில் (Vienna Theatre of Spontaneity) நாடகச் சிகிச்சை நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன. இவரது சிகிச்சைக்கான நாடக நுட்பம் வழமையாக ஒத்திகை பார்க்கப்பட்டு மேடையேற்றப் படும் நாடக முறைமையிலிருந்து வேறுபட்டது. வழமையான நாடக முறைமையிலிருந்து பல மாற்றங்கள் செய்யப்பட்டது.

1. நாடகாசிரியர், எழுத்துரு என்பவற்றை நீக்குவது அல்லது தவிர்ப்பது
2. எல்லோருமே பங்குபற்றும் பார்ப்போரர் இல்லாத அரங்கு-இங்கு நடிகன், பார்வையாளன் என்று இல்லாத ஒரு சூழல் ஏற்படுத் தப்படும்.
3. புதிதளித்தல் (Improvization) மூலம் பங்கு பற்றுனர்களே ஆக்ககர்த்தாக்களாதல் - இங்கு ஒவ்வொருவரும் தத்தமது சொந்த சுயங்களிலிருந்து நாடக நுட்பங்களில் பங்கு பற்றத் தூண்டப்படுவர். இங்கு கற்பனைகள், திறன்கள் வெளிப்படும். (அத்துடன் கூடவே உளத்தாக்கங்களும் வெளிப்பட்டு விடும்)
4. மூடப்பட்ட மேடை நீக்கப்பட்டு திறந்த மேடை பயன்படுத்தப்படல், இந்த மேடையில் பாதிப்புற்றோரர் தம்மைத் திறந்த மனத்துடன் வெளிப்படுத்தி நிற்பர். இம்முறைமைகள் தனிநபர், குடும்பம் மற்றும் சில குழுக்கள் போன்றவற்றிற்கு உகந்ததாகலாம்.

மொறினோவின் நாடகச் சிகிச்சையில் ஒரு பாதிப்புற்றோனும், பல சிகிச்சையாளர்களும் தனிநபர் முறைமைக்குப் பயன்படுவர். தனிநபர், குடும்பம், சிறுகுழுக்கள் போன்றவற்றுக்கு மட்டு மல்லாது குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்குமே இந்த சிகிச்சை நுட்பம் கையாளப்பட்டுள்ளது. உதாரணமாக: ஹிட்லரின் பாதிப்பிற்குட்பட்ட யூதர்கள் பலர் நீண்டகாலமாகியும் பாதிப் பினின்று விடுபடாமைக்காகப் போடப்பட்ட நாடகம் சிகிச்சை அரங்காகவே (Theraputic Theatre) இருந்தது. இந்த நாடகத்தில் அடல்வ் எயிக்மான்(Adolf Eichmann) ஆக நடித்தவர் மீது பார்ப்போர் தமது ஆழ்மனக் கொந்தளிப்பை ஆவேசத்தோடு வெளிப்படுத்தினர். இந்தச் செயற்பாடு, உள்ளடங்கி இருந்தவை வெளிப் பட்டு, அவர்களை அறியாமலேயே அவர்களுட் கிடந்ததை இனங் கண்டனர்.

எமது தமிழ்ச்சமூகத்திற்கு நாடகவழி உளச்சிகிச்சையின் தேவைப்பாடு அவசியமாக இருக்கிறது. உதாரணமாக யுத்தம் தொடர்பான உளப் பாதிப்பிற்கு உட்பட்டவர்களைத் தனித் தனியாக நாடகவழிச் சிகிச்சையளிக்கும் சாத்தியம் குறைவு. ஏனெனில் ஒரு சமூகமே தாக்கத்திற்குட்பட்டு இருக்கிறது. அதனால் அதற்கேற்புடைய நாடக வழி உளச்சிகிச்சையே சிறப்பானதாக இருக்கும். சமகாலத்தில் நடிகர் அல்லாதோருக்கு நாடகம் பழகும் நடை முறையில் புதிய வெளிப்பாடு அநேகமாக வெளிப்படுகிறது. உதாரணமாக எவற்றை நடிக்க விட்டாலும் அவலமும், சோகமும், பயமும் உடனடியாக வெளிவரும். உண்மையிற் கொடுக் கப்பட்ட உணர்ச்சி வேறாகவே இருந்தது. எம்மிடையே உளம் சார்ந்த பல பாதிப்புக்கள் சமூகத்தின் பல இடங்களில் வெளிப்படு கின்றன. உதாரணமாக வேலைத்தளம். கோயில், வீதி, யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில்

உளநோய் சிகிச்சைப் பிரிவில் பேராசிரியர் தயா சோமசுந்தரம், வைத்திய கலாநிதி சி.சிவயோகன் என்போரின் ஆலோசனைகளோடு குழந்தை ம.சண்முகலிங்கத்தால் நெறியாள்கை செய்யப் பட்ட 'அன்னை இட்ட தீ' நாடகமானது இனப் பிரச்சினையால் எழுந்த யுத்தத்தின் பாதிப்பிற் குள்ளான மக்களது கதையை வைத்துப் பின்னப்பட்டது. ஒரு சமூகத்திற்கான சிகிச்சை அரங்கு என்ற அடிப்படையில் இதனை நாம் மிக ஆரம்பமான ஒரு கட்டமாகக் கொள்ள முடியும். பல்வேறு உளத்தாக்கங்களிற்குட்பட்ட மக்களது மன உணர்வுகளை இந்நாடகம் வெளிப் படுத்தியது. இந்த அரங்கில் மிக முக்கிய நோக்கமாக இருந்தது பிரச்சினைகளை இனங்காணச் செய்வதும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமாகும். இந்த நாடகத்தில் கலை நுட்பத்தோடு குறித்தளவு சிகிச்சைநுட்பமும் ஒருசேர இருக்கின்றது. உண்மையான பாதிப்புக்களைப் பாதிப்புறாத நடிகர்களை வைத்துப் பாதிப்புற்ற, பாதிப்புறாத பார்வையா ளருக்கு அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகம் உளத்தாக்கங்கள் பரவி வருகின்றன என்பதை பலருககு முன்னெச் சரிக்கையாகக் காட்டியது. உண்மையில் இந்த அரங்கு முழுமையாக பாதிப்புற்றோரோடு தொடர்புகொள்வதில் தொடர்ச்சியாக ஈடுபடவில்லை. அத்தோடு பாதிப்புக்களை பாதிப்பிற் குரியவர்மூலம் வெளிப் படுத்திப் பார்க்கப்படுகின்ற முறைமையில் அவைபோன்றவை இனி ஆக்கப்பட வேண்டும். இந்த அரங்கின் நீட்சி கலந்துரையாடலுக்கும், பங்குகொள்ளலுக்கும், வெளிப்படுத்தலுக்கு மான முறைமையாக அமைதல் வேண்டும்.

எமது சமூகத்தில், குடும்பத்தில், தனியாளில் ஆங்காங்கே வெளிப்படுகிற அசாதாரண நிலைமைகளை மாற்றியமைக்கும் நோக்கத் திற்கு இந்தச் சிகிச்சை அரங்கையும் உருவாக் கலாம். அதேநேரம் இவ்வகையான பிரச்சினை களை உருவாக்கும் மூலங்களைக் கண்டறிந்து அவற்றுக்கும் ஆவன செய்யவும் உதவலாம்.

**உசாத்துணைகள்:**

1. Sue Jennings (1998) "Introduction to Dramatherapy Theatre and Healing", Jessica kingsley publishers London.

2. "The Hand Book of Dramatherapy", (1994) Routledge, London and Newyork

3. Mady schutzman and Jan cohen - Cruz, (1994) "Playing Boal, Theatre, Therapy, Activism" Routledge, Londan and Newyork.

# ஈழத்தமிழர் நாட்டாரிசைப் பாடல்கள்

**திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா**
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
இசைத்துறை விரிவுரையாளர்
Dip.in music, Dip. in Ed, M.A. in Cultural.

ஈழத்தமிழர் நாட்டாரிசையை வெளிப் படுத்தும் இனங்காணப்பட்ட பாடல்களின் உள்ளடக்கப் பாடுபொருள்களாகப் பல அம்சங்கள் காணப்படுவதை அறிய முடிகின்றது. இந்தப் பண்பாட்டு அம்சங்கள் யாவும் ஈழத் தமிழர்களின் வாழ்வியலோடு சம்பந்தப்பட்டவை யாகும். மேலும் எளிமையான இசையுடனும் சந்தர்ப்பங்களுடனும் பாடக்கூடிய பாடல்களா கவே இவை ஈழத்தமிழரிடையே விளங்கு கின்றன. பிரதேச தனித்துவம், சமூக அமைப் பின் நேரடிப் பிரதிபலிப்பு, எளிய மொழிநடை, தெளிவான கருத்து வெளிப்பாடு, கருத்துக் களை நேரடியாகக் கூறும் இயற்கை நவிற்சிப் பாங்கு, வரையறைகளுக்கு உட்படாத போதும் எதுகை மோனைகளையும், அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி போன்றவற்றையும் கொண்டி ருத்தல் முதலிய பண்புகளை உடையனவாகி ஈழத்தமிழர் நாட்டாரிசைப் பாடல்கள் காணப் படுகின்றன. இப்பாடல்கள் ஒருவருக்காகப் பிறர் பாடுவது போலவும், தாங்களாகவே பாடுவது போலவும், இருநிலைத் தன்மைகொண்டு அமைந்துள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை தன்னுணர்ச்சிப் பாடல்களாகவும், கள்ளம் கபடமற்ற கிராமப்புற மக்களின் குடும்ப உறவு. நிலைகளையும், சீவனோபாய முறைமை களையும், வாழ்க்கை ஒழுக்கங்களையும், கற்பனை ஆற்றல்களையும், நுண்ணறிவு ஆக்கத்திறன் முதலானவற்றையும் வெளிப் படுத்துவனவாக அமைகின்றன. தொழில் முயற்சிகள், வாழ்வின்தேவைகள், சுயபாதுகாப்பு முறைமைகள், பிறரது நன்மை தீமைகளில் பங்கேற்றல், நம்பிக்கை, சகுனங்கள், சடங்குகள், வழிபாடுகள், விளையாட்டுக்கள், நீதிப் போதனைகள், வீரம், காதல், புனிதம், அன்புணர்ச்சி ஆகிய பன்முகமான பொரு ளுணர்வின் அடிப்படை யிலும், அவற்றினூடாகக் கிளர்ந் தெழுந்து தோற்றம்பெற்ற உணர்ச்சி களின் பிரதிபலிப் பாகவும் இத்தகைய பாடல்கள் உருவாகின என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் பரந்து வாழும் தமிழ் மக்களிடையே இவ்வாறான நாட்டார் பாடல்கள் தோற்றம் பெற்றமையை நாம் அறிவோம். எனினும் அவை தோன்றிய காலப் பகுதியை எம்மால் அறுதியிட்டுக் கூறமுடி யாதுள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழங்கிவந்த "வசந்தன் பாடல்கள்" பாடி ஆடுவதற்கேற்றதாக அமைந்தவை. ஆறு, எட்டு, பன்னிரண்டு பேர்களாகச் சேர்ந்து, கைகளில் இரு சிறுகோல்களைப் பிடித்து அவற்றை ஒன்றோடு ஒன்றாய்த் தட்டி ஆடப்படும். இது வசந்தன் ஆட்டமானது ஒருவகையிற் கோலாட்டத்தை ஒத்ததாகும். இப்பாடல்கள் சிலப்பதிகார வரிப்பாடல் வகையைச் சேர்ந்தவை எனவும், வசந்தன் பள்ளு, சிந்து என்றவாறு பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன என்றும் இப்பாடல்களைத் தேடித் தொகுத்த

தி.சதாசிவஐயர் குறிப்பிடுகிறார். மேலும் அவர் ஒவ்வொரு வசந்தனுக்கும் அது பாடவேண்டிய சந்தத்தைக்காட்டும் தரு என்பது முதலில் குறிக்கப்பட்டிருக்கும். அந்தத் தருவின் ஓசை விதிப்படியே அதன் பின்னால்வரும் கண்ணிகள் பாடப்படவேண்டியன. இப்பாடல்கள் பல்வேறு கலைகள் பொருந்தியனவாய் தாளம், ஓசை, நயம், தொடைநயம் என்பனவற்றைக் கொண்டு விளங்குகின்றன என்கின்றார்.

குழந்தையைத் தூங்கவைப்பதற்காகத் தாய்மாரால் பாடப்படும் தாலாட்டுப் பாடல்கள் வடஇலங்கையில் சிறப்புப் பெற்றவையாகும். சொல்லமைதியைவிட பொருளமைதி நிறைந் தனவாகும். தாயானவள் தன்மனதில் தோன்றிய எண்ணங்களையெல்லாம் கருப்பொருளாக்கி, எளிய இசையுடன் பாடச்செய்வது நெஞ்சை உருகச் செய்வதாகும்.

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆரடிச்சு நீயழுதாய் அழுத கண்ணால் கண்ணீர் நீர்வழிய
(யாழ்ப்பாணப் பிரதேச நாட்டார் பாடல்)

பச்சையிலுப்பை வெட்டிப்
பால்வடியத் தொட்டில்கட்டி
ஆரடித்து நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்காய்"
(மட்டக்களப்புப் பிரதேச நாட்டார் பாடல்கள்)

வழிபாட்டுப் பாடல்கள், கரகப்பாடல்கள், மாரியம்மன் வாசல் பாடல்கள், எச்சரிக்கையும் பராக்கும் பாடல்கள், கிட்டிப்புள்ளு அடிக்கும் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், காதல் பாடல்கள் என்பன யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் ஏராளமாக எழுந்துள்ளன. மேலும் கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் போன்றனவும் தோற்றம் பெற்றுள்ளன.

"ஆயிரம் மாரி கண்ணுடையாள் – எங்கள்
அலங்காரி வரும் வாசலிது
(ஈழத்தின் வடபுலத்து மாரியம்மன் வாசல் பாடல்)

பொன்னான மேனியிலே ஒரு பொல்லாத நோய் வந்ததென்ன (யாழ்ப்பாண பிரதேச ஒப்பாரிப்பாடலின் ஒரு பகுதி)

"ஆளுக்கட்டும் நம் சீமை
அரிசிபோடும் நம்ம சீமை
(மலையக நாட்டார் பாடல்)
என்னடி புள்ளே விடிஞ்சல்லே போச்சுது
செல்ல வேணு மெல்லோ மீன்பிடிக்க
இன்னமும் நித்திரை கொள்ளலாமோ நீயும்
எழுந்திரு புள்ளே பொழுது புலர்ந்திருச்சு"

மன்னார் பிரதேச வழக்கில் காணப்படும் காதல்பாடல் ஈழத்தமிழர்களில் பெரும்பாலான வர்கள் விவசாயம், மீன்பிடி ஆகிய தொழில் களையே பெரிதும் மேற்கொள்கின்றார். இவ்விரு துறைசார்ந்த நாட்டார் பாடல்களும் ஈழத்தில் ஏராளம் கிடைத்துள்ளன. இசையும் பொருளும் நிறைந்தவையாக இவை விளங்குகின்றன. ஏர்பூட்டுதல், உழவு, நாற்று நடுகை, துலா மிதித்தல், பள்ளுப்பாடுதல், காவற்பாட்டு, பரத்தை வெட்டுப் பாடல், அருவி வெட்டுப்பாடல், சூடடித்தல், களையெடுப்புப் பாடல், நெல்குற்றும் பாடல், படகோட்டும் பாடல், கரைவலையிழுக்கும் பாடல், நங்கூரப்பாடல், கட்டுமரங்களைக் கரையிலேற்றும்போது பாடல் அம்பாள் பாடல், வலைகளைப்படுக்கும்போது இழுக்கும்போது

பாடும் பாடல் ஆகியவை இத்தகைய பாடல் வகைகளில் அடங்குகின்றன.

இவற்றிற்குப் புறம்பாகக் கரகாட்டம், குளிர்த்தி, காவடி, சிறு தெய்வவழிபாடு முதலிய வழிபாட்டுப் பாடல்களும் காணப்படுகின்றன. மேலும் பல்துறையளாவிய நாட்டார் பாடல்களைப் பிரதேசத் தனித்துவத்துடன் எம்மால் இனங்காணமுடிகின்றது. தோட்டத் தொழிலாள மக்கள் அனுபவிக்கின்ற துன்பங்களையும், மகிழ்ச்சியையும், விருப்பு வெறுப்புக்களையும் தொழில் அனுபவங்களையும் பிரதிபலிப்பதாக மலையகத் தமிழரின் நாட்டுப் பாடல்கள் அமைந்துள்ளன.

இவ்வாறாக ஈழத்தமிழர் நாட்டாரிசைப் பாடல்கள் பன்முகப்பரிமானம் உடையவர்களாகப் பாடுபொருள்களில் விளங்கும்போது அவற்றின் வெளிப்படுத்தலுக்கு ஆதாரமாய் அமைந்த இசை நுணுக்கங்கள் வியத்தகு முறையில் உணர்ச்சியூட்டுவதாகும். நாட்டாரிசையையே மூலமாகக் கொண்டவையாகும். பிற்காலத்தில் சொற்றொளி இசையானது இத்தகைய நாட்டாரிசையைப் பேணுமளவிற்கு முன்னோடியாக விளங்கியவையாகும். கிராமிய மெட்டுக்களின் பிறப்பிடம் நாட்டாரிசையே எனலாம். அந்த இசையின்பமே வாய்மொழி இலக்கியமாகிய நாட்டார் பாடல்கள் இன்றளவும் நிலைத்திருப்பதற்கு மூலகாரணமாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. அனந்தராஜ். வடபுல நாட்டார் வழக்கு
2. சதாசிவஐயர் தி. மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு
3. முரளிதரன் சு. மலையக இலக்கியத் தளங்கள்
   நாட்டார் பாடல்கள் கல்விவெளியீட்டுத் திணைக்களம்.


| | | |
|---|---|---|
| தேசிய மரம் | - | நாகமரம் |
| தேசிய மலர் | - | நீரோற்பலம் |
| தேசிய மிருகம் | - | யானை |
| தேசிய பறவை | - | காட்டுக்கோழி |
| தேசிய விளையாட்டு | - | கரப்பந்தாட்டம், எல்லே |

# சங்க இலக்கியங்களில் உலகப் பொதுமைக்கருத்துக்கள்

**கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

தமிழ்மொழி மிகநீண்ட தொன்மையான இலக்கியப் பாரம்பரியங்கொண்டதாகச் சிறப்பிக்கப்படுவது. உலக இலக்கிய வரலாற்றிலே பண்டைய கிரேக்க, உரோம, இலத்தீன் இலக்கியங்கள் கொண்டுள்ள செழுமைத் தன்மைக்கு நிகராக நிற்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த அரும் பெருங் கருத்துக்க ளெல்லாம் இம்மொழியிலே காணப்படுகின்றன. வரலாற்றின் தொடக்க காலத்திலேயே மனிதாயத்தை வற்புறுத்துவதான கருத்துக்கள் பலவற்றை இந்த ஆரம்பகால இலக்கியங்கள் கொண்டமைந்திருக்கின்றன.

உலக நடப்பிற்கும் ஒரு குடும்பத்தின் நல்வாழ்விற்கும் பல்வேறு அறங்கள் தேவைப் படுகின்றன. விரும்பினும், விரும்பாது விடினும், ஏற்றுக் கொள்ளினும், ஏற்றுக் கொள்ளாது விடினும், ஒவ்வொருவருக்கும் பிறரோடும், பிற உயிரினங்களோடும் உறவுகள் அல்லது தொடர்புகள் பின்னிச் செறிந்து கிடக்கின்றன. பல அறங்களை வாழ்விற் கடைப் பிடிப்பவர்கள் அமைதியான உலக இயக்கத் துக்கு வழி செய்வோராக அமையக் கூடியவர் கள். இவ்வாறான பரநலன் பேணும் சர்வதேசக் கருத்துக்கள் தமிழ் இலக்கியங்களின் உயிர் நாடியாய் விளங்குவதைக் காணலாம். இந்தக் கருத்துக்கள் அன்று சிந்தித்ததோடு மட்டும் நின்று கனவாய்க், கற்பனையாயப், பழங்கதை யாய்ப் போய்விடவில்லை. அன்றாடம் உலக வாழ்விலே மக்களோடு ஊறிப்போய்விட்ட வாழும் கருத்துக்களாக நிலைபேறடைந் துள்ளன. உலகிலே விதிவிலக்காக அமைந்து விட்ட ஒருசிலரைவிடப் பொதுவாக எல் லோர்க்கும் பொருந்துவதாக இக்கருத்துக்கள் அமைந்துள்ளன.

இக்கட்டுரையானது புறநானூற்றுச் செய்யுட்களை வகைமாதிரியாகக் கொண்டு சங்க இலக்கியங்களிற் பயின்றுள்ள உலகு தழுவிய கருத்துக்களை முறைப்படுத்துவதாக அமைகின்றது.

சங்க இலக்கியங்கள் ஒரு நிர்வாகத் தேவையின் காரணமாகத் தொகுத்தோன், தொகுப்பித்தோன் நிலையிற் பேணப்பட்டவை. இதிற் புறநானூற்றுப் பாடல்கள் பெரும்பாலும் வீரம், புகழ் முதலான தனி மனித ஆளுமை யையும், அரசரின் பிதிர் முறைமை யையும் நிலைநாட்டுவனவாக அமைபவை. மன்னனுக்கு முன்னால் அவனுக்கு முகமனாகப் பாடப்பட்ட பாடல்களாகவே புறநானூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளதாக இது தொடர்பான ஆய்வறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு இவை தேவைநோக்கிப் பாடப்பட்டாலும் அங்கு சங்கப் புலவர்கள் கூறிய

விழுமியக் கருத்துக்கள், மனித வாழ்க்கையை வளப்படுத்தக் கூடியவை என்று துணிந்து கூறலாம்.

விதைப்பதற்கு முன்னர் விவசாயி ஒருவன் நிலத்தை நன்கு பண்படுத்திக் கொள்வதைப் போல, மனிதன் முதுமைக்கு முன்னரே முழுமையடையக்கூடிய, பண்பட்ட உள்ளத்தை உருவாக்கக் கூடிய, கருத்துகள் பல இப்பாடல் களிலே முனைப்புப் பெற்றுத் தெரிகின்றன. சான்றோர் இலக்கியம் காட்டும் தமிழர் சமுதாயம் நாகரிக உலகின் நுழைவாயிலில் நிற்குஞ் சமுதாயமென்று ஆய்வறிஞர் குறிப்பிட்டுள் ளனர். நாகரிக உலகின் நுழைவாயிலிலேயே இத்தகைய விழுமியக் கருத்துக்களெல்லாம் தோன்றியுள்ளன என்பதனை அவதானிக்கும் போது அங்கு எத்தகைய உயரிய பண்பாடு நிலவியிருக்குமென ஊகித்துத் தெளிவடைய முடிகின்றது.

பண்பாடு என்பது மனித சமுதாய வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட, பௌதிகப் பொருட்கள், ஆர்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், கலை, கல்வி, விஞ்ஞானம் முதலிய யாவற்றினதும் தொகுதி யாக அமையுமெனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் வரையறுத்துக் கூறிக்கொள்வ துண்டு. பண்பாட்டைக் காட்சி ரீதியாகவும், கருத்து ரீதியாகவும் உணர்ந்துகொள்ளலாம். சங்க காலச் சமுதாயத்தில் இத்தகைய பண்பாடு என்பது வாயிலிருந்து வழுக்கி விழுந்தவை அல்ல. இவை சமுதாய வரலாற்று வளர்ச்சியின டியாகத் தோன்றியவை. கருத்துரீதியான, மனி தாயத்தை; மனிதநேயத்தை வற்புறுத்தும் இப் பாடல்கள் அச்சமுதாயத்திற்கூடாக வந்தவையே என் தைப் புறநானூற்றுப் பாடல்களை அடிப் படையாகக் கொண்டு விளக்கலாம்.

பண்டைத் தமிழர் சமுதாயத்தின் பரந்துபட்ட உளப்பாங்கினையும், மனிதாபிமானம், மனித நேயம் முதலான மானுடத் தன்மைகளைப் புலப்படுத்துவதான தன்மையைத் தெளிவு படுத்துவதற்குச் சான்றாகப் பலராலும் அடிக்கடி எடுத்தாளப்படும் 'கணியன் பூங்குன்ற' னின் பாடல் வரிகள் இவ் ஆய்விலே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவதன்றோ – வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் கிலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண் துளி தலை; ஆனது
கல் பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று
நீர் வழிப்படுஉம், என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே.

(புறம் 192)

என்று இப்புலவர் பாடிய இப்பாடல் முழுவதுமன்றி முதலடியே இன்று நாம் பெரிதும் பேசிக் கொள்கின்ற மனித சகோதரத்துவ உறவினை வற்புறுத்துவதாக அமைவது. இப்பாடலடியைச் சிந்திக்காதாரும் அல்லது தமிழ் மரபில் எடுத்தாண்டு பேசாதவரும், தமிழ் மரபிற் குறைவென்றே குறிப்பிடலாம். இப்பாடலின் பொருள் முழுமையையும் பார்க்கின்றபோது இதனுட் தென்படும் ஆழமான உண்மைகள் எவ்வளவு தூரம் தமிழ்நாட்டிற்கு மட்டுமன்றி முழு

உலகு தழுவியதுமாக அமைந்துள்ளன என்பது புலப்படும். 'எமக்கு எல்லாம் ஊர்; எல்லோரும் சுற்றத்தவர்; நன்மையும் தீமையும் தானே வருவனவன்றிப் பிறர்தர வருவனவல்ல; அவ்வாறே நோதலும், தீர்தலும் தாமே வருவன. சாதலும் புதிதன்று; வாழ்தலை இனிதென்று விரும்பியதும் இலம். வெறுப்படைந்து அது இன்னாதது என்று கூறிற்றிலம். மின்னலுடனே காற்று குளிர்மையான துளிகளைப் பெய்தலால் கல்லை அலைத்துப் பாயும் வளவிய பேராற்றின் நீர்வழியே மிதந்துபோகும் மிதவைபோல அருமைமிக்க உயிரானது ஊழின் வழியே படுமென்பது நல்லோத்துக்களினாலே அறிந் தோம். ஆதலின் நன்மையால் மிக்கவரைப் பாராட்டுதல் செய்யோம். சிறியோரைப் பழித்தலுஞ் செய்யோம் எனக்கூறும் இத் திண்ணிய கருத்துக்கள் மனித மனதின் ஆழத்திலே எழுவதானால் அதற்கு வேண்டிய பயிற்சியும் பக்குவமும் மிக உயர்ந்ததாக அமைய வேண்டியது இன்றியமையாதது. தமிழ் மக்கள் புறநானூற்றுக் காலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பிரத்தியேகச் சூழலிலே வாழ்ந்தபோதும் இன்றைய உலகமும் விதந்து கூறிப் பாராட்டும் விழுமிய பண்பாட்டுக் கருவூலங்களைத் தெளிவு படுத்தக் கூடிய சிந்தனைகளும் இருந்திருக்கின் றமை இதனால் புலப்படுகின்றது. கணியன் பூங்குன்றனின் இப்பாடல் உலகியல் வாழ்க் கைக்கு உகந்த சிறந்த ஒரு நன்னெறியென்று அழுத்திக் கூறலாம்.

தனியுடைமை மேலாண்மை பெற்ற பழந்தமிழ்க் காலப்பகுதியில் சுயநலமும், சுய விருப்புமான தனித்தனி மனிதனுடைய தேவை களுக்கும், கொள்கைகளுக்கும் முதன்மை யிருந்தபோதும், மக்கள் நலன் பேணவேண்டும் என்ற உணர்வு காணப்பட்டிருந் தமைக்கும் சான்றுகளைக் காணமுடிகிறது.

"உண்டால் அம்ம இவ் உலகம் – இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலமே; முனிவு இலர்
துஞ்சலும் இலர். பிறர் அஞ்சுவது அஞ்சி
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர். பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்: அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகி
தமக்கு என முயலா நோன் தான்
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே"

(புறம் (182)

என்ற இந்தச் செய்யுள் தமக்கென வாழாமற் பிறரையும் நேசிக்க வேண்டியதன் தன்மையை ஏற்படுத்த முனைவதாய் உள்ளது எனலாம். இப்பாடலின் பொருளை நோக்குவோம். இந்திரர்க்குரிய அமிர்தம் கிடைத்ததாயினும் அதனை இனிதென்று கொண்டு தாமே தனித்து உண்ணமாட்டார்கள், பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்தே உண்பர். யாரோடும் வெறுப்பு இல்லாதவர்கள் பிறர் அஞ்சத்தகும் துன்பங் களுக்குத் தாமும் அச்சப்பட்டுச் சோம்பியிருத் தலும் இல்லாதவர்கள், புகழ் கிடைப்பதாயின் தம்முடைய உயிரையும் கொடுப்பவர்கள். பழியென்றால் அதற்கீடாக உலகம் முழுமையும் கிடைக்குமாயினும் ஏற்றுக்கொள்ள மாட்டாத வர். மனக்கவலை இல்லாதவர்கள். இவ்வாறு தம்முடைய நன்மைக்காக மாத்திரம் முயற்சி செய்யாமல் பிறருடைய நன்மை கருதியும் முயற்சி செய்பவர்கள் இருப்பதனாலேயே இவ் உலகம் வாழ்கிறது என்று கூறப்படுகின்றது.

இத்தகைய கருத்துக்களை நோக்குகின்ற போது இங்கு பிறர் நலன்பேணும் பெரும்பண்பே உயிர்வாழ்வதற்கு இலக்கணமெனச் சிந்தித் திருக்கின்றமை தெரிகிறது. பிற்காலங்களிற் திருவள்ளுவ நாயனார் சர்வதேசக் கருத்துக்

களைத் தெளியத் தந்தாற்போல 'ஒப்புரவு அறிதல்' என்னும் அதிகாரத்திலே ஒப்பற்ற பெரிய விளக்கங்களைத் தந்துள்ளார். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று கூறி மானுடக் குலத்தின் சகோதரத்துவத்தைத் திருமூலர் நிலைநாட்டினார். இவற்றையெல்லாம் மறந்து நிற்பவர்களுக்கு அறிவுறுத்தும் வகையிலே வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் 'ஆன்ம நேய ஒருமைப்பாடு' என்பதை வற்புறுத்தினார். எனவே சர்வதேயக் கருத்துக்களென்பவை தமிழ் இலக்கியங்களுக்குப் புதிய விடயமல்ல. எனினும் பழந்தமிழ் இலக்கியங்களிலே காணப்படுகின்ற இத்தகைய செழுமைக் கருத்துகள் வரலாற்றின் ஆரம்ப காலத்திலேயே தோன்றி நிலைபெற் றிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. பின்னால் வரும் சர்வதேசக் கருத்துகளுக் கெல்லாம் புறநானூற்றுப் பாடல்களிலே வருகின்ற இப்பாடல்களை ஒட்டிய கருத்துக்கள் முன்மாதிரியாக அமைந்து நிற்பதாற் சிறப்புப் பெறுவன.

மனித வாழ்க்கையின் அர்த்தம், மேலே சுட்டிய அப்பாடலின் ஒவ்வொரு அடிகளிலும் இழையோடியுள்ளது. யாரோடும் வெறுப்பில்லாத மனிதனை மனிதன் மதிக்கின்ற பண்பென்பது பெரிதும் வேண்டப்படுவது. ஒருவருடன் மற்றவர் சண்டை செய்வதும். பூசல் கொள்வதும் நிறைவாகவும் சாதாரணமாகவும் காணப் பட்டிருந்த வீரயுகக் காலப்பகுதியில் யாரோடும் வெறுப்பு இல்லாத இத்தகைய கருத்தாக்கத் தினுடைய தேவையும் பெறுமதியும் மிக அதிக மானதென்றே கூறவேண்டும். இப் பாடலடிகளிற் காணப்படுவது போன்ற விழுமிய கருத்துகள் அன்றைய காலத்திற்கோ அல்லது தமிழர் சமுதாயத்துக்கு மாத்திரம் பொருந்துவ தாகவோ அமைய முடியாது. இதனுடைய செறிவு உலகப் பொதுவானது. அடிப்படையில் யாரோடும் வெறுப்பில்லாத சினேகித மனப்பான்மை ஏற்படுமானால்,அதற்கு மேலாக வேறெந்தப் பெரிய வேறு வேற்றுமைகளும் ஏற்படுவதற்கான சாத்தியம் குறைவு. நல்லவன் ஒருவன் இருப்பத னாலேயே இவ்வுலகம் இறந்து போகாமல் இன்னும் உயிர்பெற்று வாழ்ந்துகொண் டிருக்கிறது என்று புறநானூற்றுப் புலவர் கூறிய கருத்து இன்றைய சாதாரண வழக்கிலும் காணப்படுவதொன்று. நாட்டில் நல்லவன் இருப்பதால் மழை பெய்கிறது. நல்லவன் இருப்பதால் நன்மை நடக்கிறது என்பது போன்ற நம்பிக்கைகள் புறநானூற்றுக் காலத்தில் இருந்து நாகரிகம் மிக உயர்ந்துவிட்ட இன்றைய உலகிலும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

மழையை அறத்தின் வடிவமாக அல்லது குறியீடாகக் கொள்ளும் தன்மையொன்று தமிழ்மரபில் உண்டு. உலகில் நிலவும் அறவுணர் வுக்கு ஏற்ப மழை பெய்கிறது என நம்புவதும் உண்டு. எனவே பொதுநலவாதியான அறஞ் செய்யும் ஒருவனாலே மழைபெய்கிறது. இயற்கை செழிக்கிறது. உலகம் வாழ்கின்றது என்று காரண காரியத்தொடர்பு கூறப்படுகின்றது. உலகம் வாழ்வதற்கு மக்கள் நலன் பேணும் பண்பு பெரிதும் வேண்டப்படுவது. இப்பண்பு அக்காலத் திற் குறிப்பிடத்தக்களவு விளக்கியது என்ற கருத்துடன் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களும் (1978:1) தனது நூலிலே குறிப் பிட்டுச் செல்கின்றார்.

புறநானூற்றுப் பாடல்கள் பலவற்றிலும் அடிப்படையிற் சுயநல நோக்கம் கொண்டே 'கொடைச்சிறப்பு' புலவர்களால் வற்புறுத்தப்பட்டி ருக்கிறது. சங்கப்புலவர்கள் பலர் மன்னனை நெறிப்படுத்தும் சந்தர்ப்பங்களிலே மறுமையில்

வீரசுவர்க்கத்தை அடைய வேண்டுமானால் இவ்வுலக வாழ்க்கையிலே அறஞ்செய்தல் அவசியமானது என்பதனை இடித்துரைத்தனர். இவ்வாறு கூறிய சந்தர்ப்பங்கள் பலவற்றைக் காட்டலாம். ஆனாலும் மக்கள் நலன்பேணும் ஒரு பொதுமை தழுவிய நோக்கிலமைந்த கருத்துடைய பாடல்களையும் எடுத்துக் காட்டலாம்.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆசுய் அல்லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறி என
ஆங்குபட்டன்று அவன் கைவண்மையே
(புறம் 134)

என்ற 'வேள் ஆய் அண்டிரன்' எனும் புலவரின் பாடல் புறநானூற்றின் வழமையுடன் மாறுபட்டு நிற்கிறது. உலகத்திலே செல்வம் படைத்த பலரும் தம்மிடம் உள்ள பொருட் செல்வங்களைப் பரிசு வேண்டி வந்தவர்களுக்கு வழங்குவது இம்மை வாழ்வில் அறமும், இது கடந்த மறுமை வாழ்வின் இன்பத்தையும் குறிக்கோளாகக் கொண்ட தன்மையாலாகும். இவ்வாறு பொருள் கொடுத்து மறுமை இன்பம் தேடுவது ஒருவகையில் வணிக நோக்கமுடையதாகும் என்று கருதியிருக்கின்றார். பயன்நோக்கி அறம் செய்தலில் ஒரு விருப்பின்மை காணப்பட்டிருந்தமையை இப்பாடலடிகள் காட்டி நிற்கின்றன.

இத்தகைய கருத்துடன் ஒத்த இன்னொரு கருத்தையும் புறநானூற்றிலே காண முடிகின்றது.

'எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று' என மறு
மறுமை நோக்கின்றே அன்றே
பிறர், வறுமை நோக்கின்று, அவன்
– கைவண்மையே
(புறம் 141)

எனவரும் இப்பாடலடிகளிலே, இப்பிறவியிலே கொடுத்து ஏதோ ஒரு வகையில் மறுபிறவியில் வாங்கிக்கொள்ளும் அறவணிகம் கவனிக்கப் படாமல் ஒருவன் வறுமையாற்படும் துன்பத்தைக் கண்டு மனிதாபிமானத்துடன் கொடை புரியும் தன்மையும் இருந்திருக்கிறது என்பது சுட்டப் படுகிறது. புறநானூற்றுக் காலத்தைக் கடந்த பிற்காலங்களில் நமது சமயத்திலும் சரி, பிற சமயங்களிலும் சரி 'செயலிற்துறவு' என்பது பெரிதும் வற்புறுத்தப் படுகின்ற விடயம். பயன் கருதாமற் செய்யும் உதவியைத் திருக்குறளும் வற்புறுத்துகின்றது. இன்றைய உலகிலும் 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற திண்ணிய கருத் தோட்டமும் காணப் படுகின்றது. இத்தகைய சிந்தனைகளுக் கெல்லாம் முன்னதாகவே அமைந்துவிட்ட, புறநானூற்றுப் பாடல்களிலே மிகச் சிலவாகவே காணப் படுகின்ற 'வேள் அய் அண்டிரன்' போன்ற புலவர்களுடைய பாடல்களின் கருத்துக்கள் தனியே அக்காலத்துக்கு மாத்திரமின்றி அன்றும், இன்றும், என்றும் மனித வாழ்க்கைக்குத் தேவையானவை. அத்துடன் தனியொரு குழுமமான தமிழ்க் குழுமத்துக்கு மாத்திரமன்றி உலக மக்கள் அனைவருக்கும் பொருந்த வேண்டியவை.

உலக வாழ்க்கையிலே காணப்படும் உயிர்களிலே தலையாயதாக மனிதவுயிர் கருதப் படுகின்றது. இந்த மனிதன் வாழ்க்கைத் தண்டவாளத்திலே விலகாமல் ஓடுவதற்குரிய சில அடிப்படைப் பிடிப்புகள் அல்லது காந்தப் பிணைப்புகளைப் போன்ற நெறிகளைப் 'பழந்தமிழ்ப் பாடல்கள் கொண்டிருக்கின்றன. இவ் இலக்கியங்களிலே சான்றோர்களால் எடுத்துக் காட்டிச் செல்லப்பட்ட உலக வாழ்க்கைக்கான எடுகோள்கள்தான் பின்னால் வந்த

இலக்கியங்களிலும், சமய நிறுவனங்கள் ஊடாகவும் ஓங்கியொலிக்கின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பு அவை இன்றும் வாழும் இலக்கியங்களாக உள்ளமை யெனலாம். அறிவியல் முதலான பல்துறை வளர்ச்சி மிக உச்சமாக ஏற்பட்டுள்ள இன்றைய உலகிலே நிலவும் கருத்துக்களுக்கு நிகராக அல்லது இன்னும் அதற்கு மேலாகக் கூறத்தக்க அம்சங்கள் பல இங்கு காணப்படுகின்றன. அவ்வக் காலத்தின் தேவைக்கேற்பக் கருத்துக்கள் தோன்றுமெனினும் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே மனித வாழ்க்கையைச் செழுமைப்படுத்தும் இத்தகைய கருத்துக்கள் தோன்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கல்வியின் முக்கியத்துவமும் அதன் மனித வாழ்க்கை முக்கியத்துவமும் நன்றாக உணரப்பட்டிருந்த காலமாக இன்றைய நவீன காலத்தை மாத்திரம் கூறமுடியாது. இது மிகப் பழைய காலத்திலேயே நன்கு உணரப்பட்டிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. இன்று கல்வியென்பது வாழ்க்கையின் அடி அத்திவார மாகக் கொள்ளப்படுவது, கல்வி வளம் பெறாதாயின் அதன் பக்க விளைவான சீரழிவுகள் பல ஏற்படும். சங்கப்புலவர் பாண்டியன் நெடுஞ்செழியன் இவ்விடயத்தில் நன்கு தெளிவு பெற்றிருக்க வேண்டும் என்பதனை அவரது பாடலடிகள் துல்லியமாகத் தெளிவுபடுத்துகின்றன.

'உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது. கற்றல் நன்றே
பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால், தாயும் மனந்திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை திரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே
(புறம் 183)

என்று இப்புலவர் குறிப்பிடுகின்றார். இப்பாடலின் பொருளை நோக்குவோம். கல்வி வழங்கும் ஆசிரியனுக்குத் தேவையான இடத்திலே உதவுதல் வேண்டும். தேவையான அளவுக்கு மிகுதியாகவே பொருள் வழங்குதல் வேண்டும். அதிகமாகப் பொருட் செலவுசெய்து கல்வி கற்றாலும் ஆசிரியனை வழிபடுவதற்கு வெறுப்படைதல் கூடாது. இவ்வாறெல்லாம் ஆசிரியனைக் கதுவிக் கல்வி கற்க வேண்டுமென்ற நிலை இருந்ததாகவே ஔவை க.துரைச்சாமிபிள்ளை அவர்களும் (1956:1) தனது உரையிற் குறிப்பிடுகின்றார்.

இந்தப் புலவரின் பாடலிலே உலகப் பொதுவான சில யதார்த்தமான கருத்துக்கள் தென்படுகின்றன. எவ்வாறான இக்கட்டான சூழலிலும் கல்வி கற்றலின் அவசியத்தைப் பலரும் கூறுவர். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற இப்பாடலுடன் உடன்பட்ட கருத்துப் பின்னால் வந்தது. ஆனால் இதற்குப் பல காலத்துக்கு முன்பே இது உணரப்பட்டிருந்தது. இந்தப் புறநானூற்றுப் பாடலிலே கல்வியின் அவசியத்திற்காகத் தரப்படும் விளக்கம் தனியாகச் சுட்டிக் காட்டத்தக்கது.

"பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்
(புறம் 134:3–4)

என்று கூறப்படுகின்றது. உலகில் தாய் என்ற உறவுமுறை உயர்ந்த நிலையிற் தனித்துவமாக வைத்தெண்ணப்படுவதும் அவ்வுறவுக்கு வழங்கப்படும் முக்கியத்துவமும் பலரும் அறிந்ததே. அத்தகைய சிறப்புடைய தாய் கூட தன் வயிற்றுள் பிறந்த பிள்ளைகளிடத்திலே அவர்களுடைய கல்வியின் வேறுபாட்டால் மனம் திரிபுபடுவாள் எனப்படுகின்றது. தனது பிள்ளைகளுள்ளேயே கல்வியறிவாற் கூடிவிட்ட பிள்ளையை விசேடித்துக் காண்பாள். ஒரு குடியிலே பிறந்த பலருள்ளும் சபையிலே வயதால் மூத்தவர்களை முதன்மைப்படுத்தாது, கல்வியறிவுடையவனுடைய வழியையே அரசனும் பின்பற்றுவான். ஏற்றத்தாழ்வுகள் உள்ள சமூக அமைப்பிலே உயர்வு அல்லாத சமூக அந்தஸ்து நிலையிலுள்ள ஒருவன் கல்வியறிவுடையவனாயின் அவன் நிலை கருதாது உயர்குலத்திலுள்ள எவனும் கல்வியின் பொருட்டு அவனிடம் சென்று வழிபடுவான் என்றும் குறிப்பிடப்படுகின்றது. மக்களாய்ப் பிறந்தோர் எல்லோரும் கல்விகற்று மேம்பட வேண்டுமென்ற பொதுமைப்பாடு இங்கு தெரிகின்றது. மனிதனுக்குரிய தனித்துவமான பகுத்தறிவைக் கல்வி வழங்கும் என்பதாற் பிறப்பினால் வருகின்ற உயர்விலும் பார்க்க அறிவினால் வரும் பெருமைக்கு அதிமுக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. இத்தகைய நிலைப்பாடு புறநானூற்றுக் காலத்தில் மட்டுமன்றி இன்றும்கூட வெகு சிரத்தையுடன் வேண்டப்படுகின்றது.

புறநானூற்றுப் பாடல்களிலே நாடி வந்தவர்களுக்குப் பொருள் வழங்கி மகிழ்வித்தல் வேண்டுமென்ற எதிர்பார்ப்பு, பல இடங்களிலே முனைப்பாகத் தெரிகின்றது. எனினும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தக்கூடிய கருத்துகள் ஆங்காங்கே பொதிந்து கிடப்பதனைக் கண்டு கொள்ளலாம். மக்கள் எப்போதும் உயர்ந்த எண்ணமுடையவர்களாக விளங்கிவருதல் வேண்டுமென்பதில் ஆர்வம் இருந்திருக்கின்றது. பரந்து விரிந்த உள்ளப் பார்வையை விரும்பியிருக்கின்றனர். புறநானூற்றுப் புலவர்கள் மன்னனிடம் பரிசில் வேண்டி வந்தபோது அவர்களை வரவேற்காமற் பரிசு வழங்கியும் அல்லது பரிசில் நீடித்தபோதும் வெறுப்படைந்த புலவர்கள் பிறரிடத்தே அகன்ற பார்வை வேண்டும். பிறரையும் நேசிக்க வேண்டுமென்ற கருத்துத் தொனிபெறப் பாடியுள்ளனர்.

"எழுவினி நெஞ்சம்! செல்கம்; யாரோ
பருகு அன்ன வேட்கை இல்வழி
அருகிற் கண்டும் அறியார் போல
அகம் நகவாரா முகன் அழி பரிசில்
தாள் இலாளர் வேளார் அல்லர்
வருக' என வேண்டும் வரிசையோர்க்கே
பெரிதே உலகம் பேணுநர் பலரே
மீளி முன்பின் ஆளிபோல
உள்ளம் உள்ளவிந்து அடங்காது – வெள்ளென
நோவேதோன் வயின் திரங்கி
வாயான வன்கனிக்கும் உலமருவோரே

(புறம் 207)

என்ற இப்பாடலிலே அகம் மகிழ வரவேற்காத நிலையில் நாடி வந்தவனுடைய மனநிலை எவ்வாறிருக்குமென அறிய முடிகின்றது. பிற்காலங்களிலே வருகின்ற

'மோப்பக் குழையும் அனிச்சம் – முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'

என்ற வள்ளுவரின் கருத்திற்கும் இப் புறநானூற்றுக் கருத்து வழிசமைப்பதாய் உள்ளது. மனித நேயத்தையே பல இடங்களிலும்

குறிப்பிட்டுவரும் சங்கப்புலவர்கள், குறுகிய எண்ணங்களுக்கு இடங்கொடுத்தலாகாது என்பதைக் கவனத்திற் கொண்டுள்ளனர். ஒரு மனிதனுடைய செயற்பாட்டால் மற்றவன் மனதில் ஏற்படக்கூடியதான உளவியல் சார்ந்த தாக்கங் களைப் பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிந்தித்திருக்கின்றனர். நமது குறுகிய தாழ்ந்த எண்ணங்கள் பிறர் உள்ளத்திலும் எழாதபடி நம்நடத்தையினாலேயே காத்துவர வேண்டுமென்ற பொதுமையான கருத்தோட்ட மொன்று மேலே சுட்டிய பாடலடிகளிலே சற்று முனைப்பாகவே தெரிகின்றன. இங்கு சிறப்பு என்னவெனில், உலகில் மனித வாழ்க்கையை மாட்சிமையுடையதாக்கக்கூடிய கருத்துகளைப் புறநானூற்றுப் புலவர்கள் புறநிலையில் வைத்துக் கூறியதுடன் மட்டும் அமையாமல் அக நிலையிலே, உளவியல் சார்ந்த தாக்கங்களையும் உள்வாங்கிக் கூறியுள்ள தன்மை குறிப்பிடத் தக்கது.

உலகிலே பிறர்க்கு உதவியாக வாழ்வதை விரும்பிய அதேவேளை இவ்வாறு உதவுவதற் குரிய காலம் இன்னதுதான் என்பதில்லை. எப்போதும் உதவும் நோக்கமாய் இருத்தலே விரும்பப்பட்டது. இதனைத் தெளிவுபடுத்தும் வகையில் 'பொத்தியார்' என்னும் சங்கப் புலவரின் பாடல் அமைகிறது. உதவுதலால் தாம் உயிர்துறக்க நேருமாயினும் அதனையே மகிழ்வோடு செய்வர். அதுமட்டுமன்றி இத் தன்மையாளர்கள் இறந்த பின்னரும் உதவியாய் இருப்பர் என்று இச்செய்யுளில் வருகின்றது.

"பலர்க்கு நிழல் ஆகி உலகம் மீக்கூறி
தலைப் போகன்மையின் சிறு வழிமடக்கி
நிலை பெறு நடுகல் ஆகியக் கண்ணும்
இடம் கொடுத்து அளிப்ப மன்ற – உடம்பொடு
இன் உயிர் விரும்பும் கிழமைத்
தொல் நட்புடையார் தம்முழைச் செலினே"

(புறம் 223)

இம்மை வாழ்விற் பலர்க்கும் ஆதரவாக இருந்தும், இந்த உதவி நோக்கம் காரணமாகத் தனது உயிரையே வழங்கி மறுமை வாழ்க்கையை அடைந்த பின்னரும், தனது அருளிச் செயல் காரணமாகப் பிறர்க்கு உதவும் நோக்கத்திலே பின்வாங்காத தன்மை பற்றியதாக மேற்படி பாடற் குறிப்பு அமைகின்றது.

உலகம் என்றுமே நிலைத்து நிற்பது. உலகியல் வாழ்க்கை நிலையற்றது. இரண்டும் இணைந்த நிலையிலே இதனுடைய இயக்கம் சில மாறும் நியமங்களுக்கு ஏற்ப மாறிக் கொண்டேயிருக்கின்றது. இங்கு வாழும் மனிதன் தனது வாழ்க்கைக் காலத்தில் சிறப்படைந்து கொள்வதும் அல்லது தவறிப் போவதும் அவனவன் முயற்சிக்கேற்பவாகவே அமையும் என்பதில் ஒரு தெளிவு இங்கு காணப்படுகின்றது. ஒரு மனிதன் எவ்வளவு தூரம் முயற்சியுடையவனாக இருக்கிறானோ அல்லது எத்தகைய சிந்தனையைக் கொண் டிருக்கிறானோ அதன்படியே வாழ்க்கையும் வாழ்வின் பலாபலனும் என்பதனைப் புறநானூற் றுப் புலவர் ஒருவர் தெளிவாகக் கண்டு கொண்டுள்ளார்.

"யானை வேட்டுவன் யானையும் வெறுமே
குறும் பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால் உயர்ந்த வேட்டத்து உயர்ந்தி
சினோர்க்கு
செய்வினை மருங்கில் எய்தல் உண்டு"

(புறம் 214:4–7)

முயற்சி என்பது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அதன் தன்மையும், அளவும் கூட அவனவன் முயற்சிப்படியே ஏற்படுமென்று சொல்லப்படுகின்றது. முயற்சி திருவினை யாக்கும் மெய்வருந்தக் கூலிதரும்' என்பன வற்றில் தமிழர் சமுதாயத்திற்கு அதிக நம்பிக்கையுண்டு. ஆனால் பிற்காலங்களில் முயற்சியைவிட விதியை நம்புகின்ற தன் மைக்கே அதிக வலிமை வந்துவிட்டது. தமிழ் நாட்டில் வீரயுகக்காலம் மறைந்த பின்னர் வந்த அடுத்த காலங்களில் மேலாண்மை பெற்ற சமணம், பௌத்தம் முதலானவற்றின் தாக்கம் மனிதனின் உலகியல் வாழ்க்கையில் விதியை முதன்மைப்படுத்தும் கொள்கைக்கு சிறப்பிடம் வழங்கியிருக்கின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றிலே சங்க இலக்கியங்களின் அடிப்படை விஸ்தரிப்பை சிலப்பதிகாரத்தில் காணலாம். தமிழ் இலக்கியத்திற் பல புதுமைகளை ஏற்படுத்திய இளங்கோவடிகள் தனது காவிய உருவாக்கத்திலே ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதனை அடிப்படையாகக் கொண் டிருந்தார். இத்தகைய சமயம் சார்ந்த விதிபற்றிய நம்பிக்கையிலும் பார்க்க, மனித வாழ்க்கை முன்னேற்றத்திற்கு முயற்சியை அடிப்படையாகக் கொண்டு முன்னேறுவதென்பது வாழ்க்கையில் ஓர் அர்த்தத்தைத் தோற்றுவிக்கும் எனக் கருத முடிகிறது. முயற்சியுடையவனாக ஒருவன் வாழ்வதன் மூலம் உலகிற் பிறந்ததன் இலக் கினை அடைந்து கொள்ள முடியும். இத்தகைய கருத்தினை நாகரிகம் இன்றுபோற் பெரிதும் வளராத அன்றே உயர்ந்திருந்தமைக்கு இப்பாட லடிகள் சான்றாக அமைகின்றன. வீரயுகக் காலத்தில் மனித வாழ்விலே விதியைவிட முயற்சியையே பெரிதும் விரும்பியிருந்தனர்.

ஒருவனை ஒருவன் கொல்லுவதும், ஒருவனுடன் மற்றவன் போட்டியிட்டுத் தானே முந்திக்கொள்ள வேண்டுமென்று நினைத்து வாழ்ந்த காலத்தில் அக்கால சாதாரண உலக வழக்கிற்கு மாறாக நரிவெரூஉத் தலையார் என்ற புலவர் கருத்துக் கூறியுள்ளார். ஒரே நேரத்திலேயே உலக வாழ்க்கையின் பல்வேறு கோணங்களில் அமைந்துவிட்ட நிலைப் பாடுகளை இப்புலவருடைய பரந்து விரிந்த பார்வை தெளிவுபடுத்துகின்றது. ஒரு பகுதி இன்ப மடைந்தும், மறுபகுதி துன்பமடைந்தும் காணப்படுவதான உலக இயற்கை தெளிவு படுத்தப்படுகின்றது. ஒரு மனையிலே சாக் காட்டுப் பறை ஒலிக்கின்றது. இன்னொரு மனையிலே மணமுரசும் கேட்கின்றது. ஓரிடத்திலே மகளிர் தமது காதலருடன் சேர்ந்து இன்புற்றிருக்க, இன்னொருத்தி பிரிவுத்துயரால் நலிவுற்று வாடுவதுமான பல்வேறு முரண்பட்ட உலகின் இயல்பினைக் கண்டுகொள்ள முடிகின்றது.

மனித சமுதாயம் நாகரிக வாழ்க்கையை வாழத் தொடங்கிய காலம் முதல் கண்டு வந்துள்ள கனவுகளிலொன்று, ஒரே உலகம் உருவாகுதல் வேண்டும் என்பதாகும். இதனைப் புறநானூற்றிலே கணியன் பூங்குன்றனார் கண்டுள்ளார். சிற்றூர்களினூடாகப் பேருலகு ஒன்றனைக் கண்ட அற்புதக் காட்சி அவரைச் சாரும். நமது சமூகத்தில் மட்டுமல்ல கிரேக்கப் புலவரொருவரும் இதனைப் பெரிதும் விரும்பி 'மனுக்குலம் ஒன்று; மானிடம் ஒன்று' என அகன்று விரிந்த காட்சியுடன் பாடியுள்ளார். ஆனால், சமுதாய வரலாற்றை எடுத்து நோக்குகின்றபோது பெரிய முரண்பாடுகள்

இருந்து வருவதைக் காணமுடிகிறது. இத்த கைய நிலையினின்று புறநானூற்று உலகமும் மாறுபடவில்லை.

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவதன்று இவ்வுலகத்து இயற்கை"
(புறம் 74: 1–2)

எனக் கூறப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கைக் காலத்திலே தன்னை உயர்த்திக் கொள்வதும் ஏனையோரிலும் பார்க்கத் தன்னை முதன் நிலைப்படுத்திக் கொள்வதுமான கொள்கை காரணமாக இவ்வாறான ஒரு இயல்பினை அன்றிலிருந்து இன்றுவரை கண்டுகொள்ள முடிகின்றது.

புறநானூற்றுப் பாடல்களிலே நோக்குகின்ற போது ஒரு புறம் சகலவிதமான எல்லைகளையும் வரம்புகளையும் வேறுபாடுகளையும் கடந்த பொதுமையான உலகினைக் காண விழைந் துள்ள அதேநேரம், மறுபுறத்திலே குலம், சாதி, ஊர், நாடு, இனம் முதலிய உணர்வுகள் மேலாண்மை பெற்று ஒருவனோடு இன்னொரு வன் போட்டியிட்டு வாழமுனைந்த தன்மை களையும் காணமுடிகின்றது. இவ்வாறு புறநானூறு கூறக் காரணமும் உண்டு. அதாவது நயக்கத்தகும் நாகரிகம் கண்ட சமுதாயங்க ளெல்லாம், தத்தம் எல்லைகளைக் கடந்த, உலகு தழுவிய உயர்ந்த குறிக்கோள்களைக் கொண் டிருப்பதை உலக இலக்கிய வரலாற்று மட்டத்திற் காண்கிறோம். அவ்வாறான நிலையிலேயே புறநானூற்றிலே வருகின்ற உயர்ந்த குறிக் கோள்களை உணர்த்தக்கூடிய கருத்துகள் தோன்றியிருக்கிறது எனலாம்.

புறநானூற்றுப் புலவர்களின் பெரும் பான்மைக் கருத்தின்படி 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்பதாக இருந்திருக் கிறது. உயர்நிலையிலுள்ளவர்களுக்காகவே உலகம் இருக்கிறது என்ற கருத்துநிலை இருந்திருந்தாலும் அத்தகைய வரையறையைக் கடந்து உலகை உய்விக்கக்கூடிய வழிமுறை களும் கூறப்பட்டிருக்கின்றன. உலகம் என்பது குடும்பங்களின் தொகுதியாய் உள்ளது. வாழைத்தோப்பில் ஒரு மரம் நோயுற்றிருந்தால் அந்நோய் எல்லாவற்றுக்கும் பரவுவது போல ஓர் ஊரில் ஒரு குடும்பம் இயல்பான அறநெறி பிறழ்ந்தால் அத்தீயவழி எங்கும் பரவிவிடும் என்பதனைக் கருத்திற்கொண்டு நன்னெறி வற்புறுத்தப்பட்டது. மனிதன் அறத்தை முதன் மையாகக் கொண்டு அந்த நெறியில் நின்று வாழவேண்டுமென்பது கூறப்படுகின்றது.

"சிறப்புடைய மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல"
(31:1–2)

எனப் புலவரொருவர் அறிவுறுத்துகிறார்.

தமர் பிறர் அறியா அமர் மயங்கும் அழுவ மாகத் திகழ்ந்த புறநானூற்றுக் காலத்தின் உலக வாழ்க்கையிலே மனித நேயம், மனிதாபிமானம், பிற உயிர்கள் மீதான அன்புணர்வு முதலான வைகளும் வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறு சிந்திக்க வேண்டிய தேவையும் இந்தப் புலவர்களுக்கு இருந்திருக்கின்றது. போட்டி காரணமாக ஒருவனை மற்றவன் அழித்துத் தன்னை நிலை நிறுத்த முனைந்தும் முடியாமற் போனமை பற்றிய பாடல்கள் இவ் இலக்கியத் திலே காணப்படுகின்றன. உலகிலே பிறந்த ஒவ்வொருவனும் தனது வாழ்க்கைக் காலத்தி

லாவது சிறந்து வாழ வேண்டுமென விரும்பிய புலவர்கள் பலர் இருந்திருக்கின்றனர். இதனால் மனிதனின் மானுடத்தன்மைக்கு வலிமை சேர்க்க வேண்டிய ஒருநிலை இக்காலத்திலே வேண்டப்பட்டதாய் அமைய லாயிற்று. அதாவது காலத்தின் தேவையை அண்டிய நிலையிலே இத்தகைய உயரிய கருத்துகள் முன்வைக்கப்பட வேண்டியதாயிற்று எனக் கருதவும் இடமுண்டு. முல்லைக் கொடிக்குத் தேர் வழங்கிய பாரி மன்னனின் கொடையைச் சிறப்பிக்கும் தன் மையைப் பார்க்கின்றபோது தனியே மனிதநேயம் மாத்திரம் வேண்டப்பட்டதாக இல்லை. அதனை யும் கடந்த உலக உயிர்கள் மீதான நேயத்தையும் விரும்பியிருந்த நிலைப்பாடு தெரிகின்றது.

புறநானூற்றுச் செய்யுட்கள் தோன்றிய காலத்திற்கும் நமது காலத்திற்குமிடையில் மிக நீண்டகால இடைவெளி உண்டு. இந்தப் பாடல் கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட் டவை எனச் சொல்லளவில் இலகுவாகக் கூறிக் கொள்வதுமுண்டு. ஆனால் நாம் இப்போது வாழும் உலகம் வேறு. நமது மூதாதையரான புறநானூற்றுப் புலவர்கள் வாழ்ந்த உலகம் வேறு. இவ்விரண்டு வேறுபாடுகளும் தேசம் இடையிட்டவை அல்ல. காலம் இடையிட்ட வையாகும் என்பர். பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை (1955:4) அவர்கள். புறநானூற்று உலகினுட் புகுந்து அக்கவிஞர்களது சிந்தனை களை அறிவதன் மூலமும், விளங்கிக்கொள் வதன் மூலமும் அக்கருத்துகளின் சர்வதேசத் தன்மையைப் புரிந்துகொள்ள முடிகின்றது. உலகிலே வாழும் மக்கள், அரசியல், எல்லை, மொழி, நிறம், கலாசாரம், பண்பாடு முதலான காரணிகளால் பல்வேறு இனக் குழுமங்களாகப் பிரித்தறியக் கூடியவர்களாய் இருந்தாலும்; இந்தப் பாடல்களிலிருந்து இங்கு எடுத்துக் காட்டப்பட்ட கருத்துகள் வாழ்க்கைக் காலத்தில் எல்லோர்க்கும் தேவையானதொன்றெனக் கருத இடமுண்டு. இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் கூறும் கருத்து கள் இன்று நமக்குச் சிறிதும் பொருத்தமாகுமா? எனச் சிலர் நினைக்கலாம். ஆனால் பெருங் கவிஞர்கள் எல்லோரும் எந்தக் காலத்துக்கும் பொதுவான கருத்துக்களையே ஆங்காங்கு கூறிச்செல்வர். எனவே இங்கு விளக்கிய கருத்துக்கள் எக்காலத்திற்கும் தேவையான வாழும் கருத்துக்களே எனலாம்.

**அடிக்குறிப்புக்கள்**

1. கைலாசபதி,க., (1966): பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்
2. மு.கு.நூல், ப. 28..
3. வேலுப்பிள்ளை, ஆ., (1978) தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.19.
4. இளவழகனார் (1945), சங்க இலக்கிய இன்கவித் திரட்டு, ப.2.
5. வேலுப்பிள்ளை, ஆ.மு.கு.நூல் – ப. 24
6. துரைச்சாமிபிள்ளை ஔவை, சு. (1944), 'புறநானூறு காட்டும் பண்டைத் தமிழ் நாகரிகம்': புறநானூற்றுச் சொற்பொழிவுகள், ப.219.
7. கைலாசபதி.க. (1966). மு.கு.நூல்
8. வையாபுரிப்பிள்ளை. எஸ். (1955) தமிழர் பண்பாடு, ப.55

# சூழல் அறிமுகம்

திரு.ம. பிரபாகரன்
விரிவுரையாளர்,
விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்

ஆண்டுதோறும் ஜூன் 5ம் திகதி சுற்றுப்புறச் சூழல் தினமாக உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையிற் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ளமுடியும். இயற்கை அளித்த வளங்களை மக்கள் சீராகப் பயன்படுத்துவதோடு பாது காக்கவும் வேண்டும். தொழில்நுட்ப வளர்ச் சியாற் பல ஆபத்துக்கள் தோன்றியுள்ளன. அவைகளைக் குறைக்க வழிவகைகளைத் தெரிந்து எதிர்காலச் சந்ததிகட்கும் அவர்களது வளர்ச்சிக்கும் நல்ல சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இது கற்றோரின் கடமை யும் கூட.

## சூழல்

பௌதிக இரசாயன, உயிரியற் காரணி களுடன் தொடர்புபட்ட அங்கிகளின் ஒட்டு மொத்தச் செயற்பாடுகள் சூழல் எனப்படும். அங்கிகள் சஞ்சரிக்கும் பிரதேசம் சூழல் என்பர். உயிருள்ள, உயிரற்ற கூறுகளின் ஒன்றிணைந்த தொழிற்பாடு எனவும் பொருள் கொள்வர். உயிரற்ற கூறுகளாக நீர், நிலம், காற்று எனக் கொள்ளுமிடத்து உயிருள்ள கூறுகளாகத் தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள் என்பன அடங்கும். இதில் மனிதனும் சூழலில் ஒரு உயிருள்ள அங்கமாகச் சேர்க்கப்படும். விஞ்ஞானிகள் புவியை ஒரு கோளமாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் புவியின் கோள அமைப்பை 4 பிரிவுகளாக ஏற்றுக்கொண்டு கற்றல் பொருத்தமானது.

1. தரைக்கோளம் – Lithosphere
2. நீர்க்கோளம் – Hydrosphere
3. வளிக்கோளம் – Atmosphere
4. உயிர்க்கோளம் – Biosphere

### 1. தரைக்கோளம்

தரைக்கோளம் என்பது புவியின் திண்மப் பாகம். இது புவி மையத்திலிருந்து புவி மேற்பரப்பு வரை காணப்படும் பகுதியாகும். புவியோடு இரண்டு வகையாகப் பிரிக்கப்படும் அவைகளா வன: ஒன்று சமுத்திரத்துக்குரிய புவியோடு, மற்றது கண்டத்துக்குரிய புவியோடு. புவியோட் டினை உருவாக்கும் பாறைகளை 3 வகையாக இனம் காணப்பட்டுள்ளன.

அ. தீப்பாறைகள்
ஆ. அடையற் பாறைகள்
இ. உருமாறிய பாறைகள்

பாறைகள் தொடர்ந்து வானிலை அழிதற்கு உட்பட்டுக்கொண்டே இருக்கும். அதாவது பாறைகள் புறக் காரணிகளால் பாதிக்கப்பட்டுத் தொடர்ந்து இயல்பு இழந்து மண்ணாக வருகின் றது. காற்று, நீர், மண்வாழ் உயிரிகளினாற் பௌதிக இரசாயன வானிலை அழிவுகள் ஏற்படுகின்றது, தரைத்தோற்றம் காலத்துக்குக் காலம், இடத்துக்கிடம் மாறுபட்டுக் காணப்படு

வதுடன், இடவிளக்கவியல் தோற்றப்பாடும் (Topography) சீரற்றுக் காணப்படும். இஸ்ரேல் நாட்டில் தாய்ப்பாறைகளை (Parent rock) அதாவது மண் தோன்றலின் முன்கூறு பரந்தளவிற் காணப்படுகின்றது. எனவே தரைத்தோற்றம் பாலைவனக் காட்சியாக உள்ளது. இங்கு மண் உற்பத்தி (Soil genesis) மந்தமாக இருப்பதை அவதானிக்க முடியும்.

**மண்ணின் பௌதிகக்கூறுகள்**

மண் கட்டமைப்பு, மண் இழையமைப்பு (Soil structure and texture) என்பன மண்துணிக்கையுடன் சம்பந்தப்பட்டது. இத் துணிக்கைகளின் முக்கிய கூறுகளாவன களி, வண்டல், மணல் (Clay, Silt and Sand) என மூன்று வகைப்படும்.

அட்டவணை 1.1: மண் கூறுகள்

| எண்ணிக்கை | மண்வகைகள் | முண் பருமன் |
|---|---|---|
| 1 | களி மண் – Clay | <0.002 மி.மீ. |
| 2 | வண்டல் மண்– Silt | 0.002 -0.02மி.மீ. |
| 3 | சிறு மணல் – Fine Sand | 0.02- 0.2 மி.மீ. |
| | பெரு மணல்– Coarse Sand | 0.2- 2.0 மி.மீ. |
| | பெருமணல்– gravel | >2.0 மி.மீ. |

**மண்ணின் இரசாயனக் கூறுகள்**

மண்ணின்இரசாயனக் கூறுகள் 3 பிரிவினுள் அடக்கலாம். அவைகளாவன மின்னேற்றம், அயன் மாற்றீடு, தாங்குதல்.

1. மண்ணின் மேற்பரப்பில் மின்னேற்றம் Surface Charge

   களிமண் துணிக்கைகள் பொதுவாக எதிர்மின்னேற்றம் கொண்டிருக்கும். இதனால் கூழ்வடிவாகவுள்ள இரும்பு, அலுமினியம், மங்கனீசு, நைற்றேற்று, அயன் என்பன நேர் மின்னேற்றம் கொண்டிருக்கும். இருந்தும் மண் சேதனப்பொருட்கள் வேறுபட்ட மின்னேற்றங்களைக் காட்டவல்லது.

2. நேர் எதிர் அயன் மாற்றீடு – Cation and anion exchange

   மண்துணிக்கைகள் நேர் மின்னேற்றத்தை உறிஞ்சி வேறு நேர் மின்னேற்றத்தை மாற்றீடு செய்யின் இத்தோற்றப்பாடு நேர் எதிர் அயன் மாற்றீடு எனப்படும். இவ்வாறு களிமண்ணில் அயன் மாற்றீடு நடைபெறுவதனாற் கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம், அமோனியம் மாற்றீடு நடைபெற்றுத் தாவரத்திற்கு தேவையான போசனைகள் கிடைக்க வழிசெய்யப்படுகின்றது.

3. தாங்குதல்– Buffering

   மண்ணின் pH மாற்றமடையாது தடுப்பது தாங்குதல் எனப்படும். மண்ணில் தாங்கும் தன்மையை உருவாக்குவது களியும் உக்கலுமாகும். எனவே மண்ணின் களித்தன்மையைப் பொறுத்து அதன் தாங்கும் தன்மை காணப்படும்.

**உ. நீர்க்கோளம்**

புவியின் மேற்பரப்பு 75% வரை நீரால் மூடப்பட்டுள்ளது. கடல்நீர், மண்ணீர், வளிநீர், மண் மேற்பரப்பு நீர், வடக்குத் தெற்குத் துருவ உறைபனி என்பன நீரின் வேறுபட்ட மூலமாகும். இதில் 77.23% வரை உறைபனியாகவும் 22.77% திரவ நிலையிலும் உண்டு. மேலும் மொத்தத்தில் 98% உப்பு நீராகவும் 2% இலும் குறைவாக நன்னீராகவும் காணப்படுவது நீர் பற்றிய அறிவாற்றல் அவசியம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இரண்டு தரவுகளையும் ஆராயுமிடத்து உலகளாவிய ரீதியில் எமக்குக்

கிடைக்கக்கூடிய நீரளவு 1 % இலும் குறைவாக இருப்பதைக் கண்டுகொள்ள முடியும்.

**நீர்ப்பாசன முறைகள்**

1. கையால் நீரிடல் தெளித்தல்
2. மேற்பரப்பு நீர்ப்பாசனம்
3. உப மேற்பரப்பு
4. காற்றில் நீர்ப்பாசனம்

| | |
|---|---|
| (a)Flooding | a) Micro irrigation |
| (b) Check basin | - Drip irrigation |
| (c) Basin method | - Microjet irrigation |
| (d)BorderStrip Method | - Micro Sprinkler irrigation |
| (e) Furrow method | (b) Sprinkler irringation |
| (f) Surge irrigation Method | (c) Bubbler irrigation |
| (g) Cable irrigation method | |

**மண்ணரிப்பு**

ஓடும் நீர், மழை நீர், வளி ஆகிய காரணிகளால் மண் துணிக்கைகள் நகர்த்தப்பட்டு இடம் பெயரல் மண்ணரிப்பு எனப்படும். இங்கு தரைக்கோளத்தின் அமைப்பு, நீர்க்கோளத்தின் அமைப்பு என்பன பிரதான பகுதிகளாகும்.

**மண்ணரிப்பு வகைகள்**

மண்ணரிப்பு வகைகள் 5 வகைப்படும்

1. Rain drop erosion
2. Sheet erosion
3. Drill erosion
4. Galley erosion
5. Wind erosion

காற்று வீசும் திசை, தன்மை, செறிவு, வேகம் என்பன மண் அகற்றலை நிர்ணயிக்கும். மணல் சார்ந்த இடங்களில் நேரடியானகாற்றின் தாக்கம் இருப்பதனால் மண் குவியல்கள் தோன்றியிருப்பதை அவதானிக்கமுடியும்.

**3. வளிக்கோளம்**

வளிமண்டலம் பூமியைச் சூழவுள்ள வாயுக்களாலான ஒரு தொகுதியாகும். மூன்று படைகள் சேர்ந்து வளிக்கோளத்தை உருவாக்கியுள்ளன. அவையாவன: மாறல் மண்டலம் (Troposphere), படைமண்டலம் (Stratosphere), வெப்பமண் டலம்(Thermosphere). வளியானது பூமியின் மேற்பரப்பிலிருந்து கிட்டத்தட்ட 1000கி.மீ. உயரம்வரை செங்குத்தாகக் காணப் படுகின்றது. எனவே இதற்குமேல் வளி கிடையாது.

**வளி அமைப்பு**

வளியானது ஒட்சிசன், நைதரசன், காபனீரொட்சைட்டு என்பவற்றுடன், குறைந்தளவு ஆகன், கீலியம், நியோன்போன்ற இலட்சிய வாயுக்களையும், நீராவியையும்கொண்டிருக்கும். வளி ஓர் உயிரற்ற கூறாக இருப்பினும் மீள் தூய்மைப் படுத்தக் கூடியது. வளியானது 78% $N_2$, 20% 02, 0.004% $CH_2$ உம் கொண்டுள்ளது. தற்பொழுது $CO_2$ இன் செறிவு 0.003% (1950இல்) 0.004%ஆக (2000 இல்) உயர்ந்துள்ளது கண்டுகொள்ளப்பட்டது. அதாவது 1750 இல் $CO_2$ இன் செறிவு 280 ppm ஆகவும் 1990 இல் 345 ppm ஆகவும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. புவி மேற்பரப்பிலிருந்து செங்குத்தாக அவதானிப்பின் வளியின் அடர்த்தி குறைந்து கொண்டே போகின்றது. அத்துடன் வெப்ப நிலையும் குறைந்து கொண்டே செல்கின்றது. காற்றில் உள்ள வெப்பசக்தி சூரியனிலிருந்தே கிடைக்கின்றது.

**சூரியசக்தி**

சூரியன் ஒளி, வெப்பம் என இரண்டு சக்திமுதல் கொண்டது. சூரியனிலிருந்து பூமியை நோக்கிவரும் சக்தியில் 30% வரை பூமிக்கு வரமுன் தெறிக்கின்றது. காற்றிலுள்ள

நீர், நீராவி, இலட்சிய வாயுக்கள், தூசி, பிறபொருட்கள் என்பன 17% வெப்பசக்தியைச் சூரியனிலிருந்து பெற்றுவிடும். மேலும் 3% வெப்பசக்தியை ஓசோன்படையிலுள்ள ஊதாக்கதிர்கள் உறிஞ்சிவிடும். எனவே 50% ஆனவெப்பசக்தி மட்டும் பூமியை வந்தடையும். இவ் 50% ஆன சக்தியில் 70% வரை நீரினாலும் 20% வரை நிலப்பரப்பினாலும் மிகுதி 10% வரை தாவர ஒளித்தொகுப்பிற்கும் கிடைக்கின்றது. உயிரற்ற சூழல் தொகுதியினாற் பெருமளவு சக்தி (90%) உறிஞ்சப்படுவதுடன், இச் சக்தியின் பயன்பாட்டால் கடல் நீர் அடிப்பு, கடல்நீர் அரிப்பு, காற்று வீசல், காற்றால் மண்ணரிப்பு, ஆவியாதல், ஆவியுயிர்ப்பு என்பனவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

**உயிர்ப் புவி இரசாயன வட்டங்கள்**

உயிர்களின் முதன்மை அத்தியாவசிய தேவையாக அமைவது வளி ஆகும். இது $O_2$ $CO_2$ இரண்டையும் தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் வழங்குவதோடு தேவைகளோடு சேமிக்கவும் வழிவகுக்கும். நீர், நிலம், காற்று, உயிரினங்கள் என்ற ஊடகங்களுக்கூடாகப் பரவி,செறிந்து, சேமித்து, வெளியேற்றி வளியின் சமநிலையைப் பேணமுடியும். சில மூலகங்கள் உயிரினங்களில் தேவையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட காலம் தங்குவதுண்டு. இதனைத் தாங்குகாலம் எனக் குறிப்பிடுவர். இம் மூலகங்கள் தொடர்ந்து மீள் பாவனைக்கு உட்படுத்தப்படுவதனால் இதனை மூலக வட்டங்கள் எனலாம். அவைகளாவன:

1. காபன் வட்டம்
2. நைதரசன் வட்டம்
3. ஒட்சிசன் வட்டம்
4. பொசுபரசு வட்டம்

**உயிர்க்கோளம்**

உயிர்க்கோளம் என்பது உயிர்கள் வாழக் கூடிய தொகுதியை அடக்கிய கோளம் எனப் பொருள்படும். இதனால் இது தரைக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம் என்பவற்றுடன் தொடர்புபட்டதோடு 15 கி.மீ வரை பரந்துள்ளது. இதில் 5கி.மீ தரைக்கோளத்தினுள்ளும் 10 கி.மீவரை வளிக்கோளத்தினுள்ளும் வியாபித்துள்ளது. உயிர் வாழ்க்கைக்கும், நிலைத்தற்கும், வளர்ச்சிக்கும், விருத்திக்கும், பரம்பலுக்கும் சக்தி அத்தியாவசியமாதலால் இவை அனைத்தும் பின்னிப்பிணைந்து ஒன்றுக் கொன்று ஆதாரமளிக்கின்றது. உயிரினத் தொகுதிகள் பல புறக்காரணிகளால் இடம்பெயர்ந்தும், பரம்பியும், காலநிலை, சூழல் தாக்கங்களுக்கு ஈடுசெய்து தங்கிப் பிழைக் கின்றது. உயிர்களின் உறைவிடமும் நிறை விடமும் காடுகள் என்பதனால் அதனை அறிந்து கொள்ளல் அவசியம்.

**காடுகள்**

உயிர்க்கோளத்திற் காடுகளின் பங்களிப்பு அதி முக்கியம் வாய்ந்தது. காடுகள் மழைவீழ்ச்சியுடன் தொடர்புபட்டு அமைந்து, விலங்குத் தொகுதியை இணைத்து, ஈடுசெய்து வாழ வழிவகுத்துள்ளது. காடுகள் புவியின் மேற்பரப்பிலுள்ள வெப்பநிலை, மழைவீழ்ச்சி, ஒளிச் செறிவு என்பவற்றின் அடிப்படையில் அமைந்த பொழுதிலும் இதனை ஒத்து உயிரினத் தொகுதிகளும் பிரிக்கப்பட்டுள்ளன.

அயன மண்டலக் காடுகள், அயனமண்டலப் பருவக்காற்றுக்காடுகள், சவன்னாக்கள், அயனமண்டல பாலை வனங்கள், இடை வெப்ப வலையப் பாலை வனங்கள், இடைவெப்ப வலையப் புல்வெளிகள், கூம்புக் காடுகள், இடைவெப்ப வலைய இலையுதிர் காடுகள்,

பச்சையான காடுகள் எனப் பாகுபடுத்தப் பட்டுள்ளன.

**உயிரினக் கூறுகள்**

உயிரினக் கூறுகள் என்பது தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள் அடங்கிய தொகுகியாகும்.தாவரங்கள் முதல் உற்பத்தி யாக்கிகள் எனப்படும் தற்போசணிகள் இவைகள் சூரியசக்கியைப் பெற்று ஒளித் தொகுப்புச் செய்கின்றன. ஒளிச்சக்தியானது இரசாயன சக்தியாக, போசனைக் கூறுகளிற் சேமிக்கப்படுகின்றது. எனவே போசனைகளை உற்பத்தி செய்யும் தாவரங்களை முதலாம் போசணை மட்டத்துக்குரியவை எனப்படும். இங்கு தொகுக்கப்பட்ட உணவை உண்ணும் தாவர போசணிகள் முதலாம்மட்ட நுகரிகள் எனப்படும். முதலாம்மட்ட நுகரிகளை உண் பவை இரண்டாம் படி நுகரிகள் எனவும், இரண் டாம் படி நுகரிகளை உண்பவை மூன்றாம்படி நுகரிகள் எனவும் வகைப்படுத்தப்படும். உதாரணமாக:

1. முதலாம் மட்ட நுகரிகள் – பூச்சிகள்
2. இரண்டாம் படி நுகரிகள் – தவளை, பல்லி
3. மூன்றாம் படி நுகரிகள் – பூனை, நாய்

பக்ரீரியா, பங்கசு, வைரசு போன்ற நுண்ணு யிர் களைப் பிரிகையாக்கிகள் என்பர். இவைகள் சிக்கலான தொடர் மூலக்கூறுகளைப் பிரிகை யடையச் செய்து சிக்கலற்ற எளிய மூலக் கூறுகளாக மாற்றுகின்றது. நுண்ணுயிர்கள், இறக்கும் தாவரங்கள் விலங்குகளை உக்க வைக்கின்றன.

**இயற்கை வளங்கள்**

வளங்கள் எனப்படுவது பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமாகவுள்ள பதார்த்தங்கள். இப் பதார்த்தங்கள் பொதுவாக இரசாயன சக்தியை உள்ளடக்கியுள்ளது. இவை உயிருள்ள வையாக அல்லது உயிரற்றவையாகக் காணப் படும் உயிருள்ள வளங்கள் வற்றக் கூடியவை. உயிரற்ற வளங்கள் வற்றாதவைகளாகும். மேலும் இதனை இரு வகையாகக் கொள்ளலாம், ஒன்று புதுப்பிக்கக்கூடிய வளங்கள், மற்றது புதுப்பிக்க முடியாத வளங்கள். புதுப்பிக்க முடியாத வளங்களை மீள் சுழற்சிக்கு உட்படுத் தக்கூடிய வழிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். வற்றும் வளங்களான நீர், நிலம், காற்று, மண் என்பவற்றை புதுப்பிக்கக் கூடிய வளங்கள் புதுப்பிக்கமுடியாத வளங்கள் எனப் பிரிக்கலாம். இதில் மண் மட்டும் புதுப்பிக்க முடியாத வளமாக கருதப்படும். புதுப்பிக்க முடியாத பொருட்களை மேலும் இரு கூறுக ளாகக் கொள்ள முடியும். அதாவது மண்ணி லிருந்து கிடைக்கும் உலோகங்கள் போன்ற வற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடியவை என்றும், எரிபொருள்கள் போன்றவற்றை மீள் சுழற்சிக்கு உட்படாதவை என்றும் கொள்ள லாம். பிரதான வளங்கள் என நீர்வளம், நிலவளம்,சக்திவளம் எனக் கொள்ளமுடியும்.

**நிலவளம்**

புவியின் தரைப்பகுதி 27 % அளவைக் கொண்டுள்ளது. நிலவளம் என்பது நிலத்தி லிருந்து மனிதனுக்குக் கிடைக்கும் மொத்தப் பயன்பாட்டினைக் குறிக்கும். காடுகள், புல்நிலம், பாலை நிலம், ஈர நிலம் என உலகளாவிய

ரீதியில் வியாபித்துள்ளது. இது 300 மில்லியன் கெக்ட்டர் வரை உண்டு. இவை தவிர எல்லை நிலங்கள் மீன் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

**நீர்வளம்**

நீர்வளம் இரண்டு பிரதான வளங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன: நன்னீர் வளம், கடல் நீர் வளம், உலகளாவிய ரீதியில் 1% வரையுள்ள நன்னீர் உயிர்களின்முக்கிய கூறாக அமைவதுடன், மனிதனுக்குப் பாசனநீராகவும் பயன்கொடுக்கின்றது. கடல் நீர் வளம் என்பது குறிப்பாக மீன்வளத்தினைக் குறிக்கின்றது. மீன்வளம் என்பது ஒரு இயற்கையான கொடை. மீன்வளத்தினைப் பெற்ற நாடுகள் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சக்திவளம்**

அனைத்து இயக்கத்திற்கும் சக்தி அவசியம். சக்தி வளங்களில் இயற்கையாக அமைந்துள்ளது. இவை நிலைப்பண்பு சக்தியாகவோ, இயக்க சக்தியாகவோ உணர முடியும். சக்தி வளங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

| | |
|---|---|
| பெற்றோலியம் | நிலக்கரி வாயு |
| நீர்வலு | இயற்கை வாயு |
| காற்றுச் சக்தி | உயிர்த்திணிவு சக்தி |
| ஆலைச்சக்தி | கதிரியக்கப் பொருட்கள் |
| சமுத்திர வெப்பசக்தி | பிற எரி பொருட்கள் |

**மனித சக்திவளம்**

இயற்கை வளங்களைச் சீராகப் பயன் படுத்தி கிராமமாக இருந்த இடங்களை நகராக்கும் பணிகளில் மனிதனின் சக்திவளப் பயன்பாடு காணப்படுகின்றது. விவசாய புரட்சியிலிருந்து (1750 இல்) கைத்தொழிற் புரட்சிக்கு (1850 வந்த மனிதவர்க்கம் தொழில்நுட்பப் புரட்சிக்கு (1900) வருவதற்குக் குறைந்த காலமே எடுத்தது. வளர்ச்சியடைந்த தொழில்நுட்பம் மேலும் தூயதொழில் நுட்பமாக (Clean technology 1950) தோற்றம் பெற்றது. தற்பொழுது இது தொழில்நுட்பச் சந்ததி வளர்ச்சியாக வந்துள்ளது. இவ் வளர்ச்சியோடு 1950 களிற் சூழல் தாக்கங்களை இனம் காணத் தலைப்பட்டது. இச்சூழல் தாக்கங்கள் சூழற் காரணிகளில் மாற்றங்களைத் தோற்றுவித்து இயற்கைச் சீற்றங்களை உருவாக்கியது. அதாவது சூழல் தாக்கங்கள் மனித சக்தி வளத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்து வருகின்றது. இவ் அச்சுறுத்தல் உயர்ந்து கொண்டு செல்வதனால் பிறசந்ததிகள் சூழலாற் கடுமையாகப் பாதிக்கப்படலாம் என்று உணர்ந்த மனிதன் சூழல் அறிவியல் அத்தியாவசியம் எனக் கண்டுகொண்டான். இன்று உலகளாவிய ரீதியில் எல்லா நாடுகளிலும் சூழல் பற்றிய ஆய்வுகள் முதன்மைப்படுத்தப் பட்டுள்ளமை வெளிப்படையானதே.

# இலங்கையிற் பெறுமதி கூட்டப்பட்ட வரி
# (Value Added Tax in Sri Lanka)

**Mr.T.Pratheepan**
Assistant Lecturer, Department of Commerce,
University of Jaffna.

**அறிமுகம்**

பெறுமதி கூட்டப்பட்ட வரியே இலங்கையில் தற்போதுள்ள பிரதான மறைமுக வரியாகும். 2002ம் ஆண்டு 14ம் இலக்கப் பெறுமதி கூட்டப்பட்ட வரிச்சட்டம் மூலமாகப் பொருட்களின் பெறுமதி கூட்டப்பட்ட வரியானது ஆவணி 1ம் திகதி 2002ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதே திகதியில்தான் பிரதான மறைமுக வரிகளான பொருட்கள், சேவைகள் வரிகள் மற்றும் தேசிய பாதுகாப்பு வசூல் என்பன இரத்துச் செய்யப் பட்டன.

இலங்கையில் பொருட்களின் பெறுமதியுடன் சேர்க்கப்பட்ட வரியின் முக்கிய நிபந்தனைகள்

(A) நிதிச் சேவைகள் அல்லாத பெறுமதியுடன் சேர்க்கப்பட்டவரி தேவையைப் பூர்த்தி செய்தல்.

(B) நிதிச் சேவைகள் தொடர்பான பெறுமதி யுடன் சேர்க்கப்பட்டவரி.

A. நிதிச் சேவைகள் தவிர்ந்த பெறுமதியுடன் சேர்க்கப்பட்டவரி விநியோகங்கள் சம்பந்த மானவை.

- ❖ பொருட்களின் பெறுமதியுடன் சேர்க்கப் பட்ட வரியின் கடன் பொறுப்பு.
- ❖ இந்தச் சட்டத்தில் உட்படுத்தப்பட்ட தேவைகளின்படி விநியோகிக்கும் பின்வரும் சமயத்தில் இந்தவரிமுறை மாற்றப்படலாம்.
- ➢ பதிவுசெய்யப்பட்ட ஒருவரால் வரிவிதிக்கக் கூடிய ஒவ்வொரு சேவைகளை விநியோ கிக்கும் பொழுது இலங்கையில் ஒருவரில் விதிக்கக்கூடிய செயற் பாட்டின் போதும்
- ➢ எந்த நபராலும் பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் போதும்

**பொருட்கள் விநியோகத்தில் விதிக்கும் வரி அல்லது வரி விதிக்கக்கூடிய செயற்பாட்டின் சேவைகள்**

"வரி விதிக்கக்கூடிய செயற்பாடு" எனக் கருதப்படுவது

(a) வியாபாரத்தில் ஈடுபடுத்தும் எந்த விதமான செயற்பாடுகள் அல்லது வியாபாரத் தொழில் அல்லது பயிற்றப்பட்ட அல்லது வியாபாரத் தொழில் அல்லது பயிற்றப்பட்ட தொழில் அல்லது எல்லாவிதமான தீரச்செயற்பாடு, அல்லது வியாபாரத்தன் மையில் உள்ள ஈடுபாடு.

(b) அங்கத்தவர்களுக்கான தொழில் ரீதியான சௌகரியங்கள் அல்லது ஒரு கழகம், சங்கம் ஒருகுழு அமைப்பு அங்கத்தவர்களின் சந்தாக் கொடுப்பனவு பற்றிய ஆலோசனை.

(C) (a) அல்லது (b)இல் குறிப்பிடப்பட்ட தொழில் சௌகரியங்கள் சம்பந்தமான எந்த விதமான தொடர்புகளையும் ஆரம்பித்தல் அல்லது நிறுத்துதல்.

(d) வாடகைக்கு விடுதல், அசைவுள்ள சொத் துக்கள் குத்தகைக்கு விடுதல், அசைவற்ற

சொத்துக்களின் வாடகை அல்லது குத்தகை சம்பந்தமான நிர்வாகச் செயற்பாடு.

(e) சொத்துக்களின் புரிந்துகொள்ள முடியாத சுரண்டல்த் தன்மை, பிரத்தியேக உரிமை, தனி உரிமை அல்லது மற்றைய இதே ஒத்த சொத்துக்கள் வரிவிதிக்கக்கூடிய விநியோகம் (தேவையைப் பூர்த்தி செய்தல்) என்பது இலங்கையிற் தயாரிக்கப்பட்ட பொருட்களின் எந்தவிதமான விநியோக அல்லது சேவைகள்வரி விதிக்கக்கூடியனவும் வரிவிதிவிலக்கப்பட்ட விநியோகம் தவிர்ந்த ஏனைய வற்றிற்குப் பூச்சிய வீத விநியோகத்தையும் உள்ளடக்கியது.

**பொருட்கள் விநியோகம் என்பது**

பொருட்கள் விநியோகம் என்பது பொருட்களின் உரிமத்தைப் பிரத்தியேகமாக இன்னொரு நபருக்கு அந்தப் பொருட்களின் உரிமத்துவத்தை அளித்தல் அல்லது எந்த விதமான எழுத்திலுமுள்ள சட்ட அதிகாரத்தின் கீழ் பின்வருவனவும் அடங்கும்.

- பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை
- வாடகைக் கொள்வனவு உடன்பாட்டின் பிரகாரம் பொருட்களின் மாற்றம்
- கடனுக்குத் திருப்திகரமாக பொருட்களின் விற்பனையுடன் ஒரு வரி விதிக்கத்தக்க செயற்பாட்டிலிருந்துவரி விதிக்கத்தகாத செயற்பாட்டிற்கு மாற்றுதல்.

**சேவைகள் விநியோகம் என்பது**

சேவைகள் விநியோகம் என்பது பொருட்களின் விநியோகம் அல்லாத எந்த விதமான விநியோகம் ஆனால் வரி விதிக்கத்தக்க செயற்பாட்டின் மூலம் ஏற்பட்ட நட்டத்திற்கு ஒரு உத்தரவாத எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்படுவது.

**வரிவிதிக்கத்தக்க காலம் என்பது:**

(a)• ஒருமாத காலம்

- எந்த ஒரு நபருக்கு வரி விதிக்கத்தக்க விநியோகங்கள் 12 மாதங்களுக்கு முற்பட்ட காலத்திற்கு ரூபா 30 கோடிக்கு மேற்பட்டது அல்லது
- ஒரு நபரின் வரி விதிக்கத்தக்க பெறுமதி தொடர்ந்து வருகின்ற 12 மாதங்களுக்கு ரூபா 30 கோடிக்கு மேற்படாத உத்தேச மதிப்பீடு.

ஒரு மூன்று மாதங்கள் காலப்பகுதி பின்வரும் முறையில் ஒவ்வொரு வருடமும் ஆரம்பிக்கப் படும்.

1ஆம் திகதி தை

1ஆம் திகதி சித்திரை

1ஆம் திகதி ஆடி

1ஆம் திகதி ஐப்பசி

மூன்றுமாத காலப்பகுதி பின்வரும் நபர்களுக்குப் பொருத்தமானதாகும். மேலே (a) இல் குறிப்பிடப்படாத ஏனைய நபர்கள் பூச்சிய வீதப்படி விநியோகம் செய்யும் ஒரு நபரும் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப் பட்ட காலாண்டு பகுதிக்கான விநியோகத்தை அளிக்க ஒப்புதல் தருபவரும்.

**விநியோகம் செய்யப்படும் நேரம்**

(1) பொருட்களின் விநியோக நேரம்

பொருட்கள் விநியோகிக்கும் பொழுது விநியோகம் செய்பவரால் பொருட்களுக்குரிய விலைப்பட்டியல் கொடுக்கும் பொழுது

அல்லது

விநியோகஸ்தரால் பொருட்களுக்குரிய கொடுப்பனவைப் பெறும் பொழுது

அல்லது

விநியோகஸ்தருக்கு பொருட்களுக்குரிய கொடுப்பனவு கொடுக்கப்பட வேண்டிய நிலையில்

அல்லது

பொருட்களின் ஒப்படைப்பு நடைபெற்றபின் இவற்றில் எந்த நடைமுறை முதலில் இடம் பெறுகின்றதோ அதன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்ட பொருட்களை ஒப்படைத்த பத்து நாட்களுக்குள் அதற்குரிய விலைப் பட்டியல் கொடுக்கப்பட்ருந்தால், அந்தப் பொருட் கள் விநியோகிக்கப்பட்ட நேரம் விலைப்பட்டியல் கொடுக்கப்பட்ட நேரத்திற்குச் சமமாகும்.

**சேவைகளின் விநியோக நேரம் :**

சேவைகள் நிறைவேற்றப்பட்ட பொழுது

அல்லது

சேவைகளுக்கான கொடுப்பனவு அல்லது எதிர் காலத்தில் சேவைகள் வரும் பொழுது

அல்லது

சம்பந்தப்பட்ட சேவைகளுக்கான விலைப் பட்டியல் கொடுக்கப்பட்ட பின் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி விநியோகம் நடைபெற்றபின் (வாடகைக் கொள்வனவு தவிர்ந்த ஒப்பந்தம்) அவ்வப்பொழுது இடம் பெறுகின்ற கொடுப்பனவுகள், கொடுப்பனவு வர வேண்டிய பொழுது அல்லது கொடுப்பனவு பெற்றபொழுது எது முதலில் நடைபெறு கின்றதோ அதன் அடிப்படையில் வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் பொருட்களின் விநியோகம் இடம்பெற்றவேளை, ஒப்பந்தம் மேற்கொண்ட பொழுது ஆணையாளர் நாயகம் அவர்கள் எந்த ஒரு பதிவு செய்யப்பட்ட நபருக்கு வரிக் கொடுப்பனவு செய்யப்பட்ட அடிப்படையில் கணக்கு வைக்கும்படி பணித்திருப்பின் அந்த நபரால் வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் நேரமானது அவை சம்பந்தமான கொடுப்பனவு பெற்ற நேரமாகக் கணிக்கப்படும்.

B. பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் ´நிதிச் சேவைகள்.

பெறுமதி சேர்க்கப்பட்டவரியின் கடன் பொறுப்பு

இது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் புதிய அத்தியாயம் 111 மூலம் சட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதன் பிரகாரம் தை மாதம் 1ம் திகதி 2003 இல் அமுலாக்கப்பட்டது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் பொறுப்பான நபர்கள்

வரிக்குப் பொறுப்பாகவரும் நபருக்குப் பின்வரும் நிபந்தனைகளை விதிக்க வேண்டும்.

1. இது ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கும் ஏற்புடையதாகும், இதன் பிரகாரம் குறிப்பிடப் பட்ட நிறுவனம் என்றால் :

   (a) **1988ம் ஆண்டு வங்கிச்சட்டம் இல.30 இன் கீழ் உத்தரவு பெற்ற ஒரு வர்த்தக வங்கி**

   (b) **1988ம் ஆண்டு நிதி வியாபார ஸ்தாபனச் சட்டம் (கொம்பனி) இல.78 இன் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிதி வியாபார ஸ்தாபனம்**

   (c) **1988ம் ஆண்டின் வங்கிச்சட்டம் இல.30 இன் பிரகாரம் உத்தரவு பெற்ற விசேட சிறப்புடைய ஒரு வங்கி எப்படி இருப்பினும் 2003 ஆடி 1ம் திகதிக்குப்பின் இது எந்த**

தனி நபருக்குமாக நீடிக்கப்பட்டது. அதன் பிரகாரம் எவராவது ஆடி 1ம் திகதி 2003க்குப் பின் இந்தத் தொழிலை நிதிச்சேவைகளுடன் கொடுப்பவர்கள் இந்த அத்தியாயத்தின் கீழ் Vat க்குப் பொறுப்பாவார்கள்.

2. நிதிச் சேவைகள் கொடுப்பனவுப் பெறுமதி ஒரு காலாண்டுக்கு ரூபா 500000க்கும் ஒரு வருடத்திற்கு ரூபா 18,00,000ம் மேற்படலாம்.

## Vatக்கான நிதிச்சேவைகள் கடமைப்பாடு

பின்வரும் நிதிச்சேவைகள் கொடுப்பனவாகக் கருதப்படும்.

(a) எந்தவித நடைமுறை (Current ) அல்லது சேமிப்பு வைப்புக் கணக்கைக் கையாளுதல் அல்லது இயக்குதல்.

(b) நாணயப் பரிமாற்றம் செய்தல்.

(c) முக்கிய கடமை, கொடுப்பனவு, வசூல் அல்லது எந்த நாணயத்தின் (Note) உரிமையை மாற்றுதல் கொடுப்பனவுக்கு, காசோலை, வரவு வைக்கும் கடிதம் (Credit letter) உத்தரவு போடுதல்.

(d) முக்கியமாக, ஒதுக்கீடு செய்தல் உரிமத்து வத்தை மாற்றுதல், கவனயீர்ப்பு, எந்தவித நேர்மையான பரப்பு உரிமையை அல்லது பங்குதாரப் பாதுகாப்பை மாற்றுதல்.

(e) விற்கப்படாத வியாபாரப் பங்குகளை எடுத்துக் கொள்ளல், நேர்மையான பாது காப்பு முக்கியத்துவத்தைக் கடன் பாது காப்பை அல்லது பங்குதாரப் பாது காப்பை எடுத்துக் கொள்ளல்.

(f) எந்த விதமான கடன், முற்பணம் இருப்புப் பணத்திற்கும் சட்ட உடன்பாடு கொடுத்தல்.

(g) ஆயுள் காப்புறுதி "AGRAGAR" காப்புறுதி மற்றும் பயிர், வளர்ப்புக் கால்நடைக் காப்புறுதி

## Vat வீதங்கள்

01.01.2004 – 31.12.2005 காலப்பகுதி 15%

01.01.2006 இல் இருந்து 20% (நிதிச்சேவை களுக்கு மட்டும்)

## முடிவுரை

இலங்கையில் இப்பெறுமதி கூட்டப்பட்ட வரியினால் உற்பத்தியாளர், விற்பனையாளர், நுகர்வோர் போன்றோர் பல்வேறு நன்மைகளை அனுபவித்து வருகிறார்கள். கூட்டப்பட்ட பெறுமதிக்கு இவ்வரி விதிக்கப்படுவதால் மொத்த விற்பனை வரியில் உள்ள வரி குவிப்புத் தன்மை தவிர்க்கப் படுகின்றமை, ஒரு பொருள் மீண்டும் மீண்டும் வரிக்குட்படுவது தவிர்க்கப் படுவதுடன் இரட்டிப்பு வரி நீக்கப்பட்டமை, இவ்வரியில் வரி புலப்படு தன்மை காணப் படுகின்றமை என்பன வற்றைக் குறிப்பிட லாம். மேலும் இவ்வரி நுகர் வோரையே சென்றடைவ தால் உற்பத்தியாளர், விற்பனையாளர் ஊக்கு விக்கப் படுகின்றனர். அத்துடன் இவ்வரிமுறை நிறுவனங்கள் சீராகக் கணக்கு வைக்கும் முறையையும் ஊக்கு விக்கிறது.

## உசாத்துணைநூல்கள்


- மத்திய வங்கி ஆண்டறிக்கை 2003 – 2006
- அரச வர்த்தகமானி

# How to Write Effective Essays

**Mrs. S.Ravindran**

Senior Lecturer in English ELTc

Essay writing is not an easy task. for many students struggle to write good essays. Even-though essay writing begins in the primary; most of the students find it difficult to produce quality essay. Here are some guidelines to write effective essays.

All essays need good starts and ends; lots of support material and a balance of personal research and lecture based evidence. One should plan, rethink, write and do further research on the essay question. While writing the first, and second draft sentence structure should be checked long sentences should be pruned; too many quotations should be avoided.


The first version of anything that is written is a draft. It is a rough and ready first attempt. One should develop the ideas and put each new idea as a paragraph. The long paragraphs could be trimmed by leaving repeated arguments.

In order to write an effective essay one should possess the skills to analyse, criticize, examine and debate ideas in a structured way, using appropriate examples quotations and references to illustrate one's arguments.

**Following are some steps to write essays**

- Take time to analyse the question
- Find the key words.
- Don't include too many quotations Write down all findings that come to mind.
- After analysing the essay title plan to get started
- Let your ideas flow
- Do not get critical at this stage
- Do not spend time in finding exact technical term, phrase or reference
- When you finish writing the first or second draft you can check your grammar structure, style references and spelling.
- Once you think you have finished writing and accept it as the final one then polish and revise your essay.

# HOW TO STRUCTURE AN ESSAY




**How to write effective Introductions**

A good introduction serves two purposes. It outlines the general back ground or position and signposts the structure and arguments that follow. It gives a reader confidence that you are in command of the topic. If the introduction looks longer edit it and put some material later on in the essay. Historical or biographical details can be used depending on the question. Length/ sentences or references can be avoided. If you want to use them limit them to one or two sentences. The opening paragraphs should clearly state the new ideas.

**The Middle part**

The middle part of an essay should be developed in a logical order like a

story. While writing the middle part one has to have the subheadings in his/her mind. The main idea should be clearly stated in each new paragraph with supportive personal, reading and lecture references. One can include examples or quote examples. It is in this middle part where one should display his / her knowledge and skill in writing an effective essay.

**Appropriate Reference**

All sources and quotations must be fully referenced including diagrams and data.

**Synthesis**

The synthesis or discussion section allows you to demonstrate your skill in drawing together the threads of the essay.

**Conclusion**

The conclusion should sum up the contents of the essay without repeating the statement from introduction. The nature and style of the conclusion depends on the content of the essay

Considering all these guidelines while writing an essay will you make obtain top marks for you essays.

* முதல் பிரதமர் :- டிஎஸ் சேனநாயக்க
* முதலாவது ஆளுனர் :- பிரெட்றிக் நோத் (1798 - 1805)
* முதல் ஜனாதிபதி :- வில்லியம் கோபல்லாவ
* முதல் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி :- J.R.ஜெயவர்த்தனா
* தேசாதிபதியாக கடமை புரிந்த முதல் இலங்கையர் - சேர் ஒலிவர் குணதிலக



க.பொ.த.(உ/த) வகுப்பு ஆசிரியர் குழாம்



கல்விசாரா உத்தியோகத்தர்கள்



கலைப்பிரிவு மாணவர்கள் - 2008A



கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்கள் - 2008B



க.பொ.த.(உ/த) வகுப்பு ஆசிரியர் குழாம்



கல்விசாரா உத்தியோகத்தர்கள்



கலைப்பிரிவு மாணவர்கள் - 2008A



கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்கள் - 2008B

# உலகமயமாக்கலும் மூன்றாம் உலகநாடுகளின் கைத்தொழில்களும்

**Mr.S.S. Uthayakumar,**
Senior Lecturer,
Department of Economics,
University of Jaffna.

உலகமயமாக்கல் என்பது உலக நாடு களையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒன்றிணைக்கும் ஓர் செயற்பாடாகும். இவை மூன்றாம் உலக நாடுகளில் அது எத்தகைய நன்மைகளை எடுத்துவரும் என்பது கேள்விக் குரியதே. வளர்முக நாடுகளின் அபிவிருத்தியில் பிரதான பங்கினை வகிக்கும் "மனிதக்காரணி" என்பது செயற்றிறன் வாய்ந்த வகையில் பயன் படுத்தப்படாமையே அவற்றின் பின்தங்கிய அபிவிருத்திக்குக் காரணமெனலாம். உலகமய மாக்கல் சக்திகள் கைத்தொழில் நாடுகளி லிருந்தே தோன்றி வருகின்றன.

உலகப் பொருளாதாரப் பின்னணியை வைத்து (1900–2006) காலப்பகுதி கைத்தொழில் பொருளாதாரத்தை 4 கட்டங்களாகக்கொள்ள லாம். 1ஆவது கட்டம் (1900–1913) வரை 16ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிபோன்ற வர்த்தக ஸ்தாபனங் களுடன் ஆரம்பித்தன. இக்காலகட்டத்தில் உலகப் பொருளாதார வளர்ச்சியின் சராசரி 1.5% ஆகும். 2ஆவது கட்டம் (1913– 1950) இரு உலகமகா யுத்தங்களைக் கொண்ட காலப்பகுதி யாகும். இக்காலகட்டத்தில் உலகப்பொருளாதார வளர்ச்சியின் சராசரி 0.7% ஆகும். 3ஆவது கட்டம் (1950–1973) வரைஉலக யுத்தங்களுக்குப் பின்னால் பல வளர்ச்சிக் கோட்பாடுகள் தோற்றம்பெற்றது. உலகில் வளர்ச்சியடைந்த கைத்தொழில்கள் நாடுகளின் பொற்காலமாக இருந்துவந்தன. இக்கால கட்டத்தில் உலகப் பொருளாதார வளர்ச்சியின் சராசரி 2.8% ஆகும். 4ஆவது கட்டம் (1973 தொடக்கம் இன்றுவரை) உலகமய மாக்கல் காலகட்டமாகும். கட்டற்ற வர்த்தகம், திறந்த பொருளாதாரம், சுதந்திரச் சந்தை நடவடிக்கை என்பன வலுப்பெற்று வந்த, வருகின்ற காலமாகும். இன்றைய நிலையில் பொருளாதார வளர்ச்சி யின் சராசரி 1.3% ஆகும். உலகமயமாக்கல் 3 வழிகளில் இடம்பெறும். அவையாவன பின்வருமாறு.

1. காலணித்துவ உலக மயமாக்கல்
2. நிறுவன ரீதியான உலக மயமாக்கல்
3. திறந்த பொருளாதாரச் சந்தை மயமாக்கல்

காலணித்துவ உலகமயமாக்கல் என்பது ஒருநாடு பிறநாடுகளைப் பின்பற்றித் தமது மதம், மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்ப வற்றைப் பரப்புவதாகும். நிறுவன ரீதியான உலகமயமாக்கல் என்பது உலக நாடுகள் தமக்குக் கீழிருந்த 3ஆம் மண்டல நாடுகளின் மதம், மொழி, உற்பத்திப் பொருட்களை அவற்றிற்கு அளிப்பதாக இருப்பதாகும். திறந்த பொருளாதாரச் சந்தைமயமாக்கல் என்பது ஒரு நாட்டின் பொருளாதார எல்லைகளினைத் திறந்துவிட்டு, மற்ற நாடுகளில் உள்ள மூல வளங்கள், பொருட்கள் என்பன தங்குதடை யின்றிப் பாய வழியேற்படுத்துவதாகும்.

கைத்தொழில்மயமாக்கல் என்பது மொத்தத் தேசிய உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்தியில் பொருட்களின் பங்களிப்பு அதிகரித்தலும், மொத்த ஊழியப்படையில் கைத்தொழில் ஊதியப்படையின் பங்கு அதிகரித்தலுமாகும். வளர்முக நாடுகளான தென்னாசியா, கிழக் காசியா, இலத்தீன் அமெரிக்கா, வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு உபசகாரா போன்ற நாடுகளில் உலகமயமாக் கலானது ஏற்படுத்திய மாற்றங் களில் ஓரளவு நன்மைகளும் இடம்பெற்றன. இந்தவகையில், குறிப்பிடக்கூடிய நன்மைகள் என்ற வகையில்;

1. பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.
2. காலம், தூரம் தொடர்பான இழப்புக்களை நீக்கலாம்.
3. நவீன தொழில்நுட்பங்களைக் குறைந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
4. வளங்களின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டு பூரணத்துவப்படுத்தப்படும்.
5. வேலையின்மை குறைக்கப்படும்.
6. அபிவிருத்திக்குத் தேவையான நிதி குறைந்த வட்டியிற் கிடைத்தல்.
7. சர்வதேச ஒத்துழைப்பும் கூட்டுறவும் அதிகரித்தல்.
8. போட்டி அதிகரித்தலும் அவற்றின் நன்மை களும் மற்றும்
9. மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

உலக மயமாக்கல் செயற்பாடானது, பொதுவாக உலக நாடுகளில் பல்வேறு வகை யான தாங்கங்களை ஏற்படுத்தியுள்ளன, ஏற்படுத்தி வருகின்றன, அத்துடன் எதிர் காலத்தில் மேலும் பல தாக்கங்களை ஏற்படுத்த உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இருப்பினும் இத்தகைய தாக்கங்களானது வளர்ந்த நாடுகளிலும் பார்க்க வளர்முக நாடுகளில் அதிகளவில் மட்டுமன்றிப் பாரதூர மானதாகவும் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் உலகமயமாக்கல் செயற் பாடானது, வளர்முகநாடுகளில் ஏற்படுத் துகின்ற தாக்கங்கள் என்ற வகையில் :

1. கிடைத்தற்கரிய அழிவடைந்துபோகும் மூல வளங்களை உலகமயமாக்கல்மூலம் இந்த நாடுகள் இழக்கின்றமை.
2. ஊழியச் சுரண்டல் இடம்பெறுதல்
3. வருமான சமமின்மை, வறுமை அதிகரித்தல்
4. குழந்தைப்பருவத்தில் உள்ள கைத்தொழில் கள் அழிவடைதல்
5. விவசாய உற்பத்திகள் மீதான பாதுகாப் பினை உலகமயமாக்கல் குறைத்ததன் காரணமாக விவசாயிகள் பாதிப்படைந்தமை மற்றும் உணவில் சுயநிறைவினை இழந் தமை.
6. உலகமயமாக்கல்மூலம் புதிய வேலைவாய்ப் புக்கள் உருவாகுவதற்குப் பதிலாகப் பல வேலைவாய்ப்புக்கள் இழக்கப்பட்டமை
7. பணவீக்கம் அதிகரித்தமையும் பொருளா தாரம் உறுதியற்ற நிலைக்குச் சென்றமை மற்றும்
8. உலகமயமாக்கல் தங்கியிருத்தல் நிலை மையை அதிகரித்துள்ளமைபோன்ற பலவற் றைச் சுட்டிக்காட்ட முடியும்.

வளர்முக நாடுகளில் இறக்குமதிப் பிரதி யீட்டு உத்தி குழந்தைப்பருவத்திலிருந்து வந்த அவற்றின் உள்ளூர் கைத்தொழில்கள் செழித்து வளர்வதற்கு உசிதமானதோர் சூழ்நிலையையும்

பாதுகாக்கப்பட்ட சந்தையையும் வழங்கியது. இத்துடன் கூடிய வருமானம், கூடிய வேலை வாய்ப்பு, நகரமய மாக்கல், விவசாய நவீன மயமாக்கல், அரசியல் சமூகப் பொருளாதார வளர்ச்சியினையும், நவீனத்துவத்தையும் அடைவதற்குக் கைத்தொழில் அவசியமான தாகும்.

உலகமயமாக்கற் செயன்முறையானது உலக உணவு உற்பத்தியையும் அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை அதிகரிப்பதிலும் முக்கியத்துவம்பெற்று வருகின்றதென்று குறிப்பிடலாம். மேலும் புதிதாகப் பல கைத் தொழில்கள் வளர்ச்சிபெற்றன. பல புதிய சேவைக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தன. புதிய தொழில்நுட்பங்களும் வளர்ச்சிபெற்றன. இதன் காரணமாகப் புதிய தேசியச் சந்தைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு உலக சந்தை உருவாகும் தேவை வலுப்பெற்றது. அத்துடன் புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடுகளுக்கும் (NICs) அபிவிருத்தியடைந்துவரும் நாடு களுக்குமிடையிலான (LDCs) வருமான இடை வெளிகூட அதிகரித்துக் காணப்படு கிறது.

உலகமயமாக்கல் கைத்தொழில்களினை வளர்முக நாடுகளுக்கு எடுத்துச் செல்வதுடன், ஏற்றத்தாழ்வான வர்த்தக முதலீட்டு வளர்ச் சியைக் கொண்டதால் பண்டங்களின் விலை வீழ்ச்சி வருமான ஏற்றத்தாழ்வை உண்டு பண்ணியுள்ளது. தொழில் மற்றும் வருமானம் பாதுகாப்புத் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்படல், குற்றச் செயல்களின் பெருக்கம், உள்நாட்டுக் கலாசாரச் சீரழிவு, சூழல் மாசடை தல், பாதுகாப்பின்மையும் நிச்சயமற்ற நிலை என்பவையாகும்.

இறக்குமதிக் கைத்தொழில் பதிலீட்டு உபாயம் (ISI) கூட அபிவிருத்தியடைந்துவரும் நாட்டிற்குச் சாதகமாக அமையவில்லை. அதேபோல் "UNCTAD" நிறுவனமும்கூட வெற்றியளிக்காது வெறுப்பினையே ஏற்படுத் தியது. கைத்தொழில் வெளியீட்டு வளர்ச்சி, உற்பத்தித் துறையில் ஏற்படும் கட்டமைப்பு மாற்றம் என்பவற்றில் நம்பிக்கையை இழந்தன.

ஏற்றுமதியை நோக்கிய கைத்தொழில் உபாயம் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக் கான ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதியில் எவ்வளவு முக்கியத்துவத்தினைக் கொண்டுள் ளனர் என்பதனை அறியலாம். கைத்தொழில் வளர்ச்சியினைப் பெற்றுக்கொண்ட நாடாக கிழக்காசிய நாடுகள் காணப்பட்டது. மேலும் தாய்வான், சிங்கப்பூர், தென்கொரியா, கொங்கொங் போன்ற நாடுகளில் ஏற்றுமதி நோக்கிய கொள்கையுடன் இணைந்த வகையில் கைத்தொழில் மயமாக்கல் முன்னேற்றம் கருதி முன்வைக்கப்பட்ட நெறிப்படுத்தல்களும் "கிழக்காசியாவின் அற்புதம்" என வர்ணிக்கும் அளவிற்கு கைத்தொழிற்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தவகையில் காப்பீட்டுக் கொள்கை யினைக் கைத்தொழில் நாடுகள் தீவிரமாக கடைப்பிடித்தன. தென்னாசிய நாடுகளுக்கான எதிர்கால ஏற்றுமதி வாய்ப்புக்கள்பெருமளவு குறைவடையத்தொடங்கின. இதனாற் போட்டி அடிப்படையிலான விலைகளில் உற்பத்தியில் பொருட்களின் உருப்பெருக்கும் திறமையினைக் கொண்டிருந்த போதும், அதை வெளிநோக்கிய கைத்தொழில் மயமாக்கிய உத்திகளை பின்பற்றும் பல இடர்பாடுகளை எதிர்நோக்கின.

வளக்கொடைக்கு அமைவான கைத் தொழில்மயவாக்கக் கொள்கைக்கு தென்னாசிய நாடுகள் நுகர்வுப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களையும் ஏற்றுமதி செய்வதற்கு சமூகத்தில் வாழ்க்கைத்தரத்தை மிக மோசமான தாக்கிவிடும். இதனால்தான் வளர்ந்த நாடுகளில் அபிவிருத்திக்குப் பொருத்தமற்ற கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. கைத்தொழிலை உருவாக்க அரசு எடுத்த தீர்மானம் தவறாகச் செயற்படுகிறது. இதனால் உலகமயமாக்கலில் 3ஆம் உலக நாடுகளில் கைத்தொழில் மயமாக்கமானது பாதகமாக அமைகிறது.

வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் கைத்தொழில் வளர்ச்சியடையாமைக்குக் காரணம் அபிவிருத்தி சார்ந்த அரச ஆலோசகர்தான். இது IMF, World Bank மற்றும் WTO போன்றவற்றின் தவறு எனப்படுகிறது. இளம் கைத்தொழில்கள், குழந்தைப்பருவ கைத்தொழில் பாதுகாப்பு என்பதை, பங்குச் சந்தை என்பதை வளரவிடுவது என்பது மறுபுறமாக வெளிநாட்டைக் கொண்டு முதலீடுகளை வரவழைத்துத் தரமான பொருட்களை உற்பத்தி செய்யமுடியும் என முதலாளித்துவ நாடுகள் கூறுகின்றன. இளம் கைத்தொழில்களைப் பாதுகாப்பதைவிட பங்குச்சந்தை ஒரு கருவியாகக் காணப்படும் என்பது திறந்த பொருளாதாரத்தில் முன்வைக்கின்ற வாதம் எனலாம். மேலும் பங்குச்சந்தை என்பது உலகமய மாக்கலின் ஒரு கூறு எனலாம்.

சர்வதேச மயமாக்கலினால் வளர்ந்த நாடுகள் தமது கைத்தொழிற் பொருட்களுக்கான பரந்த சந்தை வாய்ப்பினைச் சிறிய நாடுகளில் மேற்கொண்டன. 3ஆம் உலக நாடுகளின் கைத்தொழிற் பொருட்களை வளர்ந்த நாடுகளுக்கு சந்தைப்படுத்தப்படும் போது, மட்டுப்படுத்தப்பட்ட கோட்டா முறையினைக் கொண்டிருக்கின்றன.

இறக்குமதி தாராளமயமாக்கலானது கைத்தறி ஆடை, மின் உபகரணங்கள், உலோக உற்பத்திகள், இரசாயனப் பொருட்கள், கால்நடை உற்பத்திகள், கண்ணாடிப் பொருட்கள் போன்ற பெருந்தொகையான உள்நாட்டுக் கைத்தொழில்கள்மீது தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. புடவைகள் மீதான 35% தீர்வை அண்மையில் ஒழிக்கப் பட்டமை உள்நாட்டுப் புடைவைக் கைத்தொழி லைப் பொறுத்தவரை ஒரு மரண அடியாக உள்ளது. தாராளமயமாக்கலால் உள்நாட்டுக் கைத்தொழில் பாரிய பின்னடைவைக் கண்டுள்ளதெனலாம்.

உலகமயமாக்கலில் 3ஆம் உலக நாடுகளின் கைத்தொழில்மயமாக்கத்தினது தேறிய விளைவு, உள்நாட்டு வருமானப் பங்கீட்டில் மாற்றம், உற்பத்தி மிகைவருமானம் எல்லாம் வெளிநாடுகளுக்குச் செல்லல், கைத்தொழில் மயமாக்கத்திற்கான தூண்டுதல், கட்டற்ற வர்த்தகம் போன்றனவாகும். சர்வதேச வர்த்தகத்தை ஏற்படுத்தி பல்தேசிய நிறுவனங்களுடன் (MNCs) கைத்தொழில் சந்தைகளாக மாறியதால் மிகைகள் மாற்றப் படுகின்றது.

# பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டற் சேவை அவசிய தேவையும், புதிய பிரயோகங்களும்

திரு. பா.தனபாலன்
உபபீடாதிபதி (கல்வி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

- ஏன் இன்றைய பாடசாலை மாணவர் களுக்கு வழிகாட்டல் ஆலோசனைச் சேவை அவசிய தேவையாகவுள்ளது?
- இதற்கான ஆசிரியர்களின் வகி பங்குகள் எவை?
- மாணவர்கள் எதிர்நோக்கும் பரீட்சை– கல்வி – தொழில் சார்ந்த சவால்கள் எவையாக வுள்ளன?
- அவற்றைத் தீர்க்க எவ்வாறான ஆலோ சனை வழிகாட்டல் சேவையை வழங்கலாம்?

தனிநபர்கள் நிகழ்கால வாழ்வியலில் ஒத்துப் போவதற்கும், எதிர்கால வாழ்விற்கான திட்டங் களையும், எண்ணங்களையும் வகுப்பதற்கும், திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும், பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து வெற்றிகாணும் தேர்ச்சிகளைப்பெற வழிகாட்டல் ஆலோசனைச் சேவை உதவு கின்றது. இது தனி மனிதர்களுடைய கல்வி அனுபவங்கள் மூலமாகத் தம் ஆற்றல்களைத் தெரிந்துகொள்வதற்கும், சமூகத் தேவைகளை உணர்ந்துகொண்டு அதற்கு ஏற்பத் தம்மை இயைபாக்கிக் கொள்வதற்கும். அவற்றில் மகிழ்ச்சி அடைவதற்கும், மேலும் வாய்ப்புக் களைப் பயன்படுத்திக் கொள்ளவும் வழிகாட்டு கின்றது. பாடசாலை ஆசிரியர்கள் தம்மிடம் பயிலும் மாணவர்களுக்கு இவ்வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவையைப் பிர யோகிக்க வேண்டிய தேர்ச்சிகளைக் கட்டாய மாகப் பெறவேண்டும். இதனூடாக

- மாணவ – மாணவியரின் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த வழிகாட்டலை மேற் கொள்ளல்.
- தகுதியான பாடத் தெரிவுகளுக்கும் – கற்கை நெறிகளுக்கும் தொழில் தெரிவு களுக்கும் வழி காட்டல்.
- தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற தொழில் களைப் பரிந்துரை செய்தல்.
- மாணவர்களின் பிரச்சினைகளையும், தாழ்வு மனப்பான்மைகளையும் போக்க.
- பிறழ்வான, தீய நடத்தைகளில் ஈடுபடாது தடுக்க.
- ஒரு பருவத்திலிருந்து மற்றொரு பருவத் திற்கு வரும்பொழுது ஏற்படக்கூடிய பழக்க வழக்கப் பண்பாட்டு மாறுதல்களை அடை யாளம் கண்டு இயைபாக்கமடைய வைக்க.
- பலவீனமானவர்களுக்கு அவர்களுடைய பலவீனம் எது என்பதை அறிந்து, அதற்கு ஏற்ற ஆலோசனையை வழங்க.

இவ்வகையில் ஆசிரியர்கள் உண்மையான வர்களாகவும், அன்பானவர்களாகவும், நேர்மை யானவர்களாகவும், சகிப்புத் தன்மை யோடு எல்லா மாணவர்களிடமும் ஒரே மாதிரியாக நடந்துகொள்வதன் மூலமாக, மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை உணர்ந்து செயற் படுபவராக இருக்கும்போது அவர் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் தேர்ச்சியைப் பெற்ற வராகிறார். வாழ்க்கையில் உயர்ந்த அனை வருமே தங்களின் வெற்றியின் இரகசியம்

தங்களை வழிநடாத்திய ஆசிரியர்கள் தான் எனத் தெரிவிக்கின்றனர். மேலும் இன்றைய பாடசாலை மாணவர்கள் பொதுப்பரீட்சை களுக்குத் தயாராகும்போது பல இடர்களை அனுபவிக்கின்றார்கள். குழப்பமடைகின் றார்கள். இவற்றைப் போக்க ஆசிரியர்கள்; மாண வர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்க வேண்டியுள்ளது.

**பொதுப்பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு;**

நீங்கள் பதட்டமடையக் கூடாது; படிக்கும் போது நல்ல காற்றோட்டம் நிறைந்த இடத்தில் அல்லது அறையிற் படிக்கவேண்டும். ஏனைய குழப்பங்கள், பிரச்சினைகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கல்வியில் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும்.

1. ஒவ்வொரு பாடத்தையும் முறையாக வரிசைப் படுத்திக்கொண்டு, அட்டவணை அல்லது நேரசூசி தயார்செய்து திட்டமிட்டுப் படிக்க வேண்டும். சுயமாகக் கற்றலே பரீட்சை களில் வெற்றியைக் கொடுத்துள்ளது.

2. படித்த பாடங்களை நடந்துகொண்டே அசை போடலாம். (நெடுக இருந்து படிப்பதால் சோர்வு ஏற்படலாம்)

3. முதல்நாள் படித்த பாடத்தை மறுநாள் எழுந்தவுடன் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் மறதி குறையும்.

4. ஒரு பாடத்தைப் புரிந்தோ – புரியாமலோ ஓரிரு முறை வாசிக்கவேண்டும். பின் தேவையான புரியாத பகுதிகளைக் குறிப்பெடுக்கலாம். அவற்றை ஆசிரியர் அல்லது நண்பர்களிடம் கேட்டுப் புரிந்துகொள்ளலாம்.

5. விடிய விடியக் கண் விழித்துப் படிக்கக் கூடாது. அவ்வாறு படிப்பதால் எவ்வித பயனும் கிடைப்பதில்லை என உளவியல ஆய்வுகள் எடுத்து இயம்புகின்றன.

6. படிக்கும் காலத்தில் உணவிற் கட்டுப்பாடும் சத்துள்ள உணவுகளும் உண்ணவேண்டும். தண்ணீர் அதிகமாகக் குடிக்கவேண்டும்.

7. மதிய உணவுக்குப் பிறகு சிறு ஓய்வு அல்லது உறக்கம் நல்லது.

பெற்றார்கள் படிக்கும் தம் பிள்ளைகளுக்கு அருகிற் சென்று அடிக்கடி தொல்லை கொடுக் கக்கூடாது. போசாக்குள்ள உணவு களை வழங்கி அவர்கள் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டவேண்டும். பிள்ளைகள் படிக்கும்போது தொலைக்காட்சி, வானொலி என்பவற்றைப் பயன்படுத்தல், வேறுதடையான செயற்பாடு களைச் செய்யக்கூடாது. தொடர்ந்து தைரியத் தையும், தன்னம்பிகையையும் ஊட்டிக் கொண் டிருக்க வேண்டும். இவ்வாறான ஆலோசனை களை ஆசிரியர்கள்; பெற்றார்களையும் மாணவர் களையும் அழைத்துக் கூறுதல்வேண்டும். பரீட்சைக் காலங்களில் மாணவர்கள் சோர்வாக இருப்பார்களேயானால் அவர்களுக்கு விட்ட மின் B மாத்திரைகளைப் பயன்படுத்த ஆலோ சனை வழங்கலாம்.

**மாணவர்களின் உள ஆற்றலைப் பெருக்கும் ஆசிரியரின் வகி பங்குகள்**

ஆசிரியர்கள் விழிப்புணர்வும், மாணவர்பால் உற்சாகமும், ஆசீகரமும், நட்பும், நம்பிக்கையும் உடையவராய் இருத்தல் வேண்டும். கல்வி ஆளுமை, பொறுமை, நேர்மை, சமநோக்கு, கணிப்பு, கூட்டுறவு வகிபாக மனப்பாங்கு களினூடான மாணவர்களை வழிப்படுத்தி

அவர்களுடைய உள ஆற்றலைப் பெருக்க வேண்டும். இதற்கு ஏற்ப ஆசிரியர்கள் தம்மைப் பின்வரும் துறைகளினூடாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

- ❖ பிரயோக உளவியலறிவு
- ❖ சமூகக் கருத்தியல்கள் தொடர்பான கற்கைகள்
- ❖ கற்றல்–கற்பித்தல் பிரச்சினைகளைக் கிரகித்துப் பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்.
- ❖ கலை, பண்பாடு, இலக்கியங்கள் பற்றிய அறிவின் விரிவு.
- ❖ அறவொழுக்கம், விழுமியங்கள், கலா சாரங்கள் தொடர்பான மனப்பாங்குகள்.

இவற்றினூடாகத் தம்மை வளர்த்து மாணவர் களுடைய தேவைகளையும், விருப்பங்களையும் உணர்ந்து, கல்விச் செயற்பாடுகளைக் கட்டி யெழுப்ப வேண்டும். மாணவர்களின் உணர்வுகளுக்கு ஏற்ப நெகிழ்ச்சித் தன்மையும் தேவைப்படுகின்றது. மாணவர்களின் உடல் – உள்ளம் – இயக்கம் – பாடசாலை, வீடு, சமூகம் முதலியவற்றுக்கிடையே இணக்கத்தையும் ஒன்றிணைப்பையும் வலுப்படுத்தி வழிகாட்ட ஆசிரியர்கள் பின்வரும் மாணவர் சார்பான நடத்தைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

1. மாணவர்களுக்குப் பாடம் விளங்கவில்லை என்றால் அதனைக் குற்றமாகக் கருதாது, கோபம் கொள்ளாது, தண்டனை வழங்காது மாணவர்களின் தளத்தில் நின்று பிரச்சினை யினை அணுகுதல்.
2. தோல்விகளையும், சவால்களையும் வெற்றி களாக மாற்றும் திறனை மாணவ ரிடத்து ஊக்குவித்தல்.
3. பரிகாரக் கற்பித்தற் செயன்முறைகளை வளம்படுத்தல், மாணவர்களின் ஈடுபாட்டை யும் பங்குபற்றலையும் கற்றலில் உறுதிப் படுத்தல்
4. என்றுமே வெற்றிகளை அனுபவிக்காத மாணவர்களுக்கு யாதாயினும் வெற்றிகளை அனுபவிக்கச் செய்தல். கற்றல் இடமாற்றம், அனுபவ இடமாற்றம் ஏற்பட மகிழ்ச்சிகரமாகக் கற்றல்
5. மாணவர் மன நலத்தை வளப்படுத்தும் நேர்க்கவி நிலைகளை (Positive Climate) முனைப்பாக்கல். அதனூடாக நல்ல ஒழுக்கங் களை நோக்கிய சுய நெறிப்படுத்தலை மாணவரிடையே வளர்த்தல்.

மாணவர்கள் தமக்குச் சிக்கலான பிரச்சினைகள் ஏற்படுகின்றபொழுது அதைத் தீர்க்க அனுபவமுள்ள ஆசிரியர்களின் ஆலோசனையைப் பெறுவது நல்லது. மேலும் நல்ல நூல்களை வாசிக்கலாம். தலைசிறந்த தலைவர்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம். தாம் எந்தத் துறையிற் பிரகாசிக்க விரும்புகிறார்களோ அந்தத் துறையிற் சிறப்பிடம் பெற்றவர்களிடம் ஆலோசனைகள் பெறுவதும் சிறந்தது. எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வுகாண விளையும்பொழுது நமக்குத் தெரிந்த விபரங் களின் அடிப்படையில் விபரங்களை மேற் கொள்ள விழைவதால் நாம் ஒரு வட்டத்திற் குள்ளேயே சுற்றிச்சுற்றி வருகின்றோம். எனவே அதிலிருந்து விடுபட்டு அதுபற்றிய அனுபவமும் முழுமையும் தெரிந்தவரிடம் ஆலோசனை பெறுதல் பெரும் நன்மையளிக்கும். அதுவும் எதிர்காலத் தொழில் தெரிவு தொடர்பாக இவ்வாறு ஆலோசனைபெறுதல் நல்ல பயனளிக் கும்.

## மாணவர்களுக்கான தொழில் வழி காட்டல்

எமது நாட்டுப் பாடசாலைகளின் இடை நிலைக் கல்வி, உயர்கல்வி மாணவர்களை அவர்களின் எதிர்காலத் தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது இன்றைய கல்வியின் போக்காகவுள்ளது. அவர்கள் தமக்குப் பொருத்தமான தொழில்முறைகளை இனங் கண்டு, அதற்கேற்பப் பாடநெறிகளைத் தெரிவு செய்து, தொழிலைப் பெற்று முன்னேற்றம் அடைவதற்கு உதவி வழங்குதல் தொழில் வழிகாட்டலாகும். இதனைச் சர்வதேச தொழில் நிறுவனம் "ஒருவர் தனக்குப் பொருத்தமான தொழிலைத் தன் ஆர்வம், ஆற்றல், உளச்சார்பு ஆகிய பண்புகளினதும், தொழிலைப் பெறக் கூடிய வாய்ப்பின் அடிப்படையிலும் தெரிவு செய்து; அதனைப்பெற்றுத் தொழில் வாழ்க்கையில் முன்னேற வழங்கப்படும் உதவியே தொழிலுக்கு ஆற்றுப்படுத்தலாகும்" என்கிறது.

ஒருவர் தன்னையறிதல் ஊடாகவும், சமூக, தனிமனித காரணிகள் ஊடாகவும் இடைவினை கொள்வதன் வாயிலாக அவருக்குத் தொழில் பற்றிய சுய உணர்வு வளர்கின்றது. இதனடிப் படையில் தொழில் தெரிவு பற்றிய அறிவு வளர்கிறது. இது தொடர்பாகத் தொழிற் பகுப்பாய்வு விடய அறிவை ஆசிரியர்கள் மாணவர்களிடையே வழங்கவேண்டும். பொருத்தமான தொழில் நாடியைப் பொருத்த மான தொழிலுக்கு அழைத்துச்செல்ல இது வழிவகுக்கும்.

மேலும் தொழில்கள் தொடர்பான தரவு களைப் பாடசாலைகளிற் சேகரித்தல், பத் திரிகை, வர்த்தமானி அறிவித்தல்களை, மாண வர்கள் வாசிக்கக்கூடிய வகையில் இடல், தொழில் தொடர்பான தொழில் திணைக்களத் துடன் இணைந்து செயலமர்வுகளை நடாத்து தல். மாணவர்களைத் தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் செல்லுதல் மிகுந்த பயன்களைத் தரும். கின்ஸ் பேர்க்கின், சவ்ப்பர் ஆகிய தொழில் வழிகாட்டல் நிபுணர்கள் ஒருவர் பிறப்பிலிருந்து தொழில்பெற்று ஓய்வுபெறும் வரையுள்ள ஐந்து பிரதான வளர்ச்சிப் பருவங் களை இனம் காட்டினார்; அவை:

1. சிறு குழந்தை நிலையிலிருந்து கற்பனை, உளநாட்டம், ஆற்றல் பெறல் என்பவற்றோடு வளர்ச்சிபெறும் பருவம்.
2. தொழில்கள் பற்றிய கண்டுபிடிப்பு, உசாவல் நிரம்பிய பருவம்
3. தொழில்களைப் பெறும் பருவம்
4. தொழில்களை நிலை நிறுத்தும் பருவம்
5. தொழில்களில் இருந்து ஓய்வு பெறும் பருவம்.

இவற்றினை மாணவர்களுக்கு அறியப் படுத்தித் தொழில் தெரிவில் ஒவ்வொரு மாணவரும் தாம் சார்ந்த சுயமதிப்பீடு என்பதுடன் குடும்ப, பொருளாதார, சமூகம் நண்பர், பாடசாலை என்பவற்றின் செல்வாக்கும் தொழில் தெரிவில் தாக்கங்களை ஏற்படுத்து கின்றது. ஒவ்வொரு மாணவரும் தம் எதிர்கால தொழில் இலக்கை அடையக்கூடிய கல்வி வழிகாட்டல் சேவை ஆசிரியர்களே சரியாக வழங்க முடியும். இதற்கான சிறந்த களங்களாகப் பாடசாலைகளை ஏற்படுத்தப் பல புதிய செயற் றிட்டங்களை மேற்கொள்ள வேண்டி இருக்கின் றது. இன்று ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒவ்வொரு வழிகாட்டற் சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு உயிர் கொடுத்து எம் எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்களுக்கு நல்வழிகாட்டு வோமாக.

# கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள் வாங்குதல் தொடர்பான வழிகாட்டலும் நவீன கல்வி நிலைமைகளும்

திரு. S.K.யோகநாதன்
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

இன்றைய உலகின் நவீன போக்கிற்கும், நோக்கிற்கும் அமையக் கல்வி முறையில் விரைவான மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. கல்வி ஒவ்வொருவருக்கும் ஓர் உரிமையாகவும், அது எல்லாவிதமான சுதந்திரங்களுக்கும் மேம்பாடுகளுக்குமான அடிப்படைகளை வழங்குகின்றது. அதன் பயன்கள் முழுமையாக இன்னும் எமது மண்ணில் ஏற்படவில்லை. ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. மேலும் யாழ்ப்பாண சமூகத்தின் இருப்பிற்கும், எதிர்கால நல்வாழ்விற்கும் முழுநிறைவான கல்வி இன்றியமையாதது. ஏனெனில் கல்வியினால் உருவாக்கப்படும் மனித வளமே ஒரு சமுதாயத்தின் பெறுமதி மிகுந்த வளமாகும். இக்கல்வியை வழங்கும் முக்கிய பொறுப்பு ஆசிரிய சமூகத்திடமே உள்ளது. அவர்களுக்குப் பயிற்சியளித்து, நல்லாசிரியராக்க எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பல செயலாற்றுகைகளை ஆற்றி வருகின்றது.

இலங்கை அரசாங்கம் ஆசிரிய வாண்மையைச் சர்வதேச ரீதியில் தரம் வாய்ந்ததாக்க முன்சேவைப் பயிற்சியை தேசிய கல்வியியற் கல்லூரிகள் மூலம் வழங்க 30 ஆம் இலக்க 1986ம் ஆண்டு சட்டமூலம் ஒழுங்குசெய்தது. க.பொ.த உயர்தர வகுப்பில் "Z" புள்ளி அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலின்படி மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றார்கள். விஞ்ஞானம், கணிதம், தமிழ், ஆங்கிலம், சமூக விஞ்ஞானம் , மனைப்பொருளியல், விவசாயம், உடற்கல்வி, அழகியல், சமயம், தகவல்தொழில் நுட்பம், ஆரம்பக்கல்வி, விவசாயம், விசேட கல்வி என பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற பாடங்கள், ஆசிரிய பயிற்சியாக இருவருடங்கள் வதிவிடத்துடனும் ஒரு வருடம் உள்ளகப் பயிற்சி பாடசாலையிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

## பாடத்தெரிவுகள்

க.பொ.த. சா. தரம், உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் இங்கு கவனத்திற் கொள்ளப் படுகின்றன. விஞ்ஞானம், கணிதம், உயர்தரத்தில் சித்தியடைந்தோர் இப்பாடத்தெரிவுக்கு விண்ணப்பிக்கலாம். ஆங்கில மொழிமூலம் இப்பாட நெறிகளைப் பயிலும் வாய்ப்பு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் உள்ளது. க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறைப் பாடங்கள் தெரிவில் தமிழ், சமயம், அழகியல் துறைப் பாடங்களைத் தெரிவுசெய்தால், மூன்று வகைப் பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். இவற்றுடன் அபிவிருத்திசார் பாடங்களான புவியியல், வரலாறு, பொருளியல் என்பவற்றைக் கற்கும்போது, "Z" புள்ளிகளைக் கூடுதலாகப் பெறவும் வாய்ப்புக்கள் உண்டு.

இவற்றுடன் க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றால் ஆங்கிலத்தை மட்டுமன்றி தகவல் தொழில் நுட்பம், நூலக விஞ்ஞானம் ஆகிய பாட நெறிகளுக்கும் விண்ணப்பித்து, இலகுவில் தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிய வாய்ப்புக்கள் உண்டு, எனவே பாடசாலை ஆசிரியர்கள். அதிபர்கள், மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தைச் சிறப்பாகக் கற்கக் கூடிய சூழ்நிலைகளை ஏதோ ஒரு வகையில் பாடசாலைகளில் மேற்கொண்டு, அவர் களுடைய பரீட்சை அடைவுகளை உயர்த்த வேண்டும். எதிர்காலத்தில் எமது இன்றைய இளைய சந்ததியினர் எந்த ஒரு தொழிலைத் தெரிவுசெய்யவும் சர்வதேச மொழியான ஆங்கில மொழி அவசியமாகின்றது. இத்துறை யில் பல்வேறு பரிமாணங்களில் வளர்க்கப் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன், மாணவர்கள் தாமாகவே கஷ்ரப்படும் வழிகளையும் காணவேண்டி யுள்ளது.

**நவீன கல்வி நிலைகள்**

தற்போது கல்வியானது பரந்த செயற் தொகுதியைக் கொண்டு விளங்குகின்றது. பல வளர்ச்சியடைந்துவரும் நாடுகளே கல்வித் துறையிற் பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றன. இந்நிலையில் எமது நாட்டு மாணவர்களின் கல்விநிலை பாடசாலை முறைமைகளில் சீர்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. எம் நாட்டில் இதுவரை இருந்துவந்த கல்வி முறைமூலம் உருவாக்கப்பட்ட பெரும்பான்மையோரிடத்தே செயன்முறைத் திறன்கள் போதியளவு விருத்தி யாகவில்லை. கல்விக் கோலமானது பாடவிடயங் களை மனனம்செய்து, பரீட்சை வினாத்தாள் களுக்குப் பொறிமுறைரீதியில் விடையளிப் பதற்கு மாணவரைப் பயிற்றுவிக்கும் ஒன்றாகவே அமைந்தது. நாட்டின் பொருளாதார சமூகத் தேவைகளுக்கு ஏற்றவாறு தமது அறிவைப் பிரயோகிக்கக்கூடிய ஆக்கத் திறன்களைக் கொண்ட பிரஜைகள் கல்வித் தொகுதியினூடு உருவாக்கப்படவில்லை எனவும் விமர்சிக்கப் படுகின்றது. இந்நிலையைப் போக்க இன்றைய மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தியாக்க ஆசிரியர்களுக்கும் சிறந்த பயிற்சியை அளிக்க வேண்டும் என்ற நோக்கிலும். மற்றும் இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு ஆலோசனை, வழிகாட்டல் வழங்கும் நோக் கிலும் தேசிய கல்வியியற் கல்லூரியின் நவீன பாட விதானம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

மனித வளமுகாமைத்துவம் தொடர்பான விருத்தி நிலைகளே ஆசிரியர் வாண்மைக் கல்வியின் முக்கியமாக இருக்கின்றது. இதற்கு ஏற்ப தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நவீன மனிதவள முகாமைத்துவத்தைச் சீரமைக்கும் வாண்மைத்துவப் பாடநெறிகளும் பயிற்று விக்கப்படுகின்றன. அவை கல்வி உளவியல், கல்விச்சமூகவியல், கல்வி வழிகாட்டலும், ஆலோசனை வழங்கலும், கல்வி அளவீடும் மதிப்பீடும், கல்வியின் அடிப்படைத் தத்து வங்கள், கல்வி முகாமைத்துவம் என்பன இப் பாடங்களைப் பயில்வதன்மூலம் பயிற்சி பெறு வோர் தமது ஆளுமைகளை வளர்த்ததுடன், மாணவர்களுடைய தனியார் வேறுபாடுகளை உணர்ந்து, அவர்களது தேவைகளை இனம் கண்டு கற்பிக்கும் ஆதரவைப் பெறுவர் இதுவே இன்றைய நவீனகல்வி முறையின் முக்கிய தேவையாகவுள்ளது. மேலும் தகவல் தொழில் நுட்ப அறிவைப் பாடசாலை மாணவர்கள் விரி வாக்கும்போதும், பல தொழில் வாய்ப்புக்

களையும் பெறக்கூடிய சந்தர்ப் பங்களும் உண்டு. இவ்வகையில் ஆசிரியர் கல்வியின் நவீன பிரயோகங்கள் உள்ளன.

1. ஆசிரியத் தொழிலில் முன் சேவைப் பயிற்சிகளையும், உள்ளகப் பயிற்சியையும் பெற்றோரையே தேர்ந்தெடுத்தல்.
2. ஆசிரியர் கல்வியை கோள்நிலைச் சமூகத்தின் (Global Society) பரிமாணங்களுடன் ஒன்றிணைத்தல்.
3. ஆசிரியர் கல்வி வழியாக அனைத்து மக்களுக்குமுரிய பொதுக்கல்வி, சிறப்புக் கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி முதலியவற்றை முன்னெடுத்தல்
4. கல்வியையும், தொழில் நிறுவனங்களையும், தொழில் வாய்ப்புக்களையும் ஒன்றிணைப்பதற்கு உதவுதல்.
5. கற்பிக்கும் நிலையிலிருந்து மாணவர்களைக் கற்கும் நிலைக்கு நகர்த்துதல்.
6. கல்விக் கோட்பாடுகளுக்கும். நடைமுறை வாழ்க்கைக்குமிடையே காணப்படும் இடைவெளியைச் சுருக்குதல். கல்வியினூடு அறம், விழுமியம் தொடர்பான முக்கியத்துவங்களை இனம் காணல்.

இவ்வாறாக தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விச் செயலாற்றுகைகள் நவீன கல்வித் தேவைகளுக்கு ஏற்ப ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. இவற்றைப் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர் உணர்ந்து ஆசிரியத் தொழிலில் விருப்பமானோர் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிலக்கூடிய பாட நெறிகளில் பயில முடியும். எனவே மாணவாக்ள் தமது எதிர்காலக் கல்வி உயர்கல்வி, தொழிற் கல்வி, தொழிற்கல்வி தொடர்பாகப் பல தகவல் களைப் பெறவேண்டும். தகவல் தொழில் நுட்பம், இன்ரநெற் வர்த்தமாணி, ஊடகங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி இன்றைய மாணவர்கள் தமது தகவல் சேகரிக்கும் ஆற்றலையும், தேர்ச்சிகளையும் பெறவேண்டியுள்ளது. மேலும் ஒரு எதிர்காலத் தெரிவுக்குப் பதிலாகப் பல தெரிவுகளை இனம் காணக்கூடிய அளவு படிக்க அனுபவம் வேண்டும். அப்போது பலத்த போட்டிகளில் இருந்து எமது மாணவர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

முன்னைய காலங்களைப் போல் அல்லாமல் இன்றைய சமூகம் எளிமையான நிலையிலிருந்து சிக்கலான நிலமைக்குச் செல்லத் தொடங்கியுள்ளது. முன்னர் கல்விபற்றி இருந்த வரைவிலக்கணங்கள் தற்போது மாறத் தொடங்கிவிட்டன. பாடரீதியாக, கோட்பாட்டு ரீதியாக, உளவியல் ரீதியாக, வைத்திய ரீதியாக, சமூகவியல் ரீதியாக, விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் காரணமாக கல்வியின் மிகப் புதிய எண்ணக்கருக்கள் எழத் தொடங்கிவிட்டன. இதன் பிரகாரம் முறைசார் கல்வியிலிருந்து முறைசாரா, முறையில் கல்வியினூடாக விரைவான அபிவிருத்திகள் இன்று ஏற்பட்டுள்ளன. புதிய நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ள இன்றைய மாணவர்களுக்கு இப்புதிய கல்வி எண்ணக்கருக்களை இனம்காண ஆசிரியர்கள் பல புதிய செயற்திட்டங்களையும், செயல்நிலை ஆய்வுகளையும் மேற்கொண்டு மாணவர்களுக்கு நல்வழிகாட்ட வேண்டிய தேவை இன்று பெருகியுள்ளது.

# இலங்கை அரசியல் யாப்பின் 17வது திருத்தச் சட்டம்

**திரு. மா.கணபதிப்பிள்ளை**
பிரதி அதிபர்,
றோயல் கல்லூரி, கொழும்பு-07.

இன்று பாராளுமன்றத்திற் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள (08 சித்திரை 2008) பாராளுமன்றச் செயலாளர் நாயகம் நியமனம் சனாதிபதியின் மேலாதிக்கத்தை அல்லது அரசியல் யாப்பை மதிக்காமையைச் சுட்டிக்காட்டுகின்றது என எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றனர். இலங்கை லஞ்சம், ஊழல் போன்றவற்றில் உலக நாடுகளில் முன்னணியில் உள்ளது போன்ற தகவல்கள் வந்தவண்ணம் உள்ளது. இந்நிலையில் இவற்றுக்கெல்லாம் சரியான தீர்வைத் தரத்தக்க இலங்கை அரசியல் யாப்பின் 17 ஆம் திருத்தம் சரியாக நடைமுறைப் படுத்தப்படாமைதான் இதற்குக் காரணம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அப்படி யானால் அந்தப் 17 ஆம் திருத்தம் என்னதான் சொல்கின்றது என்பதை நோக்கின்;

இலங்கை அரசியற் புலத்திற் பாரிய கருத்தாடலுக்கு முகம் கொடுத்துள்ள விடயம் பகிரங்கசேவை, பொலிஸ்சேவை, நீதித்துறை என்பன அரசியற் செல்வாக்குக்கு உட்பட்டு இந் நிறுவனங்களால் எதிர்பார்க்கப்படும் பாரபட்ச மற்ற நீதித்தன்மை இல்லாது போனதால் இந்நிறுவனங்களின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சிதைந்துள்ளது. மக்கள் இந் நிறுவனங்களை நம்பத் தயாரின்மையால் அதிகாரத்தைத் தம்கையில் எடுக்கும் பல சம்பவங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. சர்வதேச அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ள கருத்தில் இலங்கைப் பொலிஸ் திணைக்களமும், நீதித்துறையும் அதிக ஊழலுக்குள்ளாக்கப்பட்ட நிறுவனங்கள் என்று குறிப்பிடப்படுகிறது. பகிரங்க சேவையும், நீதித் துறையும் அரசியல் மயமாக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கில் 2001 ஆம் ஆண்டு, இலங்கை அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தமே 17வது சீர்திருத்தமாகும். இச்சீர்திருத்தத்தின் மூலம் அரசியல் அமைப்புப் பேரவை தாபிக்கப்பட்டது.

அரசியல் அமைப்புப் பேரவையின் அமைப்புப் பின்வரும் வகையில் அமையவேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன் அங்கத்தவர் களாக 10 பேர் நியமிக்கப்படுவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தலைவராக இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகரே செயற்படுவார் எனவும் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் 10 பேர் நியமனம் பெறுவர். அவர்கள்

- ◈ பிரதமர்
- ◈ சபாநாயகர்
- ◈ எதிர்க்கட்சித் தலைவர்
- ◈ ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒரு பிரதிநிதி.
- ◈ பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரும் இணைந்து பெயர் குறிப்பிட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஐந்து (05) பேர்.
- ◈ பிரதமரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் சாராத பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள ஏனைய சகல கட்சிகளின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப் படும் ஒருவர்.

இலங்கையின் நிர்வாகத்திற் பங்குபற்றக் கூடிய பின்வரும் அதிகாரிகளை அந்நிறுவனங் களுக்கு நியமிப்பதற்கு அரசியல் அமைப்புப் பேரவைக்கு ஜனாதிபதி முன்வைக்கும் பெயர் களை அரசியல் அமைப்புப் பேரவை அனுமதித் ததன் பின்னரே ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். இச்சிபார்சின் மூலம் ஜனாதிபதியின் தன்னாண்மை அதிகாரம் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- ❖ பிரதம நீதியரசரும், உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதியரசர்களும்
- ❖ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலை வரும் ஏனைய நீதியரசர்களும்
- ❖ நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்.
- ❖ சட்டமா அதிபர்
- ❖ கணக்காய்வாளர் நாயகம்
- ❖ பொலிஸ்மா அதிபர்
- ❖ ஒம்பூட்சுமன்
- ❖ பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம்

மேலும் பின்வரும் நிறுவனங்களுக்கான உறுப்பினர்களை அரசியல் அமைப்புப் பேரவை யின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி நியமிப்பார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள்
- ❖ தேர்தல் தொகுதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.
- ❖ பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.
- ❖ தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள்
- ❖ மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் கள்.
- ❖ இலஞ்சம் அல்லது ஊழல் குற்றங்களை விசாரிப்பதற்கான நிரந்தர ஆணைக் குழுவின் உறுப்பினர்கள்.
- ❖ நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

உண்மையில் ஜனாதிபதி தன்னிச்சைப்படி செயற்படாது அல்லது தான் சார்ந்த கட்சியி னருக்கு முன்னுரிமை கொடுக்காது, அரசியல் சார்பற்ற முறையில் நிர்வாகம் சீராக இயங்க இந்த 17 ஆம் சீர்திருத்தம் வழி செய்கின்றது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் தமது உறுப்பினர்கள் ஒருவரை நியமிப்பதிற் சிறிய கட்சிகள் மத்தியில் உடன்பாடின்மை காரணமாக அவ்வுறுப்பினர் நியமிக்கப்படாமை, அரசியல் அமைப்பு பேரவை இயங்காமைக்கான காரணங் களில் ஒன்று ஆகும்.

பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து நியமிக்கவேண்டிய உறுப்பினர் களும் ஒழுங்காக நியமனம் பெறாமையால் அரசியல் அமைப்புப் பேரவை இயங்க முடியாதுள்ளது.

மேற்படி காரணங்களாற் பகிரங்க சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு என்பவற்றின் உறுப்பினர்களையும் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றின் நீதியரசர்களையும் ஜனாதிபதி தன்னிச்சையாக நியமித்ததால் அரசியல் அமைப்புப் பேரவை பல்வேறு கண்டனங் களுக்குள்ளானது.

தற்போது பாராளுமன்றச் செயலாளர் நாயகம் நியமனத்தையும் ஜனாதிபதி தன்னிச் சையுடன் செய்த காரணத்தால். எந்த நோக்கத் திற்காக அரசியல் தலையீடில்லாத சுதந்திர அரசியல் நிறுவனங்களுக்காக உருவாக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவை தன் அத்திவாரமே ஆட்டங்கண்ட நிலையில் 17 ஆம் சீர்திருத்தம் இன்று பாரிய கண்டனத்துடன் செயற்பாடற்ற நிலையில் உள்ளது.

# தசாவதாரம்

திருமதி ஞானசக்தி கணேசநாதன்
விரிவுரையாளர் ,
(Dip.in Dance, B.A., Dip. in Edu, M.A.)
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

**அவதாரக் கோட்பாடு**

இந்து மதப்பிரிவுகளில் ஒன்றாகிய வைணவ மதத்திற்குரிய சிறப்பாக உள்ள கோட்பாடே அவதாரக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின் அவதார தெய்வம் விஷ்ணு ஆவார். அவதாரம் என்பதன் பொருள் "மேலான நிலையில் உள்ள இறைவன் ஆன்மாக்களின் உய்விற்காகத் தன்னிலையில் இருந்து கீழே இறங்கிவருதல்" என்பதாகும்.

இக்கோட்பாட்டின்படி உலகிலே தர்மமானது அழிந்து அதர்மமானது தலைதூக்கும் பொழுது தர்மத்தைக் காத்து அதர்மத்தை அழிப்பதற்கு இறைவன் பல வடிவங்கள் எடுக்கின்றான் எனவும், அதுவே அவதாரம் எனவும் கூறப் படுகின்றது. இந்தவகையில் விஷ்ணுவுக்குரிய அவதாரம் பத்தாகும். இதனை "தச அவதாரங்கள்" என்பர். இவற்றில் எடுக்கப்பட்ட அவதாரங்கள் ஒன்பது எனவும், அவையாவன மத்ஸ்ய அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், வாமன அவதாரம், நரசிம்ம அவதாரம், பரசுராம அவதாரம், பலராம அவதாரம், ஸ்ரீஇராம அவதாரம், ஸ்ரீகிருஷ்ண அவதாரம் என்பவையாகும். இனிமேல் எடுக்கப்போகும், அவதாரம் கல்கி அவதாரம் ஆகும். இது வெள்ளைக் குதிரை ஒன்றின் மீது போர் வீரன் வடிவில் ஒரு கையில் வாளும் மறு கையிலே கேடயமும் கொண்டு வரப்படும் என்றும் இவ் அவதாரம் ஊழிக்கால முடிவில் விஷ்ணுவால் எடுக்கப்படவிருக்கும் அவதார மாகவும் கூறப்படுகின்றது.

**1. மத்ஸ்ய அவதாரம் (மீன்)**

பிரமதேவரிடம் இருந்த நான்கு வேதங்களை யும் சோமுக என்ற அசுரன் களவாக எடுத்துச் சென்றுவிட்டான். அதனை மீட்டு எடுத்து வருவதற்காக விஷ்ணுபகவான் மீன் அவதார மாகச் சென்று, சமுத்திரத்தின் கீழ் ஒழித்து வைக்கப்பட்ட நால் வேதங்களையும் மீட்டு வந்தார். அதற்காக எடுக்கப்படட அவதாரம் மத்ஸ்ய அவதாரம் ஆகும்.

**2. கூர்ம அவதாரம் (ஆமை)**

விருத்திராசுரன் என்ற அசுர அரசனும் தேவர் களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெறுவதற்காக மந்திரமலையை மத்தாகவும் வாசுகியை நாண் ஆகவும் பாவித்துக் கடைந்த பொழுது மந்திரமலை ஒருபக்கம் சரிந்து நின்றது. அதனை நேர் செய்வதற்காக விஷ்ணுபகவான் ஆமை வடிவெடுத்து மந்திர மலையைத் தாங்கி நின்றார். இதனால் அமிர்தம் தேவர்களுக்குக் கிடைக்கப் பெற்றது இதுவே கூர்ம அவதாரம்.

**3. வராக அவதாரம் (பன்றி)**

இரண்ணியாட்சதன் என்கின்ற அசுரன் ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் பூமாதேவியைக் கொண்டு சென்று மறைத்து வைத்திருந்தான்.

மகாவிஷ்ணு பன்றி உருவம் எடுத்துச்சென்று தன்னுடைய மின்னும் முன்பற்களால் பூமா தேவியைத் தூக்கிவந்து சமுத்திரத்திற்கு மேல் வைத்தார். இதுவே வராக அவதாரம் ஆகும்.

### 4. நரசிம்ம அவதாரம் (தலை சிங்க வடிவம் உடல் மனித வடிவம்)

இரண்யகசிபு என்ற அசுரன் "ஓம் நமோ நாராயணா" என ஒருவரும் கூறக்கூடாது எனவும் தனது நாமமான "இரண்ணியாய நம" என்றே கூறவேண்டும் என்று கட்டளை இட்டான். ஆனால் இரண்ணிய கசிபுவின் மகனான பிரகலாதன் "ஓம்நமோநாராயணா" என்றே தினமும் உச்சரிப்பேன் என அடம்பிடிப் பான். இதனால் கோபம் மேலிட்ட இரண்ணிய கசிபு ஒருநாள் மகனிடம் உன் கடவுள் நாராயணன் எங்கே இருக்கின்றான்? என்று வினாவினான் அதற்குப் பிரகலாதன் நாராயணன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்றதும் கோபம் மேலிட்ட இரண் ணியகசிபு தன் மகனை நோக்கி இத்தூணிலும் உன் நாராயணன் இருப்பானா? என்று தூணை உதைத்தான். அந்நேரத்தில் மகாவிஷ்ணு தலை சிங்கமாகவும் கீழ்ப்பாகம் மனித உடலும் பொருந்திய நரசிம்மமூர்த்தி யாகத் தோன்றி இரண்ணியகசிபுவைக் கொன்றார். இதுவே நரசிம்ம அவதாரம் கூறி நிற்கின்றது.

### 5. வாமன அவதாரம் (குறளன்)

மாபலி என்ற அசுர அரசன் அஷ்வ மேத யாகம் செய்தான். யாகம் செய்யும் பொழுது தானம் வழங்குவது கடமை என்பதால் மகாவிஷ்ணு வாமனரூபம் எடுத்துத் தனக்கு மூன்று அடி மண் தரும்படி வேண்டினார். அதற்கு இசைந்த மாபலி மூன்றடி மண் தந்தேன் என்று தாரைவார்த்துக் கொடுத்தான். அப்போது வாமனரூபம் எடுத்து பூமியையும் ஈரேழு உலகங் களையும் இரண்டடியால் அளந்து மூன்றாவது அடியை எங்கே வைப்பது என்று கேட்டபோது தன்தலையை மாபலி கொடுத்தாள் அதனால் அசுரரான மாபாஜி நற்கதி பெற்று விஷ்ணுபதம் அடைந்தான்.

### 6. பரசுராம அவதாரம்

ஜமதக்கிணிரிசியின் மனைவியான ரேணுகா என்பவள் ஆற்றில் நீராடுகையில் அந் நீரின் மீது ஒரு கந்தர்வனின் நிழல்பட்டது. அதனைக்கண்டு அவன் வடிவில் மோகம் கொண்ட ரேணுகாவை ஞானதிருஷ்டியினால் அறிந்த ஜமதக்கினிரிசி கோபம் அடைந்தார்.

தனது குமாரர்களில் நான்காவது குமார ரான பரசுராமரிடம் தாயின் செயலைக் கூறி அவர் தலையைக் கொய்து வரும்படி கட்டளை இட்டார். தகப்பனின் கட்டளையை ஏற்ற பரசுராமர் தாயின் தலையைக் கொய்து சென்று தன் தந்தையான ரிசியின் முன் வைத்தார். ரிசி உடனே சந்தோஷ மிகுதியால் மகனிடம் நீ விரும்பிய வரம் ஒன்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். உடனே பரசுராமர் தன் தாயை உயிருடன் மீட்டுத் தருமாறு வேண்டி னான் ரிசியும் அதற்கு உறுதி அளித்து தாயை மீட்டுக் கொடுத்தார். இதுவே பரசுராம அவதாரம் ஆகும்.

### 7. பலராம அவதாரம்

விஷ்ணுவின் இந்த அவதாரம் கிருஷ்ண னின் அண்ணனாகப் பிறந்து எந்நேரமும் கோடரியை ஆயுதமாகக் கொண்டு செல்வார். தேனுக என்ற அரக்கியை வதம் செய்தார். இதுவே பலராம அவதாரமாகும்.

**8. இராம அவதாரம்**

விஷ்ணுபகவானின் உயர்வான தர்ம நிலையான அவதாரம் இதுவாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவத்தை நிலை நாட்டியமையைக் குறிக்கிறது. அதாவது தசரதச் சக்கரவர்த்தியின் மகனாக அவதரித்து பரதன், சத்துருக்கன், இலட்சுமணன் ஆகிய சகோதரர்களுடன் வாழ்ந்து வரும்போது, விஸ்வாமித்திரனின் வே ண்டுதலினால் இராமரும் இலக்குமணனும் யாகம் காக்கச் செல்கின்றனர். அப்பொழுது சீதையைக் கண்ட இராமன் அவள் மேல் காதல் கொள்கின்றான். ஜனகனின் அவையில் சிவதனுசுக்கு நாண் ஏற்றி அதை முறித்து அதற்குரிய பாராட்டை பெற்று சீதையை மணம் புரிந்தான். இதன்பின் சிறிய தாயான கைகேயின் வேண்டுதலினால் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய சீதையுடனும், இலக்குமணனுடனும் காட்டிற்குச் செல்கின்றான். அத்தோடு குகனின் நட்பையும் பெறுகின்றான். இதன்பின் தம்பியான பரதன் இராமரின் பாதுகையைப் பெற்றுவந்து ஆட்சிபுரிகின்றான். இதன்பின் சீதை பொன்மானைப் பிடித்துத் தரும்படி வேண்ட இராமபிரான் பொன்மானைத் தொடருகின்றார். இராமரைக் காணாத இலக்குமணனும் தனது அண்ணனைத் தேடிச் செல்லும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய இராவணன் சீதையைப் பர்ண சாலையோடு ஆகாயமார்க்கமாகத் தூக்கிச் செல்லும் பொழுது சடாயுவுடன் சண்டை இட்டுச் சடாயு மடிந்தபின் இலங்கையை அடைகின்றான். இராமன் அனுமானின் துணையுடன் சுக்கிரீவனின் நட்புப்பெற்று வாலியைக் கொன்று இராவணனுடன் யுத்தம் செய்து சீதையை மீட்டுவந்த பின் பட்டாபிஷேகம் செய்து ஆட்சிபுரிந்தான். இதுவே இராம அவதாரம் எடுத்து அவர் செய்த சாதனை ஆகும்.

**9. கிருஷ்ண அவதாரம்**

இந்த அவதாரத்தில் விஷ்ணுபகவான் தேவகியின் மைந்தனாகப் பிறந்து ஹம்சனைக் கொல்வதற்காக யசோதையினால் வளர்க்கப் பெற்று பூதகி என்ற இராட்சதியைக் கொன்று ஆயர் பாடியில் கோவர்த்தனமலையைக் குடையாகப் பிடித்து ஆயர் சிறுவனாகத் திரிந்து ஹம்சனையும் அழித்தான். அத்தோடு பாரதப் போரின்போது தர்மம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகப் பாண்டவர்கள் பக்கம் நின்று யுத்தமுனையில் அர்ச்சுணனுக்கு கீதா உபதேசம் செய்து அர்ச்சுணனின் மனம் தெளிவடையச் செய்து போர்புரிந்து துரியோதனைக் கொன்று அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டியமையை இவ் அவதாரம் மூலம் அறியலாம்.

**10. கல்கி அவதாரம்**

கலியுகத்தில் அதர்மம் ஓங்கி தர்மம் குன்றும் வேளையில் விஷ்ணுபகவான் கல்கியாக அவதரித்து ஒரு தண்டந்தின் அடியால் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநாட்டிய பின் பகவான் துளசிமாலை அணிந்து நன்மையும் சந்தோஷமும் உண்டாகுமாறு அருள்புரிவார்.

# குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி

திரு.பொ.செங்கதிர்ச்செல்வன்
B.A.(Hons)M.Phil
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

குற்றியலுகரம் என்பது தனிக்குற்றெழுத் தல்லாத மற்றைய எழுத்துக்களுக்குப் பின்னே மொழிகளின் இறுதியில் வல்லின மெய்களின் மேல் ஏறிவரும் உகரமாகும். இக் குற்றியலுகரம் ஈற்றெழுத்தாகிய தன்னைத் தொடர்கின்ற அயலெழுத்தின் வகையினாலே

நெடிற்றொடர் குற்றியலுகரம் = நாகு, ஆடு
ஆய்ததொடர்க் குற்றியலுகரம் = எஃகு, கஃசு
உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் = வரகு, பலாசு
வன்றொடர்க் குற்றியலுகரம் = கொக்கு, கச்சு
மென்றொடர்க் குற்றியலுகரம் = சங்கு, வண்டு
இடைத்தொடர்க் குற்றியலுகரம் = அல்கு, எய்து

என 6 வகைப்படும். இத்தகைய குற்றியலு கரத்துள் எண்ணுப்பெயர்கள் புணரும்பொழுது எவ்வாறு புணரும் என்பதனை நோக்குவோம்.

பத்தோடு எண்ணுப் பெயர்கள் புணரும் பொழுது எவ்வாறு புணரும் என்பதனை முதலில் நோக்குவோம்.

ஒன்று முதல் எட்டு இறுதியாகவுள்ள எல்லா எண்ணுப் பெயர்களும், பத்தென்னும் எண்ணுப் பெயரின் முன்னேவரின், அப்பத்தென்னும் சொல்லிற் குற்றியலுகரந்தான் ஏறி நின்ற மெய்யொடுங் கெடும் இரண்டல்லாத ஏனைய பெயர்கள் வருமிடத்து இடையில் 'இன்' சாரியை வந்து புணரும் என்பதனை,

"ஒன்று முதலாக எட்டன் இறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றியலுகரம் மெய்யொடுங்கெடுமே முற்ற
இன் வருஉம் இரண்டலங்கடையே" என்கிறார் தொல்காப்பியர்.

உ–ம்: பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + மூன்று = பதின்மூன்று
பத்து + நான்கு = பதினான்கு
பத்து + ஐந்து = பதினைந்து
பத்து + ஆறு = பதினாறு
பத்து + ஏழு = பதினேழு
பத்து + எட்டு = பதினெட்டு

(பதின்நான்கு, பதின்னான்கு என்பன தவறான பிரயோகங்கள்)

பத்தின் முன் இரண்டு வந்தால் பத்திலுள்ள தகர ஒற்றுக்கெட அவ்விடத்திலே னகரவொற்று இரட்டித்து வருதல் நடைபெறும்.

"பத்தினொற்றுக் கெட னகாரம் இரட்டல்
ஒத்த தென்ப இரண்டு வருகாலை" (434)

உ–ம்: பத்து + இரண்டு = பன்னிரெண்டு

பத்தின் முன் ஆயிரம் என்னும் எண் வரினும் ஈறுகெட்டு இன் பெற்று முடியும் என்பதாம்.

"ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது" (435)

உ–ம் : பத்து + ஆயிரம் = பதினாயிரம்.

எண்ணுப் பெயர்களோடு பத்து வந்தால் புணரும் முறையினை நோக்குவோம்.

ஒன்று முதல் ஒன்பது இறுதியாகவுள்ள குற்றியலுகர இறுதிச் சொற்கள் நிலை மொழியாகவும் பத்து வருமொழியாகவும்

வருமாயின் பத்து என்பதில் தகர ஒற்றுக்கெட அவ்விடத்தில் ஆய்தம் இடையே வந்து நிலை பெறும் இயல்பை உடைத்தென்பர் நிலை மொழிகளுள் குற்றியலுகரம் முன்னர் கூறப்பட்ட தன்மைத்தாய் மெய்யோடுங் கெட்டு முடியும்.

"ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்தினொன்றுக் கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய இயற்கைக் குற்றிய லுகரம்
ஆறன் இறுதி அல்வழியான" (437)

முதலிரண்டு எண்ணாகிய ஒன்று, இரண்டு ஆகியவற்றுடன் பத்துப் புணரும்போது அவற்றின் ஒற்றாகிய னகரமும் ணகரமும் ரகரவொற்றாய்த் திரிந்து நிற்கும் அதன்பின் உகரம் அவ்விடத்து வரும்.

"முதல் ஈரெண்ணின் ஒற்று ரகரம் ஆகும்
உகரம் வருதல் ஆவயினான" (438)

உ—ம்: ஒன்று + பத்து = ஒருபஃது
இரண்டு + பத்து = இருபஃது

இரண்டு என்னும் எண்ணிற்கு இடை நின்ற ரகரம் அம்மொழி பொருள் பெறும் இடத்து, நடக்கும் இடமின்றிக் கெடும்.

உ—ம் : இருபஃது

"இடைநிலை ரகரம் இரண்டெடன் எண்ணிற்கு
நடை மருங்கின்றே பொருள் வயினான"
(439)

பொருளெனவே எண்ணல்லாவிடத்தும் இருகடல், இருவினை எனவே வரும்.

மூன்று ஆறு என்பவற்றின் நெடுமுதல் குறுகி முடியும் மூன்றின் னகர ஒற்றுப் பகர ஒற்றாய் முடியும்.

"மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்" (440)
"மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும்" (441)

உ—ம்: ஆறு + பத்து = அறுபஃது
மூன்று + பத்து = முப்பஃது

நான்கு என்பதன் கண் நின்ற னகர ஒற்று றகர ஒற்றாய் முடியும்.

"நான்கனொற்றே றகரமாகும்" (442)

உ—ம்: நான்கு + பத்து = நாற்பஃது

ஐந்து என்பதன் கண் நின்ற நகரவொற்று, மகர ஒற்றாய் முடியும்

"ஐந்தனொற்றே மகரமாகும் (443)

உ—ம்: ஐந்து + பத்து = ஐம்பஃது

எட்டு என்பதன் கண் நின்ற டகரவொற்று ணகர ஒற்றாய் முடியும்

"எட்டன் ஒன்றே ணகாரம் ஆகும்" (444)

உ—ம்: எட்டு + பத்து = எண்பஃது

ஒன்பது என நிறுத்து பஃது என வருவித்து முடிக்குங் கால் ஒன்பது எனும் சொல்லின் ஒகரத்திற்கு முன் தகரவொற்றுத் தோன்றும். ஒகரத்திற்கு முன்னர் நின்ற னகரவொற்று இரண்டு ணகரவொற்றாக மாறும். வருமொழி யாகிய பஃதென் கிளவியின் பகரமும் ஆய்தமும் கெட அவ்விடத்திலே ஊகாரம் வந்து தோன்றும் வருமொழி இறுதிக் குற்றியலுகரத்து முன்னுள்ள தகரவொற்று, ரகரவொற்றாய் நிற்கும்.

"ஒன்பான் ஒகர மிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென்கிளவி யாய்த பகரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகரம் ஆகும்" (445)

உ—ம்: ஒன்பது + பத்து = தொண்ணூறு

ஒன்று முதல் ஒன்பது இறுதியாகிய சொற்களின் முன் நூறு எனும் எண்ணுப் பெயர் வரினும், பத்து என்பதோடு புணரும் வழிக் கூறிய தன்மையைப் பெற்று முடியும்.

"நூறு வரினும் கூறிய இயல்பே" (460)

உ—ம்: ஒன்று + நூறு = ஒரு நூறு

இரண்டு + நூறு = இரு நூறு

ஆறு + நூறு = அறு நூறு

மூன்று வந்தால் இதன் கண் நின்ற னகர ஒற்று நகர ஒற்றாக வரும்

"மூன்ற னொற்றே நகாரமாகும்" (461)

உ—ம்: மூன்று + நூறு = முந்நூறு

(முன்னூறு என்பது தவறு)

நான்கு, ஐந்து என்பன வந்தால் தம்மொற்றுக்கள் நிலை திரியாது முடியும்.

நான்கும், ஐந்தும், ஒற்று மெய்திரியா" (462)

இங்கு மெய் என்றதனால் நானூறு என்பதன் வருமொழி நகரத்துள் ஊகாரம் பிரித்து னகரவொற்றாக்கி ஊகாரமேற்றி நிலைமொழி னகரங் கெடுக்க வேண்டும் ஏனெனில் தொகை மரபில்

லகார னகாரமென்று சொல்ல வருகின்ற புள்ளிகளின் முன் தகாரமும் நகாரமும் முத லென்று சொல்லும்படியாகச் சில சொற்கள் வரின் றகார னகாரங்களாக வரும் (லனவென வரூஉம் புள்ளி முன்னர்த் தநவென வரிற்றன வாகுமே)" (149) என்று கூறியுள்ளதனலாகும்.

உ—ம்: நான்கு + நூறு = நானூறு

ஐந்து + நூறு = ஐந்நூறு

ஒன்பது நிலை மொழியாகவும் நூறு வருமொழியாகவும் வருமிடத்து ஒன்பது என்பதன் முதலெழுத்து முற்கூறப்பட்ட தன்மைத் தாய் தன்முன் தகரவொற்றைப் பெறும். அதன் பின்னருள்ள னகர வொற்று ளகர வொற்றாகி இரட்டும். ப என்பது கெட நூறு என்பதன் நகரம் கெட ஊ ஆவாக ஆகும். அவ்விடத்து ஆகாரத் திற்கும் இறுதி எழுத்திற்குமிடையில் ஓர் இகரமும் ரகரமும் வருதல் வேண்டும். இறுதியாகிய "று" கெட்டு அவ்விடத்தில் மகர ஒற்று வந்து முடியும்.

"ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊ ஆவாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்" (463)

உ—ம்: ஒன்பது + நூறு = தொள்ளாயிரம்.

ஆயிரம் ஒன்று முதல் ஒன்பது எண்கள் முன்வரும் காலத்தில் ஒரு இரு எனும் எண்ணின்கட் பெற்று நின்ற உகரம் கெட்டு முடியும்.

"ஆயிரக்கிளவி வரூஉங்காலை
முதலீரெண்ணினுகரங் கெடுமே" (464)

உ—ம்: ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்

இரண்டு + ஆயிரம் = இராயிரம்

"முதனிலை நீடினும் மானமில்லை" (465)

உ—ம்: ஓராயிரம், ஈராயிரம்

மூன்று முன் ஆயிரம் வந்தால் மூன்றிலுள்ள னகர ஒற்று வகர ஒற்றாய்த் திரிந்து முடியும்.

" மூன்றனொற்றே வகாரம் ஆகும்" (466)

உ—ம்: மூன்று + ஆயிரம் = முவ்வாயிரம்,

மூவாயிரம்.

நான்கு முன் ஆயிரம் வந்தால் நான்கிலுள்ள னகர ஒற்று லகர ஒற்றாக முடியும்.

"நான்கனொற்றே லகார மாகும்" (467)
உ—ம்: நான்கு + ஆயிரம் = நாலாயிரம்

ஐந்து என்பதன் முன் ஆயிரம் வந்தால் ஐந்திலுள்ள நகர ஒற்று யகர ஒற்றாகத் திரிந்து முடியும்.

"ஐந்தனொற்றே யகாரம் ஆகும்"
உ—ம்: ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்

ஆறு முன் ஆயிரம் வந்தால் ஆறு என்பதிலுள்ள குற்றியலுகரம் நெடுமுதல் குறுகி அறு என முற்றுகரமாக நிற்றலின் அது தனக்குப் பற்றுக் கோடாகிய றகரவொற்றுக் கெடாது நிற்ப முற்றுகரமாகிய ஈறுதான் கெட்டுப் புணரும்.

"ஆறன் மருங்கிற் குற்றியலுகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்" (469)
உ—ம்: ஆறு ஆயிரம் = அறாயிரம்

இவ்விதி (440) "மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்" என்று குறிப்பிட்டபடி முற்று கரத்திற்கே கூறப்பட்டது. ஆறாயிரம் எனவரும்

ஒன்பது எனும் எண்முன் ஆயிரம் வந்தால் ஒன்பதின் இறுதிக் குற்றுகரம் தன் வடிவு நிலை திரிந்து கெடாது சாரியையாகிய மரபினை யுடைய இன் பெற்று முடிய வேண்டும்.

"ஒன்பானிறுதி உருபு நிலை திரியாது
இன் பெறல்வேண்டும் சாரியை மரபே" (470)
உ—ம்: ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்

ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண் களின் முன் நூறாயிரம் (100,000) வருமொழி யாய் வருமிடத்து ஒன்றென்னும் முதனிலைக் கிளவி ஒன்று முன் நூறு என்பது வருமொழியாய் வருமிடத்துப் பெறும் தன்மையைக் கொள்ளும். அஃதாவது 'ஒரு' என மாறும் வழிநிலைக் கிளவியாகிய இரண்டு முதலிய எண்கள் விகாரம் எய்தியும் எய்தாமலும் முடியும்.

"நூறாயிர முன் வரூஉங்காலை
நூறனியற்கை முதனிலைக்கிளவி" (471)
உ—ம்: ஒரு நூறாயிரம் இரு நூறாயிரம் முந்நூறாயிரம் நாநூறாயிரம் இரண்டு நூறா யிரம் மூன்றுநூறாயிரம் நான்கு நூறாயிரம்

நூறு முன் ஒன்று முதல் ஒன்பது எண்கள் வரை வருமொழியாக வருமிடத்து ஈறாகிய குற்றுகரம் தன்னாற் பற்றப்பட்ட மெய்யொடுங் கெடாது நிற்ப, அச்சினைக்கு இனமாகிய நகர ஒற்று மிக்கு முடியும்.

"நூறென்கிளவி ஒன்றுமுதல் ஒன்பான் பாற்கு"
ஈறு சினையொழிய இனவொற்று மிகுமே" (472)
உ—ம்: நூறு + ஒன்று = நூற்றொன்று

நூறுமுன் ஒருபஃது, இருபஃது முதலியன வந்தால்; ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள சொற்களைத் தழுவி வந்ததுபோல நூறு என்பதன் பின்வரினும் அந்நிலை மொழி ஈறுசினை ஒழிய இனஒற்று மிக்கு முடியும்.

"அவையூர் பத்தினுமத் தொழிற்றாகும்" (473)
உ—ம்: நூறு + ஒருபஃது = நூற்றொருபஃது
நூறு + இருபஃது = நூற்றிருபஃது

இவையல்லாமல் 'ஆகும்' என்று கூறியதால் அடை அடுத்தும் முடியும்.
உ—ம்: ஒரு நூற்றொருபஃது
இரு நூற்றொருபஃது

ஒருபஃது முதலியவற்றின் முன் ஒன்று முதல் ஒன்பதுவரை வருமொழியாக வந்து புணரு மிடத்து பஃதென்பதன் கண்நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும். அங்கு இன ஒற்றாகிய ஒரு தகர ஒற்று இடை மிக்கு முடியும்.

"ஒன்று முதலாகிய பத்தூர் கிளவி
ஒன்று முதல் ஒன்பாற்கு ஒற்று இடை மிகுமே
நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்" (465)
உ–ம்: ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று
இருபஃது + ஒன்று = இருபத்தொன்று.

இவற்றின் முன் ஆயிரம் வந்தால் இன் சாரியைவரும். அப்பொழுது இடையில் தகர ஒற்று வந்து மிகாது ஆய்தம் கெடும்.

"ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயின் ஒற்றிடை மிகுதல் இல்லை" (476)
உ–ம்: ஒருபஃது + ஆயிரம் = ஒருபதினாயிரம்
இருபஃது + ஆயிரம் = இருபதினாயிரம்

ஒன்று முதல் ஒன்பது எண்களோடு பொருட் பெயர் புணரும் முறையை நோக்குவோம்.

ஒன்று எனும் எண்ணின் முன் வல்லெழுத்து முதன்மொழி வரினும் ஞநமவக்களாகிய மெல் லெழுத்து முதன்மொழி வரினும் யவக்களாகிய இடையெழுத்து முதன்மொழி வரினும் அவ்வொன்று முதல் ஒன்பது முற்கூறிய முடிவு நிலைமை எய்தும்.

"முதனிலை யெண்ணின் முன் வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவந்தியையினும்
முதனிலை இயற்கை என்மனார் புலவர்" (478)
உ–ம்: ஒன்று + கல் = ஒரு கல்
இரண்டு + கல் = இரு கல் / இரண்டுகல்
மூன்று + கல் = முக் கல் / மூன்றுகல்
நான்கு + கல் = நாற்கல் / நான்குகல்
ஐந்து + கல் = ஐங்கல் / ஐந்துகல்

ஒன்றின் திரிபாகிய ஒரு என்பதுடன் உயிர் முதன்மொழியும், யாவென்மொழியும் வருமொழி யாக வருங்காலத்து அம்முதனிலையின் தன்மை ஒகரம் ஓகரமாய் நீளலும் ரகரத்து மேல் நின்ற உகரம் முற்றக் கெட்டு முடிதலுமாகிய நிலையைப் பெறும்.

"அதனிலை உயிர்க்கும் யாவருகாலை
முதனிலை ஒகரம் ஓவாகும்மே
ரகரத்து உகரம் துவரக் கெடுமே" (479)
உ–ம்: ஒரு + அடை ஓரடை
ஒரு + இலை = ஓரிலை
ஒரு + யாழ் = ஓர்யாழ்
ஒரு + யானை = ஓர்யானை

இரண்டு முதல் ஒன்பது எண்களின் முன் மா என்னும் அளவு முதலிய மூன்றற்குரிய சொல் புணரும்பொழுது எண்ணுப் பெயர்களின் முன்னர்த் தந்து புணர்க்கப்படும் மண்டை எனும் அளவுப் பெயரோடு ஒத்து விகாரப்பட்டு முடிதலும் உரித்து உம்மையால் விகாரப்படாது இயல்பாய் முடிதலும் உரித்து.

"இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர்
வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்
மகர அளவோடு நிகரலு முரித்தே"

(வழங்கியல் மா என்றது விலங்கு மாவை நீக்குதற்கு)
உ–ம்: இரண்டு + மா = இரண்டு மா / இருமா
மூன்று + மா = மூன்று மா / மும்மா

ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களோடு அளவுப் பெயரும் நிறைப்பெயரும் புணரும் பொழுது ஆறன் ஈறு அல்வழிக் குற்றுகரம் மெய்யொடுங்கெட்டு முதலீரெண்ணி னொற்று ஏகாரமாய் உகரம் வந்து இடைநிலை ரகரம் கெட்டு மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகி நான்கனொற்று வன் கணத்துறகரமாய், எட்டனொற்று ணகரமாய் முடியும்

"அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியும்
கிளந்த இயல தோன்றும் காலை" (446)

உ–ம்: ஒருகலம் = ஒன்று + கலம்

இருகலம் = இரண்டு + கலம்

அதன் கண் மூன்று எனும் சொல் வந்தால் இதன் னகர ஒற்று வருமொழி முதலோடு ஒத்த ஒற்றாய்த் திரிந்து முடியும்.

"மூன்றனொற்றே வந்தது ஒக்கும்" (447)

உ–ம்: மூன்று + கலம் = முக்கலம்

மூன்று + பானை = முப்பானை

ஐந்து வந்தால் ஐந்திலுள்ள நகர ஒற்று வருமொழி வல்லெழுத்துக்கு ஏற்ற மெல்லெழுத் தாகும்.

"ஐந்தனொற்றே மெல்லெழுத்தாகும்" (448)

உ–ம்: ஐந்து + கலம் = ஐங்கலம்

ஐந்து + தூதை = ஐந்தூதை

(கசதப ஆகிய வருமொழிகள் வரும்போது) மூன்றன் ஒற்று வந்ததொப்பதூஉம் ஐந்த னொற்று மெல்லெழுத்தாவதூஉம் அவ்வளவுப் பெயர் ஒன்பதிலும் வன்கணமாகிய கசதபக்கள் முதன் மொழியாய் வந்தவிடத்து ஆறு நெடுமுதல் குறுகும்.

"கசதப முதன்மொழி வரூஉங்காலை" (449)

உ–ம்: அறு கலம் = ஆறு + கலம்

அறு சாடி = ஆறு + சாடி

எட்டு என்பதன் முன் முற்கூறப்பட்ட வல்லெழுத்துக்களோடு நமவ என்னும் இவை வரினும் எட்டனொற்றே ணகரமாகும் எனும் சூத்திரத்திற் கூறப்பட்ட தன்மையைப் பெற்று முடியும் அதாவது டகரம் ணகர மாய் வேறோர் விகாரமின்றி இயல்பாக முடியும்.

"நமவ என்னும் மூன்றொடு சிவணி

அகரம் வரினும் எட்டன் முன் இயல்பே" (450)

உ–ம்: எட்டு + கலம் = எண்கலம்

எட்டு + கழஞ்சு = எண்கழஞ்சு

ஐந்து மூன்று எனும் எண்ணுப்பெயர்களோடு நகர மகர முதன்மொழிகள் வருமொழியாக வந்து புணருமிடத்து நிலைமொழிக் கண் நின்ற ஒற்று மேற்கூறியவாறே மகரமும் பகரமும் ஆகாது வருமொழி முதல் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும்.

"ஐந்தும் மூன்றும் நம வருகாலை

வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே" (451)

உ–ம்: ஐந்து + நாழி = ஐந்நாழி

ஐந்து + மண்டை = ஐம் மண்டை

மூன்று முன் வகரம் வருமொழி முதலாய் வருவழி மூன்று என்பதன் னகர வொற்று வருமொழியாய்த் தோன்றிய வகரத்தின் வடிவமாகும்.

"மூன்றனொற்றே வகாரம் வரும் வழித்

தோன்றிய வகாரத்து ருவாகும்மே" (452)

உ–ம்: மூன்று + வட்டி = முவ்வட்டி

"நான்கனொற்று லகாரமாகும்"

நான்கிலுள்ள னகர ஒற்று லகாரமாகும்

உ–ம்: நான்கு + வட்டி = நால்வட்டி

ஐந்து வந்தால் நகர ஒற்று வகர முதன் மொழி வந்தால் முன்னின்ற வடிவம் கெடும்.

"ஐந்தனொற்றே முந்தையது கெடுமே" (454)

உ–ம்: ஐந்து + வட்டி = ஐவட்டி / ஐவ் வட்டி

ஒரு இரு என்பதன் முன் உயிர் முதன்மொழி ஆகவுள்ள அளவு நிறைப் பெயர்கள் வந்தால் நிலை மொழியின் உகரம் கெடும். அவ்விடத்தில் அவ்விரண்டு எண்களின் முதலெழுத்துக்கள் நீண்டு முடியும்.

"முதலீரெண்ணின் முன் உயிர் வருகாலைத்

தவலென மொழிப உகரக்கிளவி

முதனிலை நீடல் ஆவயினான" (455)

உ–ம்: ஒரு + அகல் = ஓரகல்

இரு + அகல் = ஈரகல்

மூன்று நான்கு ஐந்து என்பதன் முன் உயிர் முதன்மொழி ஆகவுள்ள அளவு நிறைப் பெயர்கள் வந்தால் முன்னர் தோன்றி நின்ற வகரம் வருமொழிக்கு இயல்பாக மூன்றின்கண் வகர ஒற்றாகவும் நான்கின் கண் லகர ஒற்றாகவும் ஐந்தின் கண் ஒற்றுக்கெட்டும் முடியும்.

"மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்
தோன்றிய வகரத்தியற்கை யாகும்" (456)

உ—ம்: மூன்று + அகல் = முவ்வகல்
மூன்று + உழக்கு = மூவுழக்கு
நான்கு + அகல் = நாலகல்
நான்கு + உழக்கு = நாலுழக்கு
ஐந்து + அகல் = ஐயகல்
ஐந்து + உழக்கு = ஐயுழக்கு

மூன்று என்பதன் முன் உழக்கு என்பது வந்தால் மூன்று என்பதன் முதலிலுள்ள உயிர் நீண்டு முடிதலும் உரிமையாகும்.

"மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே
உழக்கென கிளவி வழக்கத்தான்"

உ—ம்: மூன்று = உழக்கு = மூவுழக்கு

ஆறு என்பதற்கு முன் அகல், உழக்கு என்பனவரின் முன்னர் குறுகிநின்ற முதலெழுத்து நீண்டு முடியும்.

ஆறென் கிளவி முதல் நீடும்மே

"ஆறு + அகல் = ஆறுகல்
ஆறு + உழக்கு = ஆறுழக்கு

ஒன்பது வரும்பொழுது ஒன்பதின் இறுதிக் குற்றுகரம் தன்வடிவு நிலை திரியாது நின்று சாரியைச் சொல்லாகிய 'இன்' பெறவேண்டும்.

"ஒன்பானிறுதி உருவு நிலை திரியா
இன் பெறல் வேண்டும் சாரியை மொழியே"

உ—ம்: ஒன்பது + கலம் = ஒன்பதின் கலம்
ஒன்பது + கழஞ்சு = ஒன்பதின் கழஞ்சு

பத்து முன் அளவு நிறைப் பெயர்கள் வருமிடத்து 'இன்' சாரியை குறையாது வந்து முடியும்.

"நிறையும் அளவும் வரூஉங்காலையும்
குறையாதாகும் இன்னென் சாரியை"

உ—ம்: பத்து + கலம் = பதின் கலம்
பத்து + கழஞ்சு = பதின் கழஞ்சு

நூறுமுன் அளவு, நிறைப் பெயர்கள் வந்தால் முன்னர் கூறியபடி இனஒற்று முடியும். (472, 473 இல் கூறியபடி) அவ்விடத்துக் குற்றியல் உகரம் கெடாமையும் இனஒற்று மிக்கு வன்றொடர் மொழியாய் நிற்றலின் வருமொழி வல்லெழுத்து மிகும் இயல்பும் "வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்துமிகுமே" (426) என வன்றொடர் மொழிக்குக் கூறிய தன்மையவாய் முடியும் என்று கூறுவர் புலவர்.

"அளவும் நிறையும் ஆயியல் திரியாது
குற்றியலுகரமும் வல்லெழுத்தியற்கையும்
முற்கிளந்தன்ன என்மனார் புலவர்" (474)

உ—ம்: நூறு + கலம் = நூற்றுக்கலம்
நூறு + தொடி = நூற்றுத்தொடி

ஒருபஃது, இருபஃது முதலியவற்றின் முன் அளவு, நிறைப் பெயர்கள் வந்தால் ஒற்று இடை மிகாது இன் சாரியை பெற்று முடியும்.

" அளவும் நிறையும் ஆயியல் திரியா" (477)

உ—ம்: ஒருபஃது + கலம் = ஒருபதின் கலம்
இருபஃது + கலம் = இருபதின் கலம்

# The role of role - plays in teaching English as a Second Language

**Mrs.Ranjini Naguleswaran**
Light House,
J/Ramanathan College

Role - plays are excellent motivating factors in class-room teaching. In role play, students imagine a role [eg. police officer, a shop assistant], a situaction (e.g buying food, planning a party) or both. Role play should be improvised : students decide exactly what to say as they go along.

Role - plays can be done as Controlled role - play and free role play.

**Controlled role play**

- Role play is based on a dialogue in the text book. After practising the dialogue, ask pairs of students in turn to improvise similar dialogues, or divide the class into pairs and let all the students improvise at the same time.
- Role play interview is based on a text. Ask one students to take the role of a character from the text. Other students ask him or her questions.

**Free Role - Play**

- Prepared in class. Discuss with the whole class what the speakers might say, and write prompts on the board. Let all the students practise the role - play in pairs first. Then ask one or two good pairs to perform the role-play infront of the class.
- Prepared at home. Divide the class into groups. Give each group a different situation and roles. Each group prepares their role-play out side the class, in their own time. groups perform their role - plays in turn on different days.

The role - plays that follow will encourage language teachers to create their own role plays to suit the language needs of their students.

**Situation-1**(Class teacher and a student)

Class teacher :-Sumitha. Why were you absent yesterday?

Student :- I'm sorry. My mother was sick. So I couldn't come

Class teacher:- Did you take her to the Doctor?

Student :- Yes Madam. She's better now.

Class teacher:- Did you bring the letter of excuse?

Student :- Sorry Madam. I'll bring it tomorrow.

Class teacher:- O.K Bring it tomorrow. It's the rule of the school.

Student :- Thank you

**Situation -2 (buy things in a shop)**

Shop Keeper :- Can I help you?

Sasi :- Yes certainly. How much is a Kilo of sugar?

Shop Keeper :- It's Rs 35/=

Sasi :- I need two kilos of sugar.

Shop Keeper :- What else?

Sasi :- A tube of tooth paste and a packet of noodles.

For successful Communicative class, teachers could create role plays / dialogues to enhance speaking skill.

## Some guide lines to successful role plays

- Think of the language and vocabulary.
- Lead in questions to engage student's interested in the situation.
- Explain the task clearly. Because students should know what they have to do.
- Encourage the students to do the role - play with expression and emotion Eg: Politeness, rudeness, anger, excitement etc.

  Role Plays boost the students to use the Language confidently in their real life situations.

- எழுந்து நில்லுங்கள், தைரியமாயிருங்கள், பலமுடையவராகுங்கள். உங்கள் விதியைப் படைத்தது நீங்களே என்பதை அறியுங்கள்
- கருணை நிறைந்த இதயம் கடவுளின்ஆலயம்.
- அறிவின் அந்தம் – அன்பு; கல்வியின் அந்தம் ஒழுக்கம்.
- எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.

# திருக்கோயில் வழிபாட்டை வளம்படுத்துவதிற் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவம்

**திருமதி சுகுணா சீனிவாசகம்**
ஆசிரியர்,
யா / இராமநாதன் கல்லூரி

சைவசமயத்தின் முதல் நூலாக விளங்குகின்ற ஆகமங்கள் திருக்கோயில் பண்பாட்டை அறிந்துகொள்ள சிறந்த மூலகங்களாக விளங்குகின்றன. பண்பாட்டின் முக்கிய அம்சங்களாகிய சமயம், தத்துவம், கலை ஆகிய துறைகளை வெளிப்படுத்துவதில் இவற்றிற்கு முக்கியத்துவம் உண்டு. தெய்வீக மரபோடு இணைத்துக்கூறும் ஆகமங்கள் பற்றியும், அவை எடுத்துக்கூறும் சமயநடைமுறைகள் பற்றியும் அவ்வப்போது பல விளக்கங்கள் கூறப் பட்டுள்ளன. இந்துசமய மரபில் ஆரம்பகாலங் களிற் காணப்பட்ட சமய நடைமுறைகளுக்கும், இற்றைக் காலப்பகுதியிற் காணப்படுகின்ற சமய நடைமுறைகளுக்குமிடையே சில அடிப்படை ஒற்றுமைகளும், அதேசமயம் குறிப்பிடத்தக்க சிலவேறுபாடுகளும் அவதானிக்கத்தக்கதாகும்.

இந்துக்களுடைய சமயநடைமுறைகளை தொல்பொருட்கள் மூலமாகவும், இலக்கியங்கள் மூலமாகவும் கிடைக்கப்பெறும் கருத்துக்களைக் கொண்டு அறிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளார் கள்.

இந்தியாவின் வடமேற்குப் பிராந்தியத்திலே நிலவிய சிந்துவெளி நாகரிக காலத்திலே காணப்பட்ட பல சமய நம்பிக்கைகள் அறிஞர் பலரது கருத்தின்படி ஏனைய சமயங்களைவிட இந்துசமயத்தோடுகூடிய தொடர்புகொண்டவை எனக் கருதப்படுகின்றது. அங்கு இடம்பெற்ற சமய நம்பிக்கைகள், புராணங்கள், ஆகமங்கள் சுட்டி நிற்கின்ற சமய மரபுகளை ஓரளவு எடுத்துக் காட்டுவனவாகக் கொள்ள முடியும். குறிப்பாகத் தெய்வங்களை திருவுருவங் களாக வழிபடும் மரபு இங்கு கவனிக்கத்தக்க தாகும். அத்துடன் புராணங்களில் சித்தரிப்பது போன்று விலங்குரு வங்களிலும், கலப்புருவங் களிலும் தெய்வழிபாடு நிலவியதை அவதானிக் கலாம்.

பொதுவாக இந்துசமயத்தின் பிரதான நெறிகள் தமக்கு மூலமாக வேதங்களையும், ஆகமங்களையும் ஏற்றுள்ளன. இச்சமய நூல்கள் தருகின்ற விடயங்களை நடைமுறைப் படுத்துவதில் காலத்துக்குக்காலம். உரிய கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளமையும், நாம் வர லாற்றுரீதியில் அறியமுடியும். வேதம், ஆகமங்க ளாகிய இரண்டும் இந்தியாவிலே அவ்வப்போது எழுந்த பல விளக்கநூல்கள் சமயக்கிரியை மரபுபற்றி அறிந்துகொள்வதற்கு உதவி செய் கின்றன. நீண்டகாலமாக இந்து சமயம் பரவிய இடங்களிலே இடம்பெற்றுவந்த பல்வேறு சமய நடைமுறைகள் யாவற்றிற்கும் ஒரு நல்ல விளக்கமாக அமைவது ஆகமங்கள் கூறுகின்ற திருக்கோயில் வழிபாட்டு மரபாகும். ஆகமம் என்று கூறுகின்றபோது சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம் போன்றவற்றிற் குரிய ஆகமங்களும் சிறப்பாகக் காணப்படுகின் றன. சைவசமயத்திற்குரியவை சிவாகமங்கள் என்றும். வைணவசமயத்திற்குரியவை வைணவ ஆகமம் என்றும், சாக்த சமயத்திற்குரியவை தந்திரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இவற்றுள் சிவவழிபாட்டை விதந்துபேசும் சிவாகமங்கள் திருக்கோயில் பண்பாடுகளை அறிவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. இச்சிவாகமங்கள் சைவத்தின் முதல் நூலாக விளங்குகின்றன. அத்துடன், வேதத்தையும் இணைத்துக் கொண்டுள்ள சிறப்பும் கவனத்திற் குரியது. வேதம் சிவபுராணத்தின் அம்சமாகவும், சிவாகமங்கள் அங்கியாகவும் சிறப்பிக்கப் படுவதுடன், வேதங்களை துதி நூலாகவும் ஆகமங்களை விதி நூலாகவும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. வேதத்தை மந்திர சாஸ்த் திரம் என்றால் ஆகமத்தை தந்திரசாஸ்திரம் என்று கூறலாம். இங்கு மந்திரம் என்பது தன்னை அடைந்தோரைக் காப்பாற்றுவது எனப் பொருள்படும். திருமந்திரத்திலே வேதங் களையும், ஆகமங்களையும் இறைவன் நூலாகப் போற்றுவதும், அவற்றிலே வேதத்தைப் பொதுநூலாகவும் ஆகமத்தைச் சிறப்பு நூலா கவும் ஏற்றுக்கொள்வதும், இவை இறைவனால் அருளப்பட்டவை எனக் கொள்வதும் பெரி யோர்கள் இவை இரண்டிற்கும் இடையே வேறுபாடு காணமாட்டார்கள் என்றும் விளக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**அதாவது:-**

"வேதமோடாகமம் மெய்யாமிறைவன் நூல்
ஓது பொதுவுஞ் சிறப்பு மென்றுள்ள
நாதனுரையினது நாடி விரண்டந்தப்
பேதமெதென்பர் பெரியோர்க்கபேதமே"

என்று திருமூலர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆகமம் என்னும் இப்பெயர் சுட்டும் சிறப்புப் பொருளை ஆராயுமிடத்து "தொன்றுதொட்டு வரும் அறிவு என்று பொருள்படும். ஆ,க,ம என்ற மூன்றெழுத்துக்களும் முறையே "ஆ" என்பது சிவஞானம் எனவும் "க" என்பது மோட்சதானம் எனவும் "ம" என்பது மலநாசம் எனவும் பொருள் கொள்ளப்படுகின்றன. எனவே ஆன்மாக்களின் மலமாசினை நீக்கி, சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுக்கும் என்ற சிறப்பான விளக்கத்தை உணர முடிகிறது.

இத்தகைய முக்கியத்துவமுடைய ஆகமங் கள் இருபத்தெட்டாகும். இவற்றுள் ஒருசில மட்டுமே எமக்குக் கிடைத்துள்ளன. இப்பொழுது நமக்குக் கிடைக்கும் ஆகமங் களுள் காரணமும், காமிகமும் மிக முக்கிய மானவை. இவை கிரியைகளைப் பற்றிக் கூறுவனவாகும். சிவாகமங்கள் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகசிரம், அம்சுமான், சுப்பிரபேதம் விஜயம், நிச்சுவாசம், வீரம், சுவாயம்புவம், ஆக்நேயம், ரௌரம், மகுடம், விமலம், சந்திர ஞானம். முகவிம்பம், புரோத்கதம், இலனிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பரமேஸ்வரம், கிரணம்,வாதுளம் என இருபத் தெட்டாகும்.

எனவே இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட சிவாகமங்கள் திருக்கோயில் வழி பாட்டை வளம்படுத்துவதில் பெறும் முக்கியத் துவம் பற்றி, ஆராய்வதற்கு சிவாகமங் கள் கூறும் உள்ளடக்கத்தினை துணையாகக் கொள்வது சிறந்ததாகும். சிவாகமங்கள் சரியா பாதம். கிரியாபாதம். யோகாபாதம். ஞானாபாதம் ஆகிய நான்கு பாதங்களைப் பற்றிக் கூறுகின் றன.

ஒவ்வொரு ஆகமத்திலும் சிறப்புற்ற பாதங்கள் மட்டும் வழங்கி வருவதைக் காணலாம். காரணாகமத்திலும், காமிகாம கத்திலும், கிரியாபாதம் மட்டுமே கூறப் படுகின்றது. சரியாபாதம் சமயாசாரங்களை

எடுத்துக்கூறும், கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம், சந்தியா வந்தனம், பூஜை, ஜபம் செய்தல், ஓமம் என்பவற்றை உபதேசிக்கும். யோகாபாதம் பிரானாகமம் முதலிய எட்டு அங்கங்களோடு கூடிய முப்பொருள் பற்றி உபதேசிக்கின்றது.

சைவத்தில் முக்கியமாக இறைவன் சாநித்தியம் பெற்று ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, அருள்பாலிக்கும் இடமாக ஆலயம் அமைகிறது. ஆலயம்பற்றி விரிவாக அறிவதற்கு ஆதாரமாக விளங்குவது சிவாகமங்களே ஆகும். இதுபற்றிக் கூறும் கிரியாபாதம் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நான்கு பிரிவுகளில் விளங்குகின்றது. கர்ஷணம் என்றால் உழுதல் என்று பொருள் படும். அதாவது பூமியை உழுது சமப்படுத்தி அளந்து சதுரமாக்கி பிரதிஷ்டை செய்வதற்குப் பக்குவப்படுத்தலைக் குறிக்கும். இது பிரதிஷ்டை வரையுள்ள விடயங்களை அடக்கும். பிரதிஷ்டை என்பது ஸ்தாபித்தல் அல்லது நிலைநிறுத்தல் எனப்பொருள்படும். இது இறைவனின் திருவுரு வத்தை உரியவாறு ஆலயத்தில் சாநித்தியம் பெறச்செய்வதாகும். உற்சவம் என்ற பிரிவு திருக்கோயிலில் நிகழும் மஹோட்சவ விதி களைக்கூறும். பிராயச்சித்தம் என்றால் கெடுதியை விலக்கி மீண்டும் தெய்வீக மடையச் செய்தல் எனப்பொருள்படும். இத்தகைய பிரிவுகள் சில ஆகமங்களில் சற்று வேறுபாடான அமைப்புக்களைக் கொண்டும் விளங்கும். உதாரணமாக கர்ஷணம், பிரதிஷ்டையோடு சேர்த்தும் பிராயச்சித்தம் உற்சவத்தோடு சேர்த்தும் கூறப்படுகின்றன. இந்நான்கு அம்சங்களும் ஆலயத்தோடு தொடர்புற்று விளங்குவன. இவற்றுள் வரும் விஷயங்களை நாம் வரிசைப்படுத்திக் கூறுவதாயின் ஆலய நிர்மாணம், மண்டபங்கள் பிரகாரங்கள் அமைப்பு, மூர்த்தி பிரதிஷ்டை நித்திய நைமித்தியங்கள், கிரியைகள் மஹோட்சவ விதிகள், செய்யப்படவேண்டிய பிராயச்சித்தம் என அமைவனவாகும். இதன் மூலம் ஆகமங் களின் கிரியாபாதம் திருக்கோயில் வழிபாட்டை வளம்படுத்துவதில் முக்கியபங்கு வகிப்பதனை உணரமுடிகிறது.

மேலும் காமிகாமகத்தின் எழுபத்தோராவது பிரகார லஷ்சணப்படலத்தில் ஆலயம் அமைக்கக் கூடிய இடம்பற்றி முதலிலும். பரிவார ஆலயங்கள் பரிவாரத் தேவதைகள் என்பன வாகிய விடயங்கள் அனைத்தும் கூறப் படுகின்றன. ஆலயப் பிரகாரங்களின் எண் ணிக்கை, ஆலயப் பிரமாணம் என்பன பற்றியும் விளக்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஆலயத்தின் ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்தின் உத்தம உயரங்களும், துவார அகலங்கள், கோபுர நிலையங்களின் அகலங்கள் என்பனவும் விரிவாகக் கூறப்படுகின்றன.

இறைவனுடைய திருவுருவங்களை உருவாக் கும் சிற்பநுணுக்கங்கள் பற்றியும், சிவாகமங்கள் எடுத்துக்கூறுவதன்மூலம் திருக்கோயில் வழிபாட்டை வளம்படுத்துவதோடு, இந்துசமய மரபில் முக்கிய இடத்தை வகிக்கின் றன எனலாம். காரணாகமம், காமிகாமகம் ஆகியவற் றில், இவை தொடர்பான விதிமுறை கள் உண்டு. திருவுருவங்களின் தீர்மானங்கள் பற்றி உத்தரகாரணாகமம் கூறுகின்றது. காமிகாமகத் தில் அறுபத்தைந்தாம் படலத்தில் பிரதிமால க்ஷணம் என்ற பிரிவில் திருவுருவங் களின் அமைப்பு முறைபற்றி விளக்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய திருக்கோயில் வழிபாட்டினை வளம்படுத்துவதில் முக்கியம் பெறும் ஆகமங்களைத் தென்னாட் டிற்கே சிறப்பாக உரியவை எனக் கூறுவது மிகை யாகாது.

இன்று நடைமுறையிலுள்ள திருக்கோயிற் கிரியைகளில் வேதமரபு, சைவமரபு சார்ந்த சில கிரியைகள் இடம்பெறுவன குறிப்பிடத்தக்கன. வைதீகப்பண்பு ஆகமம் வகுத்துக்கூறும் வழிபாட்டு மரபிலும் சுவறியுள்ளதைக் காண லாம். ஆகமம் வகுத்துக்கூறும் நைமித்தியக் கிரியைகளில் இடம்பெறும் கும்பாபிஷேகக் கிரியையில் நாம் இச்சிறப்பம்சங்களை உணர லாம். பிரதிஷ்டை என்ற சொல் குறிக்கும் பொருளினை விளக்குவதன்மூலம் கும்பா பிஷேகத்தின் உட்பொருளை அறியலாம். 'ப்ர' என்னும் பகுதி சிறப்பாக என்னும், நன்கு புலனாகும்படி என்னும் பொருள்படும். "திஷ்ட" என்னும் பகுதிக்கு நிற்றல் என்று பொருள்படும். எனவே பிரதிஷ்டை என்ற சொல் நன்கு புலனாகும்படி நிற்றல் எனப் பொருள்படும். இந் நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங் கள் கூறும் பிரதிட்டை ஆகும்.

பாரெங்கும் பரந்து விளங்கும் பரம் பொருளைப் பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்று விப்பது போன்று திருக்கோயிற் கிரியை வழிகளால் ஆகமம் எமக்குப் பரமபொருளை உணரவைக்கிறது. இவ்வாறு மந்திரச் சிறப்புடைய ஆலயக் கிரியைகளில் உன்னதமாக விளங்கும் கும்பாபிஷேகம் என்னும் பிரதிட்டைக் கிரியைகளில் வேதநெறியும், ஆகமநெறியும் கூறும் சமயமரபு சங்கமமாகின்ற உயர்நிலையை அவதானிக்க முடிகின்றது.

இயற்கைச் சக்திகளைத் தெய்வீக நிலைப் படுத்தி வழிபடுதல், அக்கினி வழிபாடு, மந்திர உச்சாடனம், அர்ச்சனை, தோத்திரம் போன்ற அம்சங்களில் இவற்றின் சிறப்பினை நாம் உணரலாம். எனவே ஆலயக்கிரியைகள் நீண்டகால பாரம்பரிய உணர்வின் நிகழ்காலச் சின்னமாக அமைந்து, பக்தி உணர்வை வளர்ப்பதோடு, ஆன்மீக ஈடேற்றத்திற்கு உதவு வனவாக உள்ளன. ஆகமங்கள்கூறும் கிரியை முறைகள் எமது சமயப் பாரம்பரியத்தில் உன்னத வழிமுறைகளாகவே அமைந்து விளங்குகின்றன எனலாம்.

எனவே ஆகமங்கள் கூறுகின்ற விடயங்கள் சைவர்களோடு அதாவது அவர்களுடைய வாழ்க்கையோடு இணைந்துள்ளவையாகக் காணப்படுகின்றன. சமய வாழ்க்கையின் உயர் நிலையமாக விளங்குகின்ற திருக்கோயிலோடு தொடர்புள்ள அனைத்து விடயங்களையும் வகுத்துக்கூறுவதில் ஆகமங்கள் சிறப்படை கின்றன. எனவே திருக்கோயில் வழிபாட்டை வளம்படுத்துவதில் சிவாகமங்கள் பெரும் முக்கியத்துவம் உடையனவாக விளங்குகின்றன என்றால் மிகையாகாது.

* *சுகமும் துக்கமும் இரட்டைக் குழந்தைகள்.*
* *தன்னை அடக்கி ஆளுதல் வேண்டும்.*
* *உங்களுக்கு ஒரு குறையுமில்லை உங்களை இன்னார் என்று அறியாதது தான் குறை.*

# நவரசங்களுக்குரிய இசையமைப்புக்கள்

# ரசங்களுடைய தோற்றம்

திருமதி நந்தினி சிவராஜன்
நடன ஆசிரியை,
யா/ இராமநாதன் கல்லூரி

உணர்ச்சிகளுடைய பேதங்கள் ரஸங்களாகப் பரிமளிக்கின்றன. உள்ளத்தில் உந்தும் உணர்ச்சி பேதங்கள் மனதைத் தூண்ட மனம் அதை உணர்ந்து அத்தோற்றத்தினை முகபாவமாகக் காட்டி விடுகிறது. இதனால்தான் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழி வழங்கலாயிற்று. இந்த ரஸபாவம் எப்படித் தோன்றியதென்பதை ஆராய்வோம். உணர்ச்சியை யாரும் சொல்லித் தருவதில்லை. இந்த உணர்ச்சியின் மூலாதாரம் உணர்ச்சிகளை உந்தச் செய்யும் மனமேயாகும். மனம் சலனமுள்ளது. இந்தச் சலனத்தை 9 வகையாகப் பிரித்தால் அவையே நவரசங்களாகத் தோன்றும் என்பது தெளிவாகும். உணர்ச்சியினுடைய பேதங்களை அதாவது ரஸனையை அனுபவித்தல் ரஸனை எனப்படும். இந்த ரசிகத்தன்மை கலைஞனுக்கும் ரசிகனுக்குமுள்ள தரத்திலேயே கலையின் தரமும், இரசிகத் தன்மையின் தரமும் அமைந்திருக்கும். ஒரு நாட்டியக் கச்சேரியை ஆடும் கலைஞனாயினும்சரி, சுவைக்கும் ரசிகனாயினும்சரி அவரவர் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிதான் கலைக்கும் ரசிகத் தன்மைக்கும் மூலாதாரமாக அமைவதனைப் பேரறிஞர் ஒப்புக் கொண்டுள்ளனர். மனிதன் ரசிகத் தன்மை மூலம் தெய்வமாகவும், கேவலம் மிருகமாகவும் மாறலாம். இது ரசிகத் தன்மையின் தரத்திலேயே தங்கியுள்ளது. நற்போதனைகளைப் போதிக்கும் நாட்டிய ரஸங்களை, கலை நுணுக்கத்தை அறிந்த ரசிகன் வெகுவாக ரசித்துக் கற்பனை உலகிற் சென்று மெய்மறந்து ரசிக்கக் கூடுமாயின் ரஸபேதங்கள் அவனை உயர்ந்த ரசிகனாக்கி, உயர்ந்த எண்ணப் பண்பாடுகளை எடுத்து அவனை தேவனாக மாற்ற வாய்ப்பளிக்கும். தரங்குறைந்த கலைகளை ரசிக்கும் உள்ளம் கீழ்த்தரமான ரசனையினால் உந்தப்பெற்று அந்த ரசிகன் பகுத்தறிவில்லாது விலங்குபோல நடக்கச் செய்வதும் தரங்குறைந்த கலைகளுமாம்.

உயர்ந்த கலைகளை இரசிக்கும் உள்ளங்களிலே அக்கலைக்கு விதிக்கப்பெற்ற இலக்கணங்களும் இலக்கியங்களும் அவனை உயர்ந்த நோக்குடன் உருவாக்குவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. அழகுணர்ச்சி இலக்கண வரம்பை மீறாமல் இலட்சியத்தை அடையும் நோக்குடன் இருந்து ரசிக்கும் ஆற்றலை ரசிகன் பெறுவது அவசியம். இத்தகைய ரசிகத்தன்மை இந்நாட்டில் அத்தியாவசியமாகக் கருதப்படுகிறது. கலையினது உன்னத இலட்சியமும் அதுதான்.

எத்தனை நூற்றாண்டாக இருந்தாலும் அழியாத செல்வமாக விளங்கிவரும் இக் கலையின் வளர்ச்சி, உயர்ச்சி, தாழ்ச்சி, வீழ்ச்சி என்பன ஒவ்வொரு கலைஞனிலும் தங்கியுள்ளது. ரசிகரின் தரமுயரும்போது கலைகளின் தரமுமுயரும். கலைகளின் தரமுயர கலைஞனின் தரமுமுயரும். கலைஞனின் தரமும்

உயர்ந்தால் அவனது கற்பனைப் படைப்புக்கள் மக்கள் உள்ளங்களில் பதிந்து, உள்ளங்களைப் பண்படுத்தி, பண்பை உயர்த்தி மனிதனின் இலட்சிய வாழ்வை உன்னதமாக்கி விடுகிறது. இவை அனைத்திற்கும் காரணம் ரஸங்களே.

இந்த ரஸங்களை அடிப்படையாகக் கொண்டது நாட்டியக்கலை. நாட்டியக் கலையை சமுதாய நோக்கில் ஆராய்வோமானால் நாட்டியமே வாழ்க்கையாகவும், வாழ்க்கையே நாட்டியமாகவும் கருத இடமளிக்கிறது. சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

சின்னஞ்சிறு குழந்தை தொட்டிலிலே தூங்குகிறது. திடீரென விழிக்கிறது. தனது பல்லில்லாத வாயால் ஒரு மோகனச் சிரிப்பை உதிர்க்கிறது. அந்தச் சின்னஞ் சிறு குழந்தையின் முகத்தில்தான் எவ்வளவு மகிழ்ச்சி, தனது உள்ளத்திலே உண்டாகிய சிருங்காரப் பாவத்தை அந்த மழலை தனது கண்களை அகல விழித்துப் பார்க்கும் முகமலர்ச்சியில்தான் எவ்வளவு லாவண்யம்.

உலகிலுள்ள அத்தனை அழகையும் எடுத்து அக் குழந்தையின் சிரிப்போடு ஒப்பிட்டால் அழகில் காணாதவையெல்லாம் அந்தச் சிறிய மதலையின் செவ்விதழ் கோணத்தில் தவழும் மோகனப் புன்னகைக்கு இணையாகுமா? உள்ளத்தில் பொங்கியெழும் சிருங்கார ரஸத்தின் பூரணத்துவம் அக்குழந்தையின் முகத்திற் பிரதிபலிக்கின்றது. திடீரென்று குழந்தையின் முகத்தில் மாறுதல். கண்களில் ஒரு மருட்சி, உதடுகளில் ஒரு வெம்பல், அந்தக் குழந்தைக்கு எதைக்கண்டாலும் வெறுப்பு. பீபத்சரசம் அக்குழந்தையின் முகத்தில் தாண்டவ மாடுகிறது. கைகால்களைப் பொத்திப் பிடித்துக்கொண்டு தனது தைரியத்தை வரவழைத்து ஒரு வீர கர்ஜனை, சின்னஞ்சிறு உடம்பை அசைத்து கைகால்களை ஆட்டிய அக்குழந்தையின் முகத்தில்தான் எவ்வளவு பெருமிதம், வீரம். அன்னையைக் காணவில்லை. கண்களை அகல உருட்டி விழிக்கிறான். முகஞ் சிவக்கிறான். கண்ணீர் மல்க ஓவென கதறுகிறான். அவன் முகத்தில் எத்தனை கோபம். திடீரென அன்னையைக் கண்ட அவனது முகத்தில் ஆச்சரியம். அங்குவந்த பெரிய நாயின் ஓலத்தைக் கேட்டு முகத்தில் பயம். அன்னையின் பாலை அருந்த வேண்டும் என்று கருணையுடன் பார்க்கிறான். அன்னையும் கருணையுடன் பார்க்கிறாள். இன்பமும் அமைதியும் இணைய அவன் முகத்தில்தான் எவ்வளவு சாந்தம். குழந்தைகளின் வாழ்க்கையிலே நவரசங்களாக சிருங்கார, பீபத்ஸ, பயானக, ஆச்சரிய, வீர, கோப, சாந்த, கருணா எனும் 9 ரசங்களும் குடிகொண்டிருப்பதை அவதானிக்கிறோம். உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் உணரும் வாய்ப்புண்டு. இதனால் வாழ்க்கையே நாட்டியம். நாட்டியமே வாழ்க்கை எனப் புலனாகிறது.

# மனித இனம் புவியில் நிலைத்திருக்குமா?

செல்வி சிவாஜினி வேலும்மயிலும்
ஆசிரியர்.
யா/இராமநாதன் கல்லூரி.

நாம் வாழும் இப்பூமியானது இற்றைக்கு 4.5 பில்லியன் வருடங்களுக்கு முன்பே தோற்றம் பெற்றதாக நம்பப்படுகிறது. எனினும் இப்புவியில் முதல் உயிரியான காற்றின்றிவாழ் இரசாயனத் தொகுப்புக்குரிய பற்றிரீயாவானது 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்பே தோன்றியது. இதன் தோன்றலுடன் படிப்படியாக ஏனைய பல உயிரினங்கள் தோற்றம் பெற்றும் கூர்ப்பில் மிகவும் முன்னேற்றமான அங்கியான மனிதன் 500 ஆயிரம் வருடங்களுக்கு முன்பேதான் தோன்றினான். ஆயினும் பூமியை ஆளும் அரசனாக மனிதனே விளங்குகிறான் என எண்ணும் வகையில் அவனது செயற்பாடுகள் அமைந்துள்ளதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது புவியில் 20 மில்லியன் வரையான அங்கி இனங்கள் வாழ்ந்து வரினும் மனிதன் புவி தனக்கு மட்டுமே உரிய பூர்வீகச் சொத்து என எண்ணி மற்றைய அங்கிகளை அழித்தும் ஏனைய அங்கிகளது வாழ்விடங்களை அழித்தும் புவிவளங்களைக் கண்மூடித்தனமாகப் பயன்படுத்தியும் வருகின்றான். மனிதன் மூளை நன்கு விருத்தியடைந்த சிந்தனைத்திறன் மிக்க உயர் விலங்கு எனக் கணிக்கப்படினும் அவனது செயற்பாடுகள் அவ்வாறாக இல்லை என்பது கவலைக்கிடமானது. அதாவது தான் வாழும் சூழலையே மாசுபடுத்தும் நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபட்டு வருகிறான். தாவரங்களையும் ஏனைய விலங்குகளையும் பொருளாதார நன்மை கருதியும் தனது சுய தேவையை நிறைவேற்றவும் பல்வேறு விதங்களிற் பயன்படுத்தி வருகிறான். பூமியிலுள்ள அங்கிகளின் பாதுகாப்புக் கவசமாக விளங்கும் ஓசோன் படையைப் பாதிக்கும் பதார்த்தங்களை மிகையாகப் பயன்படுத்துகிறான். புவி வளங்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளிலும் பாரியளவில் ஈடுபட்டு வருகின்றான். உயிருலகிலுள்ள அங்கிகள் யாவற்றுக்கும் உணவு வழங்கலுடனும் வளி மண்டலத்தில் ஒட்சிசன் காபனீரொட்சைட்டு சமநிலையைப் பேணுவதிலும் பிரதான பங்காற்றும் பச்சைத் தாவரங்களையே கண்டபடி அழிக்கின்றான். மற்றும் இயற்கை அனர்த்தங்களான சூறாவளி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, பூமியதிர்ச்சி, பூகோள வெப்பமாதல் போன்றவற்றுக்கும் காரணமாக விளங்குகின்றான். விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சி காரணமாக அணுப்பரி சோதனைகள், நவீன ஆயுத உற்பத்தி நுண்ணங்கிகளை உயிரியல் ஆயுதமாகப் பயன்படுத்தல் பல்வேறு விதமான அகழ்வு ஆராய்ச்சி நடவடிக்கைகள், விண்வெளி ஆராய்ச்சிகள் பெற்றோலியப் பொருட்களின் பாவனை போன்றன அதிகரித்த வண்ணமே உள்ளன. இவ்வாறான அதிகரித்த செயற்பாடுகளால் மனிதன் வாழும் புவியானது மற்றைய அங்கிகள் வாழ்வதற்குப் பொருத்தமற்ற சூழலாக, ஆரோக்கியமற்ற மனித சமுதாயத்தை உருவாக்கும் சூழலாக மாறுகிறது. மேலும் மனிதனால் மேற்கொள்ளப்படும் பாரிய

கைத்தொழில் நடவடிக்கைகளால் வெளிவிடப் படும் நச்சு வாயுக்கள், பார உலோகக் கழிவுகள், எண்ணெய்க் கழிவுகள் விவசாயத்தில் பயன்படுத்தும் இரசாயன வளமாக்கிகள், பீடை கொல்லிகளின் பாவனை அதிகரிப்பும் சூழலி லுள்ள உயிரங்கிகளில் அழிவுக்குக் காரணமாக அமைந்து உயிர்ப் பல்வகைமையை (Bio diver sity) பாரியளவிற் பாதிக்கின்றது. இவ்வாறு உயிர்ப்பல் வகைமையில் ஏற்படும் பாரிய பாதிப் பானது பூமியில் மனிதனின் நிலவுகையைக் கேள்விக்குறியாக்குகின்றது. இப்படியாக எம் இனத்தில் இந் நிலைக்கு நாமே காரணமாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும். உயிர்ப் பல்வகைமை அழிவு தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டும், சூழலும் மாசாக்கப்படும் (Environmental pollution) நிலை தொடரின் மனிதனே பூமியிலிருந்து முற்றாக அகற்றப்பட்டு ஏனைய அங்கிகளை உள்ளடக் கிய உயிர்ப்பல் வகைமை மட்டும் பூமியில் என்றும் நிலைத் திருக்கும் என்பதிற் சந்தேகமேயில்லை. எனவே, மனிதன் இப் பூவுலகில் ஆரோக்கிய வாழ்வைப் பேணித் தன் இனத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் எனில், பூமி தனக்கு மட்டுமே உரியது என்ற அதிகாரப் போக்கை நிறுத்தி, தானும் பூமியின் ஓர் அங்கத்துவன் மட்டுமே என்ற உணர்வுடன் மற்றைய அங்கிகளையும், பௌ திகச் சூழலையும் பாதிக்காது புவிவளங்களை நன்கு திட்டமிட்டுப் பயன்படுத்தி வாழக் கற்றுக் கொள்வது மிகவும் அத்தியாவசிய மானதாகும். புவியில் வாழும் ஒவ்வோர் அங்கியும் மற்றைய துடன் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ தங்கி வாழ்கின்றன. எனவே ஓர் இன அங்கி யானது எப்போதும் தனித்து வாழமுடியாது என்ற எண்ணத்துடன் தனது செயற்பாடுகளை முன்னெடுக்க முன்வரல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன்மீது தான் கொண்டிருக்கும் அக்கறை அன்பைப் பிற அங்கிகள் மீதும் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு உயிர்ப்பல் வகைமையைப் பேணிப்பாது காப்பின் உயிரு லகம் ஆனது மிகவும் அழகானதாக மாறுவ துடன், மனிதனுக்கு மற்றைய அங்கிக ளாலும் சூழலாலும் பல்வேறு விதமான பொருளாதார நன்மைகள் ஏற்படுவதுடன் இப்பூமியானது ஆரோக் கியமான மனிதவாழ்வுக்கு எப்போதும் உகந்ததாக மாறும் என்பது நிச்சயம். எனவே சிந்தனைத்திறன்மிக்க நாம் ஒவ்வொரு வரும் சூழல் மீதும் அங்குள்ள பிற அங்கி இனங்கள் மீதும் நல்லுறவுடன் Environmental Relationship அவற்றின் வாழ்விடங்களை அழிக்காது, ஆரோக்கியமான பிற உயிரினங்களின் நல்வாழ் வுக்கு உதவுவதுடன் நம் அனைவரது உள்ளங் களையும் களிப்படையச் செய்யும் இயற்கை அன்னை எமக்களித்த கொடையான அழகான இயற்கைச் சூழலை இயற்கையாகவே என்றும் இருக்க ஒத்துழைத்து, இதன்மூலம் நம் இனத்தின் ஆரோக்கியமான நல் வாழ்வை இப் புவியில் என்றென்றும் நிலை பெறச் செய்வோ மாக.

# இசைக் கருவிகளின் தோற்றமும் அதன் பிரிவுகளும்

திருமதி ஜெ. மகாலக்ஷ்மி
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி

இசை தோன்று முன்னரே இசைக்கருவிகள் தோன்றின. அதாவது நாணற்புற்கள் காற்றில் அசைந்து ஒலியை எழுப்புகின்றன. அதே போன்று மரப்பொந்துகளில் கற்களும், மழைத் துளிகளும் விழும்போது ஒலி உண்டாகின்றது. இவ் ஒலிகளை எல்லாம் கிரகித்த ஆதி மனிதன் சூழலிற் கிடைக்கக்கூடிய பொருட்களை எல்லாம் இசைக்குப் பயன்படுத்தினான். கற்கால ஆதி மனிதன் கல்லையும், இசைக்கருவியாகக் கையாண்டுள்ளான். ஆதி மனிதன் தொழில் முறைகளோடு பின்னிப்பிணைந்தே இசைக் கருவிகளின் ஆக்கமும் தோற்றமும் காணப் பட்டது. வில்பிடித்து வேட்டையாடித் திரிந்த மனிதன் அவ்வில்லினையே நரம்புக் கருவி யாகச் சிருஷ்டித்தான்.

அடுத்து, ஆதி மனிதன்தான் வேட்டையாடிய மிருகங்களின் தோல்களை வெய்யிலிற் காய வைத்து, தேவைக்கேற்ப அவற்றில் உரோமம் நீக்கி, நெருப்பில் வாட்டிப் பின் சுருள் அகற்றி படிய வைப்பதற்காக நெருக்கமான இரு மரங்களில் மரல் நார்கொண்டு பல கோணங் களில் இழுத்துக் கட்டினான். அந்தத் தோலின் மீதுள்ள சாம்பலை அகற்றுவதற்காக தடியால் தட்டி னான். அப்போது எழுந்த ஒலியைக்கேட்டு வியந்த மனிதன் மூலம் தோற்கருவி தோன்றியது.

அடுத்து துளைகளின் இடையே காற்று புகுந்து எழுந்த ஓசையைக் கொண்டு கோல் பிடித்து மந்தை மேய்த்த மக்கட் கூட்டத்தினரே துளைக்கருவிகளைத் தோற்றுவித்தனர்.

இசைக் கருவிகளைச் செய்யும் கலை வேத காலத்திலிருந்து பயிலப்பட்டு வந்துள்ளது. இசையின் வளர்ச்சிக்கு ஏற்ப இசைக் கருவி களைச் செய்யும் கலையும் வளர்ந்தது. மா, பலா செஞ்சந்தனம் முதலிய மர வகைகளும் வெள்ளி, வெண்கலம், பித்தளை, செம்பு முதலிய உலோ கங்களும், நாணல், பிரம்பு, சுரைக் குடுக்கை, தோல் முதலிய வேறு பொருட்களும் இசைக் கருவிகள் செய்யப் பயன்படுகின்றன. விலங்கு களின் நரம்பும் உலோகக் கம்பிகளும் பட்டு நூலும் கருவிகளின் நரம்புகளாகப் பயன் படுத்தினார்கள்.

இவ் இசைக் கருவிகளை சாஸ்திரீய முறையில் முதன்முதலில் உருவாக்கியவர்கள் இந்தியர்களே. இசைக்கருவிகளை நான்கு வகையாகப் பிரித்தனர். அவையாவன,

1. நரம்புக் கருவி: நரம்புகளின் உதவியுடன் வாசிக்கப்படுபவை தந்தி அல்லது தத வாத்தியங்கள் என அழைக்கப்படும்.

உ+ம் : யாழ், தம்பூரா, வீணை, வயலின், கோட்டு வாத்தியம், மாண்டலின்.

2. துளைக்கருவி:- துளைகளின் ஊடாக வாசிக்கப்படுபவை காற்று அல்லது சுஷிர வாத்தியங்கள் என அழைக்கப்படும்.

உ+ம்: புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளாரினட்

3. தோற்கருவி:- தோலின் உதவியினால் வாசிக்கப்படுபவை. கொட்டு அல்லது அவனத்தவாத்தியங்கள் என அழைக்கப் படும்

உ+ம்: மிருதங்கம், தவில், கஞ்சிரா

4. கஞ்சறகருவி: இதை கனவாத்தியங்கள் என அழைப்பர்.

உ+ம் : ஜால்ரா, குழித்தாளம், ஜலதரங்கம்

இவ் இசைக் கருவிகளை மேலும் பல வகை களாகப் பிரிக்கலாம்.

1. அரங்கிசையில் வாசிக்கப்படும் கருவிகள்:- அயன் வாத்தியம் எனப்படும்.

உ+ம்: வீணை, கோட்டுவாத்தியம், புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளாரினட், மாண்டலீன், வயலின்.

2. துணைக்கருவிகள்:
வயலின், மிருதங்கம், தவில், கஞ்சிரா, கடம், மோர்சிங்

3. ஸ்ருதிக்காக உள்ள இசைக்கருவிகள்:
ஏக்தார், தோதார், துந்தினா, தம்பூரா, ஒத்து, ஸ்ருதி பெட்டி, ஆர்மோனியம்

4. தாளத்திற்கென்று உள்ள இசைக்கருவிகள்:
தவில், மிருதங்கம், கஞ்சிரா, கடம், மோர்சிங், ஜால்ரா

5. இராகம் மற்றும் பாட்டுக்கென்று உள்ள கருவிகள்
வீணை, கோட்டுவாத்தியம், புல்லாங்குழல், நாதஸ்வரம், வயலின், கிளாரினட், மாண்டலின்

6. ஸ்திர வாத்தியம்
ஒரே இடத்தில் வைக்கப்பட்டு வாசிக்கப்படும் வாத்தியம்
உ+ம்: ஆர்கர், பியானோ

7. ஸ்வர வாத்தியம்
வெவ்வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று வாசிக்கக் கூடிய வாத்தியம்
உ+ம்: வீணை, வயலின், குழல்

8. சகல வாத்தியம்
இராகம், பாட்டோடு, ஸ்ருதியும் சேர்ந்து ஒலிப்பதற்கு வசதியான இசைக்கருவிகள்
உ+ம்: வீணை, கோட்டுவாத்தியம், மகுடி, நெடுங்குழல், வீணையிலும், கோட்டு வாத்தியத்திலும் சுருதிக்கான 3 தனித் தந்திகள் உள்ளன.
மகுடியில் சுருதிக்கென்று ஒரு குழாய் உள்ளது. நெடுங்குழலின் மேற்பாகம் சுருதிக் குழாயாகப் பயன்படுத்தப் படுகின்றது.

9. நிஷ்கள வாத்தியம்
சுருதி ஒலிப்பதற்கு வசதியான இசைக் கருவிகள்:

உ+ம்: வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளாரினட், மாண்டலின்

10. கையால் மட்டும் வாசிக்கப்படும் இசைக்கருவிகள்
வீணை, கோட்டுவாத்தியம், வயலின், மிருதங்கம், தவில் கஞ்சிரா, கடம், ஜால்ரா, மாண்டலின்

11. கையாலும் வாயாலும் வாசிக்கப்படும் இசைக்கருவிகள்
புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளாரினட், மோர்சிங்

12. ஏகத்வனி வாத்தியங்கள்
ஒரே நேரத்தில் ஒரு ஸ்வரம்தான் வாசிக்க முடியும்.

உ+ம்: புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளாரினட்

13. பஹீத்வனி வாத்தியங்கள்

ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று ஸ்வரங்கள் வாசிக்கமுடியும்.

உ+ம்: கோட்டுவாத்தியம், வீணை, ஜலதரங்கம், வயலின்

14. முரசுக்கருவிகள் கையால் முழங்கப் படுபவை

உ+ம்: மிருதங்கம்

குச்சிகளால் முழங்கப்படுபவை

உ+ம் : டமாரம்

சுயமாக முழங்கப்படுபவை

உ+ம்: குடுகுடுப்பை, டமருகம்

ஒருமுகத்தைக் கொண்டவை

உ+ம்: கஞ்சிரா

இரு முகங்களைக் கொண்டவை

உ+ம் மிருதங்கம், தவில், உடுக்கை, தபேலா

பல முகங்களைக் கொண்டவை

உ+ம்: பஞ்சமுக வாத்தியம்

15. தேவாலய வாத்தியம்

தேவஸ்தானங்களில் உபயோகப்படும் வாத்தியங்கள்

உ+ம்: குடமுழா, திருச்சின்னம், பூரி, சங்கு, பஞ்சமுகவாத்தியம், சுத்தமத்தளம்.

16. பாமரஜன வாத்தியம்

கிராமப் புற வாத்தியங்கள்

உ+ம்: தந்தி, பானை, கும்மடி, வில்லடிவாத்தியம், ஜமடிகா, தொந்தினா

இவ்வாறு சங்கீத வாத்தியங்கள் பண்டைக் காலம் முதல் இற்றைக் காலம்வரை படிப்படியாக வளர்ந்து வந்துள்ளன.

- நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.
- நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தில் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள்.
- பலவீனத்திற்கான பரிகாரம் ஓயாது பலவீனத்தைக் குறித்துச் சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான்.
- மிகப்பெரிய உண்மை இது. வலிமைதான் வாழ்வு. பலவீனமே மரணம்.
- நல்லதைக் காண், நல்லதைச் செய், நல்லவனாயிரு
- பணம் வந்து போகும், நல்லொழுக்கம் வந்து வளரும்.
- காலத்தின் விரயம் வாழ்வின் நாசம்



கல்லூரி முதல்வர்கள் - 2007 / 2008



கல்லூரிக்குக் கிடைத்த வெற்றிகள்



கலைப்பிரிவு மாணவர்கள் - 2009A



கலைப் பிரிவு மாணவர்கள் - 2009B

# பாலைநிலம் பரவல்

திருமதி. சு. யோகராசா
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி

இன்று புவியில் அதிகரித்து வருகின்ற வெப்பமானது உலகளாவிய ரீதியில் எதிர் நோக்கும் மிகப்பெரிய அபாயமாக உள்ளது. உலகின் வெப்பநிலை அதிகரிப்பானது உயிரினங்கள் யாவற்றையும் பெரும் அபாயத் திற்குள் தள்ளி உள்ளன. உலகின் வெப்ப நிலையானது கடந்த நூறு வருடங்களுள் $1^0$ f வரை உயர்ந்துள்ளது. 2020 ஆம் ஆண்டிற் புவியின் வெப்பநிலை $1.3^0$ f அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. இத்தகைய வெப்ப நிலை உயர்வின் பிரதான தாக்கமாகப் புவியிலே பாலை நிலங்கள் அதிகரிக்கும் எனக் கூறப் படுகின்றது.

உலகின் நிலப்பரப்பில் 1/3 பகுதியைப் பாலை நிலங்கள் ஆக்கிரமித்துள்ளது. சகாரா, கலகாரி, அரேபியா, கோபி, தார், மஞ்சூரியா, அற்றகாமா, பற்றக்கோனியா, அரிசோனா, மேற்கு அவுஸ்திரேலியா என உலகின் பல இடங்களிலே பாலைநிலம் காணப்படுகின்றது. இப்பாலை நிலங்கள் பூமியின் வெப்ப அதிகரிப்பின் துணையுடன் தமது பரப்புக்களை அதிகரித்து வருகின்றன. பாலைநிலங்களின் எல்லைகள் விரிவடைந்து செல்கின்றன.

உலகின் பெரிய பாலைநிலமாகக் காட்சி யளிக்கும் சகாரா கி.மு. 2700 ஆண்டுகளிற் பெரும் பசும் புல்வெளியாகவும் நாடோடி மந்தை மேய்ப்பின் இருப்பிடமாகவும் காணப்பட்டது. உலக நாகரிகத்தின் தொட்டில்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற சிந்துவெளி நாகரீகம் காணப்பட்ட பிரதேசம் இன்று பாலைவனமாக மாறியுள்ளது. தார் பாலைவனம் ராஜஸ்தான் பாலைநிலம் எனும் பாலை நிலங்களே அன்று சிந்துவெளி நாகரிக மையங்களாகத் திகழ்ந்தன. இது மட்டுமன்றி ஆபிரிக்காவில் நைகர், சாட், சூடான், எதியோப்பியா போன்ற பகுதிகளும் பாலை நிலங்களாக மாறி வருகின்றன.

இன்று உலகின் மழைவீழ்ச்சியின் அளவும் குறைந்துள்ளது. உலகிலேயே அதிக மழையைப் பெறும் மத்தியகோட்டுப் பிரதேசங்களில் மழை வீழ்ச்சியானது 10% குறைந்துள்ளது. அதிக மான ஆபிரிக்க நாடுகளில் தொடர்ச்சியாகப் பல வருடங்களில் மழைவீழ்ச்சியின் அளவு குறைந்துள்ளது. இதன் காரணமாக பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்நாடுகளில் இன்று கொடிய பஞ்சம் நிலவுகின்றது. இப்பஞ்சத்தின் விளைவாக எதியோப்பியா போன்ற நாடுகளிற் பட்டினியால் மரணங்கள் ஏற்படுகின்றன.

புவியைச் சூழ போர்வை போலப் பாதுகாப் பாக மூடி இருப்பது ஒசோன் படையாகும். இது மெல்லிய படையாயினும் இது ஆற்றிவரும் செயற்பாடுகள் மிக அதிகமாகும். வளிமண்டல ஒசோனின் பெரும்பாகம் மாறன் மண்டலத்தின் மேற்பகுதியிலிருந்து படை மண்டலத்தினுள் அமைந்துள்ளது. ஒசோன் படையானது புவியின்

வெப்பநிலையைச் சீராக வைத்திருப்பதற்கு உதவுகின்றது. பூமியில் தொழிற்சாலைகள் உருவாக்கிய CfC வாயுக்கள் புவிச் சூழலில் இருந்து விடுபட்டு வளிமண்டலத்தில் நீண்டகாலம் தங்கியிருந்ததால் ஒசோன் படையில் துவாரம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இத்துவாரம் காரணமாக புவி வெப்பநிலையில் சீரின்மை ஏற்பட்டு புவி வெப்பமடைகின்றது.

காபனீரொட்சைட் வாயுவும் வெப்பத்தைக் கூட்டுகின்றது. கைத்தொழிற் புரட்சிக்கு முன்னர் நிலவிய கோளத்தின் வெப்ப நிலையினைப் பார்க்கிலும், கடந்த 20 வருடங் களில் வெப்பம் அதிகரித்துள்ளது. நிலக்கரி, பெற்றோலியம் இயற்கை வாயு போன்ற உயிர்ச் சுவட்டு எரிபொருளை எரிப்பதனால் வருடா வருடம் $CO_2$ 5 மில்லியன் சேர்கிறது. இதனாற் புவி வறட்சியடைந்து தன் பசுமைப் போர்வையை நீக்கிப் பாலைவனமாகின்றது.

உலகின் சனத்தொகையானது வருடா வருடம் அதிகரிக்கின்றது. இம்மக்கள் தமது உணவு, உடை, இருப்பிடத் தேவைகளுக்காக காடுகளை அழிக்கின்றனர். அழிக்கப்படுகின்ற காடுகள் மீளவும் வளமாக்கப்படுதல் மிகவும் குறைவாகும். இதனாற் பசுமைப் போர்வை நீக்கப்பட்டுப் பாலைநிலங்களின் பரப்பளவு அதிகரிக்கின்றது.

இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பலவற்றில் உள்நாட்டு யுத்தங்கள் ஏற்படுகின்றன. இதனால், மக்கள் அதிகளவில் இடம்பெயருகின்றனர். இவர்களது இருப்பிடங் கள், விவசாய நிலங்கள் கைவிடப்படுகின்றன. மக்கள் அகதி முகாம்களில் தங்கியிருக் கிறார்கள். இதனால் முகாம்களை அண்டிய காடுகள் அழிக்கப்படுகின்றன. பெருந்தோட்ட விருத்திக்காகவும் பல்வேறு குடியேற்றத் திட்டங் களுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. இவை யாவும் பாலைநிலம் பரவுதலை ஊக்குவிக்கின்றன.

வறுமையும், மக்கள் விலங்கு வேளாண்மை யிற் கூடுதலாகத் தங்கி இருத்தலும் பாலைநில மாவதை ஊக்குவிக்கின்றது. அதிகளவான கால்நடைகள் குறைந்தளவான நிலத்தில் உணவினைப் பெறுவதனால் இந்நிலைமை ஏற்படுகின்றது.

பாலைநிலம் பரவிச் செல்வதனால் ஏற்படும் தீமைகளை உணர்ந்து அரசும், மக்களும் இதனைத் தடுப்பதற்குப் பல நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். சேனைப் பயிர்ச் செய்கைக்கு உட்பட்டுத் தரிசாக இருக்கும் நிலங்களை மீள்வனமாக்குதல் வேண்டும். இதனை அரசே முன்னின்று செய்யவேண்டும். காடுகள் விறகுக்காக அழிப்பதனைத் தடுப்பதற்கு மாற்றுச் சக்தி வளப்பாவனையை அதிகரித்தல் வேண்டும். காடுகளுக்கு அண்மையிலுள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒத்துழைப்பினைப் பெறவேண்டும். பொது மக்கள், பாடசாலை, சிறுவர்கள் மத்தியில் மழைக்காடுகள் கண்டல்காடுகளின் பயன் பாடுகள், சூழற் பெறுமதிகள் என்பன பற்றிய உணர்வுகளைத் தூண்டுதல் வேண்டும். வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம், வனவளத் திணைக்களம், மகாவலி ஆணைக் குழு போன்ற நிறுவனங்கள் இடையே நெருங் கிய தொடர்புகள் மேற்கொண்டு காடழிப்பைத் தடுக்கவேண்டும்.

இத்தகைய பல்வேறு செயற்பாடுகள் மூலம் காடுகள் அழிந்து பாலைநிலம் பரவுதலைத் தடுக்கலாம்.

# தர்மசாஸ்திரங்கள்

**திருமதி மோகனவதனி ரவீந்திரன்**
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.

மக்கள் தர்மத்தின்வழி வாழுகின்றபோது மட்டுமே அவர்களின் வாழ்வு அர்த்தம்பெறும். மக்கள் மத்தியிலே தர்மத்தை நிலைநாட்டி அவர்களது வாழ்வின் கனதியை மேம்படுத்த எழுந்தவையே சமயங்களாகும். இந்த வகையில் நமது இந்து மதம் ஈடிணையற்றதாய் விளங்குகின்றது. இந்து மதத்திலே "தர்மம்" என்னும் சொல் உன்னதமான பல உட்பொருட் களைக் கொண்டதாக விளங்குகின்றது. புராதனமான இருக்கு வேதத்திற்கூட இச்சொல் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. பிரஸ்தானத்திரயங்களிலும் தர்மம் பற்றிப் பேசப் படுவதை நாம் காணமுடியும். தைத்திரீய உபநிடதத்திலே "சத்யம் வத, தர்மம் சர" எனக் கூறப்படுகின்றது. பகவத்கீதையிலே கிருஷ்ணபரமாத்மா, "பரித்ராணாய சாதூனாம் ............" சாதுக்களைக் காப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் நான் யுகந்தோறும் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்" என்று கூறியிருப்பதும் இங்கு நோக்கற்பாலது.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது. . . . . . . . . வேதங்கள்". இவ்வேதங்களே இந்து சமயத்தின் முதல் நூல்கள். இவ்வேதங்களின் பொருளை முனிவர்கள் மனதில் நினைத்து உலக மக்கள் உய்தியடையும் பொருட்டு நியதிகளாகக் கூறினர். இவ்விதமாக, முனிவர்களின் திவ்விய சிந்தனையிலிருந்து தோற்றம் பெற்றவையே ஸ்மிருதிகளாகும். நினைக்கப்பட்டவைகள் என்பதனாலேயே இவை "ஸ்மிருதிகள்" எனப் பெயர்பெற்றன. இவை சிந்தையால் வந்தவை. மானிடர்கள் சிந்தித்துத் தெளிந்து கொள்தற் காக வந்தவை. வேதத்தின் சார்பு நூல்கள் "வேதாங்கங்கள்" எனப்படுகின்றன. "அங்கமும் வேதமும் ஓதும் நான்மறை அந்தணர்........." என வேதங்களோடு வேதாங்கங்களும் சுட்டப்படுகின்றன. இவ்வாறான வேதாங்கங்கள் சிட்சை, வியாகரணம், கல்பம், நிருத்தம், சோதிடம். சந்தோவிசிதி என்னும் ஆறுமாம். இவற்றுள் கல்பம் என்பது கற்பசூத்திரங்களைக் குறிக்கும். கற்பசூத்திரங்கள் யாகாதி கிரியைகளைப் பற்றிக் கூறுகின்றன. இக் கற்பசூத்திரங்கள் சிரௌசூத்திரங்கள், கிருஸ்யசூத்திரம், தர்மசூத்திரம் என மூவகைப்படும். சிரௌசூத்திரம் வேள்வி சம்பந்தமான விதிகளைக் கூறுகின்றது.

கிருஸ்யசூத்திரம் இல்வாழ்வானுக்குரிய நித்திய நைமித்தியங்களையும், பிறப்புமுதல் இறப்பு வரையுள்ள கருமாதிகளையும், இறந்த பின்னர் பிதிரர்களுக்குச் செய்யும் கடமை களையும் கூறுகின்றது. இவற்றில் மனிதன் தாயின் வயிற்றிற் கருவாக இருக்கும் காலந் தொட்டுச் செய்யப்படும் கர்ப்பாதானம், சீமந்தம், சாதகர்மம், அன்னப்பிராசனம், விவாகாதி கிரியைகள் முதல் சிரார்த்தம் வரையுள்ள

கடமைகள் எல்லாம் விளக்கப்படுகின்றன. சிறப்பாக இல்லறத்தான் செய்யவேண்டிய பஞ்ச யக்ஞங்களான தேவயக்ஞம், ரிசி யக்ஞம், பிதிர் யக்ஞம், பூத யக்ஞம், அதிதி யக்ஞம் என்பன பற்றிக் கூறுகின்றன.

தேவ யக்ஞம் என்பது வேத மந்திர பாராயணத்தோடு தேவதைகளுக்கு நிவேதனம் செய்தல் முதலியவற்றைக் குறிக்கும். ரிசி யக்ஞம் என்பது ரிசிகளுக்குக் காணிக்கை செலுத்துவ தோடு வேத பாராயணமும் வேத உபதேசம் செய்தலுமாகும். பிதிர்யக்ஞம் பிரிந்து சென்ற எம் முந்தையோர் ஆத்மாக்களுக்குத் தர்ப்பணம், சிரார்த்தம், பிண்டம் முதலியன செய்தலாகும். பூத யக்ஞம் என்பது பிராணிகளுக்கு உணவளித்தல் ஆகும். இதனைப் பலியிடுதல், வைசுவவேதம் புரிதல் எனவும் கூறுவர். இதில் நாய், பதிதர், சண்டாளர், கொடிய நோயாளர், காகம், ஈ, எறும்பு உண்பதற்காக உணவு கொடுத்தல் பிரதானமாகும். அதிதி யக்ஞம் என்பது விருந்தினரை மரியாதையோடு மதித்து உணவளித்தலாகும்.

தர்மசூத்திரங்கள் கிருஸ்ய சூத்திரங் களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. தர்மத்தின் மூலாதாரம் பற்றிய விளக்கம், நான்கு வர்ணத்தவரின் கடமை, ஒழுக்கம் பற்றிய சமஸ்காரங்கள் திருமணம், அரசனது கடமை கள், வரி பற்றிய விதிகள், குற்றங்களுக்குரிய தண்டனைகள். சிரார்த்தங்கள், பெண்களின் கடமைகள், பாவங்களும் அவற்றிலிருந்து விடுபடுதலும், தவம் ஆகிய அம்சங்கள் பற்றிப் பேசுகின்றன. தர்மசூத்திரங்களே பிற்காலத்தில் தர்மசாஸ்திரங்கள் என வழங்கப்படலாயின. இவை சூத்திரங்கள், சுலோகங்கள், வியாக்கி யானங்கள் என மூவகையாகக் காணப் படுகின்றன. வியாக்கியானங்களை "நிபந்தங் கள்"எனவும் வழங்குவர்.

தர்மசாஸ்திரங்கள் கூறும் விடயங்களை நாம் மூன்று வகுதிக்குள் அடக்கலாம். அவையாவன: ஆசாரம், வியபகாரம், பிராயச்சித் தம் என்பன. ஆசாரம் என்னும் பகுதியில், சமூகம், சாதி, கடமை என்பன கூறப்பட்டுள்ளன. வியபகாரம் என்னும் பகுதியிற் சட்டங்கள், குற்றங்கள், தண்டனைகள் என்பன கூறப் பட்டுள்ளன. பிராயச்சித்தம் என்னும் பகுதியிற் பாவங்கள், குற்றங்களுக்கான பிராயச் சித்தங்கள் கூறப்பட்டுள்ளன.

தர்மசாஸ்திரங்கள் கூறும் உயர்ந்த ஒழுக்கக் கோட்பாடுகளில் இயமங்களும் நியமங்களும் அடங்குகின்றன. இயமங்கள் எல்லோருக்கும் பொதுவானவை. அவை, அகிம்சை, சத்தியம், தூய்மை, புலனடக்கம், பொறுமை, தயை, சாந்தி, தானம் என்பனவும் பிறவுமடங்கும். நியமங்கள், வருணாச்சிரம தர்மத்துக்கு அமைவாகக் கைக்கொள்ள வேண்டிய கட்டாய வழக்கங்களாகும். வருணம் என்பது அக்காலத்துப் பொருளாதாரத் தொழிற் பாட்டாற் பிரிக்கப்பட்ட நால்வகைச் சமூகப் பிரிவு; களாகும். அவை முறையே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று வழங்கினர். ஆச்சிரமம் என்பது தனி மனிதனின் வாழ்க்கை நிலையைக் குறிக்கும் மானிடப் பருவங்களாம். அவை பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ் தம், சன்னியாசம் என்பனவாம். தர்மசாஸ்திரத் தில் ஆசாரத் தொகுதிகள் பல உள்ளன. அவை இந்துநாகரிகத்தின் உயர்வையும், முதிர்ச்சியை யும் உள்ளபடி காட்டுவனவாகும். அவற்றை அனுசரித்துப் பிற்காலப் புலவர்கள் பலர் பதினெண் கீழ்க் கணக்கு என்னும் நூற்

றொகுதியிற் பல சிற்றிலக்கியங்கள் செய்துள் ளனர். இவ்விதம் எழுந்த நூல்களுள் ஒன்றான ஆசாரக்கோவையில் "நின்று உண்ணுதல், இரு கைகளிலும் ஏந்தியவாறு நீர் பருகுதல், ஆடையில்லாமல் நீராடுதல், கபடமாகப் பேசுதல், மிருகங்களுக்குச் சின மூட்டுதல்" முதலியன அநாசாரமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசாரங்களுக்கு மதிப்பளிக்கும் தர்மசாஸ் திரங்கள் ஆசாரத்தால் உய்தி கிடைக்குமென்று கூறவில்லை. எல்லா உயிர்களிடத்தும் அன்புகொள்ளுதல், பொறுமையுடனிருத்தல். பிறருடைய உயர்வைக் கண்டு பொறாமைப் படாதிருத்தல், தூய்மையாயிருத்தல், மகிழ்ச்சி யோடிருத்தல், எல்லோரும் வாழவேண்டுமென எண்ணுதல், பணிவுள்ள வராயிருத்தல், பேராசையில்லாதிருத்தல்.

என்றும் எப்போதும் நன்மை தருமென்று கூறுகின்றன.

தர்மசாஸ்திரங்கள் தர்மத்தைப் பின்வரு மாறு வகுத்துக் கூறுகின்றன.

சனாதன தர்மம் – நிலையாயுள்ள தர்மம்
சாமான்ய தர்மம் – சாதாரண கடமைகள்
விசேட தர்மம் – சிறப்பான கடமைகள்
வர்ணாச்சிரமதர்மம்–அவரவர் நிலைக்குரிய கடமைகள்
ஸ்வதர்மம் – தனி மனிதனுக்குரிய கடமைகள்
யுகதர்மம் – காலத்துக்கேற்ற கடமைகள்
குல தர்மம் – குலத்துக்குரிய கடமைகள்
மானவ தர்மம் – மனிதருக்குரிய கடமைகள்
புருட தர்மம் – ஆண்களின் கடமைகள்
ஸ்திரி தர்மம் – பெண்களுக்கான கடமைகள்
ராஜ தர்மம் – அரசனுக்கான கடமைகள்
பிரஜா தர்மம் – குடிமக்களின் கடமைகள்
பிரவிர்த்தி தர்மம் – பிரிந்து செல்லும் உயிரின் கடமைகள்
நிவிர்த்தி தர்மம் – பற்றற் நிலைக்கான கடமைகள்

சனாதன தர்மம் என்னும் கட்டடத்துக்கு அத்திவாரம் போன்றது சுருதி. சுவர்கள் போன்றவை ஸ்மிருதிகள், தூண்கள் போன் றவை இதிகாசமும் புராணங்களும்.

இவ்வாறான தர்மசாஸ்திரங்களை ஆக்கியோருள் முக்கியமானவர்கள் கௌதமர், ஆபஸ்தம்பர், போதாயனர், கிரண்யகேசி, மனு முதலியோர். இத்தர்ம சாஸ்திரங்களுள் மிகவும் பழமையானது கௌதமிய தர்மசாஸ்திரம் ஆகும். இது சாம வேத சாகையைச் சேர்ந்த தர்ம நூல். மற்றொரு பழைய நூல் ஹரி தர்மசாஸ்திரம். இவ்விரு நூல்களும், மனு ஸ்மிருதியும் வாசிட்ட தர்மசாஸ்திரத்திலே கூறப்படுகின்றன. இவற் றுக்குப் பின்னெழுந்த தர்மசாஸ்திரங்களுள் இடைச் செருகல்கள் காணப்படுகின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்நூல்கள் பெரும்பாலும் கி.மு 2ம், 3ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவ்வாறு பல்வேறு வகையான தர்மசாஸ்திரங்கள் தோன்றியிருப்பினும் அவற் றின் காலமும் அளவும் சரியாகக் கணிப்பிட முடியாதுள்ளது. எனினும், வடமொழி இலக்கிய வரலாறு ஓர் அட்டவணையில் 152 ஸ்மிருதிகள் காட்டப்படுகின்றன எனக் கூறுகின்றது. அண்மைக்காலமாக பதினெண் ஸ்மிருதிகள் என்னும் தர்மசாஸ்திரத் தொகுதிகள் வழக்கிற் காணப்படுகின்றன.

**அவையாவன :–**

மனு ஸ்மிருதி,
பிருகஸ்பதிஸ்மிருதி,
த ஸ்மிருதி,

யமஸ்மிருதி,

கௌதம ஸ்மிருதி,

அங்கிரஸ்மிருதி,

யக்ஞவல்கியஸ்மிருதி,

பிரசேதஸ்மிருதி,

சாதாதபஸ்மிருதி,

பராசரஸ்மிருதி,

சம்வர்த்தஸ்மிருதி,

சசனஸ்மிருதி,

சங்கஸ்மிருதி,

விகிதஸ்மிருதி,

அத்திரிஸ்மிருதி,

விஷ்ணுஸ்மிருதி

ஆபத்தம்பஸ்மிருதி,

கரிதஸ்மிருதி.

தர்மசாஸ்திரங்களை ஆக்கிய சான்றோர்களான முனி சிரேட்டர்கள் தத்தமது பெயர்களிலேயே இவற்றினை ஆக்கியுள்ளனர். இங்ஙனம் நிலவும் தர்மசாஸ்திரங்களுள் மனுவினால் ஆக்கப்பட்ட மனு தர்மசாஸ்திரம் யாவற்றுக்கும் முதன்மையானதாகப் போற்றப் படுகின்றது. இந்நூல் வெறும் சட்டத் தொகுப் பாக அன்றி, ஆன்மார்த்த ஞானம், மனோ தத்துவம். ஒழுக்கவியல், பொருளியல், அரசியல், சமுதாயவியல் ஆகிய பல துறைகள் வேதத் துக்கு அமைவாகக் கூறப்பெற்றிருப்பதை அறியலாம். இம்மனுதர்ம சாஸ்திரத்தை திரீய சம்கிதை வெகுவாகப் போற்றுகின்றது. அன்றியும், இராமாயணம். மகாபாரதம்போன்ற இதிகாசங்களும் போற்றுகின்றன. புராணங் களில் மனு தர்ம சுலோகங்கள் எடுத்தாளப் பட்டுள்ளன.

**மனுதர்மசாஸ்திரம்**

இந்நூல் பிரமனிலிருந்து தோன்றி, மனு மூலமும், பிருகு முனிவர் மூலமும் உலக மக்களிடையே பரவிற்று என மனுஸ்மிருதி கூறுகின்றது. ஆதியில் ஒரு இலட்சம் சுலோகங்களாக மனுவினாற் செய்யப்பட்ட இந்நூலை நாரதர் பன்னிரண்டாயிரம் செய்யுட் களாகச் சுருக்கினார் எனவும், அதனை மார்க்கண்டேயர் எட்டாயிரம் சுலோகங்களாகச் சுருக்கினார் எனவும், பிருகு முனிவரின் குமாரரான சுமதி ஆறாயிரமாகச் சுருக்கினார் எனவும் கூறப்படுகின்றது.

மனுஸ்மிருதியின் முதலாம் அத்தியாயம் உலக உற்பத்தியோடு ஆரம்பிக்கின்றது. "ஆதியில் இது இருள்மயமாயிருந்தது: தெளிவின்றி, குணங்குறிகளின்றியிருந்தது. கற்பனை செய்ய முடியாதிருந்தது: அறிய முடியாதிருந்தது, எங்கும் துக்கம் நிறைந் திருந்தது" என்றவாறு இவ்வத்தியாயத்திற் கூறப்படுகின்றது.

இரண்டாம் அத்தியாயத்திலே தர்மத்துக்கு மூலம் கூறப்படுகின்றது. வேதம் முழுவதும் ஸ்மிருதிகளும், சாதுக்களின் ஒழுக்கமும் சொந்த ஆத்ம திருப்தியுமே தர்மத்தின் மூலம் எனக் கூறப்பட்டன. இங்கே பிரமச்சரியான மாணாக்கரின் கடமைகள் விரிக்கப்படுகின்றன.

மூன்றாம் அத்தியாயம் தொடக்கம் ஐந்தாம் அத்தியாயம்வரை இல்லறத்தானுக்குரிய கடமைகள் கூறப்படுகின்றன. விவாகம், நித்திய கடமைகள், ஊதியம், வாழ்க்கை நடத்தும் விதிகள் என்பனவும், உண்ணத்தக்க உணவு, தூய்மை, தவிர்க்கும் உணவு, அழுக்குடைமை,

பெண்கள் அனுசரிக்க வேண்டிய கடமைகள் என்பனவும் காணப்படுகின்றன.

ஆறாம் அத்தியாயத்தில் வானப்பிரஸ்த நிலையும் சன்னியாச நிலையும் கூறப்படு கின்றன.

ஏழாம் அத்தியாயத்திலே அரசனுடைய கடமைகளும், அரசியல் நீதிகளும் கூறப் படுகின்றன.

எட்டாம், ஒன்பதாம் அத்தியாயங்களிலே, (சிவில்) குடியியற் சட்டமும்(கிறிமினல்) பாபகரமான குற்றங்களுக்குரிய சட்டமும் விசாரிக்கப்படுகின்றன. இங்கே விவகார முறைகளும் தண்ட விதிகளுமுண்டு. ஒன்பதாம் அத்தியாயத்திலே சத்திரியர் கடமையும், வைசியர், சூத்திரர் கடமையும் கூறப்படுகின்றன.

பத்தாம் அத்தியாயத்திற் கலப்பு வர்ணத்த வரைப் பற்றியும் அவர்கள் செய்யும் தொழில் பற்றிய விதிகளுமுண்டு. நெருக்கடி காலத்திலே செய்யக்கூடிய தொழில்களும் கூறப்படுகின்றன.

பதினோராம் அத்தியாயத்திலே தட்சிணை பற்றியும் வேள்வி, விரதம் என்பன பற்றியும் கூறப்படுகின்றன.

பன்னிரண்டாம் அத்தியாயம் பாவம் செய்தவர் அடுத்து அடையும் பிறவிகள் பற்றியும், வீட்டுக்குரிய வழிகளைப் பற்றியும் கூறுகின்றது. வேதத்தைக் கற்று அதன்படி ஒழுகுதலும், உண்மை, தவம், ஞானத்தை அடைதல், புலன்களை அடக்குதல் இன்னா செய்யா திருத்தல், குரு சேவை செய்தல் என்பன மேலான இன்பத்தை அளிக்கும் என இங்கு கூறப்பட்டுள்ளது.

மனுஸ்மிருதி ஒரு நீதிநூல் மாத்திரமன்று, அது வாழ்க்கைத் தத்துவம் பற்றியும், சமூக நீதிகள் பற்றியும், பழக்கவழக்கங்கள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றது. நாவலர் பெருமான் எழுதிய பால பாடங்களிலும், சோமசுந்தரப் புலவர் எழுதிய "தந்தையார் பதிற்றுப்பத்து" என்ற கவிதையிலும் இம்மனு நீதிகள் போற்றப்படுவது இதன் சிறப்பினை உணர்த்தி நிற்கின்றது.

இவ்விதமான மனுஸ்மிருதியிலே அமைதி யான வாழ்க்கைக்கு இன்றியமையாத அத்தனை விடயங்களும் அழகுற எடுத்துரைக்கப் பட்டிருப் பதனை நாம் காணமுடியும். இன்று நாம் அன்றாட வாழ்விற் கடைப்பிடிக்கின்ற பல விடயங்கள் மனுஸ்மிருதியிற் கூறப்பட்டுள்ளன என்பதைப் பலரும் அறியாதுள்ளனர். உதாரண மாக : மழையிலே ஓடலாகாது. பசு கட்டிய கயிற்றினைக் கடக்கக் கூடாது. சூரியனைப் பார்த்துத் துப்பக்கூடாது என்பன போன்ற விடயங்கள்கூட மனுஸ்மிருதியிற் கூறப் பட்டுள்ளன என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். அமைதியான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கோடு அன்று எழுந்த இத் தர்மசாஸ்திரங்கள் இன்று உன்னதமான சமய இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும் இவற் றினை நன்கு கற்று, இவைகூறும் நீதிகளைத் தேர்ந்து தெளிந்துகொள்ள வேண்டும்.

# எயிட்ஸ் AIDS

திரு.த.கெங்காதரன்
உயிரியல் ஆசிரியர்,
யா/ இராமநாதன் கல்லூரி.

இன்று பரிணாமத்தின் உச்சியில் இருக்கும் மனிதன், தன் ஆரம்பகாலத்தில் வேடுவனாகவும், சேகரிப்பவனாகவும், மந்தை மேய்ப்போனாகவும் இடத்திற்குஇடம் அலைந்து திரிந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தான். அக்காலத்திற் சுகாதார வசதிகள் எதுவும் இல்லாததனால் அவனின் ஆயுட்காலம் மிகக் குறைவானதாகவே காணப்பட்டது. பின் மனிதன் விவசாயியாக மாறி கைத்தொழிலாளியாக மாறினான். அதன் பின்னர் ஆராய்ச்சிகளின் விளைவாகச் சுகாதார வசதிகள் அதிகரித்தது. அவனின் ஆயுட் காலமும் அதிகரித்தது. இன்று சுகாதார வசதிகள் மிக உன்னதமான நிலையை அடைந்து, குருதி மாத்திரமல்ல, ஒரு மனிதனில் இருந்து பிறிதொரு மனிதனுக்கு அங்கங்கள் மாற்றுமளவுக்கும், ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளை வேறாக்குமளவுக்கும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் இறப்பை ஏற்படுத்தும் எனக் கருதப்பட்ட அம்மை நோய் இப்பூமியில் இருந்து விரட்டப்பட்டுள்ளது. கசம், தொய்வு போன்றன இன்று ஆபத்தற்ற நோய்களாக மாறியுள்ளன. ஆனால் புற்றுநோய் இன்றும் சவாலாகவே மனிதனுக்கு உள்ளது. இவ்வளவுக்கு முன்னேற்றமடைந்துள்ள சுகாதார வசதிகளுக்குப் பெரும்சவாலாக உருவெடுத்துள்ள ஒரு நோயே AIDS ஆகும். Acquired Immuno Deficiency Syndrome என்ற விரிவாக்கத்தின் சுருக்கமே AIDS ஆகும். அதன் தமிழ்க் கருத்து "பெற்ற நிர்ப்பீடனக் குறைபாட்டு நோய்" என்பதாகும். இந் நோய் முதன் முதலில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசிலேயே இனங்காணப்பட்டது. 1981இல் லொஸ் ஏஞ்சலிஸ் நகர வைத்தியசாலையிற் சிகிச்சைபெற்ற இளவயது ஆண்நோயாளிகள் சிலரின் உடலில் நிர்ப்பீடனத் தொகுதி நலிவடைந்தமையால் ஏற்பட்ட நோய் அறிகுறிகள் பற்றிக் கண்டறிய முற்பட்டபோதே இந்நிலைமை இனங்காணப்பட்டது. அதன் பின்னர் இந்நோய் ஒரு வைரசுநோய் என அறியப்பட்டது. இந்நோயை ஏற்படுத்தும் வைரசு HIV ஆகும். (Human Immunodeficiency Virus) இது வரையில் இரண்டு HIV வகைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவை HIV I, HIV II என்பனவாகும். HIV ஆனது உறுத்துணர்வு மிக்க ஒரு வைரசுவாகும். எனவே பொதுவான உயிரற்ற சூழலில் இவ்வைரசு உயிர்வாழ்வதில்லை. அது உயிர்வாழ்வதற்கு உயிருள்ள கலங்கள் தேவை. எனவே அயற்சூழலில் வளியிலோ. நீரிலோ, உணவுப்பொருட்களிலோ, ஆடைகளிலோ, நீரருந்தும் பாத்திரங்களிலோ, இவ்வைரசு காணப்படுவதில்லை. தொற்றடைந்த ஒருவரின் குருதியில் ஏராளமாக இவ்வைரசு காணப்படும். அத்துடன் தொற்றடைந்த ஆண்களின் சுக்கிலபாயத்திலும், தொற்றடைந்த பெண்களின் யோனிமடற்சுரப்பிலும், கருப்பைக் கழுத்துப்பகுதிச் சுரப்பிலும் இவ்வைரசு காணப்படுகின்றது. இவற்றைவிட தொற்றடைந்த

பெண்ணின் தாய்ப்பாலிலும் இவ்வைரசு காணப்படலாம். அத்துடன் மிகச் சொற்ப அளவில் தொற்றுக்குள்ளானவர்களின் உமிழ்நீர், கண்ணீர்,வியர்வை, மலம், சிறுநீர் ஆகியவற்றிலும் சொற்ப அளவிற் காணப் படலாம்.

**HIV ஆனது பின்வரும் வழிகளில் தொற்று கின்றது**

1. பாலியல் தொடர்புகள் மூலம் குறிப்பாகத் தொற்றுக்குள்ளானவர்களுடனான யோனி மடல்வழி, உடலுறவு, குதவழி உடலுறவு, வாய்வழி உடலுறவு என்பவற்றின் மூலம் அதிகளவில் தொற்றுகின்றது.
2. குருதி மூலம் தொற்றடைந்த குருதியினது பரிமாற்றத்தாலும், தொற்றடைந்த குருதியி னால் மாசடைந்த ஏற்றூசிகளைக் கிருமிநீக் காது பயன்படுத்துவதனாலும் கணிசமான அளவில் தொற்றுகின்றது.
3. தொற்றடைந்த தாயிடமிருந்து சிசுவுக்கு: கருப்பையில் இருக்கும்போது சூல்வித்தகத் தினூடாகவும், மகப்பேற்றின் போது பிறப்புக் கால்வாயினூடாகவும், தாய்ப்பாலின் மூலமாக வும் தொற்றுகின்றது.

**HIV ஆனது பின்வரும் வழிகளில் தொற்று வதில்லை**

1. தொற்றடைந்த ஒருவரைத், தொடும்போது, அவருடன் கைகுலுக்கும்போது.
2. தொற்றடைந்த ஒருவருடன் ஒரறையில் ஒன்றாக வசிக்கும்போது
3. தொற்றடைந்தவருடன் விளையாட்டுக்களில் ஈடுபடும்போது
4. தொற்றடைந்த ஒருவருடன் நீச்சல் தடாகங்களில் நீராடுதலின் போது
5. தொற்றுக்குள்ளானவர்கள் பயன்படுத்தும் உணவுப் பதார்த்தங்களைப் பயன்படுத்தும் போது, பாவனைப் பொருட்களைப் பயன் படுத்தும்போது
6. தொற்றுதலுக்குள்ளானவரைத் தீண்டிய நுளம்பு, வீட்டுஈ போன்ற பூச்சிகள் உடனலமானவரைத் தீண்டும் போது.
7. தொற்றுதலுக்குள்ளானவர் இருமும்போது, தும்மும் போதும்
8. தொற்றுதலுக்குள்ளானவர் பயன்படுத்தும் மலசலகூடங்களைப் பயன்படுத்தும் போது

**AIDS நோயாளிகளின் பிரதான அறிகுறிகள்**

1. உடல் நிறை குறைவடைதல் – ஒருமாத காலத்தில் உடல்நிறையில் 10% வரை குறைவடையும்.
2. ஒருமாத காலத்திற்குமேல் நீடிக்கும் காய்ச்சல்
3. ஒரு மாத காலத்திற்குமேல் நீடிக்கும் கழிச்சல் (Diarrhoea)
4. ஏனைய சிறு அறிகுறிகள் : களைப்பு, இருமல், கைகால்வலி, அதிக வியர்வை, பல்வேறு சரும நோய்கள், வாயினுள் பொருக்கு உருவாதல், நீணநீர் சுரப்பிகள் வீங்குதல் போன்றன. HIV தொற்றடைந் தோர் நீண்டகாலம்வரை எவ்வித நோய் அறிகுறிகளையும் வெளிக் காட்டுவதில்லை. இதனால் அக்காலப் பகுதியில் அவர் இந்நோயைப் பலருக்கும் பரப்பும் அபாயம் அதிகமாக உள்ளது. இதனால் தொற்றடைந்தோரை முதலில் இனங்காணல் வேண்டும். இதற்காக குருதியிலுள்ள HIV பிறபொருளெதிரிகள் அறியப்படுதல் வேண்டும். இதற்கெனப் பின்வரும் முறைகள் தற்போது மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

1. Elisa - test (எலைசா சோதனை)– இது முதலாவதாக நடத்தப்படும் குருதிச் சோதனை யாகும். இது Screening Test எனப்படும். இச்சோதனை HIV தொற்று அல்லாத பிறகாரணங்களுக்கும் நேர்வகைப் பெறுபேற் றைக் காண்பிக்க இடமுண்டு.

2. Western blot test – இதுவே உறுதிப்படுத்தும் சோதனையாகும். Elisa சோதனையில் நேர்ப்பெறுபேற்றைக் காட்டும் ஒவ்வொரு குருதி மாதிரியும் Western blot Test க்கு உட்படுத்தப்படும்.

HIV **பரவுதலைத் தடுத்தல்**

1. பாலியல் தொடர்புகளின்மூலம் HIV பரவுதலைத் தடுத்தல்:
   - பாதுகாப்பான பாலியல் தொடர்புகளைப் பேணல்.
   - இதற்கென ஆணுறைகளைச் சரியான முறையில் பயன்படுத்தல்.
   - பாலியல் தொடர்புகளைத் தவிர்த்தல் அல்லது திருமணம்வன்ரி பாலியல் தொடர்புகளைத் தவிர்த்தல்.
   - நம்பகரமான ஒரு துணைவருடன் அல்லது துணைவியுடன் மாத்திரம் பாலியல் தொடர்பு கொள்ளல்.

2. குருதி மூலம் HIV பரவுவதைத் தடுத்தல்
   - குருதிப் பரிமாற்றத்தின்போது குருதியில் தொற்றுக்கிடையாது என்பதை உறுதி படுத்தல்.
   - ஊசிமூலம் மருந்தேற்றும் முறையை இன்றியமையாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்தல்.
   - கிருமியழிக்கப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தல் அல்லது ஒரு தடவை மட்டும் பயன்படுத்திக் கழிக்கும் புதிய ஊசிகளையும், புகுத்திகளையும் பயன்படுத்தல்.
   - நாளத்தினூடு ஊசிமூலம் போதைப் பொருட்கள் ஏற்றிக் கொள்வதைத் தவிர்த்தல்.

3. தாயிடமிருந்த சிசுவுக்குக் கடத்தப்படு வதைத் தவிர்த்தல்
   - பாலுறவுகளை இயன்றளவுக்குத் தவிர்த்தல்
   - பாலுறவின்போது ஆணுறைகளை பயன்படுத்தல்
   - தொற்றுதலுக்குள்ளானவர் கருத்தரிப் பதைத் தவிர்பதற்கான குடும்பத் திட்டங்களை மேற்கொள்ளல்.
   - தொற்றுதலக்குள்ளானவர் குழந்தைக் குத் தாய்ப் பாலூட்டுவதைத் தவிர்த்தல்.

HIV ஆனது T நிணநீர்க்குழியங்களாகிய $CD_4$ கலங்களிலேயே தொற்றுதலடைந்து அக்கலங்களினுள் எண்ணிக்கையிற் பெருகின் றது. இதனால் $CD_4$ கலங்களில் செயலிழந்து எண்ணிக்கையில் குறைவடைகிறது. இந்த ஆரம்பப் பருவம் HIV தொற்று தலடைதல் எனப்படும். இக்காலப் பகுதியில் வைரசின் எண்ணிக்கை துரிதமாக அதிகரிப்பதால் காய்ச்சல், உடல்வலி, தலைவலி போன்ற சிறப்புத்தன்மையற்ற சில குணங்குறிகள் வெளிப்படுத்தப்படும். எவ்வித சிகிச்சையும் இன்றி இக்குணங்குறிகள் அடங்கிப் போய் விடும். இவ்வாறாக நோய்க் குறிகளை

வெளிக்காட்டாது 5 –10 வருடங்கள் வாழ்வர். இக்காலப்பகுதியில் இவரினூடாக ஏனையோருக்குத் தொற்றுதல் ஏற்படலாம். இவ்வாறான $CD_4$ கலங்கள் 80 % அழிவடைந்த பின்னரேயே AIDS எனப்படும் இறுதிக்கட்ட நோய் நிலைமை ஏற்படுகின்றது. இவ்வாறாக AIDS நோயாளியின் நீர்ப்பீடனத் தொகுதி நலிவடைவதால் அவர் பற்றீரியா, பங்கசுத் தொற்றலுக்குட்படும் வாய்ப்புக் காணப்படும். உதாரணமாக கசம், நுரையீரல்அழற்சி போன்றன.

AIDS யைப் பூரணமாகக் குணமாக்கத்தக்க எந்தவொரு மருந்தும் இதுவரையிற் கண்டறியப் படவில்லை. எனினும் தொற்றடைந்தோரை ஆரோக்கியமாக வைத்திருக்கத்தக்க மருந்து வகைகள் தற்போது பயன்பாட்டிலுள்ளன.

எனவே AIDS க்கு எதிர்காலத்தில் மருந்து கண்டு பிடிக்கப்படும் வரையில் எமது நடத்தைக் கோலங்களில் கவனம் செலுத்தி விஞ்ஞானத் திற்கே சவாலாக விளங்கும் AIDS பரம்பலைத் தடுப்பதற்கு சபதமெடுப்போமாக.

* அறிவை அறிவால் அறிய வேண்டும்
* போனவற்றை நினையாதே
* விடா முயற்சி வெற்றியைத் தரும்
* பிறந்த நாட்டைப் பெற்ற தாய் போல் நேசியுங்கள்
* "எம்மதமும் சம்மதம்" எல்லா மதத்தையும் நேசியுங்கள்
* எல்லோரையும் சகோதர உணர்வுடன் நேசியுங்கள்
* தனது பணிகளை தானே செய்து கொள்ளுங்கள்

# Computer

திரு. எம். எம். ஏ. றூபநாதன்
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி

கணினியானது நீண்ட வரலாற்றைக் கொண்டதாக அமைகிறது. கி.மு. 3000 ஆண்டளவில் Abacus எனும் கருவி எண்ணு வதற்கு பொதுவாகப் பயன்பட்டது. எண் கணித வியல் வர்த்தகத்துறைகளில் விரைவாகக் கணிப்பீடுகளைச் செய்வதற்கு இதன் தத்துவம் இன்றும் பயன்படுகிறது. பின்பு கழித்தல், கூட்டல் செய்யக்கூடிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1640ஆம் ஆண்டுகளில் Blaise Pascal என்பவர் இதை உருவாக்கினார். இதன்பின்னர் 1800 களில் பிரித்தானிய விஞ்ஞானியான சாள்ஸ் ஸ்ரானோப் (Charles Stanhope) என்பவர் தர்க்க சமன்பாடுகளை விடைகாண கருவி ஒன்றை கண்டுபிடித்தார். மேலும் 1822 களில் மடக்கை கள், திரிகோணகணித அட்டவணைகளை கணிதவியலாளர்கள் உருவாக்கினார்கள். கணித்தலை ஆங்கிலத்தில் Computation என்று சொல்வார்கள். இவ்வாறு கணிப்பவர்களை Computers என அழைத்தனர். காலப்போக்கில் கணித்தலைச் செய்யும் கருவி Computer எனப்பட்டது. இக்கால கட்டத்திலேயே Charles Babhage என்பவர் கணித அட்டவணைகளைக் கணிப்பிடுவதற்கு ஓர் இயந்திரத்தை உருவாக் கலாம் எனக்கருதினார். இவரின் தத்துவ அடிப்படையில் 1900 ஆண்டளவில் அளவில் மிகப்பெரிதான கணித்தல் இயந்திரம் உருவாக் கப்பட்டது. இதன்மூலம் மேலும் சிக்கலான சமன்பாடுகளைத் தீர்ப்பது கடினமாகவும் அதிக நேரம் விரயமாகுவதையும் கருத்திற்கொண்டு, 1930 களின் முற்பகுதியில் John Vincent Atanasoft என்பவரும் அவரது மாணவரும் இணைந்து முதலாவது கணித நோக்குக் கொண்ட கம்பியூட்டரை உருவாக்கினார்கள். இவ்வாறு கம்பியூட்டர் வரலாறு உருவாகியது. பின்பு தொடர்ந்த கம்பியூட்டர் வரலாறு பின்வருமாறு தொகுக்கப்பட்டது.

## First Generation of Computers 1946-1955

இவ்வகை Computers இல் வெப்ப அயன் வால்வுகள் பயன்படுத்தப்பட்டன. இவை அளவில் பெரியனவாகவும், வேகம் குறைந்தவை யாகவும் காணப்பட்டன. இதன் பின்பு 1948ஆம் ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்ட திரான்சிற்றர் (Transistor) எனும் கருவி கணினி யுகத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

## Second Generation of Computers 1957-1963

இவ்வகை Computers இல் Transistors பயன்படுத்தப்பட்டன. Computers அளவில் சிறியனவாகியது வெப்பம் வெளிவிடும் தன்மை குறைந்தது, வேகம் அதிகரித்தது.

## Third Generation of Computers 1964-1979

இவ்வகை Computers இல் தொகையீட்டுச் சுற்றுக்கள் (I.C) தொகையீட்டுச் சுற்றுக்கள் என்பது பல தொகையான திரான்சிற்றர்களை

ஒன்றாகச் சேர்த்தாகும் குறைந்தளவு தொழில் நுட்பத் திறனுடன் இதலன இயக்கக் கூடியதாக அமைந்தது.

## Forth Generation of Computers 1980- Present

இவ்வகை Computers இல் LSI, VLSI என்பன பாவிக்கப்பட்டன Computers மலிவாக கிடைக்கக்கூடியதாக அமைந்தது. வேகம் மிக அதிகமாகியது.

Computer தொழில்நுட்பமானது உலகில் இன்று வேகமாக வளர்ந்துவரும் ஒரு தொழில் நுட்பமாகும். மருத்துவத்துறை, பாதுகாப் புத்துறை, வர்த்தகத்துறை என்று பலதுறை யிலும் இதன் பயன்பாடு காணப்படுகிறது. அத்துடன் பொழுது போக்கிற்கும் பாவிக்கப் படுகின்றது.

வேகமாக வளர்ந்துவரும் கம்பியூட்டர் தொழில்நுட்பத்தின் மாபெரும் கண்டுபிடிப்பான இன்ரர்நெற் தகவல் பரிவர்த்தனை உலகத் தினை ஒரு புதிய சகாப்தத்திற்குள் கொண்டு சென்றுள்ளது. உங்கள் வீட்டில் இன்ரர்நெற் இணைக்கப்பட்ட கம்பியூட்டர் இருக்குமே யானால் உலகமே உங்கள் கைகளில் இருக்கிற மாதிரி அமையும்.

இனி இன்ரர்நெற்றின் வரலாற்றை பார்ப்பின் 1960 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இரண்டு கம்பியூட்டர்களை நேரடியாக இணைத்து தகவல் பரிமாற்றம் செய்யும் ஒருமுறையைக் கண்டு பிடித்தனர். இந்த முறையானது இராணுவத் துறைக்குப் பெரிதும் உதவும் என உணர்ந்த அமெரிக்க அரசு பெருந்தொகை பணத்தைச் செலவு செய்து இந்தத் துறையில் மேலும் ஆய்வுகளை மேற்கொள்ள ARPA (u.s Advanced Research Projects Agency) எனும் ஆராய்ச்சி மையத்திற்குப் பணித்தது. இந்த அமைப்பானது பல கம்பியூட்டர்களை இணைக்கும் வலைப் பின்னலை (Computer Nwetork) உருவாக்கியது. இதன் தொடர்ச்சியாக 1980களில் பல நகரங்களில் உள்ள கம்பியூட்டர்களை இணைக் கும் பாரிய நெற்வேர்க் ஆக உருவெடுத்தது. இதுவே இன்ரர்நெற்றிற்கு அடிகோலியது. ஆரம்பத்தில் ஒருசில கம்பியூட்டர்களுடன் இணைத்து உருவாக்கப்பட்ட இன்ரர்நெற் ஆனது இன்று உலகம் பூராகவும் பல கோடிக் கணக்கான கம்பியூட்டர்கள் இணைக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான நெற்வேர்க்காக மாறி யுள்ளது.

இன்ரர்நெற்றின் ஒரு பயன்பாடாக மின் அஞ்சல் (E-mail) அமைகிறது. சாதாரண தபால் கடித தொடர்பானது நீண்ட நாட்களை விரயமாக்குவதாயும் பணச்செலவை உடையதா கவும் அமைகிறது. மின் அஞ்சல் மூலம் ஒரு சில நொடிகளில் எமது தகவல்களை மற்றவர் களுக்கு அனுப்பலாம். இதற்குரிய பணச் செலவும் மிகவும் குறைவானதாகும். இன்ரநெற் தொடர்பு இருப்பதால் உலகின் ஏதோ ஒரு மூலையில் நடக்கும் நிகழ்வு உலகின் மற்றைய பாகத்திற்குச் சில நொடிகளில் போய்ச் சேருகின்றது. மேலை நாடுகளில் சில கற்கை நெறிகளை வீட்டில் இருந்தவாறே மேற் கொள்ளக் கூடியதாக இந்த இன்ரநெற் தொழில் நுட்பம் வாய்ப்பளிக்கின்றது. மேலும் ஒரு நிறுவனம் வெவ்வேறு நாடுகளில் தனது தொழிற்சாலைகளை நிறுவி பராமரிக்கும் போது அந்த தொழிற்சாலையை நிறுவிய முகவர் ஒரே நேரத்தில் அந்தந்த நாட்டிலுள்ள தொழிற்சாலை முகாமைத்துவ அதிகாரிகளுடன் ஒரே மேசை யில் இருந்து கலந்துரையாடலை நடத்துவதற்கு

அவர்களை ஒரே இடத்திற்கு அழைக்கத் தேவையில்லை. அவர்கள் தத்தமது நாடுகளில் இருந்தவாறே இன்ரநெற் தொடர்புமூலம் அவ்வாறான ஒரு கலந்துரையாடலை ஏற்படுத் தலாம். நாம் வேறோர் நாட்டிற்குச் சென்று ஹோட்டலில் தங்கப்போறோமெனின் இங்கிருந் தவாறே ஹோட்டல் அறைகளின் விலைகளை அறிந்து, தேவையான ஒரு ஹோட்டலில் எமது முற்பதிவை மேற்கொள்ளலாம். அங்குசென்று ஹோட்டல் ஹோட்டலாக அலைய வேண்டிய அவசியம் இல்லை. அத்துடன் ஹோட்டல் அமைந்துள்ள சூழலையும் நாம் பார்த்து முற்பதிவை மேற்கொள்ளலாம். இவ்வாறு எல்லாம் செய்வதற்கு ஹோட்டல் உரிமையாளர் தமது ஹோட்டல் பற்றிய தகவல்களை உலக தகவல் களஞ்சியத்திற்கு வழங்கியிருக்க வேண்டும். இதைப்பற்றி பின்பு பார்ப்போம். சில மருத்துவ மனைகளில் ஆப்பிரேசன் நடந்து கொண்டிருக்கும்போது, வேறோர் நாட்டில் இருக்கும் மருத்துவ நிபுணர்களின் ஆலோ சனைகள் இன்ரநெற் மூலமாக பெறப்படுகிறது. நோயாளியை அவதானித்து ஆலோசனை கூறக்கூடியதாக உள்ளது.

இவற்றைவிட உலக வலைமையம் (world wide web w.w.w) இதை ஒரு தகவல் களஞ்சியம் எனலாம். நான் ஏற்கனவே கூறியதுபோல தகவல்கள் இக் களஞ்சியத்தில் இருந்தால்தான் நாம் இன்ரநெற்றின் மூலமாக அவற்றை அறியமுடியும். பல்வேறு நாடுகளில் இருந்து தகவல்கள் இக்களஞ்சியத்திற்கு வந்து சேருகின்றது இவை வெவ்வேறு web site களில் சேகரித்து வைக்கப்படுகிறது. ஒவ்வொரு web site இற்கும் ஒவ்வொரு முகவரி உண்டு. நீங்கள் ஏதாவது தகவலைப் பார்க்க விரும்பினால் அதற்குரிய முகவரியைப் பாவித்து தகவல்களை பெறமுடியும்.

இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்தே தற்போது Information Technology (I.T) எனும் கற்கைநெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கூடிய ஆர்வத்துடன் இப்பாடத்தைக் கற்க வேண்டும்.

- சத்தியமே நம்மைப் பாதுகாக்கும் கடவுள்
- பொய் பேசாதே, பிறர் குற்றம் பேசாதே, புறங்கூறதே, அதிகம் பேசாதே.
- நன்மையோ, தீமையோ எதைச் செய்தாலும் அதன் விளைவுகள் நிற்காது அவனைத் தொடர்ந்த வண்ணமேயிருக்கும்.

# சோழர் காலச் சிற்பக்கலை

**திரு. சீனித்தம்பி தவசீலன்**
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.

பல்லவர் காலச் சிற்பக்கலை பல சோதனைக் களங்களைத் தாண்டி நிலைபெற்றது. சோழர் காலச் சிற்பக்கலை அந்த வெற்றியின் அடித் தளத்திலே பல்கிப் பெருகியது. இக்காலச் சிற்பங் கள் முதலாம் ராஜராஜனுக்கு முற்பட்டவை, பிற்பட்டவை என இருபெரும் பிரிவுகளாகவே உற்றுநோக்கப்படுகின்றது. சோழர்காலத் தளிகள் கட்டமைப்பின் பல்வேறு இடங்களிற் சிற்பங்கள் சிறப்புறப்பெற்றுப் பொலிந்தன. துணைத்தளம், தாங்குதளம். சுவர், தூண், கூரை உறுப்புக்கள், ஆர உறுப்புக்கள் கிரீவச்சுவர் என விமானத்தின் அரமியம் தவிர்ந்த அத்தனை பகுதிகளிலும் சோழச் சிற்பாசாரியார்கள் தங்களின் கைவண்ணத்தைக் காட்டியுள்ளனர். இறைதோற்றங்கள், தேவர்கள், அசுரர்கள், கணங்கள், துவாரபாலகர்கள், முனிவர்கள், அரசமரபினர், மனிதஉருவங்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, தாவரங்கள் என எதனையும் விடாது, சிற்ப வடிவில் இருந்தாலும் ஆகமக்கோட்பாடுகளின் ஆதிக்கத்தினாற் புராணம் இதிகாசங்களுக்கு முக்கியத்துவம் அளித்துச் சிற்ப பின்புலங்கள் திட்டமிடப்பட்டு சிற்பங்கள் வடிக்கப்பட்டது.

இராஜராஜனுக்கு முற்பட்ட சிற்பங்களை மேலும் செம்பியன்மாதேவிக்கு முற்பட்டவை என நளினமாகவும், இறுக்கம் குறைந்ததும், அபங்கத்திற் காணப்படுவதும், ஆடை அணி கலன்கள் கூடுதலாகவே இடம்பெறுகின்றது. குறிப்பாக குறங்குசெறி, தாரகை சும்மை, அரும்புச்சரம், சூடகம், தொய்யகம் போன்ற சிற்பச் செந்நூலிற் காணப்பெறாத பல்வேறு வகையான குண்டங்களைக் கூறலாம். இதுபோற் பல்வேறு வகையான இசைக் கருவியின் சிற்பங்களும் அதிகளவிலே இக் காலத்திலே தோன்றியுள்ளன. செம்பியன் மாதேவி காலத்துச் சிற்பங்கள் ஆகமப் பிடிப்புடன் அமைந்துள்ளன. கண்டபாத, மகரதோரண, கபோதக் கூடுச் சிற்பமாக இடம்பெற்று வந்த சிவபெருமானின் புஜங்கத்திராசிதம் தேவகோட்டத்தில் இடம் பெறுவது இக்காலத்திற்றான் சுவர்களிற் காட்டப்பெறும் அரைத்தூண்களின் பாதங்க ளாகத் தாங்கு தளத்தின் கண்டப் பகுதியிலும். வேதிகைத் தொகுதியின் கண்டப்பகுதியிலும் இடம்பெறும் சதுரப் பிதுக்கங்களே கண்டபாதங் களாகச் சிற்றுருவ சிற்பங்கள் ஏற்கும் தளமாக அமைந்தன. உதாரணமாக புள்ளமங்கை பிரம்மபுரீஸ்வர், குடந்தை நாகேஸ்சுவரர் எறும்பியூர் எறும்பீசுவரர், கண்டியூர் வீரட்டானே சுவரம், திரும்புறம்பியம் சாட்சீசுவரநாதர், பொன் செய்துணை ஈசுவரம் முதலிய தளிவிமானங் களின் கண்டபாதங்கள் புராண இதிகாசந் தொடர்பான அற்புதமான சிற்றுருவச் சிற்பங் களைக் கொண்டுள்ளன. இவற்றுள் முதன்மை யானதாகப் புள்ளமங்கை பிரம்மபுரீஸ்சுவரர் ஆலயமாகும். இதன் விமான அர்த்தமண்டப் வேதிக் கண்டபாதங்களிலே தேர்ந்தெடுக்கப்

பட்ட இராமாயணக் காட்சிகள் தொடரான சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இருபது சென்ரிமீற்றர் அளவுள்ள சிறிய சதுரங்களில் இலட்சுமணன் முன்னேநோக்கியும், பின்னே சீதையும், அதற்குப்பின் இராமனும் செல்வது போல் உள்ள சிற்பம் சிறப்பானதாகும். இதுதவிரத் தாடகை வதம், அகலிகை சாபம் நீங்கல், குகனின் ஓடத்திற் கங்கையைக் கடத்தல், தண்டகாரண்யத்தில் விராதன் சந்திப்பு, சூர்ப்பனகையின் மோகம், சரபங்க, சுதீக்ஷண மகரிஷி சந்திப்பு, மாரீசன் மான் வேடம், இராவணன் சீதையைத் தேரிற் கொண்டுசெல்லுதல், சடாயு தாக்கப்படுதல் செய்தியைக்கூறி சடாயு இறத்தல், வாலி மரணம் என எண்ணற்ற காட்சிகள் மிகச் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

விஜயாலயன் காலச் சிற்பங்கள் நார்த்தா மலையில் உள்ள விஜயாலய சோழேச்சரத்தில் உள்ளன. தாய்த்தெய்வ வடிவங்கள் இங்கே அமைக்கப்பட்டன. வீராசனம் இட்டு அமர்ந் துள்ளது வைஷ்ணவியின் சிற்பமாகும். இதிற் பின்புறமான இரு கரத்திற் சங்கும் சக்கரமும் உள்ளன. முன்புள்ள இடது கரம் தொடையிற் கிடையாகவும் வலது கரம் அபய முத்திரையுடன் கணுக்கால்வரை தேவியானவள் ஆடை அணிந்துள்ளாள். ஆடையின் தோற்றமானது கோடுகள் மூலமும் காட்டப்பட்டுக் கையில் அகலமான பட்டிகள் அணியப்பட்டுள்ளது. இதுபோல் வீணாதர தட்சணாமூர்த்தியின் சிற்பம் முன்னிரண்டு கைகளில் வீணையையும் பின்னிரெண்டு கைகளில் ஒன்றிற் திரிசூலத்தை யும் மற்றையதில் அக்கமாலையையும் வைத் துள்ளார். சுருள் சுருளாக இவரது சடைஷிபாய் மயிர்போலக் காட்சியளிக்கின்றது. விஜயாலய சிற்பங்களில் "நிசம்பசூதனி" கோயிற் கருவறையில் இருந்த இறைவியின் சிலை "உக்கிரமாகாளி" எனும் பெயரிலே கையிற் படைக்கலங்கலைத் தாங்கிக் காலடியிலுள்ள அரக்கனை வதைப்பவளாகவும் காணப் படுகின்றாள்.

ஆதித்தன் காலத்துக் கோயில்கள் சிற்பத்தாற் சிறப்புடையது. கட்டிட அமைப்பில் தஞ்சைக் கோயிலைப்போற் சிற்பச் சிறப்பில் மேலோங்கி நிற்கின்றது. ஆறு ஆடவர் சிற்பங்களும் நான்கு பெண்களின் சிற்பங்களும் உயிர்த்துடிப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. இது இதிகாச, புராணக்கதைகளை விளக்குபவை யாக அமைந்துள்ளன. ஸ்ரீநிவாச நல்லூரில் உள்ள கோரங்கநாதர் கோயிலில் இரு பெண்களின் சிற்பங்களும், ஆலமரத்தின்கீழ் அமர்ந்து ஞானத்தைப் போதிக்கும் தட்ஷணா மூர்த்தியின் வடிவமும் அற்புதப் படைப்பாகும். அத்துடன் சிவபுராணக்காட்சிகளும், இராமாயணக் காட்சிகளும் சிற்பமாய் வடிக்கப் பட்டுள்ளது.

கொடும்பாளூர் "மூவர் கோயிலில்" திரிபுராந்தகர் சிலையும், சிவனார் சதுரதாண்ட வம் ஆடும் வடிவமும் மிக எழிலானவை. மேலைப் பழுவூர் சுந்தரேஸ்வரர் கோயிலில் உள்ள நந்திக்கு எந்த ஒரு நந்தி வடிவமும் நிகரில்லை என்ற அளவிற்கு அழகுடன் செய்யப்பட்டுள்ளது. சோழர்காலச் சிற்பக்கலையிலே, உலோகத் திருமேனிகளிலே கருணையையும், மென்மைத் தன்மையையும் இலகுவாகக் காணமுடிகின்றது. இடைக்கால சோழர் ஆட்சியிற் செம்பியன் மாதேவியாரின் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறை மண்டபத்தின் நுழை வாயிலில் 12 அடி உயரமான எழில்மிகு

துவாரபாலகர் வடிவம், சூலத்தையும், வாளினையும் தாங்கிய சிவவடிவம், பத்துக் கையை உடைய நடராஜ வடிவம் அற்புதக் கலைப் படைப்பாகும். முதலாம் இராஜேந்திரனின் கங்கைகொண்ட சோழபுரத்திலே ஆடும் ஐங்கரன், உமையொரு பாகன், ஹரிஹரன் ஆகிய சிற்பங்கள் அழகான உருக் கொண் டவை. இக்காலத்திலே நாயன்மாரின் வாழ்க் கையைச் சித்தரிக்கும் காட்சி, வாத்தியம் இசைப் போர், சிலம்புப்போர் செய்வோர். நர்த்தனமாடும் விநாயகர் போன்றவை பெரிதும் அமைக் கப்பட்டன. பிற்காலச் சோழர் கோயில்கள் அலங்கார வேலைப்பாடுகளை அதிகம் செய்து கல்யாண மண்டபம், அலங்கார மண்டபம், புராணக் கதைச் சிற்பங்கள் என்பன அமைக்கப்பட்டன, மிக முக்கியமானதாகச் சூரியனுக்குத் தஞ்சைக் கோயிலைக் கட்டியதும் இக்காலத்திலே ஆகும். இவ்வாறு வாணிபம் மூலப்பொருள் ஈட்டி கோயில்களை அமைத்து, சிற்பக்கலைக்கே உயிரூட்டம் அளித்து, சிற்பக்கலையிலே பொற்காலமாகச் சோழர் காலம் தன்நிறைவு பெற்றுள்ளது.

**துணைநூல்கள்**


கோயில்களும் கலைகளும் – Prof – சி. பத்மநாதன்

இந்து நாகரிகத்திற் கலை – கலாநிதி . காரை . சுந்தரம்பிள்ளை


## இலங்கையின் முதலிடங்கள்

- *முதல் செய்தித் தாள் :- கொழும்பு ஜேணல்*
- *முதல் தமிழ் செய்தித்தாள் :- உதயதாரகை (1841 இல்)*
- *முதல் பெண்கள் பாடசாலை :- உடுவில் மகளிர் கல்லூரி(1824)*
- *முதல் அரசியல் கட்சி - இலங்கை தேசிய காங்கிரஸ்*
- *இதன் முதல் தலைவர் - சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆவார்.*
- *முதல் தபால் முத்திரை 1857ல் வெளியிடப்பட்டது. இதில் விக்ரோரியா மகாராணியின் படம் பொறிக்கப்பட்டு இருந்தது.*

# விசேட கல்வியும், விழிப்புலனற்றோரும்

திருமதி க.தாமரைச்செல்வி
திருமதி சு.ஜெயபானு
விசேடகல்வி ஆசிரியர்கள்
யா/இராமநாதன் கல்லூரி.

விசேட கல்வி என்றால் என்ன என்பதுபற்றி நாம் புரிந்து கொள்வது அவசியம். விசேட கல்வி என்பது விசேட தேவையுடைய பிள்ளைகளுக் காக கற்பித்தல் செயல்முறைகள், நுட்பங்கள், விசேட உபகரணங்கள், விசேட பாடத்திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு துறையாகும். விசேட பாடத்திட்டத்துடனான வேலைத் திட்டத்தின்கீழ் விசேடகல்வி தொடர்பான பயிற்சிபெற்ற ஆசிரியரினால் இக்கல்வி முறைமை செயற்படுத்தப்படும். இவ்வேளையில் விசேட தேவை உடையோர் என எமது நாட்டில் 13 வகையாக வரையறுக்கப்பட்டுள்ளது.

1. மீத்திறனும் விசேட நிபுணத்துவமும்
2. கற்றல் இயலாமை உடையோர்
3. மொழிதலும் மொழிக்குறைபாடும்
4. மெதுவான உள வளர்ச்சி
5. பல்வகை இயலாமை
6. உடலியற் குறைபாடுகள்
7. வேறு சுகாதாரக் குறைபாடுகள்
8. கேட்டற் குறைபாடு
9. பார்வைக் குறைபாடு
10. பூரணமான பார்வை, கேட்டற் குறைபாடு
11. தற்சிந்தனை
12. மூளையில் ஏற்பட்ட பாதிப்பு
13. உக்கிரமான மனவெழுச்சிப் பிரச்சினை

விசேட தேவையுடைய மாணவர்களின் எண்ணிக்கையானது யுத்தம், இயற்கை அனர்த்தம் மாறிவரும் சமூகம், பொருளாதார மாற்றங்கள் மற்றும் உயிரியற் காரணிகள் போன்றவற்றால் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றமை தவிர்க்க முடியாததாகிவிட்டது. பாடசாலையிலும் மொத்த மாணவர் எண்ணிக் கையில் 10% இற்கும் அதிகமானோர் விசேட கல்வித்தேவை உடையவராக காணப்படு கின்றனர்.

இந்த விசேட தேவையுடைய மாணவர்களில் பார்வையற்ற மாணவர்களை நோக்கும்போது அவர்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. முற்றாகப் பார்வையற்றவர்கள்
2. பார்வைக் குறைபாடு உடையவர்கள்

இவர்கள் மூன்று சந்தர்ப்பத்தின் காரணத் தால் தோற்றுவிக்கப்படுகின்றனர்.

**1. குழந்தை பிறப்புக்கு முன்**

1. தாய்க்கு ஜேர்மன் சின்னமுத்து வருதல்
2. போசனைக் குறைபாடு
3. அதிர்வு
4. வன்முறை
5. மருந்து வகைகளைப் பாவித்தல்
6. போதை வஸ்து பாவித்தல்
7. தாயின் மனத்தாக்கம் அதாவது கவலை நெருக்கீடு
8. தாய்க்குப் போதிய அரவணைப்புக் கிடைக்காமை
9. தாய் இரசாயனத் தொழிற்சாலையில் வேலைசெய்தல்

10. மாசடைந்த நீர், உணவு, வளி அதாவது அணு உலைத் தொழிற்சாலைக்கு அருகில் வசித்தல்
11. பரம்பரையாக வரும்
12. கதிர்ப்படம் எடுத்தல்

**2. குழந்தை பிறக்கும் போது**

1. வைத்தியரின் கவனக் குறைவு
2. தாயின் கவனக்குறைவு
3. போக்குவரத்து வசதியின்மை
4. நுண்ணுயிர் தொற்று ஏற்படல்

**3. பிறப்பு நிகழ்ந்த பிறகு**

1. போர்ச்சூழல்
2. தடுப்பு மருந்து பாவிக்காதுவிடல்
3. இயற்கை அனர்த்தம்
4. விளையாட்டின்போது வெடிபொருள் பாவித்தல் (விபத்துக்கள்)
5. மூளைக்காய்ச்சல், கண்நோய்

**பார்வை இழப்பைத் தவிர்க்கும் முறைகளாவன**

1. வைத்தியரின் ஆலோசனைகளை நாடல்
2. சத்துள்ள உணவுகளை உண்ணல்
3. உரியநேரத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்.
4. சுகாதாரப் பழக்கவழக்கங்களை ஒழுங்காகக் கடைப்பிடித்தல்.

இவ்வாறான மாணவர்களை வாழவைக்கும் நோக்கோடு நவீல்ட் பாடசாலை பார்வையற்ற மாணவர்களை ஆதரித்து அவர்களுக்கு கல்வி வழங்கியது. இதனைத்தொடர்ந்து 1972ஆம் ஆண்டு இலங்கையில் ஒருமுகப்படுத்தப்பட்ட கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டது.

பார்வையற்ற மாணவர்களுக்கான விசேட கல்வி டிப்ளோமாவை அமரர் செல்வி. அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்கள் கற்று சாதாரண பாடசாலையில் பார்வைக்குறைபாடுடைய மாணவர்களைச் சாதாரண மாணவர்களோடு ஒன்றினைத்து அவர்களுக்கு தேவையான விசேட கல்வியை வழங்கினார். 1988ஆம் ஆண்டு வாழ்வகத்தைத் தொடங்கி இப்பிள்ளைகளை ஆதரித்து சாதாரண பாடசாலைகளில் கல்விகற்கச் செய்தார். தற்பொழுது இந்த நிறுவனத்தை தனது முதல் மாணவர்களில் ஒருவராகிய பார்வையற்றவரும் கல்வியற்கல்லூரி விசேட கல்வி விரிவுரையாளரும் ஆகிய திரு. ஆறுமுகம் ரவீந்திரன் அவர்களிடம் இப்பொறுப்பை ஒப்படைத்து இறைவனடி சேர்ந்தார்.

இன்று பார்வையற்றோருக்கான கற்றல், கற்பித்தல் முறை யாழ் இராமநாதன் கல்லூரியிலும், யாழ் யூனியன் கல்லூரியிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவர்களுக்கான குற்றெழுத்துக் கல்வியை (பிறெயில் எழுத்து) திருமதி தாமரைச்செல்வி கீதாகிருஷ்ணன், திருமதி ஜெயபானு சுரேந்திரநாத் ஆகிய நாங்கள் இருவரும் விசேட ஆசிரியர்களாக பயிற்சிபெற்று இக்கல்வி முன்னேற்றத்திற்கு உதவிசெய்து வருகின்றோம்.

இக் குற்றெழுத்தானது 1824ஆம் ஆண்டு பார்வையற்றவரான லூயி பிறெயில் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இன்னும்பல நவீன கற்கும் கருவிகள் பார்வை அறைகூவல் உடையோருக்காகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**இவர்களுக்காக எழுத்து வடிவம் (உயிர் எழுத்துக்கள்)**





**மெய்யெழுத்துக்கள்**





**மெய்யெழுத்துக்கள் எழுதும்போது *dot* 4 எழுதி எழுத வேண்டும்.**

**உ+ம்: க்**


**ஆங்கில எழுத்து வடிவம்**



**கணிதச் செயற்பாடு**




**இவர்களுக்கான கணிதச் செயற்பாட்டை அபக்கஸ் மூலம் செய்வார்கள்**




இக்கல்விச் செயற்பாட்டின் மூலம் இன்று சமூகத்தில் ஏனையவர்கள்போல் இவர்களும் விரிவுரையாளர்களாகவும், சமூகசேவை உத்தி யோகத்தர்களாகவும் ஆசிரியர்களாகவும் கடமையாற்றி வருகின்றனர். இன ரீதியாகவோ, மதரீதியாகவோ முதலாவது பார்வையற்ற தமிழ்ச் சட்டத்தரணி அற்புதராஜ் ஆகிய வாழ்வக மாணவன் யா/யூனியன் கல்லூரியில் தனது கல்விச் செயற்பாட்டை முடித்து, கொழும் புப் பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டத்தரணி யாக இன்று வெளியேறியுள்ளார்.

மேற்கூறியவாறு விசேட கல்வித்துறை யானது, இன்று துரிதமாக வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகும். உலகலாவிய ரீதியில் இன்று இதன்தேவை பெருமளவு உணரப் பட்டுள்ளது. நமது நாட்டிலும் இத்துறை தொடர் பான விழிப்புணர்வு அண்மைக் காலங்களில் மிகவும் துரிதமாக முகிழ்ந்து வருவது கல்வித்துறை வளர்ச்சியை பொறுத்தமட்டில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சேதன இரசாயனத் தாக்கங்களின் பொறிநுட்பங்கள்

திரு. க. சிவத்திரன்
ஆசிரியர்.

**ஆறுவகைப் பொறிமுறை நுட்பங்கள் உள்ளன**

1. சுயாதீன மூலிக கூட்டல் தாக்கம் (out of syllabus
2. சுயாதீன மூலிகப் பிரதியீட்டுத் தாக்கம்
3. இலத்திரன் நாட்ட கூட்டல் தாக்கம்
4. இலத்திரன் நாட்ட பிரதியீட்டுத் தாக்கம்
5. கரு நாட்டக் கூட்டல் தாக்கம்
6. கரு நாட்ட பிரதியீட்டுத் தாக்கம்

**1) சுயாதீன மூலிக கூட்டல் தாக்கம்**

$$CH_3-CH=CH_2 \xrightarrow[HBr]{Peroxide} CH_3-CH_2-CH_3-Br$$

இப்பொறிமுறை பாடத்திட்டத்தில் இல்லை.

**2. சுயாதீன மூலிக பிரதியீட்டுத் தாக்கம்**

$Cl_2$, $Br_2$ என்பன அற்கேன்களுடன் மேற்படித் தாக்கத்தில் ஈடுபடும். பொதுவாக $SP^3$கலப்பில் உள்ள ஐதரசனே இலகுவாகப் பிரதியிடப்படும்.

$CH_4$ உடனான இத்தாக்கத்தினால் தோன்றும் சுயாதீன மூலிகங்கள் ஆவன $Cl^\circ$, $^\circ CH_3$, $^\circ CH_2Cl$, $^\circ CHCl_2$, $^\circ CCl_3$ இச்சுயாதீன மூலிகங்கள் தமக்குள் ஒன்று சேர்வதாலும் வேறு விளைவுகளும் பக்கவிளைவுகளாக உருவாகும். அவ்வாறான விளைவுகளாவன:

| | |
|---|---|
| 1) $CH_3-CH_3$ | 2) $CH_3-CH_2Cl$ |
| 3) $CH_3CHCl_2$ | 4) $CH_3CCl_3$ |
| 5) $CH_2Cl-CH_2Cl$ | 6) $CH_2Cl-CHCl_2$ |
| 7) $CH_2Cl-CCl_3$ | 8) $CHCl_2-CHCl_2$ |
| 9) $CHCl_2-CCl_3$ | 10) $C_2Cl_6$ |

$$^\circ CH_3 + {}^\circ CH_2Cl \longrightarrow CH_3-CH_2Cl$$


$C_2H_6$ இன் இத்தாக்கத்தில்


$$CH_3-CH_3 \xrightarrow[hr]{Cl_2} CH_3-CH_2Cl \xrightarrow[hr]{Cl_2}$$

$$CH_3CHCl_2 \xrightarrow[hr]{Cl_2} CH_3CCl_3 \xrightarrow[hr]{Cl_2} CH_2ClCCl_3$$

$$CH_3-CH_2-CH_3 \xrightarrow[hr]{Cl_2} CH_3-CHCl-CH_3$$

ஐதரசன் குறைவாக உள்ள காபனில் உள்ள ஐதரசனே முதலில் பிரதியிடப்படும்.




இங்கு $H^\circ$ எனும் சுயாதீன மூலிகம் உண்டாவதில்லை. மற்றும்

$$Cl - Cl \longrightarrow 2\dot{Cl}$$

எனும் சமபகுப்பே நிகழ்கிறது.


$$Cl - Cl \longrightarrow Cl^+ + Cl^-$$

எனும் சமனில் பகுப்பு அல்லது பல்லினப் பகுப்பு இங்கு நிகழ்வதில்லை. இவ்வாறு நிகழக்கூடிய சக்தி தேவை. சூரிய ஒளியிலுள்ள சக்தி போதாது.


$I_2$ இத்தாக்கத்தை நிகழ்த்தாது

3. இலத்திரன் நாட்ட கூட்டல் தாக்கம் :-

அல்கீன்கள், அல்கைன்கள் போன்றன $Br_2(aq)$, $Br_2/CCl_4$, HBr ICl, HOCl என்பவற்றுடன் நிகழும் தாக்கங்கள்



அல்லது




இது அற்கீன்களில் நிகழும் இலத்திரன் நாட்டக் கூட்டல் தாக்கங்களாகும். இங்கு $CH_2$ காபன் அணு கரு நாடியாகவும் (Br+ ஐ ஏற்பதால்), CH காபன் அணு இலத்திரன் நாடியாகவும் (Br- ஐ ஏற்பதால்) தொழிற்படும்.

இங்கு அல்கீன், அல்கைன்களின் π பிணைப்பு அற்றுப் போவதால் இது நிரம்பாத் தன்மைக்கும் சான்றாகும்.


**4. இலத்திரன் நாட்டப் பிரதியீட்டுத் தாக்கம்.**

I. அமில ஐதரசன் காரணமாக அல்கைன்கள் நிகழ்த்தும் தாக்கம்





இது அற்கைன்களில் நிகழும் இலத்திரன் நாட்ட பிரதியீட்டுத் தாக்கமாகும். இங்கு $Ag^+$ இலத்திரன் நாடியாகவும், $NH_3$ கரு நாடியாகவும், அமில ஐதரசன் கொண்ட காபன் கருநாடியாகவும் தாக்குகிறது.

II. பென்சீனிலும், பென்சீன் பெறுதிகளிலும் வளையத்தில் நிகழும் நைத்திரேற்றம், அலசனேற்றம், அல்கைலேற்றம், ஏசைலேற்றம், சல்போனேற்றம் போன்ற தாக்கங்கள் யாவும் இலத்திரன் நாட்ட பிரதியீடுத் தாக்கம் ஆகும்.





இங்கு $\overset{(+)}{NO_2}$ இலத்திரன் நாடியாகும். $NO_2$ இணைந்த காபன் அணு கருநாடியாகும். இங்கு "இடைநிலை" $H^+$ ஐ இழப்பதனால் அமிலமாகத் தொழிற்படுவதாகக் கொள்ளப்படலாம்.


II. அற்கைலேற்றம்




IV. ஏசையிலேற்றம்




V. அலசனேற்றம்



VI. ஒதோ, பரா வழிகாட்டி உள்ள போது



VII. ஏவலகற்றும் கூட்டம் உள்ளபோது




**5. கருநாட்டக் கூட்டல் தாக்கம்**


I. காபனைல் சேர்வைகளாகிய அல்டிகைட், கீற்றோன் என்பன HCN, RMgX, உடனான தாக்கங்கள் கருநாட்டக் கூட்டல் தாக்கங்கள் ஆகும்.

$$\underset{\text{மிகை}}{HCN} + NaOH \rightarrow NaCN + \underset{\text{எஞ்சிய}}{HCN} + H_2O$$

$$NaCN \rightarrow Na^+ + (CN)^-$$



$$\text{OR } \underset{\text{மிகை}}{NaCN} + HCl \rightarrow HCN + \underset{\text{எஞ்சிய}}{NaCN} + NaCl$$




இங்கு காபனைல் காபன் இலத்திரன் நாடியாகவும் (CN)- அல்லது R- கருநாடியாகவும் O அணு கருநாடியாகவும் தொழிற்படும்.


II. எசுத்தர்களினதும், அமிலக் குளோரைட்டுக்களினதும் RMgX உடனான தாக்கமும் கருநாட்டக் கூட்டல தாக்க வகையைச் சேர்ந்ததாகும். இறுதியில் அமிலப்படுத்தப் புடை அல்ககோல் கிடைக்கும்.

**6. கருநாட்டப் பிரதியீட்டுத் தாக்கம்**


I அற்கைல் ஏலைட்டுக்களில் நிகழும் கார நீர்ப் பகுப்பு.




II. அல்கைல் ஏலைட்டுக்கல் KCN (அல்ககோலும் நீரும் கலந்தது) உடனான தாக்கம்.





III. அல்கைல் ஏலைட்டுக்கள் RMgX உடனான தாக்கங்கள்.





IV. அற்கைல் ஏலைட்டுக்கல் செறி $NH_3$, முதல் அமீன் வழிய மீன் உடனான தாக்கங்கள்





V. அமிலக் குளோரைட்டுக்களுடன் $NH_3$ முதன் அமீன் வழிய மீன்களின் தாக்கம்.




VI. அமில நீரிலிகளும் $NH_3$ முதன் அமீன் வழிய மீன்களுடன் கருநாட்ட பிரதியீட்டுத் தாக்கங்களை நிகழ்த்தும்




VII. அமில குளோரைட், அமில நீரிலிகள் அல்ககோல்களுடன் எசுத்தரை உருவாக்குவதும் கருநாட்ட பிரதியீட்டுத் தாக்கமாகும்.



# கடற்சாதாளைகளின் பொருளாதார முக்கியத்துவம்

திரு.தியாகராசா விக்னேஸ்வரன்
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.
மருதனார்மடம்.

கடலிற் காணப்படும் ஆதியான பூக்காத பிரிவிலி (Thallophyta) வகைக்குரிய மா அல்காக்கள் கடற்சாதாளைகள் (Sea weeds) எனப்படும். இக் கடற்சாதாளைகள் தற்போசணி களாகவும் காணப்படுகின்றன. இவை இடை வற்றுப் பெருக்கு வலயம் (Intertidal), உப வற்றுப்பெருக்கு வலயம் (Subtidal) ஆகிய பிரதேசங்களில் காணப் படுகின்றன. மேலும் இக் கடற் சாதாளைகள் அதிகமாகப் பாறைகள், முருகைக்கற்பாறைகள் என்பவற்றில் வேர்ப் போலிகளின் (Rhizoids or hold fast) உதவியினால் ஒட்டி வாழ்கின்றன.

இன்று உலகில் கடற் சாதாளைகளில் இருந்து கூழ்மப் பதார்த்தங்களான ஏகார் அல்ஜின், கராஜினன் என்பன தயாரிக்கப் படுகின்றன. இப் பதார்த்தங்கள் உணவாக, இரசாயனப் பொருட்களாகப் பல்வேறு கைத் தொழில் நடவடிக்கைகளிலும், மருந்தாக்க கைத்தொழில்களிலும் (Pharmaceutical) பயன்படுத்தப்படுகின்றன.

கடற்சாதாளைகளில் அதிகளவில் புரதம், விற்றமின்கள் கனியுப்புக்கள், நுண்மூலகங்கள் என்பன காணப்படுகின்றன. இதனால் இவை உணவாகவும், கால்நடைத் தீவனமாகவும், விவசாய வளமாக்கியாகவும் பயன்படுவதோடு மிக அண்மைக்காலத்தில் இருந்து குணப் படுத்தும் இயல்புள்ள மருந்துப் பொருட்களும் இவற்றில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

கடற்சாதாளைகளில் இருந்து பெறப்படும் பிக்கோ கூழ்ம உற்பத்திகளாக **ஏகார், கராஜினன், அல்ஜினன்** என்பவற்றின் பயன்கள்

**ஏகார்:**

- பக்ரீறியா வளர்ப்பு ஊடகம்
- உயிர்ச்சத்து வில்லைகள், மருந்து வில்லை களின் வெளியுறை
- பாற்கட்டி, இறைச்சிகூழ்மம், பழப்பாகு இனிப்பு என்பவை தயாரிக்கும்போது அவற்றைக் குழம்பாக்கி நிலைப்படுத்தும் ஊடகம்
- பியர், கோப்பி, பழச்சாறு, மற்றும் பழரசம் தயாரிப்பில் முக்கிய பங்காற்றுவது
- நீர் உட்புகவிடாத்துணி, சீத்தை என்பன வற்றின் தயாரிப்பின்போது பசைத்தன்மை யான திரவமாக ஏகார் பயன்படுத்தப்படும்.
- புகைப்படத்தட்டுகள், புகைப்படச்சுருள் என்பவற்றின் தயாரிப்பில்
- மலமிளக்கியாகவும், உணவுக் கால்வாயில் ஏற்படும் நோய்களுக்கான மாத்திரைகளின் தயாரிப்பில்

◈ பல்வைத்தியத்துறையில் பல்லில் நகல் எடுத்தல்

◈ சர்பத், ஐஸ்கிறீம் என்பவற்றில் நிலைப்படுத்தியாக ஏகார் பயன்படுத்தப் படும்.

**கராஜினன்**

◈ சொக்கலேற் இடப்பட்ட பாலில் கொக்கோவை தொங்கலாக வைத்திருப்பதற்கு

◈ ஐஸ்கிறீம் நிலைப்படுத்தியாக

◈ பகுதித் திரவ கூட்டுச் சாற்றின் தடிப்பாக்கத்திலும்

◈ உணவுக் கட்டுப்பாட்டில் உள்ளவர்களுக்கான உணவு தயாரிப்பிலும்

◈ அடித்த பால், அடித்த வெண்ணெய் என்பவற்றில் நிலைபடுத்தியாக

◈ சாற்று நிலையில் உள்ள ஐஸ்கிறீம், உறை நிலையிலுள்ள பழவகை, பற்பசை, வாசனைத்திரவியங்கள், சம்பூ, நீர்வர்ணம் என்பவற்றின் நிலைப்படுத்தியாக

◈ பல் வைத்தியத்துறையில் பற்களை நகல் எடுப்பதற்கான அச்சுத் தயாரிப்பில்

◈ காகிதத் தொழிற்சாலைகளில் காகிதம் தயாரிக்கும்போது கராஜினன் பயன்படுத்தப் படுகின்றது.

**அல்ஜின்**

◈ ஐஸ்கிறீம், சொக்கலேட் இடப்பட்ட பாலில் குழம்பாக்கியாகவும்

◈ ஜெலி, பழப்பாகு, பாற்கட்டி, செறிவான ஒறேஞ்சாறு தயாரிப்பில்

◈ நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளின் தயாரிப்பில்

◈ பல்வேறு வகையான மருந்து ஊர்வைகளின் மூலப்பொருட்களாக

◈ வெப்ப உறுதித்தூள், மலமிளக்கிகள், சத்திர சிகிச்சையில் பாவிக்கும்பசை கனியுப்பு எண்ணெய் நாக காபனேற்று திரவம், குதம், யோணி, சிறுநீர் வழி என்பவற்றில் சிகிச்சையின்போது வைக்கப்படும் திண்மப் பதார்த்தம் போன்றவற்றில் தயாரிப்பில்

◈ பற்பசை, பல்நகல் எடுக்கும் அச்சுகள், எலும்புச் சிகிச்சை துறையில் எலும்பளவு எடுக்கும் அச்சுகள் என்பன தயாரிப்பிலும்

◈ திரவியங்கள், பூசும் சேர்வைகள், சம்பூ என்பன தயாரிப்பிலும்

◈ செயற்கை இயற்கை இறப்பர் பால் தயாரிப்பிலும் வாகனங்களின் தரைவிரிப் பாகப் பயன்படும் இறப்பர், காசிதப் பைகள், சலவைப்பசைத்தூள், மற்றும் ஒட்டுப் பசைத்தயாரிப்பிலும்

◈ உறைந்த உணவுப் பொதிகள், பால் கொள்கலங்கள், பொதி செய்யப்படும் காகிதங்கள் என்பனவற்றிலும் அல்ஜின் பயன்படுத்தப்படுகிறது.

**உணவாகக் கடற்சாதாளை**

கடலில் இருந்து கிடைக்கும் ஒரே ஒரு தாவர உணவு கடற்சாதாளையாகும். கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இக்கடற் சாதாளையானது பல்லாயிரம் ஆண்டுகளாக விரும்பி உண்ணப்பட்டு வருகின்றது. யப்பானில் வருடாந்தம் (100,000) நூறாயிரம் தொன்னுக்கு மேற்பட்ட கடற்சாதாளை உணவுகள் நொறி (Nori), கொம்பு (Kombu), வகமே (Wakame) ஆகியவர்த்தகப் பெயர்களில் தயாரிக்கப்பட்டு உணவாக்கப்படுகின்றது.

கடற்சாதாளைகளில் உயர்ச்செறிவில் புரதம், அமினோ அமிலங்கள், வளர்ச்சி ஓமோன்கள்

கனியுப்புக்கள், நுண்மூலகங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன.

(Gracilaria) கிறேசிலேறியா எனும் கடற்சாதாளை எவ்வித பதப்படுத்தலும் இன்றி உணவாக உட்கொள்ளப்படுகிறது. பிலிப்பைன்ஸ் நாட்டில் வினாகிரி, இஞ்சி, தக்காளி, வெங்காயம் என்பன சேர்த்து சுவையூட்டப்பட்ட (Gracilaria) கிறாசிளேறியா ஆனது தாவர சலாட்டாகப்பயன்படுத்தப்படுகிறது.

பிலிப்பைன்ஸில் இருந்து யப்பான் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளுக்கு அல்காக்களின் மூலப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கு தூய ஏகார் தயாரிக்கப் பயன்படுகிறது யப்பான், சீனா, பிலிப்பைன்ஸ், ஹவாய் போன்ற நாடுகளில் கடற்சாதாளை உணவாகப் பயன்படுகிறது. பச்சையங்களுக்கான (Caulerpa) கோலப்பா, Codium (கோடியம்) என்பன அச்சாறு, ஊறுகாய் வகைகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. கபில அல்காக்களான லமினேரியா Laminaria அருமை உணவாகப் பயன்படுவதோடு, யப்பான் நாட்டில் ஒருவகையான குடிநீர் தயாரிப்புக்கும் பயன்படுத்தப் படுகிறது.

**இரசாயனப் பொருளாக கடற்சாதாளை**

கடற்சாதாளையில் இருந்து 600ற்கு அதிகமான அனுசேப இடைநிலை விளை பொருட்களான ரேர்பன்ஸ் (Terpens) அல்கலொயிட்ஸ், கொழுப்பமிலங்கள், என்பன பிரித்தெடுக்கப்படுகின்றன. இவ் விளைபொருட்களிற் பெரும்பாலானவை நோயைக் குணப்படுத்தும் இயல்புள்ளவையாக இருக்கின்றன. இவை பரிசோதனைச்சாலைகள், மருந்தாக்க தொழிலிலும் பயன்படுத்தப்படுகின்றது. அல்கா இனத்தில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் இரத்தத்தினைக் குளிர்விக்கவும், சுத்திகரிக்கவும் பயன்படுத்துவதுடன், அவை இரத்தத்தில் குளுக்கோசின் அளவைக் குறைக்கும். சார்க்கலின் எனும் இரசாயனப் பொருளையும் கொண்டுள்ளன.

Hypnea Musciformis புழுக்கொல்லியாகவும், Centroceros Clavulatum ஆனது போதிமருந்து ஆகவும் பயன்படுகின்றது. Asparagopsis toxiformis, Sarconema furcellatum என்பன அதிகளவில் அயடீனைக் கொண்டுள்ளதனால் அது கண்டக்கழலை நோயைக் குணப்படுத்த உதவுகிறது. கபில இன கடற்சாதாளைகளானது அயடீன், பொட்டாசியம், நைத்திரைற்று, சல்பேற்று, போமிக்கமிலம், அபற்றிக்கமிலம், மெனதோல், மதுசாரம், அசற்றோல் என்பன தயாரிக்கப்படுகிறது.

இன்று கடற்சாதாளையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் அல்ஜீனிக்கமிலம் மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. அல்ஜீனிக்கமிலத்தின் கல்சியம், சோடியம் உப்புகள் இன்று பரந்தளவில் பலபொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் தயாரிக்கப்பயன்படுகின்றது. பெரிலியம் அல்ஜினேற், கல்சியம் அல்ஜினேற் என்பன செயற்கைப்பட்டுத் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன. கபில கடற்சாதாளை வகையானது மனிற்றோல் தயாரிப்பதற்கான மூலப்பொருளாகப் பாவிக்கப்படுவதோடு, வெடிபொருட்களின் தயாரிப்பில் மனிற்றோலுக்கு பதிலீட்டுப் பொருளாகவும் பயன்படுகின்றது.

**வளமாக்கியாக கடற்சாதாளை**

கடற் சாதாளையில் தாவரங்களின் வளர்ச்சியை ஒழுங்காக்கும் தூண்டுப் பதார்த்தங்களான ஒக்சின், சைற்றோகைனின் போன்றன காணப்படுகின்றன. இவை தவிர, தாவர போசனை மூலகங்களையும் பெருமளவில் கடற்சாதாளைகள் கொண்டுள்ளன. கடற் சாதாளையில் இருந்து சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் வளமாக்கிகளையோ அல்லது சேதன உரங்களையோ அல்லது திரவப் பசளைகளையோ உற்பத்தி செய்ய முடியும்.

**பண்ணை விலங்குணவாக கடற் சாதாளை**

நீலப்பச்சை அல்காவானது மீன்வளர்ப்பில் ஓர்முக்கிய பங்கை வகிக்கின்றது. Lyngbya, Cladophora, Chaetomorphya, Entremorpha போன்ற நீலப்பச்சை அல்கா இனங்கள் மீன்களுக்கு உணவாகப் பயன்படுகின்றன. Gracilaria, Gelidella, Hypnea போன்ற கடற்சாதாளைகளில் தயாரிக்கப்படும் உணவுகள் மீன், இறால் போன்றவற்றிற்கான தீவனங்கள் தயாரிப்பின்போது சிறந்த இணைப்புப் பதார்த்தமாக பயன்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த கடற்சாதாளை நமது நாட்டைச் சூழ காணப்பட்டாலும், அவற்றைப் பயன்படுத்த பொருளாதாரமும், தொழில்நுட்பவளர்ச்சியும் இன்மையால் வீணே தேடுவாரற்றுக் கிடக்கின்றன என்பது மனவருத்தத்திற்குரியது.

## Reference


1. Durairatnam. M, 1964: seaweeds, Bulletin of the fisheries Research station, Ceylon.
2. Arumugam.I. Sivapalan.A and Theivendrarajah.K. 1981 Preliminary studies on the alginic acid and agar contants of some marine algae
3. Kadalozai ozai - 02 fisheries Diploma student s
   Union University of Jaffna 2000 -2001

# ஆசிரியர் மாணவர் இடைவெளி இன்று

திருமதி ப.சிவஞானம்
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி.

பாடசாலைக் கல்வியில் கற்றல் – கற்பித்தற் செயற்பாடுகளில், ஆசிரியர் மாணவர் இடைத் தொடர்பு, மாணவர் – மாணவர் இடைத் தொடர்பு, ஆசிரியர் – ஆசிரியர் இடைத் தொடர்பு ஆசிரியர்–அதிபர் இடைத்தொடர்பு ஆகியன பிரதானமானவை ஆகும். பாடசாலை சீராக இயங்கவும், அதன் அபிவிருத்தியில் உயரவும் இவ் இடைத்தொடர்புகள் சரிவர திகழ்வது இன்றியமையாததாகும். இவற்றுள், இன்றைய காலகட்டத்தில் பாடசாலையின் தரத்தை தீர்மானிக்கும் பிரதான இடைத் தொடர்பு ஆசிரியர் மாணவர் இடைத் தொடர்பாகும்.

அன்றைய காலங்களில் ஆசிரியர் – மாணவர்களுக்கு இடையில் குறிப்பிட்டளவு இடைவெளி நிலவி வந்தது. இவ்விடைவெளி காரணமாக மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மீது பக்தி, அன்பு, மரியாதை, பணிவு, அடக்கம் என்பன அதிகமாக இருந்தன. மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மீது இருந்த பற்றுக்காரணமாக அவ் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களிலும் மாணவர்கள் பற்றுடனும், விருப்புடனும் கற்று முன்னேறிவந்தனர். இம் மாணவர்களுக்கு ஆசிரியர்களின் அன்பும், ஆசியும் மனமாரக் கிடைத்து மாணவர்கள் கல்வியில் உயரும் வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தன. மாணவர்கள் மட்டுமல்லாது பெற்றோர்களும் அன்று ஆசிரியரைத் தெய்வமாக மதித்து, சிறந்த வழிகாட்டிகளாக ஏற்று சிறப்படைந்தனர்.

ஆனால், மாறிவரும் விஞ்ஞான தகவல் தொழினுட்ப யுகத்தில் இவ் ஆசிரியர்– மாணவர் இடைவெளி மிகவும் குறுகி ஆசிரியர்களை– மாணவர்கள் இடித்து, மோதிச்செல்லும் அளவிற்கு குறைந்துவிட்டது. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு சரிசமமாக நின்று கதைப் பதும், இருக்கையில் இருந்து கதைப்பதும், ஆசிரியர்களுடன் வளைந்து, நெளிந்து உரையாடுவதும், ஆசிரியர்களின் விடயங்களில் தலையிடுவதும் எங்கும் சர்வசாதாரணமாகக் காணமுடிகின்றது. இத்தகைய நிலைக்குப் பிரதான காரணங்களாக சில ஆசிரியர்களின் செல்லப்போக்கும், பாடசாலை தவிர்ந்த கல்வி நிறுவனங்களின் அசமந்த வழிகாட்டலும், பெற்றோர்களின் சீரிய கவனிப்பின்மை, தொலைக்காட்சி நாடக அரங்கேற்றங்கள் போன்றன அமைகின்றன. இத்தகைய ஆசிரியர்– மாணவர் இடைவெளிக் குறைப் பானது, மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மீதான பக்தி, மரியாதை, அன்பு என்பவற்றை மிகவும் குறைக்கின்றது. இதனால் ஆசிரியர்களின் வெறுப்பிற்கும், மனவருத்தத்திற்கும் உள்ளாகும் மாணவர்கள் அவர்களின் மனமார்ந்த ஆசிக ளின்றி அல்லலுறுகின்றனர். வாழ்க்கைப் போட்டிகளில் பின்னடைவைச் சந்திக்கின்றனர்.

இத்தகைய மாணவர்களை இன்றுநாம் பல சந்தர்ப்பங்களிற் கண்டிருக்கின்றோம். இவ் வாசிரியர்–மாணவர் இடைவெளிக் குறைப் பானது இன்று பல சமூக கலாசார சீர்கேடு களுக்கும் வழிகோலிநிற்கின்றது. எனவே இவ் இடைவெளியைச் சரியாகப் பேண முயல வேண்டும்.

பாடசாலை என்பது தனியே கல்வியை மட்டும் பெற்றுச் செல்லும் இடமாக அமையாது. கல்வியைவிட, பண்பு, மனப்பாங்கு, பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், தத்துவங்கள் என்பவற்றையும் வளர்க்கும் ஒரு கோயிலாகும். இதனை அன்றாடம் தரிசித்து அங்குள்ள எழுத்தறிவிக்கும் தெய்வங்களை நேசித்து, கல்வி மற்றும் அனைத்து துறைகளிலும் சிறந்திட முயல வேண்டும். இதற்கு ஆசிரியர் மாணவர் இடைவெளி சரியாகப் பேணப்பட்டு, வளர்க்கப் பட வேண்டும். இது நல்ல மாணவர் – மாணவர் இடைத்தொடர்பு, ஆசிரியர் – ஆசிரியர் இடைத் தொடர்பு, ஆசிரியர் – அதிபர் இடைத் தொடர்பை ஏற்படுத்திப் பாடசாலைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க வழிசமைக்கும். மாணவர்களின் எதிர்காலம் பொற்காலமாக மிளிர அனுமதிக்கும்.

## நாடுகளின் பழைய புதிய பெயர்கள்

| | | |
|---|---|---|
| *அபிசீனியா* (Abyssinia) | - | *எதியோப்பியா* (Ethiopia) |
| *கம்போடியா* (Cambodia) | - | *கம்பூச்சியா* (Kampuchea) |
| *சிலோன்* (Ceylon) | - | *ஸ்ரீலங்கா* (SriLanka) |
| *கொங்கோ* (Congo) | - | *ஷெயர்* (Zaire) |
| *டச்சு கிழக்கிந்தியா* (Dutch East Indies) | - | *இந்தோனேஷியா* (Indonesia) |
| *கோல்ட் கோஸ்ற்* | - | *கானா* (Ghana) (Gold Coast) |

# பாடசாலை நூலகமும் அதன் வளர்ச்சிப் பாதையும்

திருமதி காஞ்சனமாலா உதயகுமாரன்
நூலக உதவியாளர்,
யா/ இராமநாதன் கல்லூரி.

இன்றைய சமுதாயத்தில் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருப்பது தகவல் ஆகும். தகவல்கள் அடுத்த தலைமுறையின் பயன் பாட்டிற்காகப் பல்வேறு எழுது சாதனங்களிற் பதிவுசெய்து வைக்கப்படுகின்றன. அச்சு இயந்திரத்தின் வருகையோடு நூலுருவிலான ஆவணங்கள் வகையிலும் தொகையிலும் அதிகளவில் வெளிவரத் தொடங்கின. தொடர்ந்து நூலுருவற்ற ஆவணங்களிலும் தகவல்கள் பதிவுசெய்யப்படலாயிற்று. ஆரம்பத் தில் நூலகங்கள் நூல்களைப் பாதுகாக்கும் மையங்களாகவே இருந்தன. இப்போது இந்நிலைமாறி அறிவை வளர்க்கும் நிலையங் கள் என விளங்குகின்றன. அதாவது தகவல் மையங்கள் என்ற பெயரோடு இயங்கி வருகின் றன.

இந்தவகையிற் பல நூல்கள் அவற்றின் தன்மையின் அடிப்படையிற் பல்கலைக்கழக நூலகம், பாடசாலை நூலகம், தேசிய நூலகம், தொழில்நுட்பக் கல்லூரி நூலகம் என வகைப் படுத்தப்பட்டுள்ளது. கற்றல்– கற்பித்தல் ஆகிய இரு துறைக்கும் உறுதுணையாக விளங்குவது நூலகமே. அந்தவகையில் ஒருநாட்டின் நூலக வளர்ச்சிக்கு அத்திவாரமாக இருப்பது பாட சாலை நூலகமே. பாடசாலை நூலகம் அப்பாட சாலையின் கல்வித்திட்டத்தோடு இணைந்து ஆதரவளிக்கும் அங்கமாக இயங்கும்போது அது கல்வித்துறையில் அதி உன்னத நிலையை அடைவதற்கு அடித்தளமாக அமைகின்றது. பிள்ளைகளிடத்தே நூலார் வத்தைத் தூண்டி வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதுடன், ஆசிரியர்களின் தலையீடின்றி சுயமாகவே அறிவேடுகளிலிருந்து விடயங்களைக் கற்றுக் கொள்ளச் செய்தல். பாடசாலையிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் அவரவர் கல்வித் தரத்திற் கும், அறிவாற்றலுக்கும் ஏற்றவகையில் அறி வேடுகளாகக்கொடுத்து உதவுதல். நூல்களிற் பொதிந்துள் சிறப்பம் சங்களை உணர்ந்து இன்புறக்கூடிய வகையிற் பிள்ளை களுக்கு வாசித்துக் காட்டுதல்.

ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பிக்கும் பாடங்களுக்கு அனுசரணையான அறிவேடு களையும், தொழில் அபிவிருத்திக்கான அறிவேடுகளையும், கொடுத்து உதவுதல், பாடவிதானத்திற்குத் துணைபோகும் அறிவேடு களையும் சேகரித்து உதவுதல், பிள்ளைகள் தாம் வாழும் சமூகத்திற்குப் பொருத்தமுறச் செய்தல், ஓய்வு நேரங்களைப் பயனுள்ளவகையிற் கழிக்க வகைசெய்தல். ஆகியன ஒரு பாடசாலை முகாமைத்துவத்தினதும், நூலகரினதும் கடமையாகும். இவ்வாறு நோக்கமும் பணியும் நிறைவேறும் முகமாகச் சகல செயற்பாடு களையும் அமைத்துக்கொடுப்பது பாடசாலை யினுடைய குறிக்கோளாக இருத்தல்வேண்டும்.

ஒருவரது வாசிப்புப் பழக்கமாவது சுயமாக ஏற்படவேண்டியது ஒன்றாகும். திணிப்பு என்பது பிள்ளைகளுக்குச் சலனத்தை ஏற்படுத்தும். வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டியது பெற்றோர்களின் முதற்கடமை சிறுவயதில் இருந்தே சுவாரசியமான கதைகளைக் கூறுதல், பெற்றோர்கள் கண்டவற்றையும் தாம் வாசிக்கா விட்டாலும் வாசிப்பது போன்றாவது பாவனை செய்தல், குழந்தைப் பருவத்திற்கு ஏற்ற படமுள்ள கதைப்புத்தகங்களை வாங்கிக் கொடுத்தல் போன்றவற்றினூடாக அவர்களின் வாசிப்புத்திறனை அதிகரிக்கச் செய்யலாம். ஒவ்வொரு பெற்றோரும் முழுமையான கல்வி யினைப் பாடசாலைகளிலும் தனியார் நிறுவனங் களிலும் நம்பியிருக்கின்றனர். சிறுவயதிலிருந்து வாசிப்புப் பழக்கமுடைய. எந்த மாணவனும் தனக்குத் தேவையானவற்றைத் தானே தேடியறிந்து கற்றுக்கொள்கிறான். பல மாணவர் கள் பெற்றோர்களின் கவனக்குறைவாற் கிணற்றுத் தவளையாகவே காணப்படுகின் றனர். சாதாரணமாக அன்றாடம் வெளிவரும் புதினப்பத்திரிகைகளைக்கூடப் பார்க்காது சமுதாயம் வளர்ந்துவருகின்றது. வசதி குறைந்த வர்கள் விரும்பிய நேரத்தில், விரும்பியபடி சென்று படிக்கக் கிராமம்தோறும் வாசகர் சாலைகள் அமைக்கப்பட்டு, வருகவருக என வரவேற்றுக் காத்திருக்கின்றது.

வாசிக்கப்படாத நூல்களைக் கொண்ட நூலகத்திற் பயனேதும் இல்லை. இதற்கமைய எமது நூலகத்திற் பாடசாலை மாணவர்களிற்கு ஏற்றவிதத்தில் நூற்கொள்வனவு செய்யப் பட்டுள்ளது. ஆசிரியர்களின் மேற்படிப்பிற்கு ஏற்ற நூல்கள் எனப் பல அரிய நூல்களைக் கொண்டதாக எமது நூலகம் விளங்குகின்றது. மாணவர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் உசாத்துணைச் சேவை, பருவ இதழ்பகுதி, இரவல் வழங்கும் சேவை, பகுப்பாக்கும் சேவை என வாசகரின் நேரத்தை மீதப்படுத்தக்கூடிய வகையிற் சேவையாற்றி வருகின்றது.

உண்மையில் தரு நூலினைக் கற்கும்போது பல விடயங்களை அறியமுடிகிறது. இவற்றை யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்வதை விட, விரிவாகவும், விளக்கமாகவும், ஆறுதலாக வும் எத்தனை முறையும் புரட்டிப்பார்க்க முடியும் நூல் எப்போதும் சலிப்படைவதில்லை. தேவை யானபோதெல்லாம் குறிப்பெடுக்கலாம். உங் களுக்குத் தேவையான போதெல்லாம் உற்ற தோழனாக நிற்கும். அதாவது தனிமையில் இருப்பவனுக்கு உற்ற நண்பன், துக்கத்தைப் போக்கி மகிழ்வைத்தரும். தடுமாற்றத்தைத் தெளியவைக்கும். தன்னம்பிக்கை, உறுதி, வளமான எதிர்காலம் என்பன வாசிப்பதன் மூலம் ஒருவன் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஒரு பாடசாலை நூலகத்திற் பெற்றோருக்கு அடுத்தபடியாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டச்செய்வது ஆசிரியர் களின் கடமையே. அதாவது சிறுவர்களிற்குக் கதைகூறல், கதைநேரம் மூலமாக சுவாரசிய மான கதைகளைக் கூறுதலும், அறிவுத்துணுக்கு களைக் கேட்பதன் மூலமும் அவர்களின் தேடியறியும் ஆர்வத்தை ஏற்படுத்தலாம். ஏனைய மாணவர்களிற்குக் குறித்த தலையங்கத்தைக் கொடுத்துத் தேடியறியவிடுதல். இதன்மூலம் பலதரப்பட்ட நூல்களைத்தேடும் சந்தர்ப் பங்களை மாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர். ஒரு நூலகர் தேடலுக்கு உதவலாமேயொழிய ஒரு வாசகனை உருவாக்குவது பெற்றோர் களதும், ஆசிரியர்களதும் கடமையாகும். பள்ளிப் பருவத்தில் நூலகத்தில் வாசிக்கும் திறன் உள்ள

மாணவனுக்கு மேற்படிப்பிற்காகப் பல்கலைக் கழகங்களுக்கோ வேறு கல்வி நிறுவனங் களுக்கோ செல்லும்போது அவர்களின் நூலகப் பாவனை இலகுவாகிறது.

ஒரு பாடசாலையின் முகாமை நிதி ஒதுக்கீடு செய்யும்போது கூடத் தரமான நூல்களைத் வாசக சமுதாயத்திற்கு ஏற்றவகையில் நூற் தெரிவு இருத்தல் வேண்டும். பாடசாலை களிற்கு நூல்கள் தெரிவிசெய்யும்போது அவர்களின் கல்வித் தேடலுக்குப் பொருத்தமான நூல் களைத் தெரிவுசெய்தல் வேண்டும். அதாவது பாடசாலைகளில் ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்த வேண்டும் என்பதற்காகப் பல பாடசாலைகள் வருட இறுதியிற்சென்று எல்லோராலும் தெரிவு செய்து முடிந்த நிலையில் இருக்கும், தரமற்ற நூல்களைக் கொள்வனவு செய்வதும் சிறுவர் கள் நூலகத்திற்கு அவர்களது வயதிற்கும் பாடத்திற்கும் ஒவ்வாத மேற்படிப்பிற்குரிய நூல்களை இறாக்கைகளிற் காட்சிப்படுத்தி வைத்திருக்கும் நூலகங்களே அதிகம்.

அன்பளிப்பாக நூலகத்திற்கு நூல்கள் கிடைக்கின்றது என்பதற்காகக் கண்ட கண்ட நூல்களையும் பெற்று இறாக்கைப்படுத்த வேண்டிய கட்டாயம் இல்லை. உதாரணமாக சிறுவர் நூலகத்திற்கு ஆடை உற்பத்தியும் ஏற்றுமதியும் எனும் நூல் கிடைக்கும்போது சிந்திக்கவேண்டும். எனவே நூற்றெரிவு என்பது முக்கியமானதொன்றாகும்.

அத்துடன் நூல்கள் மட்டும் நூலகத்தில் இருந்தால் மட்டும் போதாது. அந்த நூல்களி னைப் பாதுகாப்பதற்குச் சிறந்த நூலகக் கட்டடம் நூலக விதிமுறைகளுக்கு அமைவாகவும் நூல்களைக் காட்சிப்படுத்தச் சிறந்த இறாக்கை களும் அலுமாரிகளும் மாணவர்கள் வசதியாக இருந்து படிப்பதற்கு வசதியான இருக்கை வசதிகளும் அமைத்துக்கொடுப்பதும் கல்வித் திணைக்களங்கள் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களுக்குச் செய்யவேண்டிய முக்கிய பொறுப்பாகும்.

இன்றைய உலகம் அனைத்தும் இணையத் திற்குள் பிரவேசித்துவிட்டது. இணையத்தின் நூலகம் எனக் கூறக்கூடிய அளவிற்குச் சகலரும் தமது தகவல்களை இணையத்தளத் தில் சேமித்து வைக்கிறார்கள். இன்று இணையம் நாடு, மொழி, இனம், மதம்,அரசியல் தடைகள் அனைத்தையும் தாண்டித் தனியுலக மாகத் திகழ்கிறது. நூலகத்தில் ஒரு நூலைத் தேடி அலைந்து அங்கில்லாவிட்டால் இன்னொரு நூலகம்; அங்குபோனால் அது இரவல் போய்விடும். பின் வேறொரு நூலகம் அங்கு போனால், அதனை இன்னொருவர் படித்துக் கொண்டிருப்பார். அதனைப் பயன்படுத்த முடியாது போகப்பின்.... இவ்வாறு இணையத்தில் சிரமப்படத்தேவையில்லை. ஒரு நூலை எத்தனைபேர் வேண்டுமானாலும் படிக்கலாம். விரும்பிய நூலைதேடி எடுக்கலாம். விரும்பியபடி குறிப்பெடுக்கலாம். ஒளிப்படப்பிரதி எடுக்கலாம். பல தகவல்களை ஒலி, ஒளி வடிவிற்கூடி எடுக்கலாம். இவ்வாறு நூலகம் இணையத் தளம்வரையிற் சென்றிருக்கும் நிலையில் நம் சமுதாயம் இன்றும் தனியே நூல்களோடு போராடிக்கொண்டிருக்கின்றது.

நூல்களைக் கொள்வனவு செய்வதோடு நிற்காது, நூலகவியன் தந்தை S.R. இரங்கநாத னின் பஞ்சசீலக் கொள்கையான

- நூல்கள் பாவனைக்கே
- நூலுக்கேற்ற வாசகர்
- வாசகருக்கேற்ற நூல்
- வாசகர் நேரம் பேணுக
- நூலகம் வளரும் ஓர் உயிரி

எனும் விதிக்கமைய ஒரு நூலகம் இயங்குமேயானால் பாடசாலை நூலகம் மட்டுமல்ல, அனைத்து நூலகங்களுமே தனது குறிக்கோளை விரைவில்அடைந்துவிடும்.

நூலகப் பணியானது மிகவும் முக்கியமான தொன்றாகும். இப்பணியானது நாம் பெற்றுக் கொள்ளும் ஊதியத்தை விடவும் உயர்வான பணி. பசிக்கு உணவு வழங்குவதைவிடவும் அறிவுப் பசிக்கு வழிகாட்டுவதே ஒரு நூலகரின் கடமை. நூலகச் சேவையை சேவையாகப் பார்க்காது தொழிலாகப் பார்க்கும் தன்மை எம்மிடையே அதிகம். எமது அசமந்தப் போக்குக் காரணமாக ஆண்டு இறுதிவரை அசையாமல் இருந்துவிட்டு நிதி பயன்படுத்தப்படாமற் திரும்பிப் போய்விடும் என்பதற்காகக் கிடைத்த வற்றை அள்ளுவதும் அவற்றை அழகாகப் பூட்டி அலுமாரியில் அடுக்கி வைத்திருப்பதையுமே சிறந்த நூலகம் எனக் கூறுவதுமே எம் சமுதாயத்தில் அதிகரித்துள்ளது. உண்மையில் நூலகத்தினை எத்தனைபேர் பயன்படுத்துகின் றனர். வாசகருக்குப் பயனுள்ள நூல்கள் எத்தனை அங்குள்ளது. வாசகரும் நூலும் தொடர்புள்ளவர்களாக இருக்கின்றார்களா? என்பதன் மூலம்தான் ஒரு நூலகத்தின் சிறப்பைக் கூறமுடியும். பூட்டிய நூலகத்தைக் கூட வாசகனின் தேவையறிந்து திறந்து எடுத்துக்கொடுப்பதுவே ஒரு நூலகரின் கடமை. அறிவுத் தேடலுக்குப் பெற்றோர்கள் ஆசிரியர் கள் எவ்வளவு பொறுப்புள்ளவர்களோ அதே போல் மாணவர்களின் அறிவுத்தேடலுக்கு நூலகரும் மிகவும் பொறுப்புடையவர்களாகவும், சேவை மனப்பாங்குடையவர்களாகவும் இருந் தால் நல்லதொரு சமுதாயத்தை வளர்க்கக் கூடியதாக இருக்கும்.

முற்றும்

## நாடுகளின் பழைய புதிய பெயர்கள்

| | | |
|---|---|---|
| *ஹொலண்ட்* (Holland) | - | *நெதர்லாந்து* (Netherland) |
| *மெசோபோரேமியா* | - | *ஈராக்* (Iraq) (Mesopotamia) |
| *வட றொடீசியா* (Nothern Rhodesia) | - | *சம்பியா* (Zambia) |
| *தென் றொடீசியா* | - | *சிம்பாவே* (Zimbabwe) (Southern Rhodesia) |
| *பாரசீகம்* (Persia) | - | *ஈரான்* (Iran) |

# இரண்டாம் உலக மகாயுத்தம்

செல்வி சங்கவை சிவானந்தம்
2008 (கலைப்பிரிவு)
யா/ இராமநாதன் கல்லூரி

உலகில் முதலில் தோன்றிய முதலாவது உலக மகா யுத்தத்தினைவிட மிகக் கொடிய போராகக் கருதப்படுவது 2ம் உலக மகாயுத்தமாகும். மிக நவீன யுத்தக்கருவிகள் பயன்படுத்தப்பட்டமையினாலும், விமானங்கள் பயன்படுத்தப்பட்டமையினாலும் அனைத்து இடங்களிலும் மனிதப் பேரவலம் தோன்றியது. இவ் யுத்தத்தில் நச்சுவாயு, அணுகுண்டு என்பன பயன்படுத்தப்பட்டன.

இரண்டாம் உலக மகா யுத்தம் ஏற்படுத்துவதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. முதலாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து பல தேசிய அரசுகள் தோற்றம் பெற்றன. இவை ஐரோப்பாக் கண்டத்தின் சர்வதேசிய வாழ்வில் முக்கியம் பெற்றன. இவற்றின் போலந்து, பெல்ஜியம், மத்திய ஐரோப்பாவும் போல்கன் நாடுகளும் குறிப்பிடத்தக்கவை.

முதலாம் உலக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த வேர்செயில்ஸ் உடன்படிக்கையும், 2ம் உலக யுத்தத்திற்கு காரணமாகியது. முதலாம் உலக யுத்தத்திற்கு ஜேர்மனியும் அதன் நட்புநாடுகளுமே காரணம் எனக் கருதி, ஜேர்மனிக்கு கொடூரமான தண்டனைகளை வழங்கியமையால் ஜேர்மன் மக்கள் நாசிச கட்சியினரை ஆதரித்தனர். இதனால் ஜேர்மனியில் சர்வாதிகாரியாக ஹிட்லர் தோற்றம் பெற்று ஏனைய நாடுகளை அச்சுறுத்தினான்.

முதலாம் உலகப்போரில் இத்தாலி நேசநாடுகள் சார்பாக போர்செய்தபோதும் நன்மைகள் கிடைக்கவில்லை. இதனால் இவற்றைத் தீர்க்க ஜனநாயகம் பொருத்தமற்றது எனக் கருதிய முசோலினி, பாசிசக் கட்சியை தோற்றுவித்து, ஐரோப்பாவின் அமைதியை சீர்குலைத்தான்.

அமெரிக்க ஜனாதிபதியினால் 14 அம்சத் திட்டங்கள் உருவாக்கப்பட்டது. இதில் பல்வேறு காரணிகளால் அமெரிக்காவின் ஆதரவு இல்லாமை காரணமாகப் பல பிரச்சினைகள் ஏற்பட்டது.

ஜேர்மனியால் 1871 இலும் முதலாம் உலகப் போரிலும் பாதிக்கப்பட்டு பிரான்ஸ் மேலும் இவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெறாது தடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டது. இதனால் ஜேர்மனியைச் சூழ இருந்த நாடுகளுடன் நட்புடன் செயற்பட்டது. இதனால் ஜேர்மனி படைக்குறைப்புப் பற்றி எடுத்துக்கூறியது. படைக்குறைப்பு மாநாடு நடைபெற்றாலும் எவ்வித முடிவும் எடுக்கப் படவில்லை.

யப்பான் தனது நாட்டின் விருத்திக்குத் தேவையான பொருட்களை சீனா, இந்தியா, போன்ற நாடுகளிடம் பெறவேண்டி ஏற்பட்டது. இதற்குப் பல நாடுகள் தடையாக அமைந்தன. யப்பான், ஐக்கியஅமெரிக்கா, பிரித்தானியா என்பவற்றுக்கு எதிராக செயற்படவும் எண்ணியது. அதுமட்டுமன்றி, சர்வதேச சங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளிலும் ஈடுபட்டது.

பல நாடுகள் ஜனநாயகத்தைவிட சர்வாதிகாரத்தை விரும்பின. எனவே ஜனநாயகம் வீழ்ச்சி அடைந்து, சர்வாதிகாரம் எழுச்சியடைந்து ஜேர்மனி, இத்தாலி, யப்பான் ஆகிய நாடுகள் அச்சு நாடுகளின் கூட்ட மைப்பை உருவாக்கின. பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா என்பன நேச நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்கியது. இவ்வாறாக உலக நாடுகள் இரு பிரிவுகளாகப் பிரிந்து கொண்டன. அத்துடன் ஸ்பானியாவில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. இதற்கு ஹிட்லர், முசோலினி ஆகியோர் ஆதரவு வழங்கினர். இக்கலகம் வெற்றிபெற்றது. அது மட்டுமன்றி உலக விவகாரங்களிற் தலையிடக் கூடிய சந்தர்ப்பத்தையும் சர்வாதிகாரிகளுக்கு ஏற்படுத் திக்கொடுத்தது. அத்துடன் ரஷ்யா ஹிட்லருடன் ஒப்பந்தம்செய்து கொண்டமையும் 2ஆம் உலக மகா யுத்தம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது.

உலக நாடுகளின் எதிர்ப்புக்கள் இன்றி ஆக்கிரமிப்பு நடத்தலாம். எனப் பல ஆக்கிர மிப்புக்கள் மூலம் அச்சு நாடுகள் தெரிந்து கொண்டமையால், ஜேர்மனி, போலந்தை ஆக்கிரமித்தது. இதேவேளை ரஷ்யா, பால்ரிக் கடலோரப் பிரதேசங்களைக் கைப்பற்றின. பிரான்சும் இங்கிலாந்தும் 1939ல் ஜேர்மனிக்கு எதிராக யுத்தப் பிரகடனம் மேற்கொண்டது. அச்சு நாடுகள் போரைத் தொடங்கியபோது ஜேர்மனி தனது ஆயுத உற்பத்தியை அதிகரித்து இருந்தது. முப்படைகளும் வலிமையான வையாகக் காணப்பட்டன. இதனால் வெற்றி களைக் குவித்தது.

பிரித்தானியாவின் எதிர்க்கட்சி தலை வரான வின்சன்ற் சேர்ச்சில் தலைமையில் யுத்தம் தொடங்கப்பட்டது. பெல்ஜியம் ஜேர்மனி யிடம் சரண்புகுந்தது. பிரித்தானிய யுத்தத் தளபாடங்கள் ஜேர்மன் வசமாகின. எனினும் பிரித்தானிய தொடர்ந்தும் ஒற்றுமையுடன் போராடியது. 1940ல் இத்தாலிய கடற்படையை பிரித்தானியா வெற்றி கொண்டது. ஜேர்மன் படை மோல்ரா தீவையும் தாக்கின. பிரித்தானியா தனித்து நின்று போரிட்டமையாற் பல பிரச்சினை களை எதிர் நோக்கவேண்டி இருந்தது. இவ் வேளை அமெரிக்கா நாசிகளை அழிப்பதற்காக பிரித்தானியாவிற்கு பெருந்தொகையான யுத்த தளபாடங்களையும், உணவையும் வழங்கின. இதனைத் தடுக்க ஜேர்மனியின் நீர்மூழ்கி கப்பல்கள் முயன்றபோதும் அது முடியாது போயிற்று.

இங்கிலாந்தை தோற்கடிக்க முடியாத ஹிட்லர் ரஷ்யா மீது படையெடுத்தான். அதிகள வான படைகளை ரஷ்யாவிற்குள் அனுப்பினான். ரஷ்ய மக்கள் அவற்றை எதிர்க்காது பயன் கொடுக்கக் கூடிய அனைத்தையும் அழித்து விட்டுப் பின்வாங்கினர்.

1941ல் யப்பான் அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தை தாக்கியதைத் தொடர்ந்து அமெரிக்கா நேரடியான போரில் இறங்கியது.

யப்பான், அவுஸ்திரேலியா வரையுள்ள பகுதி களைக் கைப்பற்றியபோதும் சீனாவை அடிபணி யச் செய்ய முடியாதுபோனது. 1942ல் யப்பான் கடற்படை நேசநாட்டுப் படைகளாற் தோற்கடிக் கப்பட்டது. நேச அணியினர் ஜேர்மனி மீதும் விமானத்தாக்குதல்களை மேற்கொண்டனர். ஜேர்மன் படைகளும் தோற்கடிக்கப்பட்டது. இதேவேளை ரஷ்யாவும் கடுங்குளிர் காலம் ஏற்பட்டபோது ஜேர்மனியைத் தாக்கியது. 1943ல் முசோலினி சரணடைந்தான். 1944ல் யப்பான் கடற்படை நாசமாக்கப்பட்டது. 1945ல் அமெரிக்கப்படை பிலிப்பைன்ஸ் தீவுகளில் இறங்கின.

1945இல் முசோலினியும் அவன் மந்திரிகளும் கொல்லப்பட்டனர். ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டான். யப்பான் மட்டுமே எதிர்த்து நின்றது. இதனால் அமெரிக்கா, யப்பானின் ஹிரோசிமோ, நாகசாகி மீது அணுகுண்டுகளை வீசியது. இதனால் யப்பானும் சரணாகதி அடைய, 2ம் உலக மகாயுத்தம் நேசநாடுகளால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

**இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகள்**

2ம் உலக மகா யுத்தத்திற்கு முன்னர் சர்வாதிகாரம் மேலோங்கிக் காணப்பட்டது. சர்வாதிகாரத்தின் கொடுமைகளாற் பாதிக்கப் பட்ட நாடுகளில் ஜனநாயகம் மேலோங்கியது. பிரித்தானியா, அமெரிக்கா, ரஷ்யா என்பன சர்வாதிகாரத்தை வெறுத்து, ஜனநாயகத்தை ஆதரித்தன.

ஜேர்மனியைத் தோற்கடிக்க நேச நாடுகள் தாக்குதல்களை ஆரம்பித்தும் அந் நாட்டை அடிபணியச் செய்தது. ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டபோது, பெரும் அழிவிற்கு உள்ளானது. ஜேர்மனி இரண்டாகப் பிரிக்கப் பட்டு பேர்ளின் சுவர் அமைக்கப்பட்டது.

ரஷ்யாவில் காணப்பட்ட பொது வுடைமை சித்தாந்தம் ஏனைய நாடுகளால் பரிகசிக்கப்பட்டது. ஹிட்லர் கம்யூனிசத்தை ஒடுக்கவே ஜேர்மனி எழுச்சி பெறுகின்றது. எனக் கூறினான். எனினும் யுத்தத்தின்பின் கம்யூனிசமும், ஜனநாயகமும் ஒன்றையொன்று எதிர்க் கும்நிலை தோன்றியது. அமெரிக்கா தலைமையில் ஜனநாயக சக்திகள் ஒன்றி ணைந்து நேட்டோ என்ற அமைப்பை உருவாக் கின. ரஷ்யாவின் தலைமையிலான கம்யூனிச நாடுகள் வார்சோ கூட்டமைப்பை உருவாக்கின. இது அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடை யிலான வல்லரசுப் போட்டியாக மாறியது.

ஐரோப்பாவே வல்லரசு நாடுகளாகக் காணப்பட்டன. உலக மகா யுத்தத்தின் பின்னர் பிரித்தானியாவிற்கு உதவி வழங்கிய அமெரி க்கா முக்கிய இடத்தைப் பெற்றது. இதேவேளை கிழக்கில் சோவியத் ஒன்றியம் வலுப்பெற்றது. உலகம் இருபிரிவுகளாகப் பிரிந்தது.

சீனா தேசிய எழுச்சிபெற்றது. சீனா விற் பொதுவுடைமை அரசாங்கம் அமைக்கப் பட்டது. அதுமட்டுமன்றி, 2ஆம் உலக மகாயுத் தத்தில் ஜேர்மனி தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்த நேரத்தில் அமெரிக்க ஜனாதிபதி றூஸ் வெல்ட், பிரித்தானியா பிரதமர் வின்சன்ற் சேர்ச்சில், ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் ஆகியோர்கூடி ஐ.நா.ஸ்தாபனம் ஒன்று தோற்றுவிப்பதற்கான ஆலோசனைகளில் ஈடு

பட்டனர். யுத்தத்தின்பின் உலக அமைதி, மேன்மைக்காக ஐ. நா. சபை நிறுவப்பட்டு, இன்று வரை தன்னால் முடிந்த பணிகளைப் புரிந்து வருகின்றது.

இவ்வாறாக 2ம் உலக மகாயுத்தம் உலகிற் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி உலக வரலாற்றையே மாற்றியமைத் துள்ளது என்றால் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**

ஜீ.ஸி. மெண்டிஸ் – நம்முன்னோர் அளித்த அருஞ்செல்வம்– மூன்றாம் பாகம்.



# சங்கரருடைய அத்துவைத வேதாந்தத்துக்கும், இராமானுஜரது விசிட்டாத்துவைத வேதாந்தத்துக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்

செல்வி எஸ்.தமிழினி
கலைப்பிரிவு (2008 A/L)
யா/ இராமநாதன் கல்லூரி

## அ) மூலாதாரங்கள்

இந்து தத்துவக் கோட்பாடுகளில் அத்து வைதம் விசிட்டாத்துவைதம் என்பன சிறந்த கோட்பாடுகளாகும். அத்துவைதத்திற் பிரமம் மட்டும் உள்ள பொருள் எனவும், ஆன்மாக் களும், பிரபஞ்சமும் தோற்றப்பொருள் எனவும் கூறப்படுகிறது. விசிட்டாத்து வைதத்தில் ஈஸ்வரன், சித், அசித் ஆகிய முப்பொருட்களும் உள்ள பொருள் எனக் கூறப்படுகிறது. இந்தத் தத்துவ ஆய்வுகளிலே இரு தத்துவங்களும் ஒற்றுமை, வேற்றுமைப் பண்புகளைக்கொண்டு காணப்படுகின்றன.

அத்துவைதம், விசிட்டாத்துவைதம் என்ற இரு தத்துவக் கோட்பாடுகளிலும் தத்துவக் கோட்பாட்டை நிறுவப் பிரமாண நூல்களும், பிரமாணங்களும் மூலாதாரங்களாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன. இரு தத்துவக் கோட்பாடு களிலும் பிரஸ்தானத் திரயங்கள் பிரமாண நூல்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. உப நிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பன பிரஸ்தானத்திரயங்கள் ஆகும். பிரதானமாக 10 உபநிடதங்களையும் பயன்படுத்தி இரு தத்துவ வாதிகளும் தமது கோட்பாட்டை நிறுவி யுள்ளனர். சங்கரர் தன்னுடைய அத்துவைதக் கோட்பாட்டிற்கு மாண்டூக்கிய உபநிடதக் கருத்துக்களை அதிகம் பயன்படுத்தியுள்ளார். ஆனால் இராமனுஜர் தன் விசிட்டாத்துவைதக் கொள்கைகளை விளக்கப் பிருகதாரணிய உபநிடதக் கருத்துக்களை அதிகம் பயன்படுத்தி யுள்ளார்.

இரு தத்துவவாதிகளும் பிரம்ம சூத்திரத் தைப் பிரமாண நூலாக ஏற்று, அதற்கு உரை வகுத்தார்கள். சங்கரர் எழுதிய உரை சங்கர பாஷ்யம் எனவும் இராமானுஜர் எழுதிய உரை ஸ்ரீ பாஷ்யம் எனவும், கூறப்படும். இந்த இரு உரைகளும் தம்மிடையே வேறுபட்டுக் கொள் கின்றன. பகவத்கீதையை இரண்டு தத்துவ வாதிகளும் ஏற்று அதற்கு உரை எழுதினார்கள். சங்கரர் தனது கோட்பாட்டை நிறுவ, பிரஸ் தானத்திரயங்களோடு மாண்டூக்கிய காரிகை யையும் பயன்படுத்தியுள்ளார். ஆனால் இரா மானுஜர் பிரஸ்தானத் திரயங்களோடு பாகவத, கருட, நாரதீய, வைணவ புராணங் களையும், பாஞ்சராத்திர, வைகாசன ஆகமங் களையும், நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தையும் பயன் படுத்தியுள்ளார்.

இருவரும் காட்சி, அனுமானம், ஆப்த வாக்கியம் என்ற முப்பிரமாணங்களைத் தத்தம் தத்துவங்களை விளக்கப் பயன்படுத்தி யுள்ளனர். ஆனால் சங்கரர் இவற்றினோடு அனுபலப்தி, அர்த்தாப்தி, உபமானம் என்ற மேலதிகமான மூன்று பிரமாணங்களைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறாக மூலாதாரங் கள் என்ற வகையில் ஒற்றுமை வேற்றுமைகள் உடையனவாக விளங்குகின்றன.

ஆ) மூலப்பொருள்

அத்துவைத வேதாந்தம். விசிட்டாத்துவைத வேதாந்தம் என்பன பிரமம், ஆன்மா, பிரபஞ்சம் என்ற முப்பொருள் பற்றி ஆய்வு செய்கின்றன. அவற்றுள்ளே இரு தத்துவங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற மூலப்பொருள் என்பது பிரமமாகும். இரு தத்துவக் கோட்பாட்டிலும் யாவற்றையும் கடந்த ஒரு சக்தி எனப் பிரமம் கூறுகிறது. இராமானுஜர் இப்பிரமத்தை விஷ்ணு வாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார். பிரமம் இரு தத்துவக்கோட்பாட்டிலும் படைக்கவோ அழிக்கவோமுடியாத அனாதியான உட்பொரு ளாகும். இது பேரறிவுடையது. ஆனந்தமய மானது, பூரணத்துவம் வாய்ந்தது. சூக்குமத் தன்மையுடையது. நிர்க்குண நிலை, சகுனநிலை என்ற இரு நிலைகளையுடையது. நிர்க்குண நிலை எனப்படுவது குணம், குறிகள், நாமங்கள், வடிவங்கள் என்பன யாவற்றையும் கடந்த நிலை ஆகும். சகுனநிலை எனப்படுவது குணம். குறிகள், நாமங்கள், வடிவங்களோடு சேர்ந்த நிலையாகும். இக்கருத்துக்களை இரு தத்து வங்களும் கூறியுள்ளன. அத்துவைதத்தில் நிர்க்குணப் பிரமநிலை மாயையோடு சேராத நிலை என்றும், சகுனம்: பிரம்ம நிலை மாயையோடு சேர்ந்த நிலை என்றும் கூறுகிறது. ஆனால் அத்தகைய விளக்கங்கள் எதனையும் இராமனுஜர் கூறவில்லை. நிர்க்குணப் பிரமநிலை 1ஆம் தரத்திற்குரியதும், சகுனப் பிரமநிலை 2ஆம் தரத்திற்குரியதென்றும் சங்கரர் கூறுகிறார். ஆனால் இராமானுஜர் பிரமம் நிர்க்குணமானதென்பதை ஏற்றுக் கொண்டா லும் சகுனப் பிரமமான ஈஸ்வர னுக்கே முதன்மை அளிக்கிறார்.

அத்துவைதத்தில் நிர்க்குணப் பிரம்ம நிலை பூரணத்துவம் வாய்ந்ததென்றும், சகுனப் பிரம்ம நிலை பூரணத்துவம் குறைந்ததென்றும் கூறுகிறது. ஆனால் விசிட்டாத்துவைதத்தில் இரண்டும் பூரணமானவை எனப்படுகிறது. சகுனநிலைக் கடவுளே படைத்தல், காத்தல் முதலிய தொழில்களைப் புரிவதாக இரு தத்துவங்களும் கூறுகின்றன. இவ்வாறாக ஏற்றுக்கொள்ளும் மூலப்பொருள் பற்றிய ஆய்வில் இரண்டும் ஒத்தும் வேறுபட்டும் காணப்படுகின்றன.

இ) உலகம்

அத்துவைதம். விசிட்டாத்துவைதம் ஆகிய இரண்டு வேதாரங்களிலும் உலகம் அடிப்படைப் பொருள் மரபுகளில் ஒன்றாக ஆய்வு செய்யப் பட்டுள்ளது. உலகம் என்பது பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலானதாகும். இது அறிவற்ற சட இயல்பு கொண்டது; தானாக இயங்கும் வல்லமை அற்றது என இரு தத்துவங்கள் கூறுவதால் இது ஒற்றுமையான பண்பாகும். அத்துவைதக் கோட்பாட்டில் தோற்றப்பொருள் எனக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது. அதாவது உலகம் சதசத் இலட்சணமுடைய தாகும். இந்த உலகத்தை அநுகரர் "ஜகன் மித்யா" எனக் கூறியுள்ளார். ஆனால் விசிட் டாத்து வைதத்திலே உலகம் உள்ள பொருள் எனக்கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது. அதாவது உலகம் படைக்கப்பட்ட உட்பொரு ளாகும்.

அத்துவைதக் கோட்பாட்டிலே உலகம் தோற்றப்பொருள் என்பதை விளக்க மாயை என்ற துணைச்சக்தியும், விவர்த்தவாதமும் கையாளப்பட்டுள்ளது. ஆனால் விசிட்டாத்து வைதத்திலே உலகம் படைக்கப்பட்ட உட் பொருளாகும் என்பதை விளக்க பரிணாமவாதம் கையாளப்பட்டுள்ளது. ஒன்று இன்னொன்றாக

மாறாதிருக்க; மாறிவிட்டதாகக் கருதும் தன்மையில் அமைந்த வாதம் விவர்த்த வாதமாகும். இதை விளக்கக் கயிறு, பாம்பு என்ற எடுத்துக்காட்டு கையாளப்படுகிறது. ஆனால், பரிணாமவாதம் என்பது ஒரு மூலப்பொருளில் இருந்து பிறிதோர் பொருள் தோன்றும்போது இந்த இரண்டும் உண்மையானவையாகும் எனக் கூறும் வாதம். இந்த வாதத்தை விளக்க பால், தயிர் என்ற எடுத்துக்காட்டு பயன்படுத்தப் படுகிறது.

விவர்த்த வாதத்தின்படி கயிறானது அறியாமையால் பாம்பாகத் தெரிகிறது. கயிறு காரணம்; பாம்பு காரியம். காரணம்: உண்மை, காரியம்: பொய். பரிணாமவாதத்தின்படி பாலிலிருந்து தயிர் தோற்றுவிக்கப்படுகிறது. பால் காரணம், தயிர் காரியம். காரணம், காரியம் என்ற இரண்டும் உண்மையானவை. விவர்த்த வாதத்தைக் கொண்டு சங்கரர் உலகம்பற்றி விளக்கும்போது, பிரமத்தோடு இல்லாததைத் தோற்றுவிக்கின்ற விசேடமாயை சேரும்போது உலகம் தோன்றுகிறது என்றார். அதில் பிரமம் காரணம், உலகம் காரியம். பிரமமாகிய காரணம் உண்மை. உலகமாகிய காரியம் பொய்.

ஆனால் பரிணாமவாதத்தைக் கொண்டு இராமானுஜர் உலகம்பற்றி விளக்கும்போது ஈஸ்வரனில் இருந்து அசித் படைக்கப்படுகிறது. அதில் ஈஸ்வரன் காரணம், அசித் காரியம். ஈஸ்வரனாகிய காரணமும் உண்மை. அசித்தாகிய காரியமும் உண்மை. இந்த வகையில் உலகம்பற்றிய கருத்துக்களில் இரு தத்துவங்களையும் ஒப்பிட்டு நோக்குகிறோம்.

### ஈ) ஆன்மீக இலட்சியம் நிறைவேறக் கூறும் வழிமுறைகள்

ஆன்மீக இலட்சியம் எனப்படுவது ஆன்மாக்கள் உலக வாழ்க்கையில் இருந்து விடுபட்டு இறைவனை அடைதல் ஆகும். இதனையே முத்தி நிலை என்பார்கள். ஆன்மாக்கள் பிரமத்தோடு இரண்டறக் கலக்கும் நிலை முத்தி நிலையாகும். இரண்டறக் கலக்கும் ஆன்மா பிரமம் ஆகி விடுகின்றன என்பதை இரண்டு தத்துவங்களும் ஏற்றுக் கொண்டு விளக்குகின்றன.

சங்கரர் பிரமத்தோடு இரண்டறக் கலப்பதே முத்தி என்று கூறியுள்ளார். ஆனால் இராமானுஜர் ஸ்ரீ வைகுண்டத்தை அடைதல் அல்லது விஷ்ணுவின் பாதார விந்தங்களை அடைதல் முத்தியாகுமெனக் கூறியுள்ளார். அத்துவைதத்திலே ஏற்றுக்கொள்ளும் முத்தி சீவன் முத்தியாகும். ஆன்மாக்கள் உடலோடு இருக்கும்போது பெற்றுக்கொள்ளும் முத்தி இது. ஆனால் விசிட்டாத்துவைதக் கோட்பாட்டிலே ஏற்றுக்கொள்ளப்படும் முத்தி; விதேக முத்தி. ஆன்மாக்கள் உடலைவிட்டு நீங்கியபின் பெற்றுக்கொள்ளும் முத்தி இதுவாகும்.

அத்வைதக் கோட்பாட்டிலே ஆன்மாக்கள் அவித்தையால் தோன்றிய தோற்றம்பொருளாகும். அவித்தை நீங்கியதும் ஆன்மாக்கள் பிரமமாகிவிடும். ஆதலால் அவித் நீங்கிய நிலையே முத்தி நிலையாகும். இந்த அவித்தை நீங்க சங்கரர் ஞானமே வழியென்கிறார். இந்த ஞானம் கிடைக்க; கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற படிமுறைகள் கூறப்படுகின்றன.

ஆனால் இராமானுஜர் மூவகை யோகம், வைணவ சமயதீட்சை பெறல், வைணவ ஆலய வழிபாடு செய்தல், ஆசாரியாரை வழிபடல், பிரபக்தியோகம் கடைப்பிடித்தல் என்ற வழிகளைக் கூறியுள்ளார். இதில் மேலான அன்பான பிரபக்தி மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இது விதிமுறைகளைக் கடந்தது. எளிமை, சுலபமானது. இவ்வாறு ஆன்மீக இலட்சியம் நிறைவேறக் கூறப்படும் வழிமுறைகளில் இரு தத்துவங்களும் ஒற்றுமை, வேற்றுமை உடையனவாக இருப்பதைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| *சீயம்* (Siam) | - | *தாய்லாந்து* (Thailand) |
| *தென்மேற்கு ஆபிரிக்கா* | - | *நமீபியா* (Namibia) |
| *பர்மா* (Burma) | - | *மியான்மர்* (Miyanmar) |
| *மலாயா* (Malaya) | - | *மலேசியா* (Malaysia) |
| *போர்மோசா* (Formosa) | - | *தாய்வான்* (Taiwan) |
| *பெக்குவானாலாந்து* (Bechuanaland) | - | *பொற்ஸ்வானா* (Botswana) |

# ஈழத் தமிழ் இலக்கியத்தில் அறிஞர்கள் பங்கு

**செல்வி இ.நிரோஷனா**
கலைப்பிரிவு (A/L 2008 )
யா/ இராமநாதன் கல்லூரி

செந்தமிழ், பைந்தமிழ், நற்றமிழ், வண்டமிழ், கன்னித்தமிழ் என்றெல்லாம் போற்றப்படுவதே எம் இனிய தமிழ்மொழி. இளமையும் செழுமையும் மிக்க எம் தமிழ் மொழி ஏனைய மொழிகளிற் கில்லாத தனிப்பெரும் பண்புகளைத் தன்ன கத்தே கொண்டுள்ளது. தமிழ் மொழிக்கு இலக்கணமாக எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன "அழகுக்கழகு போல" விளங்கு கின்றன.

இத்தகைய இனிய தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக, அதன்சிறப்பு மேலோங்கு வதற்காக, ஈழத்தமிழ் அறிஞர்கள் பலர் சுவை நிரம்பிய இலக்கியத்தையும், பாக்களையும் செய்துள்ளார்கள். இவர்களிற் குறிப்பாக ஈழத்துப் பூதந்தேவனார், சின்னத்தம்பிப் புலவர், பரராஜசேகரன், செகராஜசேகரன், சேனாதி ராஜா முதலியார் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் ஆகியோர் அவர்களுள் சிலர் ஆவார்கள்.

கடைச் சங்கங்கள் தமிழ் வளர்த்த காலத்தில் ஈழத்தில் இருந்து தமிழகத்திற்குச் சென்று அங்கு நிறுவப்பட்டிருந்த சங்கங்களில் நூல்களைப் பாடி அரங்கேற்றிய பெருமை படைத்தவர்களுள் ஈழத்துப் பூதந்தேவனாரும் அடங்குவார். இவரது சுவை நிறைந்த செய்யுட் களை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்னும் மூன்று நூல்களிலும் காணலாம். இவர் அகப்பொருள் மரபை மையமாகக் கொண்டு செய்யுட்களைத் தொகுத்துள்ளார். யாழ்ப்பாணத் தில் தமிழ் வளர்த்த சக்கரவர்த்திகள் மரபில் வழிவந்த பரராஜசேகரன், செகராஜசேகரன் என்போர் தம் பெயர்கொண்டு பரராஜசேகரம், செகராஜ சேகரம் என்னும் நூல்களை இயற்றி னர். இவர்களில் பரராஜசேகரன் மகாகவி காளிதாசன் பாடிய இரகுவம்சம் என்னும் காவியத்தைத் தமிழிற் பாடிய பெருமை இவரையே சாரும்.

ஒல்லாந்துப் பேரரசு காலத்தில் வாழ்ந்த டிமெல்லோ என்னும் தமிழ்ப்புலவர் மருதப்பக் குறவஞ்சி என்னும் நூலைப் பாடியுள்ளார். இளம்பிராயத்திலேயே கலைமகள் கடாட்சம் பெற்றவர் சின்னத்தம்பிப் புலவராவார். இவர் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளை விநாயகர் பள்ளு என்பவற்றை இயற்றியுள்ளார்.

இவை மிகச்சிறந்த இலக்கண அமைப்பும், இலக்கிய அமைப்பும் உடையவை. இவ்வாறாகப் புதிய நூல்களை மட்டும் ஆக்கிக்கொள்வதில் மட்டும் அக்கறை கொண்டு விளங்காமல் அவற்றோடு தமிழிற்கு விழியைப்போல் விளங்கும் பழந்தமிழ் இலக்கண நூல்களை மறுபதிப்புச் செய்து, அவற்றிற்குச் சிறந்த முறையில் உரை எழுதியும் மற்றவர்கள் விளங்கக் கூடிய வகையில் எளிய வசனநடையில்

அவற்றை அமைத்தும் ஈழத்துத் தமிழ்ப் பெரியார்கள் பலர் அரும்பெரும் தொண்டாற்றி யுள்ளார்கள். இத்தகைய செயற்பாடுகளானது இன்றும் தமிழ்மொழி சீர்குலையாமல் இருப்பதற்கு உறுதுணையாக நிற்கின்றது.

இத்தகைய பணியில் தலைசிறந்து மேலோங்கிநின்றவர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஆவார். தமிழின் தொன்மையை உலகிற்குப் பறைசாற்றி நிற்கின்ற நூல் 'தொல்காப்பியம்' ஆகும். இந்த நூலை முதல்முதல் முழுவதையும் பதிப்பித்த பெருமை இவரையே சாரும். மேலும் தற்கால இலக்கியத்திற்கு இலக்கணம் என்று கருதப்படுகின்ற வீரசோழியத்தை இலக்கண விளக்கம் எனப் பதித்துள்ளார். இந்த இலக்கண விளக்கம் என்பதைக் கற்றறிந்த அறிஞர்கள் "குட்டித் தொல்காப்பியம்" என அழைத்த பெருமையும் உண்டு. அடுத்த சிறந்த இலக்கண நூற்பதிப்பாசிரியராகக் குறிப்பிடத்தக்கவர் சேனாதிராய முதலியாரின் சீடரான யாழ் நல்லூர் ஆறுமுகநாவலரே ஆவார். இவர் இலக்கணத்தைத் தொகுத்து தொல்காப்பிய சூத்திர விருத்தி, நன்னூல் விருத்தியுரை எனப் பதிப்பித்துள்ளார். இவர் பெயரால் வழங்கும் நன்னூல் காண்டிகையுரை என்பன தமிழிற்குரிய சிறந்த நூலாகக் கற்றோரால் போற்றப் படுகின்றது. மேலும் இவ்வாறு இலக்கண நூல்களை எழுதியுள்ளனர். இதில் நாவலர் பங்கு முக்கியம் வாய்ந்ததாகும். மாணவரிடையே பெரிதும் பயிலப்பட்டுவரும் இலக்கணத்தமிழ் அகராதி எனும் நூலே சிறப்புப் பெற்றுள்ளது. இது பொதுமக்களிடையே தமிழ் மரபு குன்றாமல் நிலைத்து நிற்கப் பெரும் நிலைக்களமாக விளங்குகின்றது.

அடுத்து, தமிழ் இலக்கண சொரூபமாக நிற்பவர் சுன்னாகத்து குமாரசாமிப் புலவர். இவர் வினைப்பகுபதம் என்னும் நூலை வெளியிட்டார். இந்த வெளியீடானது நன்னூலார் வகுத்துக் கூறிய இருபத்து மூன்றுள்ளும் அடங்கிய வினைப் பகுபதங்களுக்கும் அவற்றின் அடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதங்களுக்குப் பகுதி, விகுதி முதலியவற்றைத் தொகுத்துக் காட்டுகின்றது.

நாவலர் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் வாழ்ந்த புலவர்கள் யாவரும் கட்டுரை அமைப்பதிற் பின்தங்கிய நிலையிலேயே இருந்தார்கள். இவர்கள் தமது கட்டுரை அமைப்பிற் சங்ககாலச் சொற்களை மிகுதியாக அமைத்தும், இலக்கணப் புணர்ச்சியைப் போற்றியும், பிறருக்குப் பொருள் விளங்கும் தன்மையிற் கட்டுரைகளை அமைத்தார்கள். இத்தகைய கட்டுரைகளாற் பொதுமக்கள் எத்தகைய பயனும் பெறவில்லை. ஆனால் ஆறுமுக நாவலரே சிறந்த முறையில், எளிய வசன நடையிலும், இனிய செந்தமிழ் சொற்களையும் உவமை அணிகளையும் கையாண்டு பொதுமக்கள் விளங்கக்கூடிய வகையில் மையப்பொருட்களையும் வைத்து, மிகச் சிறந்த கட்டுரைகளை அமைத்த பெருமை இவருக்கு உரியது. முதன்முதல் தமிழில் குறியீடுகளைக் கையாண்ட சிறப்பும் பெருமை யும் நாவலரைச் சாரும். இதனால் "பரிமேலழகர்" வசனநடை கைவந்த வல்லாளர் எனத் தனது உரையிற் போற்றியுள்ளார்.

தமிழே உலகத் தாய்மொழி என்று உலகிற்குப் பறை சாற்றிய பன்மொழிப் பண்டிதர் என்று பாராட்டப்படுபவர் சுவாமி ஞானப்பிரகாசர். இவர்

18 மொழியில் தேர்ச்சி உடையவர். இந்தப் பரந்த அறிவை மையமாகக் கொண்ட தமிழ் அமைப்புப் பற்றிய வரலாற்று நூலைச் சிறப்புற அமைத் துள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றைச் சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர்காலம், சோழர் காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர் காலம் என வகுத்து நோக்கியமையை அக் காலத்தார்களின் சரித்திரம், சமயநிலை இயற்றப்பட்ட நூல்கள் அவற்றின் பண்புகள் முதலியவற்றைத் திறம்பட வகுத்துக் கூறியவர் திரு.வி.செல்வநாயகமே ஆவார். இவரே பின்னர் தோன்றிய பற்பல தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களிற்கு வழிகாட்டி, இப்பெருமையும் இவருக்கே உரியது. மேலும் இவர் அண்மையில் எழுதிய தமிழ் உரைநடை வரலாறு என்னும் நூல் சிறந்த ஒரு வெளி யீடாகும். கலையின் கரு அறிந்து, இசையின் இனிமை அறிந்து, அதற்கு ஒப்பில்லாப் பணி செய்தவர் சுவாமி விபுலானந்தர் ஆவார். இவர் வெளியிட்ட யாழ் நூல் மிகவும் முனைப்புப்பெற்ற நூலாகக் கருதப் படுகின்றது. இந்த நூலில் தமிழ் இசையையும் தமிழ் இசைக்கருவி களையும், அவர்கள் கையாண்ட முறையையும் இந்நூலிற் பற்பல சான்றுகளைக் கொண்டு நிறுவியுள்ளார். இதில் இருந்து மறைந்த நம் பண்டைய யாழின் நுட்பங்களை எல்லாம் அறிய முடிகின்றது. தமிழிற்கு இசை முக்கியம் என்பதை எடுத்துக்காட்டிய பெருமை விபுலானந் தரையேசாரும். இவ்வாறாக அறிஞர்கள் பலர் பலவாறு எமது தமிழ் இலக்கியத்திற் பங்கேற்றுப் பெருமையையும், சிறப்பையும் பெற்றதோடு மட்டுமல்லாமல் தமிழ் இலக்கியத்தையும் ஓங்க வழிவகுத்துத் தந்தனர் என்பதை நாம் வெளிப்படையாக அறிய முடிகின்றது.

* *200 ஆம் ஆண்டில் நடைபெற்ற சிட்னி ஒலிம்பிக்கில் அதிக தங்கப்பதக்கங்களைப் பெற்ற நாடு - அமெரிக்கா*
* *இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் முது தமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி*
* *நத்தை முட்டையின் நிறம் - மஞ்சள்*

# பாடகர் கடைப்பிடிக்க வேண்டியவை

**செல்வி செ.தர்சினி**
கலைப்பிரிவு (2008)
யா/ இராமநாதன் கல்லூரி

01. எப்பொழுதும் சாரீரத்தின் (குரல்) இனிமை கெடாமற் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

02. அளவுக்கு மீறின சப்தத்துடன் நரம்புகள் புடைக்கக் கஷ்டப்பட்டுக்கொண்டு, கண்களை மூடிப் பாடுவது கூடாது.

03. கூடுமானவரையில் முகபாவம் கெடாமலும், உடம்பு, கைகளை விகாரமாக அசைக்காமலும் பிறர் குற்றம் சொல்லமுடியாத அளவிற் பாட வேண்டும்.

04. தாளம் போடும்போது சப்தத்தைக் குறைத்தும் கையை அதிக உயரம் தூக்காமலும் தாள அங்கங்களை விவரமாகத் தெரியும் படியும் போடவேண்டும்.

05. பாடும்போது பொருத்தமான இடங்களிற் சுருதியுடன் இணைந்து கோர்வைகள் கொடுத்து மிதமான சப்தத்துடன் இனிமையாக வாயைத் திறந்து பாடவேண்டும்.

06. ராகங்களையும் உருப்படிகளையும் பாடும்போது, ராகபாவம் தவறாமலும், தாளத்தை எடுத்த காலத்துக்கு ஒடாமலும், இழுக்காமலும், மறக்காமலும் பாடவேண்டும்.

07. பக்கவாத்யக்காரர்களிடம் கச்சேரியில் அன்றையதினம் பாடப் போகும் ராகங்கள், உருப்படிகள், பல்லவியின் அமைப்பு, கற்பனாஸ்வரங்கள் பாடும் இடங்கள்,மேலும் மிருதங்க வித்துவான் தனியாவர்த்தனம் வாசிக்கவேண்டிய தாளம், இவைகளை முன் கூட்டியே சொல்லி அவர்களின் அபிப்பிராயங்களையும் தெரிந்துகொண்டு பாட வேண்டும்.

08. சக்சேரியில் மத்யமகால விளம்பகால உருப்படிகளும், பதம், ஜாவளி, தில்லானா, திருப்புகழ் மற்றும் மத்யம சுருதியிற் சில உருப்படிகளையும், நேரத்தையும் இரசிகர்களையும் கவனத்திற் கொண்டு பாட வேண்டும்.

09. கச்சேரியிற் சங்கராபரணம், தோடி, கல்யாணி, பைரவி, காம்போஜி, கரஹரப்பிரியா போன்ற, எல்லோரும் கேட்டுப் பழக்கப்பட்ட ராகங்களில் ஒன்றிரண்டு கட்டாயம் பாடவேண்டும். தியாகராஜ ஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்த்ரிகள் போன்ற பெரியோர்களின் உருப்படிகள் அதிக அளவிற் பாடவேண்டும்.

10. கச்சேரி ஆரம்பித்து $1^1/_2$ மணிக்குப் பிறகு மிருதங்க வித்துவானுக்குத் தனியாக வாசிக்க வாய்ப்பளிக்க வேண்டும். அனாவசியமாகச் சிரிப்பதையும், முகத்தைச் சுழிப்பதையும் தவிர்க்கவேண்டும்.

# கலையரசு க. சொர்ணலிங்கம்

**செல்வி நாராயணன் வினுஷா**
A/L 2008 கலைப்பிரிவு
யா/ இராமநாதன் கல்லூரி

நாடகமே என் நினைவு, நாடகமே என் கனவு, நாடகமே என் இன்பம், நாடகமே என் தெய்வம் என்று வாழ்ந்த ஒரு அரங்கக் கலைஞர்தான் கலையரசு என்ற புகழ்பெற்ற திரு.க. சொர்ணலிங்கமாவார். ஈழத்துத் தமிழ் நவீன நாடக வரலாற்றில் தன்பெயரை பொறித்துக் கொண்டவர். இதனால் நவீன நாடகத்தின் தந்தை என அழைக்கப்படுபவர். பாவலர் துரையப்பாபிள்ளைக்குப் பின்னர் ஈழத்தில் நவீன நாடக அரகேற்றங்களை சுகுண விலாச சபை அரங்கேற்றியது. சுகுண விலாச சபையினரின் நாடகங்களைக் கண்ணுற்ற அக்கால இளைஞர்கள் கவரப்பட்டார்கள். அவ் இளைஞர்களின் வரிசையிற் கலையரசும் ஒருவராவர். இதனாற் பம்மல் சம்பந்த முதலியாரை குருவாகக் கொண்டு 1913 ஆம் ஆண்டு லங்கா சுபோத விலாச சபையை கொழும்பில் உருவாக்கிக்கொண்டார். இம் மன்றத்தினூடு ஆற்றிய பணிகளே ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் கலையரசு பெறும் இடம் எனலாம்.

கரையரசு சொர்ணலிங்கம் அவர்கள் ஒரு நாடக சபையை நடாத்தி சென்றவர். அதனை மிகவும் கட்டுப்பாட்டுடன் நிகழ்த்துபவர். சிறந்த ஒரு நடிகனாகத் தன்னை இனங்காட்டியவர். இதன்மூலம் கலையரசு நடிப்புமுறை ஒன்றை உருவாக்கியவர். தயாரிப்பு முறையை உருவாக்கியவர், காட்சிவிதானிப்பு, ஒலி, ஒளி விதானிப்பு, வேட உடைகளில் மிகுந்த அக்கறை காட்டியவர் ஒத்திகைகளைக் கடுமையாக வழி நடாத்திச் சென்றவர் என்று பலபல பரிமாணங்களை முன்னெடுத்துச் சென்றவராக விளங்கியவர்.

சிறு வயதிலிருந்தே (12) நாடகம் நடிக்கத் தொடங்கிய சொர்ணலிங்கம் அவர்கள் தனது இளைய வயதில் லங்கா சுபோத விலாச சபையைத் தொடக்கி, அதனூடாக ஈழத்து நவீன நாடகங்களை வளர்த்துச் சென்றவர். உத்தியோகம் பார்த்த இளைஞர்களைக் கூட்டி நாடக சபையை அமைத்துப் பம்மல் அவர்களது ஏகலைவச் சீடராகி அவரது நாடகங்களையே தயாரித்தார். தனது நாடக மன்றத்தில் உள்ள யாவரும் உயர் உத்தியோகம் பார்த்தல் வேண்டும். என்பதிற் கவனமாக இருந்தார். இதனூடாக நாடகத்திற்குச் சமூக அங்கீகாரம், சமூக மதிப்பு போன்றவற்றை ஏற்படுத்தினார். இவரது நாடக சபையில் கணக்காளர்கள், அப்புக்காத்துமார்கள், வைத்தியர்கள், குமாஸ் தாக்கள் எனப் பலதரப்பட்டவர்கள் அங்கத்த வர்களாக இருந்தனர். இதனால் நாடக சபையை மிகவும் கட்டுப்பாடாக நடத்த வசதியாக இருந்தது.

கலையரசு ஒரு நாடகாசிரியர் அல்லர், சிறந்த நடிகராவார். இவர் அரிச்சந்திரா, சிம்களநாதன்,

சாரங்கதாரா, வேதாளஉலகம், மனோகரா, பாதுகா பட்டாபிஷேகம், நீ விரும்பிய விதமே, சகுந்தலை முதலிய நாடகங்களைத் தயாரித் தார். மேற்கூறிய நாடகங்களில் பிரதான பாத்திர மேற்று நடித்தவர். வேறு சில நாடகங்களில் சிறிய பாத்திரங்களையும் ஏற்றார். இவ்வாறு நடிப்பதன் மூலம் நாடகத்தில் ஒருவர் தன்னை முதன்மைப் படுத்தக்கூடாது என வலியுறுத்தியவர். யாவரும் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடிக்கத் தயாராக இருக்கவேண்டும் எனக் கூறுவார்.

இவரது நடிப்பு முறைமை அக்கால நாடக முறைமைக்குப் புதியனவாகவும் வியப்பை ஊட்டு பவனாகவும் காணப்பட்டது. ஏனெனிற் கிராமங் களிற் கூத்துக்கள் முதன்மை பெற்றன. சில கிராமங்களிலும் நகரங்களிலும் விலாச வகை நாடகங்களும், ட்ராமாமோடி நாடகங்களும் முதன்மை பெற்றன. இவற்றைவிட வசனம் பேசி நடிப்பது இயற்பண்பு , யதார்த்தப் பண்பு நாடக முறைமைகளைப் பின்பற்றுகின்றமை, காட்சி யமைப்பு, படச் சட்ட மேடைகள் என்பனவும் வேடஉடை ஒப்பனையில் உண்மைத்தன்மையை கொண்டுவருவதும், ஒளி விதானிப்பைப் பார்வையாளர் பகுதிக்கும், ஆற்றுவோர் பகுதிக்கும் வழங்கியமை என்பன அக்கால மத்தியதரவர்க்கத்தினரைக் கவர்ந்தது.

இவர் உருவாக்கிய நடிப்பு முறை ரஷ்ய நாடகக் கலைஞர் ஸ்ரனிஸ் லவஸ்கியின் நடிப்பு முறையை அப்படியே ஏற்றுக்கொண்டதாக இருந்தது. அதாவது நடிகர் ஒருவர் பாத்திர மாகவே வாழவேண்டும் எனக் கூறிக் கொள் வார். இதற்காக அதிக நேரப்பயிற்சி, கூடிய அவதானம் என்பனவற்றை நடிகர் களுக்கு வலியுறுத்துவார். இதற்கு தன்னையே விலக்கி விடவில்லை. என்பதை கூனி பாத்திர உருவாக்கத்திற்கு, தான் இருபத்தைந்து முப்பது கிழவிகளை அவதானித்ததாகக் கூறும் கூற்று சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பாத்திரங்களுக்கான ஒப்பனையை மிகவும் நுட்பமானதாகக் கையாள்வார். பாத்திரப் பொருத்தம், ஒளி விளக்கின் முன் கவர்ச்சி என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் ஒப்பனை யிற் கவனம் செலுத்தினார். இதற்கு எடுத்துக் காட்டாக தத்தன் பாத்திரத்தைக் குறிப்பிடலாம்.

பாத்திரங்களை உண்மையான யதார்த்தப் பண்புடன் படைப்பதற்கு வேடஉடைகள் பெரிதும் துணைபுரியும் என்பதில் நம்பிக்கை கொண் டவர். கலையரசு இதற்காகச் சிந்தித்து வேட உடைபுனைவினை திட்டமிடுவார். இதற்கு எடுத்துக்காட்டாக வெனிஸ் நகர வணிகனில் சைலொக்கின் வேடப் புனைவுகளைக் குறிப்பிட லாம்.

நாடகத்தில் வசனங்களும், பாடல்களும் பயன்படுத்தப்பட்டன. பின்னணி இசைக் கருவியாக ஹார்மோனியம், மிருதங்கம் என்பன பயன்படுத்தப்பட்டன.

மேற்கூறிய யாவற்றையும் தொகுத்து நோக்கும்போது, ஈழத்துத் தமிழ் அரங்க வரலாற்றில் நவீன நாடகம் தோற்றம் பெற்று வளரவும், அதன் கட்டுப்பாட்டினுடைய உயிர்ப்பு நிலையைப் பேணவும், தனியான முத்திரையைப் பதிக்கவும் வகை செய்தவர் கலையரசு சொர்ணலிங்கமாவார். இதனூடாக இவர் நவீன நாடகத்தின் தந்தை என அழைக்கப்படுகின் றார்.

# நெப்போலியன் பொனபாட்

செல்வி சிபோஜா குணசீலன்
கலைப்பிரிவு A/L 2008
யா/ இராமநாதன் கல்லூரி

ஐரோப்பிய வரலாற்றில் தன்னிகரற்ற சக்தியாக விளங்கிய பேரரசனாக நெப் போலியன் பொனபாட் விளங்குகிறான். இவன் கி.பி. 1769ல் மத்தியதரைக் கடலில் உள்ள கோர்சிகா தீவில் அயோசியோ எனுமிடத்திற் சாள்ஸ் பொனபாட், றமோலினா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தான் இத்தாலிய மொழியைத் தன் தாய்மொழியாகக் கொண்டிருந்தபோதும், சிறுவயதிலேயே பிரான்சிற்குக் குடியேறி அந் நாட்டுப் பிரஜையாக மாறினான். சிறுவயதி லிருந்து தன்னம்பிக்கை. விடாமுயற்சி கொண்டு விளங்கிய இவன், தனது பதினேழாவது வயதில் இராணுவ வீரனாக விளங்கினான். 1789ல் பிரான்சியப் புரட்சி நடைபெற்றபோது புரட்சியாளருக்காக உழைத்துப் படிப்படியாக முன்னேறிப் பிரான்சின் ஆட்சியாளனாகவும், ஐரோப்பாவில் ஆதிக்க சக்தியாகவும் விளங் கினான். ஐரோப்பிய வரலாற்றில் 1801 – 1809 வரையான காலப்பகுதி "நெப்போலியனது காலம்" எனச் சிறப்பிக்குமளவு அவனுடைய போர்ச் சாதனைகள் பிரசித்தி பெற்றனவாக விளங்கின. நெப்போலியன் இராணுவ வீரனாக இருந்து மக்கள் படைக்கு உதவியதாற் புரட்சியின்பின் தோன்றிய ஜனநாயக ஆட்சியில் இவனுக்குப் பிரதேச இராணுவ அதிகாரி என்ற பட்டம் கிடைத்தது. நெப்போலியன் தலைமையில் ஒருபெரும் படையானது சென்று சவாய், நீஸ் சாடினியாபோன்ற பகுதிகளை வெற்றிகொ ண்டு பிரான்ஸ் எல்லையை விஸ்தரித்தான். எகிப்திற்குப் படை எடுத்துச்சென்று எகிப்திய சுல்தானையும் தோற்கடித்தான். இதனாற் பிரான்சின் வர்த்தக ஆதிக்கம் மேலோங்கியது. 1799ல் நெப்போலியன் பொனபாட் "பிரான்சின் சான்சிலராக" நியமிக்கப்பட்டான். பின்பு இவனு டைய யுத்த வெற்றிகளைக் கண்டு விருப்பம் அடைந்த மக்கள், மக்களவையின் ஒப்புதலுடன் பிரான்சின் "பேரரசன்" என 1804 ம் ஆண்டு பிரகடனப்படுத்தினர். நெப்போலியன் ஆரம்பத் தில் இழக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கைப்பற்றினான். மோல்ராதீவினைக் கைப்பற்றி னான். மேலும் ஒஸ்திரியாவைக் கைப்பற்றி வியன்னாவைத் தன் கட்டுப்பாட்டிற்கொண்டு வந்தான். இதனால் ஐரோப்பாவிலேயே பெரும் பிரதேசத்தை உள்ளடக்கிய நாடாகப் பிரான்ஸ் விளங்கியது.

ஜேர்மன், றைன் இணைப்பரசை உருவாக்கி, புனிதரோமப் பேரரசுக்குச் சாவுமணி அடித்தான். 1807 ஆம் ஆண்டு ஒஸ்திரியாவுக்கு உதவு வதற்கு வந்த ரஷ்யப் படைகளைத் தோற்கடித்து டில்சிற் உடன்படிக்கையைச் செய்துகொண் டான். இதன் மூலம் வெஸ்பாலியா பிரதேசம் தனிநாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1814ம் ஆண்டு ரஷ்யாவின்மீது மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையின்போது இவனது படைகள் தோற்கடிக்கப்பட்டு இவன் கைது செய்யப்பட்டு எல்பா தீவிற்கு நாடு கடத்தப் பட்டான். எனினும், அங்கிருந்து தப்பிவந்து

இவன் இராணுவ ரீதியாக வலுப்பெறவெனப் பெல்ஜியம்மீது மேற் கொண்ட படை நடவடிக்கை வொட்டலூ என்ற இடத்தில் 1815 யூன் 10ல் இங்கிலாந்து கூட்டணிப் படைகளால் முறியடிக் கப்பட்டு, நெப்போலியன் கைதுசெய்யப்பட்டான். இதனால் நெப்போலியனது பெரும்சரித்திரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

நெப்போலியன் பொனபாட் தனது இராஜ தந்திர நடவடிக்கையின் மூலமாக ஐரோப்பாக் கண்டத்தில் தனக்கென உறுதியான ஒரு இடத்தினைப் பெற்றுக்கொண்டான். இவன் இராணுவ நடவடிக்கைகளில் எத்தகைய நுட்பத்தினைப் பெற்றானோ அதேபோன்று இராஜதந்திர நடவடிக்கையை மேற்கொண் டான்.இவன் சான்சிலராகிப் பின் பேரரசனா னான். இவன் பேரரசன் ஆனதும் மக்கள் தீர்ப்பு என்ற வாக்கெடுப்பை நடாத்தி அதன்மூலம் நாட்டின் அனைத்து அதிகாரம் உடைய மன்னன் எனப் பிரகடனப்படுத்தினான். 1806 ம் ஆண்டு றைன், ஜேர்மனி இணைப்பாணையை வெளியிட்டு பேர்லின் பிரகடனத்தை வலி யுறுத்தியதன்மூலம் தனது இராஜதந்திரக் கொள்கையை வெளிப்படுத்தினான். இவன் அரச உரிமை பெற்றதும் உள்நாட்டிற் பல சீர்த்திருத்தங்களைக் கொண்டுவந்து நேர்மை யான அரச அதிகாரிகளை நியமித்தான். இராணுவக் கட்டமைப்பு, சுங்கத் திணைக்களம், வங்கிச்சேவை, கடற்படைக் கட்டுமானம், கல்விச்சேவை, சுகாதார நடவடிக்கைகள் போன்றவற்றை நல்லமுறையிற் சீர்ப்படுத்தி நம்பிக்கையான அதிகாரிகளிடம் ஒப்படைத் தான். தான் கைப்பற்றிய பிரதேசங்களிற்குப் பொறுப்பாகத் தனது உறவினர்களை நியமித் தான். இதன்மூலமாகத் தனக்கு எதிரான ஆட்சியாளர் உருவாவதைத் தடுத்தான்.

இவனால் முன்வைக்கப்பட்ட கண்டத் திட்டக் கொள்கையானது இங்கிலாந்தைப் பணியவைத் தது. "இங்கிலாந்துடன் வர்த்தக நடவடிக்கை யில் ஈடுபடுகின்ற எந்தவொரு நாடும் பிரான்சிற்கு எதிரானது எனக் கருதி அந் நாட்டின்மேற் போர் தொடுக்கப்படும்" என எச்சரிக்கப்பட்டிருந்தமை 1806 – 1808 வரை யான காலப்பகுதியிற் பிரித்தானியாவிற்குப் பெரும் இக்கட்டான நிலையைத் தோற்று வித்தது.

இவன் இராஜதந்திர ரீதியாகத் தனது அயல் நாடுகளை வெற்றிகொண்டபின் தரை மார்க்கத் தொடர்புகொண்ட ரஷ்யாவை அச்சுறுத்திய துடன், ரஷ்யப் படைகளை ஒஸ்திரியா, ஸ்பானியா முதலிய இடங்களில் தோற்கடித் தான். இதன்மூலம் தனது ஏகாதிபத்தியத்தை ஐரோப்பாவில் பறைசாற்றி நின்றதோடு தனது தவறுகள் வெளிவரா வண்ணம் பத்திரிகைச் சுதந்திரத்தைத் தடைசெய்தும் இருந்தான். பத்திரிகைத் தணிக்கை நீண்ட காலம் அமுலில் இருந்துள்ளது. இதன்மூலம் மக்களிடம் தன் நற் பெயரைப் பெற்றுக் கொண்டான்.

நெப்போலியன் ஐரோப்பாமீது 19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் மிகச் சிறந்த மேலா திக்கத்தைக் கொண்டிருந்தான். குறிப்பாக 1806ம் ஆண்டு 1814 ம் ஆண்டுவரை அவன் மேற் கொண்ட படைநடவடிக்கைகளும், வெற்றி களும், சீர்திருத்தங்களும் அவனை மேலாண் மைமிக்க ஒருவனாக உருவாக்கியது. இவன் ஆரம்பத்தில் அயல் நாடுகளையும் பின்னர் தொலைதூர நாடுகளையும் படிப்படியாக வெற்றி கொண்டு, தனது மேலாதிக்க நடவடிக்கையைப் பரப்பினான். பேர்ளின் கட்டளைகள் இவனது மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகிறது. மற்றும்

மிலான் கட்டளைகள் மூலம் கண்டக் கொள் கையைப் பரப்பி இங்கிலாந்தைத் தனிமைப் படுத்தினான். ஐரோப்பாக் கண்டத்திற் பரந்த பேரரசை உருவாக்கி, அக்கண்டத்தின் புற உருவப் படத்தை மாற்றி அமைத்த ஒருவனாக நெப்போலியன் பொனபாட் விளங்குகிறான். அது மட்டுமில்லாது, அடிக்கடி போர்கள் செய்து ஐரோப்பாக் கண்டத்தைப் பீதிக்கு உள்ளாக்கிய வகையிலும் இவனது மேலாதிக்கம் சிறப்புப் பெறுகின்றது. ஐரோப்பாக் கண்டம் முழுவதும் இவனுடைய மேலாதிக்கத்தின்கீழ் இருந் துள்ளன.

நெப்போலியன் ஆட்சிப்பீடம் ஏறியபோது நாட்டிற் பல குழப்பமும், அமைதியின்மையும் காணப்பட்டது. நாடு வெகு அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. இந்நிலையில் அதனை மாற்றி அதில் வெற்றியும் பெற்றான். "இவன் போரிற்பெற்ற வெற்றிகளைவிட உள்நாட்டிற் செய்த சீர்திருத்தங்கள் மகத்தானவை" என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

சட்ட உருவாக்கம், நீதி வழங்குதல் என்பனவற்றிற்குத் தேசக்குழு, செனற் சபை ஆகியவற்றினை நிலைநிறுத்தினான். காவற் றுறையைச் சிறப்பான முறையிற் செயற்படுத்திக் கண்காணிப்பு நடவடிக்கையை விஸ்தரித்தான். திணைக்களங்களிற்குத் தலைவராகப் பிறிபெற் றுக்களை நியமித்தான். நெப்போலியன் மேலும் நிதி நிலைமையைச் சீராக்கினான். வரியை அறவிட்டான். கூடுதலான யுத்தங்களில் ஈடுபட்டதால் செலவுபற்றி தணிக்கையைக் கடைப்பிடித்தான். மத்தியவங்கி ஒன்றை நிறுவி சொத்துக்களைப் பாதுகாத்தான். இவன் அனைவருக்கும் ஒரே நீதி எனும் முறையிற் சட்டம் இயற்றினான். இச் சட்டங்களை ஜேர்மன், இத்தாலி, பெல்ஜியம் முதலான நாடுகளில் இன்றுவரை பயன்படுத்தப்படுகின்றன. சிவில் சட்டம், கிரிமினல் சட்டம், தனித்தனியே உருவாக்கப்பட்டு அவற்றை நடைமுறைப் படுத்தி னான்.

கலைகளை வளர்க்க விரும்பிய நெப்போலி யன், கலைக் கூடங்களை அமைத்ததோடு அவற்றைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களையும் நியமித்தான். கலை சார்ந்த அறிஞர்களைக் கௌரவித்தான். நகர நிர்மாணக் கலைக்கு முக்கியத்துவம் அளித்தான்.

எனவே, மேற்கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்கும்போது, நெப்போலியன் பொனபாட் உள்நாட்டில் மேற்கொண்ட சீர்திருத் தங்கள் சட்டம், நிர்வாகம், நிதி, பொருளாதாரம், கலை, நீதி, எனப் பல்வேறு துறைசார்ந்தாக அமைந்திருந்ததோடு, பிரான்சின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஊன்றுகோலாக அமைந்துள்ளன. இதனால் நெப்போலியன் 1821ம் ஆண்டு சென்ஹெலினா தீவில் இறந்துபோன பின்னரும் புகழ் மங்காது நிலைத்து வாழ்கிறான்.

**உசாத்துணை நூல்கள்**

ஜீ.ஸி.மென்டிஷ் – "நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வம்" – பகுதி II

ஏ. சபாரத்தினம் – "புது முறைச் சரித்திரம்"

# சங்கீதக் கலையைப் பற்றிய நூல்களும் இயற்றியவர்கள் வாழ்ந்த காலமும்

செல்வி து.துஷ்யந்தினி
கலைப்பிரிவு (2009)
யா/ இராமநாதன் கல்லூரி

| சங்கீதநூல் | இயற்றியவர் | வாழ்ந்த காலம் |
|---|---|---|
| 01. நாட்டிய சாஸ்திரம் | பரதர் | கி.மு 4வது நூற் |
| 02. தத்திலம் | தத்திலர் | கி.மு 4வது நூற் |
| 03. பிருஹத்தேசி | மதங்கர் | கி.பி 5வது நூற் |
| 04. ஸங்கீத ஸமய ஸாரம் | பார்ச்வதேவர் | கி.பி 12வது நூற் |
| 05. அஷ்டபதி | ஜயதேவர் | கி.பி 12வது நூற் |
| 06. ஸங்கீத மகரந்தம் | நாரதர் | கி.பி 13வது நூற் |
| 07. ஸங்கீத ரத்னாகரம் | சாரங்கதேவர் | கி.பி 13வது நூற் |
| 08. ஸங்கீத ஸுதாகரம் | ஹரிபாலா | கி.பி 14வது நூற் |
| 09. ஸங்கீத ஸாரம் | வித்யாரண்யர் | கி.பி 14வது நூற் |
| 10. ராக தரங்கிணி | லோசன கவி | கி.பி 14வது நூற் |
| 11. தாஸர் பதங்கள் | புரந்தரதாஸர் | கி.பி. 15வது நூற் |
| 12. ஸ்வர மேளகளாநிதி | ராமாமாத்யா | கி.பி 16வது நூற் |
| 13. ராகவிபோதம் | ஸோமநாதர் | கி.பி 17வது நூற் |
| 14. ஸங்கீத ஸுதா | கோவிந்ததீக்ஷிதர் | கி.பி 17வது நூற் |
| 15. சதுர்தண்டிப்ரகாசிகை | வேங்கடமகி | கி.பி 17வது நூற் |
| 16. ஸங்கீத பாரிஜாதம் | அஹோபிலர் | கி.பி 17வது நூற் |
| 17. கிருஷ்ண லீலா தரங்கிணி | நாராயணதீர்த்தர் | கி.பி 17வது நூற் |
| 18. பதங்கள் | க்ஷேத்ரக்ஞர் | கி.பி 17வது நூற் |
| 19. ஸங்கீத ஸாராம்ருதம் | துளஜா மகாராஜா | கி.பி 18வது நூற் |
| 20. கோவிந்தாசாரியார் | ஸங்கிரஹ சூடாமணி | கி.பி 18வது நூற் |

# கோழி வளர்ப்பு

செல்வி சி.சிவமாலினி
கலைப்பிரிவு (2009)
யா/ இராமநாதன் கல்லூரி

கோழி வளர்ப்பானது சிறு அளவிற் குடும்பத் தேவைக்காகவும், பண்ணைத் தொழிலாகவும், பாரிய ஏற்றுமதி வர்த்தகப் பண்ணைச் செயற்பாடாகவும் பரந்தளவில் மேற்கோள்ளப் படுகிறது. கோழிகளை, முட்டைக் கோழிகள். இறைச்சிக் கோழிகள். இரு நோக்குக் கோழிகள் என மூன்றுவகையாகப் பிரிக்கலாம். கோழி வளர்ப்பில் ஆரம்பக் குஞ்சுகள் பராமரிப்பு, வளர் பருவக் குஞ்சுகள் பராமரிப்பு, முட்டைக் கோழிப் பராமரிப்பு என வெவ்வேறு பிரிவுகள் காணப் படும். ஒவ்வொரு பிரிவின் பராமரிப்பு, வீடமைப்பு, உணவு ஆகியன வித்தியாசமானது.

முட்டைக் கோழிகள் கூடிய முட்டைகளை உற்பத்தி செய்தல், குறைந்த காலத்திற்கு அடை காத்தல். குறைந்தளவு உணவை உட்கொள்ளல் போன்ற குணாதிசயங்களைக் கொண்டிருக்கும். உதாரணமாக :- வெள்ளை லெக்கோன் முட்டைக்காகவும், இறைச்சிக்காகவும் வளர்க்கப் படும். கோழிகள் R.I.R (றெட் ஐலண்ட் றெட்), நியூ கம்சியர் (New hampshire) பிளி மவுத் றொக் (Plymouth rock) ஆகும்.

இறைச்சிக் கோழிகள் கோர்ணிஷ் (Cornish), கோர்ணி றோக் என்பவை ஆகும். இவை பாரம் கூடிய இனம். குறைந்தளவு முட்டையிடும். அதி கூடிய அடைகாக்கும் தன்மை உடைய முதிர்ச்சியடையும்போது உயர்ந்த நிறையைக் கொண்டிருக்கும்.

கோழிப் பராமரிப்பிற் கோழிகளுக்கான வீடமைப்பு முறை முக்கியமானது. வெளியக வீடமைப்பு முறையால் உலாவுமுறைக் கூடுகள் பயன்படும். உள்ளக வீடமைப்பு முறையிற் கனகூளமுறை முற்றாகக் கம்பிவலையிலான தரை பற்றரி முறை காணப்படும். கனகூள முறையிற் கூட்டின் அடியிற் கூளமானது (Litter) பரப்பப்படும். பொதுவாக உமி, மரத்தூள் பாவிக்கப்படும். கம்பி வலையிலான தரை முறையில் எச்சம் கோழிகளுடன் தொடர் பில்லாமல் இருக்கும். இதனால் நோய் உருவாகும் சந்தர்ப்பம் மிகக் குறைவு. இதனால் அதிக எண்ணிக்கையான கோழிகளைக் குறிப்பிட்ட இடத்தில் வளர்க்க முடியும். ஆனால் உற்பத்திச் செலவு அதிகரிப்பதுடன் கோழிகள் ஒன்றையொன்று கொத்துதலுக்கான வாய்ப்பு அதிகரிக்கும். பற்றரி முறையில் ஒட்டுண்ணி நோய் ஏற்படும் சந்தர்ப்பம் குறைவு. குறைந்த வேலையாட்களே தேவை. இம்முறையில் உற்பத்தி திறன் பொதுவாக வெளியக முறையிலும் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

கோழியின் வீடானது காற்றோட்டம் உள்ள தாகவும், போதிய சூரியஒளி கிடைக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். கூட்டின் உயரம் 2 மீற்றருக்குக் குறைவாக இருத்தல் ஆகாது. அடித்தளம் சீமெந்தினாற் கட்டப்படல் வேண்டும். எலி, மரநாய் போன்ற பிராணிகளி லிருந்து பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முட்டைக் கோழிகளை வளர்க்கும்போது முட்டையிடுவதற்குக் கூடுகள் வைக்கப்படும். இதே அடியிற் கூளம் (Litter) இடப்படும்.

கோழிகளுக்கு உணவூட்டலானது முக்கிய மானது. சுத்தமான நீர் பாத்திரத்தில் எந்த நேரமும் வைக்கவேண்டும். ஆரம்ப குஞ்சுகள் (0–10 வாரங்கள்) குஞ்சுத் தீனுடன் அரிசிக் குறுணலையும் கொடுக்கலாம். உணவிற் சல்மோனைல்லா தடுப்பு மருந்தை உள்ளடக்கிய தீனுடன் கொல்ஸ்சிடியோசிஸ் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து சேர்க்கப் படல் வேண்டும்.

வளர்பருவ குஞ்சுகளுக்கு (10–20 வாரங்கள்) வளர் பருவத்திற் கொடுக்கப்படும். முட்டைக் கோழிகளுக்குப் படிப்படியாக வளர் பருவத் தீனிலிருந்து முட்டைத் தீனுக்கு மாற்றப்பட வேண்டும். தீனுடன் சிப்பித்தூள் ($CaCO_3$) சேர்க்கப்படும். இது அதிகளவு முட்டைகளை உற்பத்தி செய்ய உதவும். இறைச்சிக் கோழிகள் 6–7 வாரகாலப் பகுதியில் வளர்க்கப்படுகின்றன. இவற்றிற்கு விசேட உணவு வழங்கப்பட வேண்டும்.

கோழிகளின் உணவுப் பாத்திரமானது எப்போதும் வெறுமையாக இல்லாமல் தொடர்ச்சியாக உணவால் நிரப்பப்பட்டு உணவூட்டல் மேற்கொள்ளப்பட வேண்டும். உணவு பாத்திரத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு உணவை நிரப்புவதால் உணவின் வீண் விரயத்தைத் தடுக்கலாம்.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொருவரும் கோழி வளர்ப்பின் மூலம் தமது வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம். குறைந்த முதலீட்டில் அதிக இலாபத்தைப் பெறலாம்.

* உலகிலே அதிக மக்களைக் கொண்ட நாடு - சீனா
* உலகிலே குறைந்தளவு மக்களைக் கொண்ட நாடு - வத்திக்கான்
* இலங்கையின் அழகிய நீர்வீழ்ச்சிகள் - துன்கிந்த, தியலும

# Laser Beam

செல்வி அஜிதா சண்முகசுந்தரம்
2008 விஞ்ஞானப்பிரிவு,
யா/இராமநாதன் கல்லூரி.

Laser என்பது Light Amplification by stimulated Emission of Radiation எனும் ஆங்கில சொற்களுக்குரிய சுருக்கமாகும். Laser தொழில்நுட்பமானது 1950களில் அமெரிக்க சோவியத் விஞ்ஞானிகளால் தனித்தனியாகக் கண்டுபிடிக்கப்பட்டது. Flash bulb இல் இருந்து வெளியேறும் ஒளி காரணமாக பூமியில் அரிதாகக் கிடைக்கும் சில பளிங்கின் (Crystals) மூலக்கூறுகளில் இருந்து செறிவான ஒளிக்கதிர்கள் காணப்படுவதை அமெரிக் காவைச் சேர்ந்த Charles Townes, Arthur Schawlow எனும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர். ஆரம்பகால Laser உற்பத்திக்கு Ruby Crystal பயன்படுத்தப்பட்டது. இதை மேலும் விளக்கமாக பார்க்கும்போது, பதார்த்தத் திலுள்ள மூலக் கூறுகள் குறித்த அதிர் வெண்ணில் அதிரும் போது ஒளியைக் காலுகின்றது. பதார்த்தமானது சக்தியினால் சுருட்டப்படும்போது குறித்த அதிர்வெண்ணில் செறிவான ஒளியைக் காலும் இச் செறிவான ஒளியே Laser கதிர்கள் எனப்படுகின்றன.

Laser இன் பயன்பாடு மருத்துவத் துறையில் கண்சத்திர சிகிச்சைகளின்போது பயன்படு கின்றது. தொழிற்றுறைகளில் கொங்கிறிற், உருக்கு போன்ற உலோகங்களை வெட்டு வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. பாதுகாப்புத் துறையை எடுக்கும்போது மிகப்பெரிய அளவில் இதன் பயன்பாடு காணப்படுகிறது. Laser guided or smart bombs இதை முதல் தடவையாக அமெரிக்காவும் வியட்நாமும் அண்மையிலும் பயன்படுத்தியது. தற்போது இத்தகைய தொழில்நுட்பத்தைக் கொண்ட ஆயுதமானத Precision Guided Munitions (PGMs) எனும் பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது. இதன் மூலம் இலக்குத்தவறாமல் தாக்குதல் நடத்த லாம். பூமியில் இருந்து Laser கதிர்களின் மூலம் செய்மதிகளைக்கூட செயலிழக்கச் செய்ய முடியும்.

அத்துடன் 1969 இன் முற்பகுதிகளில் எதிரிகளின் இராணுவ நிலைகளை 300 மைல் தொலைவில் அண்டைவெளியில் இருந்தவாறே படம் எடுத்து உடனடியாகப் படங்களை Laser கதிரின் உதவியுடன் அமெரிக்காவிற்கு அனுப்பக்கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத் தியது. இப்படங்கள் மிகவும் துல்லியமானதாக காணப்பட்டது. அத்துடன் இதன்மூலம் பூமிக்கடி யில் பாறைகளின் அசைவுகளை கண்டறிந்து வரப்போகின்ற பூமி அதிர்ச்சிகளை எதிர்வு கூறக்கூடியதாகவுள்ளது. அந்த அளவிற்கு Laser தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. ஆக்க வேலைகளுக்கும், அழிவு வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

# இலங்கைத் தூபி

செல்வி ஞா. டில்வியா
கலைப்பிரிவு (2008)
யா/ இராமநாதன் கல்லூரி

தாகப என்று சிங்கள மொழியிற் கூறப்படும் தூபி இலங்கையில் உள்ள ஒவ்வொரு பௌத்த பள்ளியுடன் இன்றியமையாத அம்சமாக உள்ளது. தென்னாசியாவில் உள்ள மற்றைய பௌத்த நாடுகளிலும் இவ்வாறே அமைந்து உள்ளது. பளிச்சிடும் வெள்ளிய கும்மட்டங் களுடனும், கூம்பிய சிகரங்களுடனும், பொன் போர்த்த முடிகளுடனும், எழிலுடன் இவை விளங்குகின்றன. ஒவ்வொருநாள் காலையும் மாலையும் மஞ்சளாடை அணிந்த பிக்குகள் இத்தூபிகளில் ஆராதனை நடாத்துவார்கள். பௌத்த புண்ணிய நாட்களிலும் முக்கிய சமய விழாக்களிலும் சமய ஆர்வமுள்ள பௌத்த மக்கள், ஆடவர், மகளிர், இளையோர், முதியோர் வெண்ணிற ஆடை அணிந்து பலவண்ண நறுமலருடன் இன்மணத் திரவியம், சிறுவிளக்கு ஏந்தி இம்மனைக்குச் செல்வர். எல்லாத் தூபி களிலும் புத்த பகவானுடைய அல்லது அடியாருடைய உடல் எச்சத்தினின்றும் ஒரு சிறு துகள் பதிக்கப்பட்டிருக்கும். பகவானின் எச்சம் ஒன்றைக் கொண்டுள்ள தூபியை வணங்கும் பக்தியுடைய பௌத்தன் ஒருவர் தன் பக வானையே வணங்குவதாகக்கொள்கின்றான்.

இந்நாட்டு மக்களாற் சமய வழிபாட்டிற்கு என அமைக்கப்பட்ட தூபியை போன்ற ஒரு தூபியை இன்று இந்தியாவிற் காணமுடியாது. இந்தியாவில் இருந்தே இலங்கை, மியன்மார் ஆகிய நாடுகளில் தூபி வழிபாடு பரவியது. பௌத்தம் பாரதத்தில் இருந்து மறைந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாயின. காலத்தின் கொள்ளையாலும், மனிதனின் அழிவு வேலை யாலும் இவை மறைந்தன எனலாம்.

தூபி அமைத்தல் பௌத்தம் தோன்றுவதற்கு முன்னரே தோன்றியது எனலாம். பௌத்தம் தோன்றுவதற்கு முன்தோன்றிய பல மன்னர் களின் உடல் எச்சங்கள்மீது தூபிகளைக் கட்டி னார்கள். இதனைப் பின்பற்றியே பௌத்த மதமும் எச்சங்கள்மீது தூபிகளைக் கட்டியது எனலாம். பெரியோரின் எச்சங்கள் மீது பண்டைய நாளிற் பல இனமக்கள் எழுப்பிய மண்மூடியில் இருந்தே தூபி தோன்றி வளர்ந்தது எனத் தொல்பொருளியலாளர் ஒத்துக் கொள்கின்றனர்.

தம் மதத்தைத் தோற்றுவித்தோரைப் போற்றிப் புகழ்வதற்கு ஏற்ற வழியாக ஆதிப் பௌத்தர் தூபியை அமைத்துக்கொண்டனர். பிற்காலத்திற் சமயத்தோடு இயைந்த புனித இடங்களைப் பேணித் தொழுவதற்காகவும் தூபிகள் எழுப்பப்பட்டன. புத்தர் இலங்கைக்கு வந்தபோது தியானித்த இடங்களில் எழுப்பப் பட்ட தூபிகள் நினைவுச் சின்னங்களாகும்.

புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்தபின் பகவானின் உடலைக் குஷிநாரா எனும் இடத்தில் எரியூட்டினர். எஞ்சிய எச்சங்கள் மகதப்

பேரரசின் தலைநகர் இராஜக்கிருகத்திற்குக் கொண்டுவந்து பாதுகாக்கப்பட்டது. அசோகன் காலத்தில் இவை எடுக்கப்பட்டன. இதில் ஒரு எச்சம் அனுரதபுரவில் உள்ள மகாதூபியை வந்தடைந்தது. அசோகனின் மகன் மகிந்தர் மூலம் இலங்கைக்குப் பௌத்தம் பரவியது. அப்பொழுது பௌத்த மதத்தைத் தழுவிய தேவனம்பியதீசன் புத்தரின் தாடை எலும்பை வைத்துத் தூபியொன்றை நிறுவினான். இலங்கையின் முதல் தூபியான இதனைத் தூபராம தூபி என்பர். தீசனுடைய தம்பி உத்தியனுடைய காலத்திலே மகிந்தர் இறந்தார். அவரின் எச்சங்களை வைத்து மிகுந்தலையில் அம்பஸ்தல தூபி அமைக்கப்பட்டது.

அனுராதபுர அரசு தமிழர்கள் வசப்பட்டதைத் தொடர்ந்து பௌத்த மக்கள் மாகமை, கல்யாணி ஆகிய இடங்களுக்குச் சென்று வாழ்ந்தனர். கல்யாணியிற் (களனி) புத்த பகவான் வந்தமையை நினைவுகூர்ந்து தூபி ஒன்று அமைக்கப்பட்டது. மாகமை மன்னனான துட்டகாமினி ராஜரட்டையைக் கைப்பற்றியதும் மிரிசவடி தூபி, மகா தூபி, (றூவான் வலி) என்பனவற்றைத் தாபித்தான். வட்டகாமினி அபயன் (கி.மு. 44–17) தான் போரில் தோற்ற பொழுது தன்னை இகழ்ந்த சமணத் துறவியின் பள்ளியை இடித்து அபயகிரி விகாரையை அமைத்தான். கி.பி முதல் மூன்று ஆண்டு களிலும் இலங்கையின் பல மன்னர்கள் பல தூபிகளைக் கட்டினர் என வரலாற்று ஏடுகள் கூறும். எனினும் இதனை அறியமுடியவில்லை. மகா தாடிக மகாநாகன்(கி.பி. 67–79) மிகுந் தலை மேல் உள்ள மகாதூபியை நிறுவினான்.

இலங்கையின் பண்டைய வரலாற்றின் பெரும் கட்டுநருள் ஒருவனாக மகாசேனன் உள்ளான். இவன் இலங்கையின் மிகப்பெரிய தூபியான ஜேதவன ராம தூபியைக் கட்டுவித்தான். இதன் உயரம் 400 அடி. இதன் அடி விட்டம் 370 அடியாகும். இப்பாரிய தூபியை அமைத்த மகாசேனன் எகிப்திய பிரமிட்டுக் களை அமைத்த மன்னர்களுடன் ஒப்பிடக் கூடியவனாவான்.

மகாசேனனுக்குக் பிற்பட்ட காலத்திற் சமயப் புனிதமும் பெரும் பருமனுமுடைய தூபி ஒன்றும் எழவில்லை. பலவிதப் படைஎடுப்புக்களும், உள்நாட்டுக் கலகங்களும் மக்களை வருத்தின. அமைதியான, நிலையான ஆட்சி நிலவவில்லை. இக்காலத்தில் மகாயான பௌத்தத்தின் செல்வாக்கினால் எச்சங்களை வணங்கும் வழக்கம் மறைந்து, புத்தர் சிலைகளை வணங்கும் வழக்கம் உருவானது.

பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே இலங்கையின் பெரும் பாகத்தைச் சோழர் வெற்றிகொண்டனர். பௌத்த ஆலயங்களுக் கான ஆதரவு மிகவும் குறைவு அடைந்தது. முதலாம் விஜயபாகு ஆட்சியில் (கி.பி. 1058 – 1114) சிங்களவர் இறைமை தலையெடுத்ததும் பௌத்த மதத்தைப் புனரமைக்க முயன்றனர். விஜயபாகு மறைந்ததும் குழப்பங்கள் உருவாகின. மீண்டும் கி.பி. 1153 இல் 1ம் பராக்கிரமபாகு அரசனானதும் புதிய பொலிவு உருவானது. பொலனறுவையில் உள்ள கிரிவிகாரை பராக்கிரமபாகுவின் மனைவி பத்மாவதியால் அமைக்கப்பட்டது. இன்னொரு மனைவி ரூபாவதியால் பப்லு விகாரையும் உருவாக்கப்பட்டது.

பராக்கிரமபாகுவைத் தொடர்ந்து நிசங்க மல்லன் (1187–1196) என்பான் ரங்கொத் விகாரை எனும் எடுப்பான விகாரையை அமைத்தான். இதன் அடி விட்டம் 186 அடியாகும். 13ம் நூற்றாண்டின் முதற்கூற்றில் நேர்ந்த பொலனறுவை அரசின் வீழ்ச்சியோடு சிங்கள நாகரிகம் குன்றத் தொடங்கியது. இந்நிலை 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வருகை வரைக்கும் நீடித்தது.

அமைதியும், ஒழுங்கான அரசும் நிலவிய சிறு சிறு இடைக்காலங்கள் இருந்தன. இக்காலங்களிற் கட்டப்பட்ட தூபி ஒன்றும் இப்பொழுது இல்லை. பழைய தலைநகர்களான அனுராதபுரம் பொலனறுவையும் அதனுடன் இணைந்த மாவட்டங்களும் கைவிடப்பட்டன. பெருந் தூபிகள் அழிந்தன. இச்சமயக் கட்டிடங்களுள் மிகச் சிறப்புடையனவற்றின் பெயர்களே மக்களின் நினைவிலிருந்து அழிந்தன.

16ம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயரும் தொடர்ந்து ஒல்லாந்தரும் வந்தனர். இவர்களின் பின் பிரித்தானியர் வந்து 1815 இல் இலங்கை முழுவதையும் தம்வசம் ஆக்கினர். இக்காலத்தில் பௌத்தம் இடர் உற்றது. புதிய தூபிகள் கட்டலும், பழையவற்றைப் பேணலும் வழக் கொழிந்தன. எனினும் 18ம் நூற்றாண்டின் இறுதியிற் பௌத்த மறுமலர்ச்சி தோன்றியது. பழைய தூபிகள் திருத்தப்பட்டன. சீயம், பர்மா நாட்டுச் சாயங்களுடன் சிறு தூபிகள் அமைக் கப்பட்டன.

இன்று எழும் தூபிகள் பழைய வடிவமைப்பிற் பிறழ்ந்தனவாக உள்ளன. இதனாற் சிற்ப முறையாகவோ அல்லது கலையியல்பாகவோ இவை நம் கருத்தை ஈர்க்க முடிவதில்லை.

### கோள்களிலே.....

* விட்டத்தில் பெரியது / பாரமானது - வியாழன் (Jupitor)
* விட்டத்தில் மிகவும் சிறியது - புளூட்டோ (Pluto)
* மிகவும் குளிரானது - புளூட்டோ (Pluto)
* மிக வேகமானது - புதன் (mercury)
* பாரம் மிகவும் குறைந்தது - புதன் (mercury)
* சூரியனுக்கு மிகவும் அண்மையிலுள்ளது - புதன் (mercury)
* பூமிக்கு மிகவும் அண்மையிலுள்ளது - வெள்ளி (Venus)

# உயிர் பல்வகைமை

செல்வி த.நிருஜா
கலைப்பிரிவு (2009)
யா/ இராமநாதன் கல்லூரி

நாம் வாழும் பூமித் தொகுதி வளிக்கோளம், கற்கோளம், உயிர்க்கோளம் என்பவற்றை உடையது. உயிர்க் கோளத்திற் காணப்படுகின்ற எல்லா உயிர் இனங்களும் உயிர்ப் பல்வகைமை எனப்படும். உயிர்ப் பல்வகைமை பல்வேறு வகையிலும் முக்கியத்துவம் பலவற்றை உடையது. சூழற்றொகுதியின் சம நிலையைப் பேணுவதற்கும், இதன் உணவுச் சங்கிலிகளைப் பேணுவதற்கும் உயிர்ப் பல்வகைமை அவசிய மானது. இரசாயன வட்டங்கள், நீரியல் வட்டங்கள் நிகழ்வதற்கும், மனிதனின் உணவுத் தேவைகள், மருந்துகள். கைத்தொழில்கள், வீட்டுத் தேவைப் பொருட்கள் பெறுவதற்கும் உயிர்ப் பல்வகைமை உதவுகின்றது. மேலும் சூழலின் அழகியல் முக்கியத்துவத்தைப் பேணுவதற்கும் வெப்பம், மழைவீழ்ச்சி என்பனவற்றைச் சீர்ப்படுத்துவதற்கும் மனிதன் எதிர்காலத்தில் மேலும்மேலும் பயன்படுத்தக் கூடிய உபயோகமான பரம்பரை அலகுகள் பலவற்றினது தோற்றுவாயாகவும் உயிர்ப் பல்வகைமை உள்ளது.

இவ்வுயிர்ப் பல்வகைமையானது. பாரம்பரிய பல்வகைமை, இனப் பல்வகைமை, சூழற் தொகுதிப் பல்வகைமை எனும் மூன்று பிரதான கூறுகளை உடையது. உயிர்களிற் காணப்படும் பல்வேறு பரம்பரை அலகுகள் பாரம்பரிய பல்வகைமை எனப்படும். புவியில் வாழும் பல்வேறு இனங்களை இனப் பல்வகைமை எனவும் புவியின் சூழற்றொகுதிகள் அனைத்தையும் சூழற்றொகுதிப் பல்வகைமை எனவும் அழைப்பர். பூமத்திய கோட்டிலிருந்து துருவப் பகுதிகளை நோக்கிச் செல்லச் செல்ல உயிர்ப் பல்வகைமை குறைந்து செல்கின்றது. உலர்ந்த இடங்களிலும் பார்க்க, ஈரமான இடங்களில் உயிர்ப் பல்வகைமை குறைந்து செல்கின்றது. சமுத்திரங்களில் ஆழமான இடங்களைவிட, கரையோரங்களில் உயிர்ப் பல்வகைமை அதிகமாகக் காணப்படும். புவியில் 7%மான மேற்பரப்பிற் பரம்பியுள்ள மழைக் காடுகளில் 90%மான உயிர்ப் பல்வகைமை காணப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் அயன மண்டல மழைக் காடுகள் உயிர்ப் பல்வகைமை அதிகமுள்ள இடமாக உள்ளது. மழைவீழ்ச்சியும் வெப்பமும் வருடம் முழுவதும் உயர்வாகக் கிடைக்கும் காலநிலை உடையது. அயன மண்டல மழைக் காடுகள் 4.0m மேற்பட்ட உயரமுள்ள அடர்ந்த இக்காடுகளுள் ஒளியின் ஊடுருவல் மிகக் குறைவானது. எமது பூமியிற் காணப்படும் இனங்களில் ஏறத்தாழ 50% இங்குள்ளது. அயன மண்டல மழைக் காடுகளில் மிகக் கூடுதலான உயிர்களிற்கு வாழிடங்களும், நுண் வாழிடங் களும் உள்ளதனால் இனப் பல்வகைமையில் மிகச் செழிப்பான வாழிடங்களாக இவை உள்ளன. உலகின் மிகப்பெரிய மழைக் காடுகளாக அமேசன் நதிப் பள்ளத்தாக்குக்

காடுகளும், கொங்கோ நதிப்பள்ளத்தாக்குக் காடுகளும் உள்ளன. இவ் வகையிற் சிங்கராச வனம் கன்னெலியக் காடுகளும் மழைக் காடுகளாகும். சிங்கராச வனம் உலகின் உயிர்ப் பல்வகைமைச் செறிவு மிக்க இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இங்கு சிறுத்தை இனக் குரங்குகள், மீன் கௌவிப் பூனை, பறக்கும் அணில், துருப்புள்ளிப் பூனை போன்ற பல்வேறு மர வாழ்க்கைக்கு இசைவான முலையூட்டிகள் உள்ளன. அயன மண்டல மழைக் காடுகள் உயிர்ப் பல்வகைமையின் நிலையிடம் ஆகும். இக்காடுகள் 40% பறவைகளையும், 80% பூச்சிகளையும், 60% க்கு மேற்பட்ட தாவரங் களையும் உலகில் உடையது. உலகினைப் பூகோள வெப்பமாதலில் இருந்து பாதுகாப்பதற்கும் நன்னீர் வளங்களைப் பேணுவதற்கும். மண்ணரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கும் மருத்துவ மூலிகைகளினதும் பல பயிர் வகை களினதும் வாழிடமாகவும் அயன மழைக் காடுகள் உள்ளன.

அயன மண்டலப் பருவக் காற்றுக் காடுகள், இலை உதிர்க்கும் பச்சை இலைகொண்ட தாவரங்கள் கீழ் வளரிகளுடன் காணப்படும். யானைகள், கரடிகள், பல இனக் குரங்குகள் என்பன இங்கு வாழ்கின்றன. சவன்னா புல் காணப்படும். சவன்னா பிரதேசம் இடை யிடையே மரங்களுடன் உள்ளது. கனிப்பொருட் செறிவு குறைந்த, நீர் தேக்கும் திறன் குறைந்த இப்பிரதேசங்களில் மேய்ச்சல் விலங்குகளும், இவற்றை இரையாக எடுக்கும் ஊன் உண்ணிகளும் வாழ்கின்றன. இல்றுக் எனும் ஒருவகைப் புல் இங்குள்ள பிரதான புல்லினம் ஆகும்.

இலங்கையில் உள்ள மலைக் காடுகளில் நக்கிள்ஸ், பீதுருதால காடுகள் பிரதான மானவையாகும். இங்குள்ள நன்னீர் நிலைகளில் உள்நாட்டு மீன் இனங்களில் 50%மானவை மலைக்காட்டு நன்னீர்க் காடுகளில், உள்ளன. இலங்கையின் வறள் வலயத்தில் உள்ள அயன மண்டல முட்புதர்க் காடுகளில் வறள் நில இசைவாக்கம் கொண்ட முட்புதர்கள் உள்ளன. இலங்கையின் கடனீரேரிகளின் கரையோரப் பகுதிகளிலும், பொங்கு முகங்களின் கரை யோரங்களிலும் கண்டற் காடுகள் பல உள்ளன. இக்கண்டற் காடுகள் மண் அரிப்பில் இருந்தும், கடல் அலைவீச்சுத் தாக்கத்திலிருந்தும் பாது காக்கின்றது.கண்டல்கள் பல தாவரங்களினதும் விலங்குகளினதும் சிறந்த வாழிடமாக உள்ளது. கடற்புல் படுக்கைகள், முருகைக் கற்பார்கள் என்பனவும் ஆமைகள், மீன்களின் வாழ்விடமாக உள்ளன.

இவ்வாறு பல்வேறு இடங்களில் வாழுகின்ற பலவகையான உயிர்கள் மனிதனின் செயற் பாடுகளினால் அழிக்கப்படுகின்றன. காடுகள்/ கண்டற் காடுகள், முருகைக் கற்பார்கள் என்பன மனிதனால் அழிக்கப்படும்பொழுது, உயிர்ப் பல்வகைமை மிகக் கூடிய அளவு இழக்கப் படுகின்றது. மனிதனால் உயிரினங்கள் பல உணவிற்காகத் தோல், தந்தம், ஓடு, வெட்டு மரங்கள் என்பனவற்றைப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனாற் பல இனங்கள் அழிவுற்று உள்ளன. பயணப்புறா, கம்பளி மமத்துக்கள், ஆபிரிக்க யானைகள், காண்டா மிருகங்கள், மலைப் பாம்புகள் என்பன மிகையாகப் பயன்படுத்தியதால் அழிக்கப் பட்டன. மேலும் வளிமண்டலத்தில் $CO_2$ போன்ற

பச்சை வீட்டு மாசுக்கள் அதிகரிப்பினாற் பூகோள வெப்பம் அதிகரித்தது. காலநிலை மாறுகின்றது. இதனால் கடல் நீர் அதிகரித்துக் கரையோரப் பகுதிகள் நீருள் மூழ்குகின்றன. உயிர்கள் வாழுகின்ற இடங்கள் அழிக்கப் படுகின்றது. சூழல் வெப்ப உயர்வாக ஆண் ஆமைகள் அதிக அளவில் விருத்தி யடைகின்றது. இதனால் ஆண்/பெண் விகிதம் பாதிக்கப்பட்டு கடலாமைகள் அழிவடை கின்றன.

உயிர்ப் பல்வகைமைகள் அழிவடைந்து வருவதனால் இவற்றைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதலை உயிர்ப் பல்வகைமைக் காப்பு என்பர். உயிர்கள் வாழும் இடங்களைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் ஆக்குதல் ஒரு பிரதான நடவடிக்கை ஆகும். இலங்கையிற் சிங்கராச வனம் இத்தகைய ஒரு வனமாகும். தேசிய பூங்காக்களை அமைத்து மனித நடவடிக்கையில் இருந்து முற்றாகப் பாதுகாத்தல் யால, வில்பத்து, உடவளவ என்பன இலங்கையின் தேசிய பூங்காக்கள் ஆகும். முத்துராஜவல (கண்டல் சரணாலயம்) கிக்கடுவ (முருகைக் கற்பார் சரணாலயம்) கலாமிட்டிய (பறவைச் சரணாலயம்) போன்ற சரணாலயங் களை அமைத்தல், பெரதேனியா, கக்கல போன்ற தாவரவியற் பூங்காக்களை அமைத்தல், தெஹிவலவில் உள்ள விலங்கியற் பூங்காக் களை அமைத்தல், செயற்கை இன விருத்தி நிலையங்களை (பின்னவல யானை) உருவாக்கல், மூலிகைத் தோட்டங்களை உருவாக்கல் என்பன மூலம் உயிர்ப் பல்வகைமை யைப் பாதுகாக்கலாம்.

உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாப்பதற்கு உலகளாவிய ரீதியிற் பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 1992ல் பிரேசில் நாட்டில் றியோ டி ஜெனிரோ நகரில் "உயிர்ப் பல்வகைமைச் சமவாயம்" ஏற்படுத்தப்பட்டது. உயிர் வகைகளின் மிகையான பயன்பாட்டைத் தவிர்ப்பதற்காக இது ஏற்படுத்தப்பட்டது. ஈரானில் உள்ள ரம்சார் எனும் இடத்தில் உருவாக்கப்பட்டது. "ரம்சார் சமவாயம்" இது ஈர நிலங்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டது. மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு "பேசல் சமவாயம்" ஓசோன் பாதுகாப்பிற்கு "வீயன்னா சமவாயம்" குளோரோ புளோரோ காபன் பயன்பாட்டினைத் தடுப்பதற்கு "கமான்ரியல் வரைவேடு" சமுத்திரங்களில் எண்ணெய்மாசு ஏற்படுவதனைக் கட்டுப்படுத்த "மாபோல் சமவாயம்" ஐக்கிய நாடுகளின் செயற்றிட்டமான "காலநிலை மாற்றம்" தொடர்பான சமவாயம்" என்பன யாவும் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.

## கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வரலாற்றில் இடம் பிடித்த

# மாவீரன் அலெக்சாண்டர்

செல்வி ச.சபிதா
உயர்தரம் (2009)
யா/ இராமநாதன் கல்லூரி

உலகிலே தோன்றிய ஒப்பற்ற மாவீரர் வரிசையிலே சிறப்பாக வைத்தெண்ணத்தக்க ஒரு மாவீரனே அலெக்சாண்டர். மற்றவர்க் கெல்லாம் இல்லாத தனிப்பெரும் சிறப்பு அலெக்சாண்டருக்கே உண்டு. இந்தியத் தாயின் மடியில் தோன்றித் தவழ்ந்த மாவீரன் தலை யாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் தனது இளமைப் பருவத்தில் முடிமன்னர் மூவரோடு வேளிர் எழுவரையும் வென்று வாகை சூடினானென இலக்கியத்தில் காணலாம். அவனைப் போலவே தமது இளம் பருவமான 23ஆவது வயதில் அவரது காலத்தில் தெரிந்தி ருந்த உலகநாடுகளிற் பெரும்பாலானவற்றை வென்ற பெருமைக்குரியவர் அலெக்சாண்டர். இதனாலே வரலாற்றில் தன்னிகரற்ற மாவீர னெனப் போற்றப்படுகிறார். அத்துடன் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாதவன். வரலாற்றில் இடம்பெறுவதில்லை என்ற கூற்றுக்கிணங்கத் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தியும், சந்தர்ப்பங்கள் பலவற்றையும் உருவாக்கி தன்னிடமுள்ள வேறு பல தனி இயல்புகளையும் எடுத்துக் காட்டினான்.

இவன் கி.மு. 356ஆம் ஆண்டு மாசிடோனிய நாட்டு மன்னன் பிலிப் என்பவனுக்கு மகனாகத் தோன்றினான். பிலிப் மன்னன் கிரேக்க நாடுகள் அனைத்தையும் வென்று அடிமைப் படுத்தி ஆண்டான். அதே போலவே தந்தைக்கு மகன் நிகரானவர் என உறுதிப்படுத்தவே அலெக்சாண்டர் நாகரிகம் பெற்றிருந்த பிற நாடுகள் அனைத்தையும் தன்னடிமைப்படுத்தி யிருந்தார். அலெக்சாண்டர் மாவீரன் என்பது மட்டுமல்லாது ஓர் அரசியல் ஞானியுமாவார். இவர் மாசிடோனியாவின் தலைநகரான பெல்லாவில் பிறந்ததுடன், புகழ் பூத்த தத்துவ அறிஞரான அரிஸ்டாடில் அவருக்கு குருவாக அமைந்ததால், அலெக்சாண்டர் அறிவாளி யாகவும் காணப்பட்டார். இவரின் 16ஆவது வயதில் பிலிப் இல்லாத சந்தர்ப்பத்திலே போருக்குத் தலைமை தாங்கி வெற்றி பெற்றுத் திரும்பினார்.

அலெக்சாண்டர் கி.மு. 334 இல் தனது படையின் உதவியுடன் ஆசியாக் கண்டத்தினுள் நுழைந்து பாரசீகர்களையும் வேறுபலரையும் களத்தில் சந்தித்து வெற்றிபெற்று ஆசியக் கண்ட நாடுகளை தன்னடிப்படுத்தினார். இவ்வாறு அந்நாளில் அறியப்பட்டிருந்த நாடுகளை வென்று வாகைசூடிய அலெக் சாண்டருக்குப் போரிடுவதே குறிக்கோளல்ல அத்துடன் நிலையான பல குறிக்கோள்கள் உள்ளத்தில் அமைந்திருந்தன. ஆசியக் கண்ட நாடுகளை அவற்றின் ஆட்சிமுறைக்கேற்ப ஆளவேண்டு மென்பதே அலெக்சாண்டரின் உள்ளத்தில் அமைந்திருந்த எண்ணமாகும். அதனடிப் படையில் இரு பாரசீகப்பெண்களைத் தான் திருமணம்செய்து கொண்டதுடன். தன்னைச் சார்ந்த பலருக்கும் அவ்வாறே

ஆசியப் பெண்களைத் திருமணம் செய்து வைத்தார். அத்துடன் பாரசீக நாட்டு அணி மணிகளை அணிந்து அந்நாட்டு நடைமுறைப் பழக்கங்களைக் கடைப்பிடித்தார். மற்றும் குடிமக்களின் நலன்கருதி பலதிட்டங் களை உருவாக்கிச் செயற்படுத்தினார். கல்வியில் அவருக்கு என்றுமே ஆர்வம் குறையவில்லை என்பதற்கு அவர் தன்குருவுக்கு பல்வேறுபட்ட நூற்றுக் கணக்கான நூல்களைத் திரட்டி அனுப்பியதன் மூலம் தெளிவாகிறது.

இத்தகைய இணையற்ற செயல்களை ஆற்றிய அலெக்சாண்டர் கொடிய காய்ச்சலி னால் கி.மு. 323 இல் பாபிலோனியாவில் தன் முப்பத்து மூன்றாவது வயதில் காலமானார். அவருடைய உடல் அலெக்சாண்டிரியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே புதைக்கப் பட்டது. இவ்வாறு அலெக்சாண்டர் புகழ்பெற அவர் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தியதே காரணம் எனலாம்.

## கோள்களிலே.....

* சூரியனுக்கு மிகத் தொலைவிலுள்ளது - புளூட்டோ (Pluto)
* பிரகாசமானது - வெள்ளி
* மிகவும் சூடானது - வெள்ளி
* அதிகளவு துணைக்கோள்களை கொண்டது - சனி
* இரண்டாவது மிகப்பெரிய கோள் - சனி
* சுற்றிவர பல வர்ண தூசு வளையங்களைக் கொண்டிருப்பது - சனி
* துணைக்கோள்கள் அற்றவை - புதன், வெள்ளி
* சிவப்பு நிறமுள்ளது - செவ்வாய்

# சில அறிவியற் கருவிகள்

செல்வி ந.றோஷிகா
கலைப்பிரிவு (2008)
யா/ இராமநாதன் கல்லூரி

| | | |
|---|---|---|
| 01. ஈரமானி (Hydrometer) | – | வளியின் ஈரப்பதனை அளவிட உதவும் கருவி. |
| 02. அம்பியர்மானி (Ammeter) | – | மின்னோட்டத்தின் அளவை அளவிடும் கருவி |
| 03. கப்பலோட்டியின் திசைகாட்டி (Mariner's Compass) | – | கப்பலோட்டிகளுக்குச் சரியான திசைகாட்டும் காந்தத் திசைகாட்டி. |
| 04. அனிலமானி (Anemometer) | – | காற்றின் வேகத்தையும் திசையையும் அளவிட உதவும் கருவி. |
| 05. கணினி (Computer) | – | மிகச் சிக்கலான கணிப்பீடுகளுக்கு இலகுவில் விடைதரக்கூடிய "இயந்திர மூளை" |
| 06. கேள்மானி (Audiometer) | – | கேட்பவற்றிடையே காணப்படும் வேறுபாடு களை அளவிடும் கருவி |
| 07. நீர்ப்பன்னி (Hydro phone) | – | நீருக்கடியிலுள்ள சத்தத்தை அளவிடும் கருவி. |
| 08. எற்றிமானி (Pyrhelimeter) | – | சூரிய கதிர்வீச்சை அளவிட உதவும் கருவி. |
| 09. இருவிழித் தொலைகாட்டி (Binocular) | – | இரு விழிகளையும் பதித்து நோக்க ஏற்ற தொலைகாட்டி |
| 10. கல்வனோமானி (Galvanometer) | – | மின்சாரத்தினை அளவிட உதவும் கருவி. |
| 11. காந்தமானி (Magnetometer) | – | காந்த இயக்கத்தை அளவிடும் கருவி. |
| 12. மின்திசை மாற்றி (Commutator) | – | மின்னோட்டத்தைத் திசை மாற்றிட உதவும் கருவி. |
| 13. பால்மானி (Lactometer) | – | பாலின் அடர்த்தியை அளவிடும் கருவி. |
| 14. தீமானி (Pyrometer) | – | மிக உயர் வெப்ப நிலையை அளவிடும் கருவி. |
| 15. நிறமானி (Colourimeter) | – | நிறங்களின் செறிவை அளவிடும் கருவி. |

# வியக்க வைக்கும் விளம்பரக்கலை

செல்வி செ. கார்த்திகா
உயர்தரம் (2009)
யா/ இராமநாதன் கல்லூரி

விளம்பரப் படைப்பு என்பது ஒரு செய்தியைத் தேர்ந்தெடுத்து அதனைப் பயனுள்ளதாக மக்களைக் கவரும் விதத்தில் அளிப்பதேயாகும். இதனை உருவாக்குவது எப்படி?
என்ன சொல்லப்படுகின்றது?
எப்படிச் சொல்லப்படுகின்றது?
எங்கு சொல்லப்படுகின்றது?
எதற்காகச் சொல்லப்படுகின்றது?
போன்ற கருத்துக்கள் ஒரு விளம்பரத்தில் தீவிரமாகக் கவனிக்கப்பட வேண்டும். ஒரு விளம்பரத்தின் வெற்றி அந்த விளம்பர வாசகத்தின் தரம் மற்றும் அதன்மூலம் அளிக்கப்படும் செய்தியை ஒட்டியே அமையுமன்றி அவ் விளம்பரத்திற்காகச் செலவிடப்பட்ட தொகையை ஒட்டி அமையாது.

சாதாரணமாக ஒரு விளம்பரத்தின் வாசகங்கள் நுகர்வோரின் கவனம், ஆர்வம் மற்றும் விருப்பங்களைத் தூண்டி, பொருளை வாங்கச் செய்தால் போதும் என அநேகமாக எல்லா விளம்பரதாரர்களும் எண்ணுகின்றனர். இதற்கு முன் நாம் ஒரு செய்தியை அறிந்து கொள்ளவேண்டும். விற்பனைக்கு உள்ள தயாரிப்பை. பற்றி நுகர்வோர் இவ்விளம்பரத்தின் மூலமே அறிந்துகொள்ள முடிகிறது. ஆகவே விளம்பரம் தமது தயாரிப்பு பற்றிய உண்மை விவரங்களைச் சொல்ல வேண்டும். அந்தத் தயாரிப்பும் விளம்பரத்திற் கூறியபடி நுகர் வோரின் ஏதாவது ஒரு தேவையாவது பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் விளம்பரம் எவ்வளவு திறனுடன் பலரையும் கவரும் விதத்தில் படைக்கப் பட்டிருந்தாலும் தயாரிப்பு நிராகரிக்கப்பட்டு விடும் என்பது நிதர்சனமான உண்மை.

படைப்பு என்பது ஒரு கலை. ஒரு கலைஞன், எழுத்தாளன், கவிஞன், கதாசிரியன், அல்லது நாடகாசிரியன் ஆகியோர் பிரபலமான கருத்துக்கள் வார்த்தைகள் சொற்றொடர்கள் போன்றவற்றைப் புதியதொரு சூழ்நிலையில் அளிப்பதுபோல் விளம்பர எழுத்தாளர் விளம்பர வாசகத்தை மிகவும் கவனத்துடனும், புத்திசாலித்தனத்தடனும் உருவாக்குகிறார். ஏனைய படைப்புகள் இலக்கியச் சுவையையும் வார்த்தை ஜாலங்களும் சிறப்பாக அமைந்து விட்டால் மட்டும் வெற்றிபெற்று விடும் ஆனால் விளம்பரப் படைப்போ நமது தயாரிப்போர் விருப்பப்படி சிகிச்சை அளித்தால் வெற்றி; ஆனால் நோயாளி இறந்துவிட்டார் என்ற நிலையே ஏற்படும்.

மேலும் விளம்பரத் திட்டத்தில் கணிசமான ஒரு தொகை விளம்பரப் படைப்பிற்காகச் செலவிடப்படுகின்றது. ஆகவே வரவு செலவு திட்ட அளவிற்குட்பட்டு விளம்பரங்களைத் தயாரிப்பதற்கு விளம்பரப் படைப்பாளிகள் நன்கு பயிற்சிபெற்று விளங்குகின்றார்கள். அதாவது ஒரு விளம்பரத்தில் என்ன சொல்ல வேண்டும்?

எப்படிச் சொல்ல வேண்டும்? என்பதைத் தாரக மந்திரமாக வைத்துக் கொள்ளுகிறார்கள்.

விளம்பர எழுத்தாளர் தாம் எழுதுகிற மொழியில் வல்லுநராய் இருக்க வேண்டும். வர்த்தகச் சந்தைச் சூழ்நிலைகளை அறிந்த வராயும் நுகர்வோரின் அன்றாடப் பழக்கவழக் கங்கள், நாட்டு நிலவரங்களை அறிந்தவராயும் இருக்கவேண்டும். அதாவது விளம்பரப் படைப்பு ஒரு கட்டுப்பாட்டுக்குள் விளங்கும் படைப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

ஒரு விளம்பர எழுத்தாளர் வாசகத்தை உருவாக்குவதற்கு அவருக்குத் தேவையான செய்திகள் எவ்வாறு சேகரிக்கப்பட்டு அளிக்கப் படுகின்றன என்பதை முன்பே பார்த்தோம். இப்பொழுது ஒரு தரமான விளம்பர வாசகத்தின் சிறப்பு அம்சங்களைப் பார்ப்போம். ஒரு விளம்பரத்தின் உணர்வு பூர்வமான குறிக்கோள் நுகர்வோரின் கவனம் மற்றும் விருப்பங்களைக் கவர்ந்து சரியான தகவலை அளித்துப் பொருளை வாங்கத்தூண்ட வேண்டும் அதாவது விளம்பரம்

மக்களைப் பார்க்க வைக்க வேண்டும்
மக்களைப் படிக்க வைக்க வேண்டும்
மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்
மக்கள் நம்ப வேண்டும்
மக்கள் தயாரிப்பை வாங்கத் தூண்ட வேண்டும்.

மேற்கூறிய செயல்களைப் புரிந்திடக்கூடிய விளம்பர வாசகத்தின் குணாதிசயங்களை இப்பொழுது பார்ப்போம். இதுபோன்ற ஒரு விளம்பரத்தைப் படைத்திட ஒரு விளம்பரப் படைப்பாளி எவ்வகையான கருத்துக்களை எண்ணத்தில் கொண்டு இயங்க வேண்டும்.

கவன ஈர்ப்புச்சக்தி

நமது தயாரிப்பிற்கு உகந்த நுகர்வோரை விளம்பரம் கவரவேண்டும். கவரவில்லையா னால் நாம் விளம்பரத்திற்காகச் செலவிட்ட தொகை முழுவதும் பயனற்றதாகிவிடும் எப்பொழுதோ ஒருமுறை செய்தித்தாளைப் படிப்பவரோ, அல்லது சுவாரசியமில்லாமல் செய்தித்தாளை படிப்பவரோ எவராயினும் நமது விளம்பரம் அனைத்துத் தரப்பினையும் கவரும்படி வடிவமைக்கப்பட வேண்டும். இதனை வடிவமைப்பது எப்படி "பலமுறை சொல்லப்படு வதைவிட ஒரு முறைபார்க்க வைப்பது மிகவும் வலிமை வாய்ந்தது" என்று சீனப்பழமொழி உண்டு. ஒரு விளம்பரத்தில் மிகவும் கவனத்தைக் கவரும் அம்சம் சிறந்த புகைப்படம் அல்லது ஒரு நல்ல வரைபடம் மற்றும் விளம்பரத் தலைப்பு வாசகம் விளம்பரத்தில் காட்டப்படும் படம் கவரும் வண்ணம் அமைந்து விட்டால் மட்டும்போதாது. அது அந்தத் தயாரிப்பிற்கு முழுமையாக சம்பந்தப்பட்டதாக இருந்து, அதன் உபயோகம்பற்றி உணர்த்துவதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவ் விளம்பரம் நுகர்வோர் மனத்தில் நன்கு பதியும். உ+ம் குழந்தைகளுக்கான பவுடர் விளம்பரத்தில் ஓர் அழகான கொழு குழந்தையைக் காட்டினால் அதனை மறக்கமுடியாது. சம்பந்தமில்லாமல் எந்தவொரு தயாரிப்பிற்கும் பெண்கள் படத்தை போடுவததென்றால் அவ் விளம்பரம் கவனத் தைக் கவராது.

தலைப்பு வாசகத்திற்குச் சிறந்த நவீன எழுத்துக்களை உபயோகிக்க வேண்டும்.

சிறுவர்கள் உபயோகப்படுத்தும் பொருள்களுக் கான விளம்பரத்தில் அலங்கார எழுத்துக்களை உபயோகிக்கலாம். நிறுவன மேம்பாட்டு விளம்பர வாசகங்களுக்கு மெல்லிய எளிதாகப் படிக்கக் கூடிய எழுத்துக்களை உபயோகிக்கலாம். பொருளின் விலைகுறைவாக இருக்கும் பட்சத்திலோ சலுகை விலை அல்லது தள்ளுபடி விலைபோன்ற நிலைகளில் மட்டுமே விளம் பரத்தில் பொருளின் விலையைக் குறிப்பிடலாம். மற்றச் சமயங்களில் இதனைத் தவிர்ப்பது நல்லது. ஒரு பொருளை உயர் வருமான வகுப்பு நுகர்வோர் வாங்குவதற்காக விளம்பரப்படுத்தும் போது அவர்கள் விலையை விட தரத்திற்கும் அப் பொருளின் உபயோகத்திற்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்பதை அறிந்து விலை குறிப்பிடுவதைத் தவிர்க்கலாம்.

வாசகர்விளம்பரத்தை எங்கு பார்த்தோம் என்று நினைவில் வைத்துக் கொள்ளா விட்டாலும் விளம்பரச் செய்தியை மனத்தில் வைத்திருக்கும்படி செய்வதே சிறந்த விளம்பரத்தின் செயலாகும். அதாவது நமது தயாரிப்பைப் பற்றிய விவரங்கள் அவர் எண்ணத்திற் கொண்டிருக்க வேண்டும் கவர்ச்சியான வாசகங்கள், படங்கள் மூலம் இதனைச் சாதிக்கலாம்.

## சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| மார்ச் | 08 | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 22 | சர்வதேச குடிநீர் தினம் |
| ஏப்ரல் | 07 | சர்வதேசசுகாதார தினம் |
| ஏப்ரல் | 23 | சர்வதேச புத்தக தினம் |
| மே | 01 | சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே | 08 | சர்வதேச செஞ்சிலுவைத் தினம் |
| மே | 17 | சர்வதேசதொடர்பு தினம் |
| மே | 31 | சர்வதேச புகையிலை மறுப்பு தினம் |
| யூன் | 05 | சர்வதேச சுற்றுச்சூழல் தினம் |
| யூன் | 26 | சர்வதேச போதை மருந்து எதிர்ப்பு தினம் |
| யூலை | 11 | சர்வதேச சனத்தொகை தினம் |
| யூலை | 28 | சர்வதேச அகதிகள் தினம் |
| செப்ரெம்பர் | 08 | சர்வதேச எழுத்தறிவு தினம் |
| ஒக்ரோபர் | 01 | சர்வதேச சிறுவர் தினம் |

# உலகில் ஆழ, அகல, நீள, உயரம் கூடியவை

செல்வி லோகேந்திரம் லக்ஷனா
கலைப்பிரிவு (2008)
யா/ இராமநாதன் கல்லூரி

| | | |
|---|---|---|
| சமுத்திரம் (ஆழ, நீள, அகலம்) | – | பசுபிக் மகா சமுத்திரம் |
| பீடபூமி | – | பமீர் பீடபூமி |
| பாலைவனம் | – | சகாராப் பாலைவனம் |
| சிகரம் | – | எவரெஸ்ட் |
| கட்டிடம் | – | வேள்ஸ்டவர் (சிக்காக்கோ) |
| பூகண்டம் | – | ஆசியா |
| உயிரினம் | – | நீலத்திமிங்கிலம் |
| பீடபூமி (உயரம்) | – | திபெத் |
| தீவு | – | கிரீன்லாந்து |
| கடல் (பரப்பளவு) | – | கஸ்பியன் |
| துணைத்தீவு | – | இந்தியா |
| ஆழமான கடல் | – | பெய்கல் (சைபீரியா) |
| சுத்தமான நீர்க்கடல் | – | சுப்பீரியர் கடல் |
| நூலகம் | – | யுனைற்ரெட் ஸ்ரேற்ஸ் லைபிறறி ஒவ் காங்கிரஸ் |
| பொருட்காட்சிச்சாலை | – | அமெரிக்காவின் இயற்கை வரலாற்றுக் காட்சிச்சாலை |
| அரண்மனை | – | வத்திக்கான் |
| பார்க் | – | ஆல்பர்ட்டாவின் வுட்பங்லோ நஷனல் பார்க் |
| மிக வெப்பமான இடம் | – | அஸீஸ்யா (ஸிபியா) |
| மலைத்தொடர்கள் (நீளம்) | – | அந்தீஸ் (அமெரிக்கா) |
| மலைத்தொடர்கள் (உயரம்) | – | இமயமலைத் தொடர்கள் |
| ரயில் நிலையம் | – | கிராண்ட சென்றல் டெர்மின்ல் (நியூயோர்க்) |
| மிக நீளமான வீதி | – | லெ – நாப்ரா றோட் (ஜம்மு – காஷ்மீர்) |
| கடற்பறவை | – | ஆல்பட்ரோஸ் |
| பெரிய வங்கி | – | பாங்க் ஒவ் அமெரிக்கா |
| பரப்பளவு மிகுந்த நாடு | – | ரஷ்யா |

| அதிசயக் குறிப்பு | | அதற்குரிய நாடு |
|---|---|---|
| ஏழு குன்றுகளின் நகரம் | – | ரோம் |
| மிக உயர்ந்த கட்டிடங்களால் நிறைந்த நாடு | – | நியூயோர்க் |
| பெயர்போன கட்டிடத்தின் நகரம் | – | வாஷிங்டன் |
| சீனாவின் துயரம் | – | கொயாங்கோ நதி |
| பூங்காவின் பட்டணம் | – | சிக்காக்கோ |
| மெடிற்றேனியனின் திறவுகோல் | – | ஜிப்ரால்டர் |
| கங்காருவின் நாடு | – | அவுஸ்திரேலியா |
| ஆயிரம் பொய்கைகளின் நாடு (தடாகம்) | – | பின்லாந்து |
| பசுபிக்கடலின் முத்து | – | இக்வடோறினுடைய கயாக்வின் துறைமுகம் |
| ஐந்து நதிகளின் நாடு | – | பஞ்சாப் |
| வங்காளத்தின் துயரம் | – | தாமோதர் நதி |
| மஞ்சள் நதி | – | கொயாங்கோ |
| கேக்கின் நாடு | – | ஸ்கொட்லாந்து |
| பூகண்டத் தீவு | – | அவுஸ்திரேலியா |
| கண்ணீரின் வாசல் | – | பாபல்–மான்டெப் கடல் வாயில் |
| ஆசியாவின் நோயாளி | – | பர்மா |
| உலகத்தின் புனிதமான பூமி | – | ஜெருசலேம் |
| தனிமைப் பள்ளத்தாக்கு | – | டிட்ஸான்டி குன் கா |
| நீல மலைகளின் நாடு | – | நீலகிரி. |
| ஐரோப்பாவின் நோயாளி | – | துருக்கி |

| கண்டுபிடிப்பின் பெயர் | கண்டுபிடித்த விஞ்ஞானி | நாடுகள் | ஆண்டு |
|---|---|---|---|
| வண்ணப் புகைப்படம் | லிப்மேன் | அமெரிக்கா | 1891 |
| நீராவி இயந்திரம் | தோமஸ் சாவெரி | பிரிட்டன் | 1639 |
| நீர்மூழ்கிக் கப்பல் | டேவிட் புஷ்னெல் | அமெரிக்கா | 1770 |
| தந்தி முறை | எம்.லாம்னோட் | பிரான்ஸ் | 1781 |
| தொலைபேசி | அண்டோனியா மெயுசி | இத்தாலி | 1849 |
| தொலைபேசி | அலெக்ஸாண்டர் | | |
| (இப்போதுள்ளது) | கிராகாம்பெல் | அமெரிக்கா | 1876 |
| சினிமா புரோஜக்டர் | தோமஸ் அல்வா எடிசன் | அமெரிக்கா | 1892 |
| ஒலிபெருக்கி | ஹாரஸ்சார்ட் | பிரிட்டன் | 1900 |
| செயற்கை வெண்ணெய் | ஹெச்.எம்.மௌரிஸ் | பிரான்ஸ் | 1869 |
| பாதுகாப்பான தீக்குச்சி | ஜோன்வாக்கா | பிரிட்டன் | 1826 |
| மின்சார றான்ஸ்போமர் | மைக்கல் பரடே | பிரிட்டன் | 1831 |
| டிரான்ஸிஸ்டர் | பர்டீன் ஹாக்கி பிராடெய்ன் | அமெரிக்கா | 1948 |
| தட்டச்சு இயந்திரம் | பெல்லி கிரிண்டாரி | இத்தாலி | 1808 |
| மின்சாரசலவை இயந்திரம் | கியூரிலி மேஷின் அன்ட் கம்பனி | அமெரிக்கா | 1907 |
| காகிதம் தயாரிக்கும் கருவி | ரொபர்ட் | பிரான்ஸ் | 1799 |
| ஹெலிகொப்டர் | எடினி ஒகிமிக்சன் | பிரான்ஸ் | 1924 |
| காகிதம் | எம்.பாஸுட்பையர் | சீனா | கி.பி 105 |
| இறப்பர் (நீர்புகாத) | சார்லஸ் மசின்டோஷ் | அமெரிக்கா | 1823 |
| இறப்பர் (வல்கனைஸ்ட்) | சார்லஸ் குட்இயர் | அமெரிக்கா | 1843 |
| விசைக்கப்பல் | சேர் சி.பார்சன்ஸ் | பிரிட்டன் | 1894 |
| அபாய அலாரம் | எட்விண்ட் ஹால்மெஸ் | அமெரிக்கா | 1858 |
| நீராவிக்கார் | நிக்கோலஸ் குக் நட் | பிரான்ஸ் | 1769 |
| சினிமாலென்ஸ் | நிக்கோலஸ் ஜீன்லூமிரி | பிரான்ஸ் | 1895 |
| ஆவிவிளக்கு | வில்லியம் மார்டாக் | பிரிட்டன் | 1792 |
| குளிர்சாதனப் பெட்டி | ஜேம்ஸ் ஹரிசன்ஸ் | அமெரிக்கா | 1850 |
| ஒளிப்பதிவு முறை | Dr. பிட்டர் கோல்ட்மார்க் | அமெரிக்கா | 1948 |
| ரேடியோ | மார்க்கோணி | இத்தாலி | 1901 |
| தையல் இயந்திரம் | பாத்லேமி திம்மோனியர் | பிரான்ஸ் | 1829 |
| நீராவிக்கப்பல் | ஜே.ஸி.பெரியர் | பிரான்ஸ் | 1775 |

| | | | |
|---|---|---|---|
| ரைக்டர் | புரோவிச் | அமெரிக்கா | 1892 |
| பெட்ரோல் கார் | காரல் பென்ஸ் | ஜேர்மனி | 1888 |
| பௌன்டன் பேனா | லூயிஸ் ஈ.வாட்டர்மேன் | அமெரிக்கா | 1884 |
| ஊமைப்படம் | லூயிஸ் பிரின்ஸ் | பிரான்ஸ் | 1885 |
| கொம்பியூட்டடர் | எம்.டுரிங் | பிரித்தானியா | |
| கிராமபோன் | எல்.மொ.ஏ.ஸ்பிரி | அமெரிக்கா | 1875 |
| இடிதாங்கி | பெஞ்சமின் பிராங்க்லின் | அமெரிக்கா | 1752 |
| தொலைநோக்கி | ஹன்ஸ் லிப்பர்ஸ்கை | நெதர்லாந்து | 1808 |
| கல்குலேட்டர் | பாஸ்க்சல் | பிரான்ஸ் | 1642 |
| தீப்பெட்டி | லன்ட்ஸ்டாம் | சுவீடன் | 1855 |
| முகப்பவுடர் | ஸ்கல்ட்ஸ் | ஜேர்மனி | 1863 |
| ஸ்கூட்டர் | பிராட்ஷா | இங்கிலாந்து | 1919 |
| ராக்கெட் | கோதார்ட் | அமெரிக்கா | 1926 |
| டார்ச் லைட் | தோமஸ் அல்வா எடிசன் | அமெரிக்கா | 1893 |
| பரசூட் | கார்மெரின் | பிரான்ஸ் | 1797 |
| கைக்கடிகாரம் | பார்த்லோமோ மான்பிரிடி | இத்தாலி | 1462 |
| கடிகாரம் | ஹெசிங் லியாங் லிஸ்ஸான் | சீனா | 1725 |
| மைக்ரோஸ்கோப் | ஜே.ஜோன்சன் | நெதர்லாந்து | 1590 |
| பலூன் | மாரன்ட் கோல்பியர் சகோதரர் | பிரான்ஸ் | 1783 |
| பால் பெயின்ட் பேனா | ஜான். ஜே.லாட் | அமெரிக்கா | 1888 |
| மோட்டார் சைக்கில் | டைம்லர் | ஜேர்மனி | 1885 |
| நைலான் | Dr.வாலெஸ்ஹொர்ச் ஹார்த்தஸ் | அமெரிக்கா | 1937 |
| இசைத்தட்டு | பெர்லீனியர் | அமெரிக்கா | 1896 |
| கண்ணாடி | அகஸ்பாக் | ஜேர்மனி | 1080 |
| சைக்கில் | கே.மக்மில்லன் | பிரிட்டன் | 1840 |
| மைக்ரோபோன் | அலெக்ஸான்டர் கிரகம்பெல் | அமெரிக்கா | 1876 |
| தொலைக்காட்சி (டெலிவிஷன்) | ஜான் லூகி பாய்ட் | பிரிட்டன் | 1926 |
| லிப்ட் (இயந்திரத்தூக்கி) | எலிசா . ஜி.ஒடிஸ் | அமெரிக்கா | 1852 |
| டைனமோ | ஹைபோ வைட் பிக்ஸி | பிரான்ஸ் | 1832 |

# போதை வஸ்து

செல்வி சிவதாரணி சிவராஜன்
கலைப்பிரிவு (2008)
யா/ இராமநாதன் கல்லூரி

இன்று உலகின் இளந்தலைமுறையினரைத் தன் வலையில் வீழ்த்தி, அவர்கள் வாழ்கின்ற நாடுகளுக்குப் பெரும் தலையிடியைத் தந்து கொண்டிருக்கும் பெரும் பிரச்சினை போதை வஸ்துக்களால் வந்ததாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அதிகமாகவும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிற் குறிப்பிட்டளவிலும் போதைவஸ்துப் பாவனை இளந்தலை முறையினரை வலுவாகப் பற்றிக் கொண்டிருக்கின்றது. இவர்களின் பலவீனத்தைத் தமக்குச் சாதகமாக்கிச் சில நாடுகள் போதை வஸ்துக்களை உற்பத்தி செய்வதிலும், அவற்றினை இரகசியமாக நாடுகளுள் கடத்துவதிலும், அதனாற் பெரும் இலாப மீட்டுவதிலும் முன்னிற்கின்றன. மனுக்குலத்தினைத் தற்கொலைக்கு ஒப்பான பாதையில் இட்டுச் செல்வதில் இந்த சமூக விரோதக் கும்பல்கள் ஈடுபட்டிருக்கின்ற செயலிற்கு எதிராக இன்று உலகிற் பல நாடுகளும் யுத்தம் தொடர்ந்திருக்கின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் தென் கிழக்காசிய நாடுகளிலும் போதை வஸ்துக்களை உற்பத்திசெய்யும் கும்பல்களுக்கு எதிராக உலகின் பாதுபாப்புத்துறை பெரும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. லத்தீன், அமெரிக்க நாடுகளில் குறிப்பாகக் கொலம்பியாவில் அமெரிக்கா தனது இராணுவ பலத்தை போதைவஸ்துக் கும்பல்களுக்கு எதிராக இன்று பிரயோகித்து வருகின்றது. அவ்வாறிருந்தும் போதைவஸ்துக்களைக் களவாக நாடுகளுக்குள் கடத்தும் செயல் தடைப்பட்டதாகவில்லை. கள்ளக் கடத்தல் காரர்கள் அவற்றினைக் கடத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரான், ஈராக் போன்ற அராபிய நாடுகளிற் போதைவஸ்துப் பாவிப்போருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. இலங்கையிலும் அண்மைக்காலத்திற் பெரும்தொகையான போதைவஸ்துவைக் கடத்திவந்த ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், இந்த சமூக விரோதச் செயலை முற்றாக ஒழித்துவிட முடியவில்லை. சட்டங்கள் இறுக இறுகப் போதை வஸ்துக்களைக் கடத்திவரும் கும்பல்கள் அதிகரித்து வருவதுடன் பல்வேறு முறைகளிலும் கடத்தி வருகின்றனர். அண்மையில் மெக்சிக்கோ எல்லையில் நிலச்சுரங்கம் ஒன்றின் ஊடாக அமெரிக்காவுக்குப் போதைப்பொருள் கடத்தப்பட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றது.

**போதை வஸ்து என்பது என்ன?**

உடலிற்கு மனவெழுச்சியை அல்லது உளமாற்றத்தைத் தரும் இராசாயனப் பொருள் அனைத்தும் போதை வஸ்து ஆகும். மதுசாரம், புகையிலை, கோப்பி, தேயிலை, கொக்கோ கோலா முதலான பானங்களில் இருக்கின்ற கஃப்பெயின் என்பன போதைவஸ்துக்

களாகும். ஆனால் இவை நீண்டகாலமாக மக்களால் அளவாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாற் பெரும் உடல் தீங்கையும் உள்ளப் பாதிப்பையும் ஏற்படுத்திவிடவில்லை. எனினும், மதுசாரத்தால் ஈரல்கருகி அழிந்தவர்கள் பலர் நமது நாட்டில் உள்ளனர். ஆனால் இன்று மேற்சொன்ன போதைவஸ்துக்களிலிருந்து கிடைக்கின்ற மனவெழுச்சியிலும் கூடுதலான வெறியைத்தரும் மரியுவானா அம்கெற்றா மைன்ஸ், பாபிற்றுறேற்ஸ், றான் குயில்சேஸ், நாகோற்றிக்ஸ், கொக்கையின், பென்சிலிடையின், லொலரைல், கெமிக்கல்ஸ், எல்எஸ்டி, கெரோயின், என்பன இன்று உலகிற்கு அச்சுறுத்தலாகவுள்ள போதைவஸ்துக்களாகும்.

இந்த எல்லா வஸ்துக்களும் மனிதனுக்குத் தீமை விளைவிப்பனவே என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. இன்று பொதுவாக இள வயதினர் புகையிலை, மதுசாரம். மரியுவானா என்பவற்றினைக் கூடுதலாகப் பாவிக்கின்றனர் புகையிலையிலுள்ள நிக்கொட்டின் எனப்படும் நச்சுப்பொருள் இருதயத்தையும் நரம்புகளையும் ஊக்குவிக்கின்றது. சிகரட் ஒன்றின் புகை உள்வாங்கப்படும்போது நுரையீரலும் இருதயமும் வேகமாக அடித்துக்கொள்கின்றன. அதனால் இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. உலகில் இன்று மூன்றிலொரு பங்கினர் புகைபிடிப்பவர்களாக உள்ளனர். நுரையீரற் பாதிப்புறுகின்றது. இருதய நோய் ஏற்படுகின்றது. புற்றுநோய்க்கும் உள்ளாகின்றார்கள். வைன், பியர், சாராயம், விஸ்கி முதலான குடிவகைகளில் இருக்கின்ற மதுசாரம் உடலிற்கும் உள்ளத்திற்கும். தீங்கு தருவதாகும் அதிகளவிற் குடிப்பதால் ஈரல் கருகிப்போக வாய்ப்புண்டு மூளையும், இருதயமும் பாதிப்புறும். தொடர்ந்த குடி, மூளையின் நிரந்தரமான இயக்கத்திற்குத் தடையாகிவிடும். நினைவிழக்கச் செய்யும் "அல்ககோலிசம்" என்பது இன்று உலகின் மிகப்பெரிய பிரச்சினைக்குரிய வியாதியாகி விட்டது.

கடந்த தசாப்தங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகளிற் குறிப்பாக அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் மரியுவானாவும் ஹாரிஸ் எண்ணெய் என்பன பெறப்படுகின்றன. இத்தாவரத்தின் உலர்ந்த இலைகளே மரியுவானாவாகும். கஞ்சா மாதிரி. இத் தாவரத்தின் பிசின் ஹாரிஸ் எனப்படும். இது பழுப்பு நிறமானது. ஹாரிஸ்சிலிருந்து வடிக்கப்படுகின்ற எண்ணெய் ஹாரிஸ் எண்ணெய் ஆகும். இவை அனைத்தும் புகைக்கப்படுகின்றன அல்லது உண்ணப்படுகின்றன. இவற்றின் போதையால் இன்று அமெரிக்காவில் 45 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவற்றால் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுகின்றது. தொடர்ந்து பாவித்துவிட்டுத் திடீரென விட்டவர்கள் தலையிடி, நரம்புத்தளர்ச்சி போன்ற வியாதிகளுக் குள்ளாகின்றனர் அதற்காகத் தொடர்ந்து பாவிப்பவர்கள் மரணவாயிலை விரைவில் நெருங்குகின்ற சூழலை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

உடற் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்ற இன்னொரு இரசாயன போதைப்பொருள் கஃப்பெயின் ஆகும். கோப்பி, தேயிலை. கோலா முதலான பானங்களில் இது அதிகளவிற் காணப்படுகின்றது. கொக்கையின் கொகாச் செடியிலிருந்து கிடைக்கின்ற வெண்ணிறப் பவுடராகும். இது அயன மண்டலக் கால நிலையில் வளர்கின்றது. தென்மெரிக்காவிலிருந்து அதிகளவில் அமெரிக்காவுக்குக் கடத்தப்படுகின்ற போதைப் பொருள் கொக்கை

யின் ஆகும். கொக்கையின் மிகவும் விலையான போதைப்பொருள் ஆகும். இன்று பலர் பல்வகை மருந்துப் பொருட்களைப் போதைக்காகப் பயன்படுத்துவதைக் காணலாம். வலியம், விபிறியம், மில்ரவுன்,புற்றிசொல் என்பன நோய்க்குரிய சிலவகை மருந்துகளாகும். இவ்வாறான மருந்துகளைப் பாவிப்பதனால் அவை மனிதனை மரணத்திற்கு இட்டுச் செல்கின்ற பாதையாக மாறிவிடுகின்றது. தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் அபின் பாவனையும் இவ்வாறானதே.

இத்தகைய துர்ப்பழக்கங்கள் இன்றைய சந்ததியைப் பெரிதும் பாதித்திருக்கின்றது. தேசிய வருமானத்திற்காகச் சிகரெட் உற்பத்தியையும் விற்பனையையும் அரசாங்கங்களே கைவிட முடியவில்லை. உடலிற்குத் தீங்கு விளைவிக்கும் எனச் சிகரெட் பெட்டிகளில் அச்சிட்டுவிட்டு, அவற்றினை விற்கின்ற செயலை இந்த அரசுகளே தொடர்ந்து செய்து வருகின்றன. தமிழ்நாட்டில் மது விலக்கு இருந்த போது பாவித்துப் பழகியவர்கள் ஸ்பிரிட் வகைகளையும், வேறு கள்ளமாகக் காய்ச்சிய சாராயங்களையும் பாவிக்கின்றனர். மிக அண்மையில் திருகோணமலையிற் கசிப்புக் குடித்த ஆண்களும், பெண்களுமாக உடன் 6பேர் மரணமடைந்தனர். ஆகவே இவ்வாறான போதை வஸ்துக்களை ஒழிக்க உடனடியாகச் சட்டங்கள் நாடுகளில் கடுமையாக்கப்பட வேண்டும். ஈவிரக்கம் இன்றி இவற்றை விற்பனை செய்வோருக்குக் கடுமையான தண்டனை வழங்கவேண்டும். போதைப் பொருட்களின் பாவனையிற் சிக்கியுள்ளவர்களை அவற்றின் பிடியிலிருந்து மீட்பதற்கு மனிதகுலம் இரக்கத்தோடு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

"இது மனித குலத்தினைக் காப்பாற்று வதற்கான புனித யுத்தம்"

## சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| ஒக்ரோபர் | 01 | சர்வதேச வயோதிபர் தினம் |
| ஒக்ரோபர் | 06 | சர்வதேசஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் | 15 | சர்வதேசவெள்ளைப் பிரம்பு தினம் |
| ஒக்ரோபர் | 16 | சர்வதேச உணவு தினம் |
| ஒக்ரோபர் | 21 | சர்வதேச விவசாய தினம் |
| ஒக்ரோபர் | 24 | சர்வதேச ஐக்கியநாடுகள் சபை தினம் |
| டிசெம்பர் | 01 | சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசெம்பர் | 10 | சர்வதேச மனித உரிமைகள் தினம் |

# இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்

செல்வி த. கஸ்தூரி
கலைப்பிரிவு 2009
யா/ இராமநாதன் கல்லூரி

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்கிறது ஒரு திரைப்படப்பாடல். பரந்த இந்நில வுலகில் இறப்பும் பிறப்பும் சகசம். வாழ்க்கையென்பது சுழல்சக்கரம் போன்று உருண்டோடிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஒரு குழந்தை பிறக்கின்றது. அவன் பிறக்கும்போதே நல்லவனாகவே மாசுமறுவற்ற மனம் படைத்தவனாகவே பிறக்கின்றான். அவன் வளரும்போது பலவித வடிவங்களிலே வளர்ச்சிபெற்று நல்லவனாகின்றான். அறிஞனாகின்றான்; உத்தமனாகின்றான்; தலைவனாகின்றான். எனவே, அவனது குழந்தைப் பருவத்திலிருந்து அவனது வளர்ப்பே அவனது உயர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. அங்ஙனம் வளர்ச்சி பெறும் ஒருவன் சிறுவனாகி இளைஞனாகி தலைவனாக மலர்கின்றான். இக் கருத்தினடிப்படையில் நோக்கும்போது, இன்றைய இளைஞர் கள் நாளைய தலைவர்கள் என்ற கூற்று ஏற்கக் கூடியதே.

ஆனால் இளைஞர்கள் அனைவரும் நாளைய தலைவர்கள் என்று கூறிவிட முடியாது. வளரும் பயிர் அதன் வளர்ச்சிப் பருவத்தில் பூச்சி புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்றுக் கருகிப் போவதுமுண்டு. அதே போன்று வளரும் பருவத்தில் இளைஞர்கள் அத்தகைய தாக்கத்தினை அடையாது நல்லவர்களாக ஒழுக்கமுள்ளவராக வளர்க்கப்பட வேண்டும். கல்வியும் ஒழுக்கமுமே இதற்கு அடிப்படையாக அமைவனவாகும். நல்ல கல்வியறிவினைப் பெறும் இளைஞன் நல்லொழுக்கமுள்ளவனாகத் திகழ்வான். இங்ஙனம் கல்வியும் ஒழுக்கமும் அமையப்பெறும் இளைஞர்கள் நாளைய தலைவர்களாகத் தலை நிமிர்ந்து வாழமுடியும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய சூழ்நிலையில் இளைஞர்கள் பலர் பல்வேறு தாக்கங்களுக்குள்ளாகிறார்கள். படித்தும் வேலைவாய்ப்பின்மையும், தகுந்த தலைமைத்துவமின்மை, அரசியல் குழறுபடிகள் என்பவற்றால் விரக்தியின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவதை நாம் நிதர்சனமாகக் காண முடிகிறது. எனினும் வேதனைகளைச் சாதனைகளாக மாற்றிச் சரித்திரம் படைத்திட்ட இளைஞர்கள் சிலரையும் நாம்காணமுடிகின்றது. இளமையிலேயே இலட்சிய நோக்குடனும் குறிக்கோளுடனும் இளைஞர்கள் வளர்வார்களேயானால் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். நல்ல இலட்சியங்கள் நல்ல வழியைக் காட்டும். அவர்களது இலட்சிய வேட்கையும் விடா முயற்சியும் அவர்களது குறிக்கோளை எய்துவதற்குத் துணைசெய்யும். இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கல்லூரிகளில் கற்கும் காலத்திலேயே தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக்கொள்கிறார்கள். மாணவர் மன்றக் கூட்டங்களுக்குத் தலைமைதாங்கும் போது, விளையாட்டு மைதானங்களில் விளை

யாட்டு அணிகளுக்குத் தலைமை தாங்கும்போது, மாணவர் தலைவராகச் செயற்படும்போது தலமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்கி றார்கள். சாரணர் இயக்கம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சமூக இயக்கங்களிற் பங்குகொள் வதன் மூலமும் இளைஞர்கள் நல்ல பண்புகளைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

உலக வரலாற்றிலே ஒளி படைத்த தலைவர் களாக மின்னிக் கொண்டிருக்கும் தலைவர்கள் பலரை நாமறிவோம். அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பின் அவர்கள் இளமை முதலேகொண்ட குறிக்கோளை எய்துவதற்காக அல்லும் பகலும் அயராது முயன்றுள்ளமையைக் காணலாம். அவர்கள் இளமைப் பருவத்தேகொண்ட இலட்சிய வேட்கையை இறுதியில் உலகம் போற்றும் தலைவர்களாக அவர்களை உருவாக்கிய தென்பதை உணர்ந்திட முடியும். மகாத்மா காந்தியடிகள், ஆபிரகாம்லிங்கன், வின்சன் சேர்ச்சில், நெப்போலியன் போன்றோர் இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டுக்களாகும்.

மனிதராகப் பிறந்தவர் எவர்க்கும் வாழ்க்கை யில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோளற்றோர் மாண்டவர்க்குச் சமனான வர். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ்வேன் என்ற இலட்சிய முடையவர்களே வாழ்வில் வெற்றி காணமுடியும். இத்தகைய குறிக்கோள் கொண்ட இளைஞர்கள் வாழ்வில் நன்னிலை பெறுவார். கெட்டவன் என்ற பெயர் பெறுவது மிகவும் எளிது. ஆனால் நல்லவன் என்று பெயர் பெறுவது மிகவும் கஷ்டம். எனவே இளைஞர்கள் வாழ்வில் நல்லவன் என்ற பெயரினைப்பெற முயல வேண்டும். நல்லவன் என மக்கள் போற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழும் இளைஞர்கள் நாளைய தலைவர்களாவது திண்ணம். எனவே இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர் களாக மிளிர வேண்டுமாயின் அவர்கள் நல்ல கல்வியறிவும், நல்ல ஒழுக்கமும், பிறர் நலம் பேணும் பண்பும் உள்ளவர்களாக நல்ல குறிக்கோள் படைத்தவராக திகழ வேண்டியது மிகமிக அவசியமாகும். நாளைய தலைவர்களாகும் தகுதி அவர்களது வாழ்க்கை நெறியிலே பெரிதும் தங்கியுள்ளதென்பதை மறக்கக் கூடாது.

இன்றைய தலைவர்களே எமது நாட்டின் தூண்கள். ஒரு கட்டிடம் அசையாமல் உறுதியாக இருப்பதற்கு தூண்கள் மிகவும் அவசியமாகும். ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர்களின் பங்கு ஒரு உன்னத நிலையிற் காணப்படு கின்றது. இளைஞர் குழுமம் மாபெரும் சக்தி வாய்ந்தது. ஒருநாடு சிறந்த வளர்ச்சிப்பாதையில் செல்லும்போது, இன்றைய இளைஞர்கள் பல பாரிய பணிகளை முன்னெடுத்து நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு உதவு வதைக் கண்ணூடாகக் காணமுடிகின்றது. உ+ம்: அண்மைக் காலத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது அனர்த்தத்தில் சிக் குண்ட மக்களை மீட்பதற்காக இளைஞர்கள் பல பணிகளை முன்னெடுத்துச் செயற்பட்டது அனைவரும் அறிந்த விடயம்.

இளைஞர்களது கருத்துக்களுக்கு மதிப் பளித்து அவர்களது உணர்வுகளை மதித்து சமூகத்தில் அவர்களுக்கென ஒரு அந்தஸ்தை வழங்கும்போது, அவர்கள் தமது கடமையையும் பொறுப்புக்களையும் உணர்ந்து செயற்படுவர்.

இதனைக் குறித்த சமூகமும் நாடும் பெருமளவில் நன்மையும் அடையும். இதற்கு மாறாக செயற்படும்போது, அதாவது இளைஞர்களுக்குரிய தொழில்வாய்ப்பினையும் வழங்காதிருத்தல், அவர்கள் கருத்துக் கூறுவதற்கு தடை யளித்தல். அவர்களை அடக்குதல், பொறுப்புக்களை இளைஞர்களுக்கு பகிர்ந்தளிக்காது விடுதல் போன்ற செயற்பாடுகளால் இளைஞர்கள் விரக்திநிலைக்கு உள்ளாகின்றனர். இதனால் பல அழிவுகளையே எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இளைஞர்கள் என்பவர் மதிக்கப்பட வேண்டியவர்கள். நாட்டின் நாளைய தலைவர்களாக மிளிர வேண்டியவர்கள் இளைஞர்கள். ஆகவே இவர்களது உயர்வான நிலையினை உணர்ந்து, சமூகத்தில் அவர்களுக்குரிய அந்தஸ்தை கொடுக்கும்போது, இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்களாக மிளிர்வார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே இவர்களை அடக்கி ஒடுக்காது சிறந்த குறிக்கோளை அடைய வழிகாட்டுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

## நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| * *இராமாயணம் (வடமொழி)* | *வான்மீகி* |
| * *இராமாயணம் (தமிழ்மொழி)* | *கம்பர்* |
| * *மகாபாரதம் (வடமொழி)* | *வியாசர்* |
| * *மகாபாரதம் (தமிழ்மொழி)* | *வில்லிபுத்தூரர்* |
| * *நளவெண்பா* | *புகழேந்தி* |
| * *சிலப்பதிகாரம்* | *இளங்கோவடிகள்* |
| * *மணிமேகலை* | *சீத்தலைச் சாத்தனார்* |

# My Favourite Hobby

**Miss S.Sabitha**
A/L (2009)
**J/ Ramanathan College.**

My Favorite hobby is philately or stamp collecting. It' s a hobby of kinds as well as of the students stamp collecting is an entertaining by all educational and it is highly profitable. some think it's not merely amassing a large number of stamp in all countries. It's a careful selection which can produce a wealth and lot of attractions. I have this hobby with which is a pen friendship. I write to all penfriends in all countries who are also stamp collectors. My Friendship will cheerfully help me to exchange with others so it will build up a lot of collection of stamps with less cost. This is a fun there are thousands in the world who are interesting by those little bits of paper in differents brights colours and in differents shapes gain through this interesting attraction. We can learn many things of a country like animals, plants, flowers transport, history, biography of grant men discoveries inventions and space exploration. I am very fond of this hobby. My leisure hours are given to this hobby. My friends who see My Stamp albums look at me with wonder. This is a hobby that has no investment.

**நூல்களும் ஆசிரியர்களும்**

| | |
|---|---|
| * வளையாபதி | பரிமேலழகர் |
| * குண்டலகேசி | நாககுப்தா |
| * சீவகசிந்தாமணி | திருத்தக்கதேவர் |
| * நல்வழி | ஔவையார் |

# சாதிக்கப் பிறந்தவர்கள்

செல்வி ஸ்ரீ.ராகவர்த்தனி
கலைப்பிரிவு (2009)
யா/ இராமநாதன் கல்லூரி

தாயின் கருவறையிற் பத்து மாதம் இருந்து
இதோ வந்துவிட்டார்கள் இப்பாரினை நோக்கி
என்று வந்தார்களோ அன்றில் இருந்து
ஆரம்பம் இவர்களின் வெற்றி தோல்விகள்

வன்முறைகள் மலிந்துவிட்ட இப்பூமியில்
சேற்றிற்குள் இருக்கும் செந்தாமரையாய் வந்த சிறார்களே
பாலியல், பலாத்காரம், போதைக்கு அடிமை
சிறுவயதிலே கூலிக்குத் தொழில் என மொட்டிலே கருகிப்போகின்றனர்.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தையே - அவர்களை
பனிமலையாக்குவதும் எரிமலையாக்குவதும் இச்சமூகமே
தந்தையின் கொடுமையால் ஹிட்லர் உருவானான்
சத்தியத்தின் அரவணைப்பால் மோகன்லால் வளர்ந்தான்.

சாதிக்கப் பிறந்தவர்கள் இச்சிறார்கள்
சாதனை நாயகர்கள் இவர்கள் - ஆயினும்
இவர்களைப் பூவாக்குவதும் புயலாக்குவதும்
இச்சமூகமும் வாழும் மக்களுமே.

இதை ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள்
விண்ணின் நிலவை ஆராயும் நீங்கள்
மண்ணின் நிலவுகளான இச்சிறுவர்களையும்
பாருங்கள் அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுங்கள்.

நாளைய உலகின் விடியல்கள் இவர்கள்
எதிர்கால உலகின் சிற்ப வல்லுனர்கள்
உலகை அலங்கரித்துச் சமுதாயத்தின் மறு நீக்க
மண்ணிலே உதித்து வந்த விடிவெள்ளிகள்.

(சிறுகதை)

# விடியல் வெகுதூரம் இல்லை

செல்வி க.லோஜினி
A/L 2009 கலைப்பிரிவு
யா/ இராமநாதன் கல்லூரி

கதிரவனின் இதமான சூட்டுடன் கூடிய கதிர்கள் முகத்தில் பட்டவுடன் மெல்ல விழித்த கௌதம் எழுந்து கடிகாரத்தை பார்த்தான். நேரம் ஏழு மணியாகியிருந்தது. "அம்மா........... அம்மா" என்று கத்தியவாறு கீழே வந்தான் "என்ன கௌதம் ஏன்டா கத்து கின்றாய்?" என்ற வண்ணம் சமயலறையி லிருந்து வெளியே வந்தாள் சிவகாமி "என்னம்மா உங்களிட்ட நேற்று என்ன சொன் னேன். இன்றைக்கு முக்கியமான மீட்டிங் ஆபிசில் இருக்கு – சீக்கிரம் எழுப்பச் சொன் னேனே மறந்தீட்டிங்களா? "இல்லப்பா மறக்கல வேலை வேலை என்று ஒழுங்கா சாப்பிடுவதில்ல. உறங்குவதில்லை. இப்பிடி கஸ்ரப்படணும் என்று உனக்கென்ன தலையெழுத்தா? ஏன் உன்ர உடம்பை வருத்துகிறாய்? நான் சொன்னா கேட்கமாட்டாய்" என்று சிவகாமி கூறும்போதே "போதும் போதும் ஏன்டா கௌதம் நீ இப்படியே நின்றா லேட்டான நேரம் திரும்ப வந்துடுமா? போப்பா போ போய் சீக்கிரமா கிளம்புப்பா" என்றாள். அவனது தங்கை நித்தி என்கிற நித்தியா "ஆமாடி அதை நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கணும். இரு அப்புறம் பார்க்கிறன்" என்றவாறு சென்றான்.

சாப்பாட்டு மேசைக்கு வந்த நித்தி "இன்று என்னம்மா டிபன்?" என்று கேட்டாள். "சப்பாத்தி இருக்கு வா" என்று சிவகாமி தட்டை எடுத்து வைத்தாள். கார் கீயை கையில் சுழட்டியவாறு சிவப்பு ரீசேட்டும் கறுப்பு ஜீன்சுமாக மாடியிலிருந்து இறங்கினான் கௌதம். அவனைப் பார்த்த நித்தி அண்ணா சூப்பர் இந்த ட்ரெஸ்" என்றாள். நாங்க யாருன்று நினைச்சே" என்று இல்லாத கொலரை தூக்கி விட்டான். ஆமா என்ன திடிரென்று ஐஸ் வைக்கிறாய்? என்ன விஷயம் என்று கேட்டவாறு வந்து கதிரையில் இருக்க, சிவகாமி சப்பாத்தியை தட்டில் வைத்து நீட்டினாள். நித்தி மெல்ல "கௌதம் இண்டைக்கு உன்ர காரில் காலேஜ்ஜில் விடுவியா? என்ர செல்ல அண்ணா எல்லே" என்றாள். "அதுதானே பார்த்தன்" என்று தாயை பார்த்து கண் சிமிட்டிவிட்டு" அம்மா உங்களுக்குத் தெரியும் தானே நான் குரங்குகளை காரில் ஏற்றுவதில்லை என்று" என்றான். சிவகாமி சிரிக்க "யாருடா குரங்கு நானா நீ தான் குரங்கு" என்று நித்தி உடனே "நான் குரங்கு என்றா, குரங்கின் அண்ணா யாராம்" என்றாள். பின்பு முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு சாப்பிட்டாள் கௌதம் "ஏய் நித்தி கோபமாடா..... நான் சும்மாட சொன்னேன். என்ர செல்லம் சிரிடா. இப்ப என்ன உன்னை காரில் கொண்டு போகணும் அவ்வளவு தானே கொண்டு போய் விடுறேன்" என்று கூற, நித்தி "தாங்ஸ்டா" என்றாள். இருவரும் தாயிடம் கூறிவிட்டுக் கிளம்பினர்.

இருவரையும் அனுப்பிவிட்டு காலை உணவை உண்டு விட்டு வந்து சோபாவில்

உட்கார்ந்த சிவகாமி மெல்ல நினைவுகளை மீட்டினாள். சிவகாமி சுந்தரம்பிள்ளையை காதல் திருமணம் செய்தவள். இதனால் இருவர் குடும்பமும் இவர்களை ஏற்கவில்லை. எனவே இருவரும் தனியாக இருந்து தம் முயற்சியால் முன்னுக்கு வந்தவர்கள். இவர்களுக்கு கௌதமும், நித்தியும் பிறந்ததும் கௌதமை லண்டனுக்கு அனுப்பிப் படிப்பித்தனர். நித்தி இங்கிருந்து படித்தாள். கௌதமுக்கு நித்தி என்றால் உயிர். அதேபோல் நித்திக்கும் கௌதம் தான் எல்லாம். சுந்தரம்பிள்ளையின் கடுமை யான உழைப்பு முன்னேற்றத்தைத் தந்தது. பக்ரி, வீடு, கார் என்று வசதியான போதும் அவரது கடுமையான உழைப்பு அவரது உயிரையே பறித்துவிட்டது. அவரின் மறைவுக்குப்பின் லண்டனிலிருந்து வந்த கௌதமே சகல பொறுப்பையும் ஏற்று ஒன்றாக இருந்த பக்ரரியை விரிவுபடுத்தி நான்காக்கினான் . பங்களா கார் என வசதிகள் பெருகின. சிவகாமி தன் மகனின் புத்திசாலித்தனத்தை எண்ணி பூரித்தாலும் அவன் கடுமையாக வேலை பார்ப்பதை விரும்பவில்லை. கௌதமும் தாயின் பேச்சை மீறியதில்லை.

இப்படி எண்ணங்களை அசை போட்டுக் கொண்டிருக்கையில் தொலைபேசி அலறியது. தன் நினைவிலிருந்து மீண்ட சிவகாமி போனை எடுத்தாள். போனில் வந்த செய்தி அவளை இடியாய் தாக்கியது. அவளுக்கு சில மணிநேரம் என்ன செய்வது என்றே புரியவில்லை. போனை வைத்துவிட்டு சிலையாய் நின்றாள். பின்பு கௌதமுக்கு போன் பண்ணினாள் "கலோ கௌதம் நான்........ நான் அம்மா பேசுறேன்பா. நம்ம நித்தி.......... நித்தி காலேஜ் மாடியில் இருந்து கால் தடுக்கி விழுந்து ஹொஸ்பிட்டல்ல சேர்த்திருக்கினமாம்"என்று ஒருவாறு விடயத்தைச் சொல்லி முடித்தாள். கௌதம் உடனே வீட்டுக்கு வந்து தாயை ஆறுதல்படுத்தி ஹொஸ்பிட்டலுக்கு கூட்டிச் சென்றான். அங்கே தலையில் கட்டுடன் நித்தி மயக்கத்திலிருந்தாள். சில மணித்தியாலங்களில் மெதுவாக கண்களைத் திறந்து பார்த்தாள்.

"யார்...... யார் நீங்க?" என்று கௌதமைப் பார்த்து நித்தி கேட்க" கௌதம் என்னடா நித்தி உன்னை இப்பிடி கேட்கிறாள்? என்று சிவகாமி அழுதாள். "அம்மா ப்ளீஸ் பதற்றபடாதீங்க" என்று தாயை நிதானமாக கதிரையில் இருத்திவிட்டு "நித்தி இங்க பாரடா நான் அண்ணாடா. கௌதம் என்னைப் பார் தெரியலியா நல்லா பாருடா" எனும் போதே கண்கள் கலங்கிவிட்டது. நித்தி கௌதமை பரிதாபகரமாய்ப் பார்த்தாள். கௌதம் உடனே டாக்டரின் ரூமிற்குச் சென்றான்.

"டாக்டர் என் சிஸ்ரருக்கு என்னாச்சு என்று கேட்க "மிஸ்ரர் கௌதம் நித்தி மாடியில் இருந்து விழுந்ததால தலையில் அடிபட்டு மூளை நரம்பு பாதிக்கப்பட்டிருக்கு. இதனால் நித்தி சுயநினைவை இழந்திட்டா" என்றார். "டாக்டர் நித்தியைப் பழைய நித்தியா நான் பார்க்கவே முடியாதா? டாக்டர் பீளீஸ், எவ்வளவு பணம் என்றாலும் தாரன். நித்தியை நான் பழைய நித்தியா பார்க்கணும் டாக்டர் பீளீஸ் டாக்டர் பீளீஸ்" என்று கெஞ்சினான் கௌதம். நான் சொல்றதை கேளுங்க. மூளை நரம்பு பாதிச் சிருக்கு நாங்க ஒப்ரேட் பண்ண அது வேற பாதிப்புக்களை ஏற்படுத்தும். நித்தி நிச்சயம் குணமாயிடுவா. அது நாளைக்கோ, அடுத்த மாசமோ அல்லது அடுத்த வருடமோ நிச்சயம் சுயநினைவு திரும்பும். நீங்க நிதானமா இருங்க. உங்கம்மாவை ஆறுதல் படுத்துங்க. உங்கள்

அன்பும் அரவணைப்பும்தான் நித்தியாவை குணமாக்கும் மருந்து" என்று டாக்டர் கூற" Ok டாக்டர் தாங்ஸ்" என்று கூறிவிட்டு வந்தான்.

வந்தவன் தாயின் மடியில் விழுந்து அழுதான். கௌதமுக்கு டாக்டர். கூறியதை சிவகாமி கேட்டு கொண்டு இருந்ததால், தன் சோகத்தை மறைத்து மகனை ஆறுதல் படுத்த முயன்றாள் " கௌதம்... கண்ணா அழாதேப்பா எல்லாம் நன்மைக்கு என்று மனசை தேற்றி கொள்ளடா ராஜா" என்றாள். "அம்மா......... என்று தாயை நிமிர்ந்து பார்த்தான்" எல்லாம் கேட்டேன், கௌதம் நித்தியின் உயிருக்கு ஏதாச்சும் நிகழ்ந்திருந்தா என்ன செய்வது? அதைவிட இது எவ்வளவோ மேலப்பா நித்தி நிச்சயம் குணமாயிடுவா. நாம் யாருக்கும் எந்த கெடுதலும் செய்யல. கடவுள் எங்களை கைவிடார். நீ கவலைப்படாதேயப்பா" என்றாள். தாயை தான் ஆறுதல் படுத்துகிற நேரத்தில் தாய் தன்னை ஆறுதல் படுத்துவதை பார்த்து மெல்ல மனம் தெளிந்தான். " ஆம் அம்மா கடவுள் நம்ம பக்கம் நித்தி நிச்சயம் குணம் ஆயிடுவா நம் நம்பிக்கை வீண் போகாது நித்தியை கூட்டிட்டு போக டாக்டரிடம் கேட்டு வாரேன்" என்று கூறியவன் புதிய நம்பிக்கையும் கம்பீரமாகவும் சென்றான். மகனுக்கு ஆறுத லளிக் கணும் என்ற நோக்கத்திலே சிவகாமி கௌதமை தைரியப்படுத்தும் வார்த்தைகளை கூறினாள் ஆனால் மகன் நம்பிக்கையுடனும் கம்பீரமும் நிறைந்த நடையுடனும் செல்வதை பார்த்து அவளும் மனதால் நம்பிக்கை கொண் டாள். நித்தியின் முகத்தை பார்த்தவளுக்கு விடியல் வெகு தூரம் இல்லை என்ற நம்பிக்கை ஒளி ஏற்பட்டது.

## நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| *ஆத்திசூடி | ஔவையார் |
| *நற்சிந்தனை | யோகர்சுவாமி |
| *யாழ் நூல் | சுவாமி விபுலானந்தர் |
| *சத்திய சோதனை | மகாத்மாகாந்தி |
| *பாஞ்சாலி சபதம் | சுப்பிரமணிய பாரதியார் |
| *கீதாஞ்சலி | ரவீந்திர நாத்தாஹுர் |

# விட்டில் பூச்சிகளே.............!

செல்வி மோ.சுவேதிகா
கலைப்பிரிவு (2010)
யா/ இராமநாதன் கல்லூரி

கடிகார அலாரம் நான்கு தடவை அடித்து ஓய்ந்தது. கண்ணைக் கசக்கிக்கொண்டு "அடக்கடவுளே, நேரம் போய்விட்டதே, என்னை மறந்து அசந்து தூங்கி விட்டேனே" எனத் தன்னுள் புலம்பியபடி கண் விழித்தான் ரமேஸ். அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. முதல்நாள் மாலைநேரத் தனியார் வகுப்பில் ஆசிரியர், நாளை பரீட்சை; அனைவரும் படித்து வரும்படி கூறியது. உடனேயே ரமேஸ் படுக்கையை விட்டெழுந்து முகம் கழுவி படிப்பதற்குத் தயாரானான். ரமேஸின் குடும்பம் ஒரு நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த குடும்பம். ரமேஸ் உயர்தரத்தில் கற்கும் மாணவன். மிகவும் கெட்டிக்காரன். அவன் தந்தை பாலாவும் ஒரு தனியார் வங்கியிலே வேலை பார்க்கின்றார். அவனது தாய் சிவகாமி சிறந்த ஓர் இல்லத்தரசி. அவனுக்கு ஒரே ஒரு தம்பி. அவனும் பாடசாலை யிற் கல்வி கற்கின்றான்.

மீண்டும் கடிகார ஒசை கேட்டுத் திரும்பி னான். நேரம் ஆறு மணியெனக் காட்டியது. 'ரமேஸ்! ரமேஸ்!' என்று கூறியபடியே உள்ளே வந்தாள் சிவகாமி. "ரமேஸ், நேரம் ஆறுமணி யாகிவிட்டது. படித்தது போதும், போய் குளித்து விட்டு வா" எனக் கூறியபடி சிவகாமி சமயலறையை அடைந்தாள் ரமேஸ் அவசரமாகக் குளிக்கச் சென்றான். குளித்துவிட்டு வந்து தந்தையை நோக்கிச்சென்று "அப்பா பணம், ரியூசன் பணம் கட்ட வேண்டும்" எனக் கேட்டான். தந்தையும் படிப்பிற்குத்தானே என வழங்கினார். "ரமேஸ், ஒரு வாயாவது சாப்பிட்டு விட்டுப்போ" தாயின் அன்புக்கட்டளையை அவனால் மீற முடியவில்லை. அவசரமாகச் சாப்பிட்டு விட்டுச் சென்றான்.

அவசர அவசரமாகத் தெருவை அடைந்த வனுக்கு விரக்தி ஏற்பட்டது. பாதையில் வாகனங்கள் எல்லாம் ஒரு சிறு வீதியில் நின்றன. "அட; இன்றைக்கு நேரத்திற்கே பாதை மறித்துப் போட்டாங்கள் போல. சீ! எனக்கு வேற நேரம் போட்டுது" எனத் தன்னுள் முணு முணுத்துக் கொண்டு பக்கத்தில் நின்ற முதியவரிடம் விசாரித்தான். "ஆமாம் தம்பி, ஆரோ அவையின்ரை பெரியவர் வாறாராம். அதற்குத்தான் இந்த வழிமறிப்பு" என்று அந்த முதியவர் கூறி முடிப்பதற்குள் ரமேஸின் நல்ல காலத்திற்கு அவர்களின் வாகனத் தொடரணி போய் முடிந்தது. ரமேஸ் அவசரமாகத் தெருவைக் கடந்து தன் தலைவிதி மாறப் போவது தெரியாமல் தனியார் வகுப்பை அடைந்தான். அப்போதுதான் அவள் வந்தாள். அவள்தான் பானு. ஆம் சமகாலத்துத் திரைப்பட நாயகிகளைப்போல நல்ல வெள்ளைநிறம், சுருட்டை முடி, அளவான உயரம் எனச் சிவப்புச் சுடிதாரில் அழகாக இருந்தாள். அன்று முதல் தனியார் கல்விநிறுவன மாணவர்கள், ஆசானுக்குக் காத்துக்கொண்டிருப்பவர்கள், அதை மறந்து அவளுக்காகக் காத்திருந்தனர்.

ஆனால் ரமேஸ் தானும் தன் படிப்புமாக இருந்தான். ஆனால் அவனால் நீண்டகால மாகத் தன் பிரம்மச்சாரி வேடத்தைப் போட முடியவில்லை. அவனும் மற்றைய மாணவர் களைப்போல மாறினான். அவன் கெட்டிக்காரன் என்பதால் அவளும் அவனிடம் சந்தேகம் கேட்க நாடினாள். அவர்களுக்குள் நட்பு ஏற்பட்டது. இறுதியில் நட்பு காதலாக மாறியது.

அபிராமி அன்னையின் அருட்பார்வை கிடைத்த பட்டரைப்போல அவனின் கால்களில் தானாகவே சிறகு முளைத்தது. விடலைப் பருவத்தில் விளிம்பிற் சிறகடிக்கும் வண்ணத்துப் பூச்சிதானே அவன். அவளின் நினைவில் கிடந்த அவனை அவளும் திரும்பிப் பார்த்தாள். இருவரும் கடிதங்களிற் பேசினர். வகுப்புக் களையும் கட் பண்ணினார்கள். இவ்வளவு காலமும் தாய் தந்தையின் சொற் கேட்டவனுக் குத் தற்போது பானுவின் வார்த்தை வேதவாக் காகியது. இவ்வாறு ஒன்றாகச் சுற்றிய இவர் களைப் பார்த்த ஆசிரியர், பெற்றோர்கள் புத்திமதி கூறினார்கள். ஆனால் அவர்கள் அதைக் கேட்காமற் சுற்றித் திரிந்தனர்.

பானுவின் மாமாவிற்கு விடயம் தெரியவர, தற்கால சினிமாப்படம்போல அவளது மாமாவும் எதிர்ப்புத் தெரிவித்தார். இதற்குள் இரு கிழமையாக பானு வகுப்பிற்கு வரவில்லை. ரமேஸிற்கு என்ன செய்வதெனப் புரியவில்லை. அவனால் பானுவை மறக்க முடியவில்லை. தாய் தந்தை எவ்வளவு கஷ்ரப்பட்டு தன்னைட் படிக்க வைக்கிறார்கள் என்பதை மறந்தான். அவள் நினைவாகத் திரிந்தான். அவனது தந்தை எவ்வளவோ புத்திமதி கூறியும் அவன் கேட்ப தாக இல்லை. இதற்குள் பானுவை இன்னொரு இளைஞனுடன் பார்த்தபோது ரமேஸ் சுக்கு நூறாக நொருங்கிப் போனான். அவனுக்கு என்ன செய்வதெனத் தெரியாமல் பானு! பானு! என உரத்துக் கத்தினான். அவளோ சர்வ சாதாரணமாக "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் ரமேஸ். நமக்குள் ஏற்பட்டது காதலல்ல, அது வயதின் கோளாறு. தற்போது நமக்கு தாய் தந்தைதான் முக்கியம். அவர்களின் சந்தோசம்தான் முக்கியம்" எனக் கூறி விலகிச் சென்றாள். இது நிகழ்ந்து இரு மாதங்களில் பரீட்சைகள் வந்தது. ரமேஸால் தன் திறமை யைக் காட்ட முடியவில்லை. பின்னர் ஒருவாறு சிந்தித்து பானு சொன்னது சரியெனப் புரிந்தான். இருப்பினும் என்ன பயன்? அவனால் சிறந்த மாணவனாகத் திகழ முடியவில்லை. இதை மறக்கப் போதையை நாடினான். இதெல்லாம் தேவைதானா?

ரமேஸின் தாயான சிவகாமியால் எதையும் ஜீரணிக்க முடியவில்லை. ஈரைந்து மாதம் சேய் சுமையை தன் சுமையாய் சுமந்து பெற்றவள் அல்லவா? சும்மாவா சொன்னார்கள். "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்று அதைப் போலவே சிவகாமியும் தன் மகன் திருந்தித் தன்னிடம் வந்து சேருவான் கண்களில் கண்ணீர் மல்க வழியோரம் விழிவைத்துக் காத்திருக்கிறாள். கண்டிப்பாகத் தன் மகன் வருவான் என,இந்த அன்னை என்ன செய்வாள் பாவம்.

# தாய்

செல்வி மு. வாகீத்தியா
கலைப்பிரிவு (2008)
யா/ இராமநாதன் கல்லூரி

ஆண்டாளின் பாசுரமாய் மின்னலிடும்
பேதை நெஞ்சில் பிறப்பெடுத்த கனவுகளின்
கற்பனை வீச்சுக்களாற் கட்டுகிறேன்
உனக்கொரு கவிப் பிரமிட்டு

பெண்மை என்பது மேன்மை பெறுவது
"தாய்மை" என்பதைத் தாங்கும் போதல்லவா,
காதல் மாதவிக்குக் கிட்டியது - ஆனால்
கண்ணகி மனைவிக்குக் கிட்டவில்லை இது (தாய்மை)

தாய் தாய் என்று - என்
புல்லாங்குழல் வழியே புறப்பட்டு வருகிறது
புதிய நாதம், பொதுவுடைமைக் கீதம்
பூமியின் உயிர்களிற்கு இது தான் வேதம்.

எனைப் பெற்றெடுத்த போதினியே
உனக்காக என்னிடம் ஆயிரம் கவிதைகள்
உவமிக்கத்தான் ஒன்றும் உயர்ந்ததாயில்லை
உலகில் நீ தான் உயர்வாய் உள்ளத்தால்.

ஆயிரம் உறவுகள் அவனியில் இருக்கலாம்
அதற்கும் பற்பல அர்த்தங்கள் காட்டலாம்
அனைத்தும் பண இழையின் பின்னல்தான் -ஆனால்
அன்னை பாசம்தான் அனைத்தையும் வென்றது.

அவள் தோள்மீது தொட்டில் கட்டி
நாட்டார் மெட்டில் பாட்டுப்பாடி
நலமாய் என்னை உறங்க வைத்த
அன்னை அன்புக்கு நிகரேது முண்டோ?

உச்சி வருடி உணவு ஊட்டி - தன்
உடலை உருக்கி என்னைக் காத்த
உயர்ந்த உள்ளம் கொண்ட அவள்
உறவில் ஒரு களங்கம் இராது

பத்து மாதம் தவம் இருந்து
படைப்பு ஒன்றைப் பாரம் ஏந்தி
கத்திக் கதறி வெந்து நொந்து
பூமித் தாயிடம் புரழ விட்டவள்

பால் ஊட்டிப் பலம் கொடுத்து
உச்சி வருடி சுகம் வளர்த்து
அன்பு காட்டி ஆடிப்பாடி - எனை
ஆளாக்கிய அன்னையே வாழ்க.

ஈரைந்து மாதம் இறுதிவரை சுமந்து
பாரினில் படைத்த பத்தினி நித்தம்
பாசம் காட்டி நேசம் ஊட்டி
சோபனமாய் வாழ வைத்தவள் இவளே

இமயம் போல் உன்னிடம் இதயமுண்டு
சுரபியைப் போல் உன்னிடம் பாசமுண்டு
அரவணைத்து அன்பு காட்டும் கரங்களுண்டு
அத்தனையும் உனக்குத் தந்தது யார்? கூறு.

தொட்டில் மலர்களைத் தருகின்ற தோட்டம்
தங்க விக்கிரங்களின் தாயக பூமி
கருவளம் காக்கும் பிரம தேவதைகள்
கண்முன் தோன்றி நடமாடும் தெய்வம்.

சேற்றில் மிதந்தாலும் செந்தாமரைதான்
காற்றில் மிதந்தாலும் ஓசோன் படலம் தான்
பூகம்பங்களிற்குள் வாழும் கட்டடங்கள்தான்
வரிசையாகப் பிள்ளைகளைப் பெற்றெடுத் தாய்கள்.

தரணியிலே எமை நடமாட விட்டதுவும்
கைப்பிடித்துக் கால்பிடித்துச் சீராக்கியதும்
முத்தமிட்டுச் சக்தியோடு வளர்த்தெடுத்த பத்தினியும்
தாயே தாயே தாயே தாயே!!!!

முற்றும்

# எமது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.....

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது" (குறள் 101)

- எம் இதழ் மலர்வுக்காக ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி வழங்கிய பெரியோர்கள்,
- ஆக்கங்கள் தந்து மலரை மெருகூட்டிய சான்றோர்கள்,
- என்றும் எம் வழிகாட்டிகளாகத் திகழும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியப் பெருந்தகைகள்,
- உதவி வேண்டி நின்ற எம்மை வரவேற்று நிதி உதவி வழங்கிய ஈகையாளர்கள்
  - திரு.பொ.நடராஜா (அண்ணா தொழில் நிறுவனம்)
  - Dr.மூ.பஞ்சலிங்கம் (இணுவில்)
  - Dr.க. பாலசுப்பிரமணியம் (இணுவில்)
  - திரு.இ. குமரன் (ஆசிரியர்)
  - திரு.க.சிவத்திரன் (ஆசிரியர்)
  - திரு.இ.அருட்செல்வம் (இயக்குநர், சயன்ஸ் ஹோல்)
  - திரு.க.சோதிப்பெருமாள் (ஓய்வுபெற்ற அதிபர், இணுவில்)
  - திரு.க.சிவகுமார் (உரிமையாளர், கணேசன் சென்ரர், இணுவில்)
  - திரு.க. சிவாஜி (ஓய்வுபெற்ற அதிபர், உடுவில்)
  - திரு.த.கெங்காதரன் (ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி)
- விளம்பரங்களைத் தந்துதவிய வங்கி முகாமையாளர்கள், வர்த்தக நிறுவனத்தினர்,
- இன்றைய வெளியீட்டு விழாவில்; பிரதம விருந்தினராக, சிறப்பு விருந்தினராக, கௌரவ விருந்தினராக வருகைதந்து எம்மை மகிழ்வித்த பெரியோர்கள்,
- ஆரம்பம் முதல் இன்றைய விழாவரை எமக்கு அனைத்து வழிகளிலும் பேருதவி புரிந்த ஆசிரியப் பெருந்தகைகள் திருமதி சு.சீனிவாசகம், திருமதி கோ.இராமச்சந்திரன், செல்வி சி. வேலும்மயிலும், திருமதி கா. உதயகுமாரன் (நூலகர்),
- புகைப்படங்களை அழகுற எடுத்துதவிய திரு.சிவம்,
- எமது கனவை நனவாக்கி, கற்பனைக்கு வடிவம்தந்து, நேர்த்தியான முறையில் இம்மலர் வெளிவர அயராது உழைத்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினர்,
- மாணவர் மன்றத்தின் கன்னி முயற்சியான "இராமநாதம்" வெளிவருவதற்கு எமக்குச் சகல வழிகளிலும் திசைகாட்டியாக விளங்குகின்ற மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி கேதீஸ்வரி ஆனந்தரட்ணம்,
- நாம் ஒவ்வொரு அடியையும் வெற்றிப் பாதையில் நகர்த்தத் தோளோடு தோள் நின்றுழைத்த எம் கல்லூரிச் சகோதரிகள்
- இறுதியாக இவ்விழாவிற் கலந்து சிறப்பித்தவர்
- அத்துடன் "இராமநாதம்" வெளியீட்டுக்கு எம்முடன் இணைந்து உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

சுபம்

**உயர்தர மாணவர் மன்றம்**
**யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.**

இராமநாதம் மலர் சிறப்புற வாழ்த்துவோர்

# BOC BANK OF CEYLON

இலங்கை வங்கி
சுன்னாகம்

## உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்காக இப்போதே சேமிக்கத் தொடங்குங்கள்



உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளி மயமாக்குவதே உங்களது ஒரே எதிர்பார்ப்பு. அவர்களுக்காக "ரண் கெகுளு" கணக்கொன்றை ஆரம்பித்துப் பணத்தைச் சேமியுங்கள்.

- 18 வயதுக்குக் குறைந்த சகல பிள்ளைகளுக்கும் வயது வந்தோர்களால் இக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.
- பணம் மூலமோ அல்லது அவர்களுக்குக் கிடைக்கும் "ரண் கெகுளு" கணக்கு வவுச்சர்கள் மூலமோ இக் கணக்கை ஆரம்பிக்கலாம். ஆகக் குறைந்த ஆரம்ப வைப்பாக ரூபா 200/= ஐ வைப்புச் செய்ய வேண்டும்.
- சாதாரண சேமிப்புக் கணக்குகளைவிட 1% வட்டி அதிகம்
- ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் "ரண் கெகுளு" கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு தேசிய ரீதியில் 1000 பேருக்கும் மாவட்ட ரீதியாக 250 பேருக்கும் ரூபா 10, 000/= வீதம் பணப் பரிசில்கள் வழங்கப்படும். (இதற்கான தகுதியைப் பெறுவதற்குப் பரீட்சைத் திகதிக்கு முன்பு "ரண் கெகுளு" கணக்கில் குறைந்தபட்சம் ரூ 2500/= நிலுவையாக இருக்க வேண்டும்)
- பிள்ளைகளுக்கு மட்டுமின்றி கணக்கை ஆரம்பிப்பதற்கும் இலவச ஆயுட் காப்புறுதி வழங்கப்படும்.
- கணக்கை வைத்திருக்கும் குழந்தைகளுக்கு இலவச வைத்திய காப்புறுதி
  - பாரதூரமான விபத்து மற்றும் குறித்துரைக்கப்பட்ட 10 நோய்களில் ஒன்று தொடர்பாக, பிள்ளைகளுக்கு ரூபா, 100,000/= வரையான இலவச காப்பீடு வழங்கப்படும். அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றால் நாள் ஒன்றிற்கு ரூபா 600/= வீதம் 30 தினங்கள் வழங்கப்படும்.
- கணக்கை ஆரம்பித்தவருக்குக் கணக்கிலுள்ள நிலுவையைப் போல் 10 மடங்கு அவசர விபத்து காப்பீடு இலவசம்.
  ஆகக் கூடியது 500,000/=
- பிள்ளைகளுக்கு 18 வயதானதும் "ரண் கெகுளு" கணக்கு சுயமாக 18+ இளைஞர் சேமிப்புக் கணக்கு மாற்றப்படும்.

மேலதிக விபரங்களுக்குத் தயவு செய்து அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்க.


இராமநாதம் மலர் சிறப்புற வாழ்த்துவோர்
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
PEOPLE'S BANK
உழைக்கும் போதே
எதிர்காலத்திற்காக சேமியுங்கள்
எமது சேவைகள்
5 வயது வரையான உங்கள் குழந்தைகளுக்கு மெது வைப்புடன் கணக்கு ஆரம்பித்துத் தரப்படும்! மேலும் உங்கள் வைப்புத் தொகைக்கு ஏற்ற கவர்ச்சிகரமான பரிசில்கள்!
பாடசாலையில் முதலாம் தரத்தில்இணையும் மாணவர்களுக்கு வைப்புத் தொகைக்குச் சமனான தொகை (ரூபாய் 500வரை) கணக்கில் அன்பளிப்பாக இடப்படும்!
பாடசாலைச் சிறார்களுக்கான உங்கள் பண வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான பலபரிசில் கள்!
பதினாறு வயதில் Yes Future Star கணக்குகள் !
பரீட்சை மற்றும் பாடசாலை சாதனைகளுக்கான உயர்மட்ட விருதுகள்!
கௌரவிப்பு விழாக்கள்!
es
மக்கள் வங்கி, சுன்னாகம்.
சிசுஉதான அலகு

இராமநாதம் மலர் சிறப்புற வாழ்த்துவோர்

# அண்ணா தொழிலகம்

## என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது அண்ணா தயாரிப்புகளே!

## அண்ணா தயாரிப்புகளான



அண்ணா கோப்பி
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
அண்ணா ரொபி வகை
அண்ணா மிளகாய்த் தூள்
அண்ணா குரக்கன்மா
அண்ணா ஆட்டாமா
அண்ணா வறுத்த அரிசி மா
அண்ணா உழுந்து மா
அண்ணா புழுக்கொடியல் மா



ஜீவாகாரம்




மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறார்களுக்கும் ஏற்ற
போஷாக்கு நிறைந்த சத்துமா

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

T.P: 021 - 2223565

துரை வீதி,
இணுவில்.


இராமநாதம் மலர் சிறப்புற வாழ்த்துவோர்
சாந்தி புடவை அகம்
ஜென்ஸ் அன்ட் லேடீஸ் செலக்சன்
உங்கள் நம்பகரமான
ஒரே இடம்
Santhi Textiles
கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில்.
இல. 157, 158, நவீன சந்தை
(மின்சாரநிலைய வீதி),
யாழ்ப்பாணம்.


இராமநாதம் மலர் சிறப்புற வாழ்த்துவோர்
FASHION HOUSE
Perfect Collection
பெஷன் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.




இராமநாதன் கல்லூரியின் முகப்புத் தோற்றம்

கல்விச் செல்வத்தோடு தெய்வீக
வாழ்வையும் எமக்களித்த
எந்தையே! நீர் ஏற்றி
வைத்த தீபம்
95 ஆண்டுகளாக
ஆயிரக்கணக்கான
சுடர்களைத் தோற்றுவித்துள்ளது.
அச்சுடர்களாகிய நாம் எமது இதய
நன்றியை உமக்கு இனிதே சமர்ப்பிக்கின்றோம்
உமது ஆசி எமக்கு என்றும் உரியதாகுக.

Harikanan Printers, Jaffna